

அடமானக்
என் பணி கடன் செய்து கொடுப்பதே!

CENTUM
Optima Mortgages Inc.

Das Narayanasamy AMP
Lic# M08007147 Mortgage Agent

Cell: 416-543-6614
Tel: 905-470 2845 Fax: 905 470 2219
E-mail: das@centumoptima.com
Website: centumoptima.com


# தாய் வீடு

THAIVEEDU | மே 2009 | HOME & LIVING


FREE REAL ESTATE CLASSES

வீடு வாங்க, விற்க மற்றும் வருமான வரி, அடமானக் கடன் சம்பந்தமான சகல ஆலோசனைகளுக்கும் அழையுங்கள்

SELVA VETTYVEL
Broker of Record
Cell: 416.568.4301
Bus: 905.201.9977

HomeLife Future Realty Inc. Brokerage
205-7 Eastvale Drive, Markham, ON L3S 4N8
*Independently Owned and Operated, REALTOR®




# இனஅழிப்பு...



ஈழத்தில் தொடரும் இனப்படுகொலையால் புலம்பெயர்ந்த தமிழர் குடும்பங்கள் தங்கள் உறவினர்களிலோ தெரிந்தவர்களிலோ ஒருவரையாவது இழந்துள்ளன. சிலகுடும்பங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட உறவுகளை இழந்துள்ளன. ரொறன்ரோவைச் சேர்ந்த கிருபா கந்தையா தனது சகோதரர், சகோதரருடைய மகள் உட்பட 20க்கு மேற்பட்ட உறவுகளை இழந்திருக்கிறார். பலரைப்பற்றிய விபரங்கள் தெரியவில்லை. இழப்புக்களை சந்தித்தவர்களின் மனஉளைச்சல், உளத்தாக்கம் பற்றி 13ம் பக்கத்தில்...


RAMAN APPLIANCES
Air Conditioning & Heating

எமக்கூடாக Furnace வாங்கும்போது ஒன்ராரியோ அரசு வழங்கும் Rebateஐப் பெற்றுக்கொள்ளலாம்

General Contractors For:
• Air Conditioning • Gas Furnaces • Central Vacuum
• Air Cleaners • Gas Fireplaces • Garage Door Openers
• Security Alarm

Tel: 416.332.1989
Cell: 647.893.4414

Raman Chelliah
President
3021 Markham Rd., Unit 51,
Scarborough, ON - M1X 1L8



THE LAW OFFICE OF
GaryAnandasangaree
Tel: 416 321 1100 Fax: 416 321 1107
gary@galaw.ca

BUYING, SELLING,
INVESTING & MORTGAGE NEEDS CALL
SUN SANMUGATHAS
Broker & Manager
One stop shopping for all your mortgage & realestate needs.
Buying - Selling - Investing
PROPERTY MAX Realty Inc. Brokerage
Dir: 416.948.0693
Bus: 416.291.3000
PMCI MORTGAGE CANADA



விபத்து
AAA
Accident Claim Services
Theven Kankesu
Tel : 416-720-6587
Fax : 416-849-5767





Buying - Selling - Investing
PROPERTY MAX Realty Inc. Brokerage
PMCI MORTGAGE CANADA
One Source For Many Type of Properties & Mortgages
Mohan Subramaniyam
Broker of Record
416.321.2300

MARGOSA CREDIT UNION
Nurturing the Community
Tax Free Savings Account (TFSA) 2.00%
Premium Savings @ 2.00%
Opening Hours: Mon-Fri: 10.00 a.m. to 5.00 p.m.
Suite 100A, 2100 Ellesmere Road, Toronto, ON. M1H 3B7
Tel: 416-915-8989



இனிய இல்லம் ஒளிமயமான எதிர்காலதிற்கு அடித்தளம்
மகேன் சிங்கராஜா
Sales Representative
Direct: 416.302.7283 (SAVE)
E-mail: msingarajah@trebnet.com
web: www.mahenonline.com
RE/MAX Vision Realty Inc., Realtor
2210 Marham Road, Unit-1, Toronto, ON M1B 5V6
Tel: 416.321.2228, Fax: 416.321.0002


வீடும் வீடுசார் விடையங்களுக்குமான பத்திரிகை


R&S AUTO SALES
HONDA - TOYOTA - GM MINI VANS ON THE SPOT FINANCING
சிறந்த சேவைக்கான பல விருதுகளைப் பெற்ற வாகன விற்பனை முகவர்
Tel: 416.412.3838
Fax: 416.412.1174
5310 Finch Ave, Unite 23, Scarborough
between Markham and middlefield
Radha


வீடு வாங்குவதற்கும் விற்பதற்கும்
SUGUMARAN SINNIAH
(Chartered real estate broker)
Office : (514) 299-3186
(450) 926-1881


வீடு வியாபாரம் வாங்க விற்க நாடுங்கள்
• Residential • Industrial
• Commercial • Investment
Professional & Friendly Services
Logan Appulingam
Sales Representative
Direct : 416-200-6120
Email : logan7@rogers.com
HOMELIFE
Higher Standards
HomeLife/GTA Realty Inc., Brokerage*
1711 McCowan Road, Suite 206, Toronto, ON. M1S 3Y3
Bus.: 416-321-6969 Fax : 416.321-6963
*Independently Owned and Operated, REALTOR
Highest Standard Agents.... Highest Results!...


416.200.5470
ELECTRICAL - PLUMBING & DRAINAGE SERVICES
SANTHA
www.santha.ca
416-200-5470


வீடு வியாபார ஸ்தாபனம் வாங்க விற்க
Your #1 Choice
Logan Manikavasagar
Broker
Direct : 416.708.9903
Century 21
Percy Fulton Ltd. Brokerage*
Email : sales@loganhotproperties.com
Kalai Logan
Sales Representative
Direct : 416.697.9903
Buy or Sell Your Properties? Real Estate is My Job...Worry Free for you...


HIGHPOINT LASER
100 IRONSIDE CRESCENT, UNIT #10, TORONTO, ONT M1X 1M9
Toll Free: 1.877.281-9997 • Fax: 416-297-6113
www.HighPointLaser.ca • email: Sales@HighPointLaser.ca
Brand Name Toner Cartridges for
Copy Machines
Laser Printers
Fax Machines.
brother EPSON DELL hp
LANIER LEXMARK Panasonic IBM
SAMSUNG PitneyBowes XEROX
SHARP Canon
1. TN 350 - $45
2. Q7551X - $70
3. Q6000 - $50
4. E250 Toner - $60
5. FX-10-104 - $45
6. QU6511A - $60
WE RECYCLE
Lower Cost - 100% Guaranteed - Call For Delivery - 416-297-9994

தாய் வீடு
THAIVEEDU HOME & LIVING

## திட்டமிட்ட இன ஒழிப்பு

இலங்கை அரசின் கொடுமையான யுத்தம் காரணமாக கடந்த இரண்டு மாதங்களில் ஆயிரக்கணக்கான உறவுகள் போரினால் கொல்லப்பட்டும் பல்லாயிரம் உறவுகள் கை-கால்களை இழந்து பெருங்காயங்களோடு அவதியுறுகின்றனர்.

இடம் பெயர்ந்து ராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்த மக்களை அரசின் நிவாரண நலன்புரி நிலையங்கள் என்ற பெயரில் இயங்கும் முட்கம்பி வேலியிட்ட முகாம்களுக்கு குழந்தைகள், பெற்றோர்கள், பெண்கள், ஆண்கள், முதியவர்கள் என உறவுகள் பிரிக்கப்பட்டு தனித் தனியாகப் அனுப்பிவைக்கப்படுகின்றனர். இவர்களைத் தனிமைப்படுத்தும் சிங்கள அரசு அவர்களுக்கு, ஒரு நாளைக்கு ஒரு தடவை உணவு கொடுப்பதற்கே அக்கறையற்று பட்டினி வதைமுகாமை நடாத்துகின்றது.

நோயுற்றவர்கள் பலர் பட்டினியாலும், மருந்துவக் கவனிப்பின்றியும் இறந்திருக்கின்-றார்கள்.

மனரீதியாக அத்தனை உறவுகளும் பெரிய அளவில் பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.

எதிர்காலத்தில் புதிதாக விடுதலை இயக்கங்களே தோன்றிவிடக்கூடாது என்பதற்காக 12 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் குழந்தைகள் ராணுவத்தினரால் தேடிப்பிடித்து அழிக்கப்படுகின்றனர்.

அரச இராணுவத்தின் இந்த நடவடிக்கைகள், தமிழ் மக்களின் மனநிலையைச் சிதைத்து பலவீனப்படுத்த வேண்டும் என்கிற நோக்குடனேயே நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

ஒட்டுமெத்தத் தமிழினத்தையே மனநோயாளிகளாக்கும் திட்டத்துடன் இவர்களை தமது சொந்த கிராமங்களில் உள்ள வீடுகளுக்கு அனுப்பாமல் திட்டமிட்ட முறையில் மிக நீண்ட காலத்திற்கு தடுத்துவைக்க இலங்கை அரசு திட்டமிட்டுள்ளது.

இது இலங்கை அரசின் திட்டமிட்ட இன ஒழிப்பின் ஓர் வடிவம் என்பது வெளிப்படையா-கத் தெரிகின்றது. இலங்கை அரசின் இவ் இன ஒழிப்புக்கான நடவடிக்கை, பெரும் கலாச்சார சீரழிவையும், போசாக்கு அற்ற ஒரு மனித கூட்டத்தையும் உருவாக்குவதோடு மனநோயாளிகளையும், நோய்வாய்ப்பட்ட சந்ததியையும் உருவாக்கப் போகின்றது என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

புலம்பெயர் நாடுகளில் வதியும் பலர் தம்மை, தமது அன்றாட கடமைகளை கவனிக்கமுடியாமல் பித்துப்பிடித்தவர்கள்போல் இருக்கின்றனர். உறவுகளின் இழப்புகள் ஒருபுறமும் ஏனைய உறவுகளுக்கு என்ன நடந்தது, எங்கு இருக்கிறார்கள் என்ற தவிப்பு இன்னொருபுறமுமாக நிம்மதியற்ற நிலையில் வாழ்கின்றனர்.

புலம்பெயர் நாடுகளில் வாழும் நாம், இதை சர்வதேச சமூகத்திடம் எடுத்துச் செல்ல வேண்டிய கட்டாயம் உள்ளது. திட்டமிட்டுச் செயலாற்றவேண்டும்.

'''

பெயர் தோற்றாத கட்டுரைகளுக்கு ஆசிரியரே பொறுப்பு. கனடியத் தமிழ் வானொலியில் ஒலிபரப்பாகி பின்னர் எமக்குத் தரப்பட்ட விளம்பரங்கள் இலவசமாகப் பிரசுரமாகின்றன. அவற்றின் சரிபிழைகளுக்கு தாய்வீடு பொறுப்பல்ல. ஏனைய விளம்பரங்கள் இலவசமல்ல. ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியோரே பொறுப்பு.

இடியப்ப மெசின்
சகலவிதமான வீட்டு வர்த்தக இடியப்ப மெசின்கள்
மின் தேங்காய் துருவி
உலகம் முழுவதும் இவற்றை பெற்றுக்கொள்ள அழையுங்கள்
(Pay Mohan in Canada, He will deliver Worldwide)
Canada- S. Mohan P.Eng
416-433-6006 / 905-273-6836
email: mohan@stringhoppermachine.com
www.stringhoppermachine.com
www.worldtamil.com



## இம் மாதத்திற்குரிய முக்கிய குறிப்புக்கள்

மே மாதக் குறிப்புகள்

- அன்னையர் தினத்தை மே 10, 2009ல் கொண்டாட திட்டமிடுங்கள்.
- மகாராணி விக்ரோறியாவிற்கான நாளை (Victoria Day)ஐ முன்னிட்டு அன்றைய வாரம் நீண்ட விடுமுறை வாரமாக (Long Weekend) வருவதினால், அதனை கொண்டாட திட்டமிடுங்கள்.
- புற்தரையில் காற்றோட்டத்தினை ஏற்புடுத்த (Lawn Aeration) ஐ செய்யுங்கள்.
- வீட்டுத்தோட்டம் செய்ய விரும்புபவர்கள், இப்பொழுதே வீட்டினுள் விதைகளை இட்டு தயார் படுத்துங்கள்.
- வீட்டிற்கு வெளியிலிருக்கும் குழாய் தொடர்புகளை திறந்து விடுங்கள் (Open garden hose connections).
- தளபாடங்கள் மற்றும் சுவர்களிலுள்ள வெடிப்புக்கள், உடைவுகளைத் திருத்தி மெருகிடுங்கள் (waxing).
- வெளிப்புறத்தில் அதாவது, யன்னல், கதவு ஓரங்கள் தீந்தையிட (Paint) வேண்டிய தேவையிருந்தால் அதனைச் செய்யுங்கள்.
- எல்லா யன்னல்களும் திரைச்சேலைகளும் சரியாக இயங்குகின்றனவா என்பதை உறுதி செய்யுங்கள்.
- வீட்டினுள் தளர்ந்து காணப்படும் திருகாணிகள் (screws), கதவுகுமிழ்கள் (doorknobs) ஆகியவற்றை இறுக்கமாக்குங்கள்.
- புத்தக அலுமாரிகள், CD மற்றும் DVDகளை ஒழுங்குபடுத்தி அடுக்குங்கள். தேவைப்படாது என்று கருதுபவற்றை அன்பளிப்பாக கொடுத்து விடுங்கள்.
- குளியலறையில் பாசி, பூஞ்சணம் (mildew) பிடித்திருக்கின்றதா என்பதை பார்த்து சுத்திகரிக்கும் கலவையால் (mildew remover) சுத்திகரியுங்கள்.
- கூரைகள், கூரையிலிருந்து நீர் வழியும் பீலிகள் (gutters), குழாய்கள் (downspouts) ஆகியவற்றில் கசிவுகள் இருக்கின்றதா என்பதை சரிபார்த்து தேவையெனின் திருத்தம் செய்யுங்கள்.
- வீட்டினுள்ளும் வெளிப்புறத்திலும் பூச்சிகள், எலி போன்றவை காணப்படு-கின்றதா என்பதை கண்டறிந்து இவற்றை அகற்றுங்கள்.
- வீட்டினைச் சுற்றி குளவிக் கூடுகள் (Wasps nests) காணப்பட்டால் அதனை அகற்றுங்கள். தேவைப்படின் சரியான முறையில் அகற்றுபவர்களை (Professionals) அழைத்து அகற்றுங்கள்.
- வெளிப்புறத்தில் தாவரங்களை வளர்ப்பதற்கு மண்ணை பசளையிட்டு தயார்ப்படுத்துங்கள். மாட்டுச் சாணம், கூட்டுப் பசளை (compost) ஆகிய சேதனப் பொருட்களை தோட்ட மண்ணிற்கு இடுங்கள்.
- மண்ணை சிறிய கருவி (tiller) கொண்டு கிளறுவதன் மூலம் பசளையை கலக்கச் செய்யுங்கள்.
- வெளிப்புற புல்தரையில் தாவரங்களை வளர்ப்பதற்குரிய விதையிடுங்கள்.
- யன்னலுக்கருகாமையில் (window boxes) வருடம் முழுவதும் நிரந்தரமாக வளரக் கூடிய தாவரங்களை (annuals and perennials) நாட்டுங்கள்.
- வெப்பமான காலத்திற்குரிய காய்கறிகளான மிளகு, தக்காளி, வெங்காயம், உருளைக் கிழங்கு போன்றவற்றை இப்போது பயிரிடலாம்.

தொகுப்பு: மகேன் சிங்கராசா

Publisher & Editor : P.J. Dilipkumar
பதிப்பாளர், ஆசிரியர் : பி.ஜே. டிலிப்குமார்

ஆலோசகர் குழு : ஞானம் லம்பேட், மாமூலன், கருணா, பொன்னையா விவேகானந்தன், சுந்தர் சின்னத்தம்பி.

தட்டச்சு : கௌரி, கௌசலா, ஜீவா, பிரியதர்சினி, மஞ்சுளா ராஜலிங்கம்.

ஒப்புநோக்கல் : சாவையம்பதி சுப்ரமணியம், கௌரி. மஞ்சுளா ராஜலிங்கம்.

வரைகலை ஆலோசனை : கருணா (டிஜி வரைகலை அமையம்)

தொடர்புகள் - For More Info : Editor
P.O.Box #63581
Woodside Square
1571 Sandhurst Cir.
Toronto, ON. M1V 1V0

Toronto விநியோகம் : கிளி (சிவராஜா)
Montréal விநியோகம் : சுகுமாரன் சின்னையா 1-514-299-3186
Ottawa விநியோகம் : அலெக்ஸ் சிவசம்பு 1-613 -276-7253

Tel : 416-646-3422, 416.400.6406
Fax : 416.849.0594
Web : www.thaiveedu.com
E-mail : info@thaiveedu.com

#1 TEAM @ PROPERTY/MAX REALTY INC.



PROPERTY MAX
Realty Inc. Realtor
Mohan Subramaniyam
Broker of Record
416.321.2300
New Mortgage, Commercial Mortgage
New Immigrans, Ist, 2nd Mortgage
Re-Financing, New Home Buyers
Search More Properties @
www.realestatebrokerofrecord.info
WE BRING CANADA'S LEASING LENDER'S TO YOU
PMCI
PROPERTY MORTGAGE CANADA INC.
PLEASE MENTION PROPERTY/MAX WHEN ENQUIRING ABOURT PROPERTIES!

# வன்னிப்போர்ப்பிரதேசம் வெளியுலகுக்கு தொடர்பு மறுக்கப்பட்ட கொலைக்களம்

- அ. கணபதிப்பிள்ளை -

உலக நாடுகள் யாவும் உன்னிப்பாகக் கவனித்துக்கொண்டிருக்கும் வன்னி போர்ப் பிரதேசம் உத்தியோகபூர்வமாக வெளியுலகிலிருந்து தனிமைப்படுத்தப்பட்டிருக்கிறது. தங்களுடைய அனுமதியில்லாமல் எந்த அரச சார்பற்ற நிறுவனங்களும் ஊடகங்களும் உட்செல்ல அனுமதிக்க மாட்டோம் என்று மீண்டும் மீண்டும் வலியுறுத்திக்கொண்டிருக்கும் இலங்கையரசு வெளியார் தலையீட்டுக்கும் ஊடகத்துறையின் உள்நுழைவுக்கும் தொண்டு நிறுவனங்களின் மனித அவலத்தக்கு எதிரான உதவி ஆதரவுக் கோரிக்கைகளுக்கும் கால அவகாசம் கேட்டுக்கொண்டிருக்கிறது.

போர்ப்பிரதேசத்தினை நாலா திசைகளிலும் முற்றுகை செய்திருக்கும் முப்படைகளும் ஐ.நா.வின் கணக்குப்படி ஐம்பதாயிரம் பொதுமக்களின் உயிருக்கு காலக்கெடு விதித்துக் கொண்டிருக்கிறது. பாரிய ஆயுதங்களான பல்குழல் எறிகணைகள் விமானக் குண்டு வீச்சுக்கள் கடற்படைப்பீரங்கிகள் மூலம் நிர்மூலமாக்கப்பட்ட நிலையிலிருந்து கடற்கரையோரமாகக் குறுகிவந்த போர்ப்பிரதேசம் நாலு மைல்நீளமானதும் 7 சதுரக் கிலோ மீட்டர் கடற்கரைப் போர்ப் பிரதேசமாக மாறிவிட்டது.

சர்வ தேசத்தின் பார்வையில் போரற்ற பிரதேசமாகவும் பாரிய ஆயுதங்களின் இலக்குகளிலிருந்து தப்பிவிடக்கூடிய அந்தச் சிறிய நிலப்பிரப்பில் பாரிய ஆயுதங்களைப் பயன்படுத்தக்கூடாது என்ற உறுதிமொழியை வாங்கிக்கொள்வதற்காக இந்திய அரசும் ஐரோப்பிய அரசுகளும் ஐ.நா. பாதுகாப்புச்சபை உறுப்புரிமை நாடுகளும் மிகவும் வற்புறுத்தியும் வாதாடியும் வந்தமையும், இலங்கை பேச்சளவில் அதற்கு ஒத்துக்கொண்டமையும், நாளாந்தம் கொடூரத்தின் மத்தியில் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டிருந்த போர்ப்பிரதேச வாசிகளுக்குக் கிடைத்திருக்கும் தற்காலிக நிவாரணம். மறுபுறமாக உணவுப் பொருட்களுக்கும் மருத்துவ பொருட்களுக்கும் விதிக்கபடப்டிருக்கும் கட்டுப்பாடு, பட்டினிச்சாவுக்கும் காயத்தாலும் நோயாலும் ஏற்படும் சாவுக்கும் வழிசமைக்கப்போகிறது என்ற எச்சரிக்கை பல துறையினராலும் செய்யப்பட்டிருக்கிறது.

ஐ.நாவின் தலையீடும் எச்சரிக்கையும் இல்லாமல் உலக நாடுகள் பலவற்றில் ஏற்பட்ட மனித அவலங்கள் போல் வன்னியிலும் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதில் ஐ.நா எச்சரிக்கையுடன் இருப்பதாகக் காட்டிக்கொண்டிருக்கிறது. கிழக்கு மாகாணத்தின் மாவிலாறுப் போரிலிருந்து இன்றைய வன்னிப் போர் வரையில் ஐ.நா.வின் அவதானிப்பு இருந்து வந்தாலும் இலங்கை அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வுப் போர்நிறுத்த ஒப்பந்தத்திலும் அதனை இலங்கை அரசு முறித்துக்கொண்டதிலும் எந்த விதமான அழுத்தத்தினையும் ஐ.நா வால் கொடுக்க முடியவில்லை என்பது கசப்பான உண்மையாகும்.

போர் நிறுத்த ஒப்பந்தத்தை நடைமுறைப் படுத்தவும் கண்காணிக்கவும் நியமிக்கப்பட்டிருக்கின்ற நாடுகளும் அவற்றின் மேற்படியிலிருந்த இணைத்தலைமை நாடுகளும் பண உதவியும் தற்காலிக பொருளுதவியும் வழங்குவதன் மூலம் இலங்கை அரசினைக் கட்டுப்படுத்த முடியும் என்று நம்பியிருந்தன. அந்நிலையில் ஐ.நா.வின் மனித உரிமை மீறல் தொடர்பான அறிக்கைகளும் எச்சரிக்கைகளும் கவனத்துக்கு எடுத்துக்கொள்ளப் படாமலே ஒருபக்கத்தில் தள்ளிவைக்கப்பட்டிருந்தன.

பணத்தை முன்னிலைப்படுத்தி. ஏற்படுத்தப்பட்டிருந்த ஒப்பந்தங்களும் புரிந்துணர்வுகளும் அரசியல்வாதிகளின் வாயினை அடைக்கக்கூடிய சாதனமாக மாத்திரம் பயன்படுத்தப் பட்டது. அதனால் அரசாங்கத்துக்கும் துணை ஆயுதக் குழுக்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் விதந்துரைக்கப்பட்ட எத்தகைய அறிக்கைகளும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. விடுதலைப் புலிகள் சிறுவர்களைப் படையில் சேர்த்துக் கொண்டமை தொடர்பாக குறிப்பிட்ட விதந்துரைகளை விடுதலைப்புலிகள் ஏற்றுக்கொண்டு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கும் பொழுதில் துணை இராணுவக் குழுக்களும் அரசும் சிறுவர்களைப் படையில் சேர்ப்பதாகக் குறிப்பிடும் அறிக்கைகள் வெளிவந்தன. இந்நிலையில் ஒருவர் மற்றொருவரில் பழிபோடுவதாகக் கூறிய அரசும் துணை இராணுவக் குழுக்களும் ஜனநாயக நீரோட்டத்தினையும் பயங்கரவாதம், தற்கொலைக் தாக்குதல் ஆகிய சொற்பதங்களின் பிரயோகத்தைப் பயன்படுத்தியும் விதண்டாவாதக் கருத்துகள் வெளியிட்டதாலும் விடயங்கள் ஒருபக்கத்தில் தூக்கி எறியப்பட்டன.

இலங்கை அரசு புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை முறித்துக் கொண்டதனையும் அதனைத் தொடர்ந்து பயங்கரவாதத்துக்கு எதிரான போரினைத் தொடக்கியிருந்த பொழுதிலும் ஐ.நா.வினதும் இணைத்தலைமை நாடுகளினதும் அழுத்தங்கள் போரை நிறுத்திச் சமாதான வழியை தொடருவதாக அமையவில்லை. கிளிநொச்சியைப் கைப்பற்றுவதற்கு முன்னர் பொதுமக்களிடமிருந்து பல்தேசியத தொண்டு நிறுவனங்களைப் பிரித்தெடுத்த பொழுதிலும் வன்னிப் பிரதேசத்தினுள் ஊடகங்களின் வருகையினைத் தடை செய்து பொதுமக்கள் தனிமைப்படுத்தப்பட்ட பொழுதிலும் மனித அவலம் பற்றிய கருத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை என்பதும் இலங்கை அரசின் போர் முன்னெடுப்பினையும் கனரக ஆயுதங்களின் பயன்பாட்டுக்கெதிராக எந்தவிதமான கண்டனங்களும் அந்நிலையில் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை என்பதும் தொடரும் மனித அவலத்தை கோடிட்டுக் காட்டும் செயற்பாடாக அமைந்திருந்ததை ஐ.நா. நிறுவனம் அன்று குறிப்பிடத் தவறிவிட்டது.

> “ இப்போர்க்களம் கொலைக்களமாக மாறாதிருக்க
> பாதுகாப்புச்சபையின் முடிவினை எதிர்பார்க்காமல்,
> ஐ.நா. மக்கள் பாதுகாப்பு முன்னுரிமை அடிப்படையில்
> கண்டிப்பான நடவடிக்கை எடுக்கவேண்டும்.
> இது எதிர்காலத்தில் ஏற்படப்போகும்
> அரசியல் தீர்வுகளுக்கும் அதன் வழியில் அமைந்த
> சமாதானத்துக்கும் உதவுவதாக அமையும்.
> இல்லாவிடில்,
> அதுவே எதிர்காலப் போருக்குளன உதித்த
> அக்கினிக் குஞ்சாக மாறிவிடும் என்பதும்
> தெளிவாகத் தெரிகிறது. ”

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த வன்னிப்பரப்பளவின் ஆள்புல நிலப்பரப்பு 6580 சது கிலோமீற்றராகவும் மொத்த சனத் தொகை 5,07,045 பேராகவும் இருந்தது. போர் தொடங்கப்பட்ட ஓருவருடக் காலப் பகுதிக்குள் சுமார் 300 ஆயிரம் போர் இலங்கை அரசு அறிவித்திருந்த உடையார் கட்டு, சுதந்திரபுரம், தேவிபுரம் பாதுகாப்ப வலயத்தினுள் தஞ்சம் புகுந்த பொழுதிலும் மனித அவலம் குறித்து எந்த ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தையும் ஏற்படுத்தப்படவில்லை. இறுதியாக இருபத்தைந்து கிலோமீற்றர் பரப்பளவு பகுதியில் 250 ஆயிரம் மக்கள் அடைபட்ட பொழுது இலங்கை அரசு 100 ஆயிரத்துக்குறைவான மக்கள் அங்கிருக்கிறார்கள் என்று சாதித்தது. இன்றோ ஏழு சதரக் கிலோ மீட்டர் பரப்புக்குள் ஐ.நா.வின் மதிப்பிட்டுப்படி 50 ஆயிரம் போர் உயிருக்குப் போராடிக்கொண்டிருக்கிறார்கள் என்று கூறும் பொழுது 20 ஆயிரத்துக்குக் குறைவானவர்களே இருப்பதாக இலங்கை அரசு சாதிக்கிறது.

இறப்பவர்களினதும் காயப்பட்டவர்களினதும் தொகையினை வெளிவிடாத இலங்கை அரசு அனுமதி மறுக்கப்பட்ட கொலைக்களம் ஆமியின் கையில் அகப்பட்டிருக்கும் பாது காப்புக் கட்டுப்பாட்டு வலயம் என்ற செய்தியினையே இன்றுவரை இலங்கை அரசு தெரிவித்து வந்தது. மறுபுறமாக கடந்த தை மாத்திலிருந்து இன்று வரையில் 6,500 பேர் கொலைசெய்யப்பட்டும் 14,000த்து மேற்பட்டோர் காயமடைந்தும் உள்ளனர் என்று ஐ.நா.வின் தரவுகள் வெளியிடப்பட்ட பின்னரும், கடந்த 26ம் திகதி வெளிடப்பட்ட செய்மதிப் படங்களூடாக கனரக ஆயுதப்பாவனையால் ஏற்பட்ட அழிவுகளும் எடுத்துக்காட்டப்பட்ட பின்னர் இது அனுமதிமறுக்கப்பட்ட கொலைக்களமாகவும் இலங்கை அரசின் பணக் கோரிக்கையின் பொழுது வெளியிடுவதற்காகவே சர்வதேச உலகு கண்டும் காணாமல் இருந்து வந்தது என்பதும் தெளிவாகியது. இது ஒருவிதத்தில் சர்வதேசம் கண்டும் காணாமலிருக்கும் கொலைக்களம் என்பதனையே அவை தெளிவுபடுத்தியிருந்தன.

இந்திய அரசின் தேர்தல் களம் இலங்கையின் போர்க்களத்தில் சிறிய மாற்றத்தை ஏற்படுத்தியது. அடுத்தடுத்து அனுப்பப்பட்ட வெளியுறவுச் செயலாளர்கள் போர் முடியும் காலத்தை நிர்ணயம் செய்வதற்காக சென்றது போன்றதொரு நிலைமையை ஏற்படுத்தியிருந்தாலும் ஒருபுறம் இலங்கை அரசு போரை முடிவுக்குக் கொண்டுவர சிலநாட்கள் அவகாசம் கேட்டிருக்க மறுபுறம் இந்திய இராஜதந்திரிகளின் வருகையின் பலாபலன்களை இந்திய மக்களும் வெளியுலகத் தமிழர்களும் கேட்கத் தொடங்கியிருந்தனர். அதன் வழி சாத்வீகப் போராட்டங்கள் பலவடிவங்களில் பல இடங்களில் தோற்றுவிக்கப்பட்டு உலகின் கவனத்தினை திருப்பும் நடவடிக்கையிலும் தமிழக்கள் ஈடுபட்டிருந்தனர்.

தொடர்ந்தும் கண்டும் காணாதிருக்கும் போக்கினை உலக அரசுகள் பின்பற்றும் நிலை மனித அவலத்தை அதிகரிக்கும் என்பதனை ஐ.நா. நிறுவனமும் அதில் இணைந்திருந்த நாடுகளும் தெளிவாகத் தெரிந்துவைத்திருந்தன. இந்தியாவும், அமெரிக்காவும் வெளியிட்ட செய்மதிப்படங்கள் போர்ப்பகுதிகளையும் அங்கு இருக்கும் மக்களின் தொகையினையும் தெளிவாகக் காட்டியிருந்தன.

அமெரிக்காவும் ஏனைய பாதுகாப்புச்சபை உறுப்புரிமை நாடுகளான பிரான்சும் பிரித்தானியாவும், இலங்கை அரசு கனரக ஆயுதங்கள் பயன்படுத்துவதைக் கண்டித்த பொழுது, இலங்கை ஜனாதிபதி கனரக ஆயுதங்களை பயன்படுத்துவது விடுதலைப் புலிகளே, அதனை செய்மதிப் படங்கள் மூலம் அந்நாடுகள் பார்த்துக்கொள்ளட்டும் என்று கோபப்பட்டதாக செய்திகள் வெளிவந்தன.


5ம் பக்கம் பார்க்க...

சகல சட்டத் தேவைகளுக்கும் - கனேடிய தமிழ் வழக்கறிஞர்

Tel : 416-847-7077
416-847-7093 (Injury Claims)
Fax : 416-847-7088

GTA Square
5215 Finch Ave. East, Unit 219
Scarborough, ON. M1S 0C2
www.maharajalaw.com

- Real Estate
- Immigration Matters
- Translation Services
- Business Matters
- Personal Injury Claims
- All other Legal Services



The Law Office of
Raphael Maharaja
Barrister, Solicitor & Notary Public

முதலில் போர்நிறுத்தம் தொடர்பாக இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வந்த ஜோன் கோம்ஸ் அவர்கள் வன்னியிலிருந்த 38 தடைமுகாம்களுக்கும் அங்கு அடைக்கபடப் பட்டிருந்த 190,000 சனத்தையும் பார்வையிட்ட பின்னர் பத்து மில்லியன் டொலர்களை தருவதாக ஒப்புக்கொண்டு போர் வலயத்தில் இருந்ததைவிட வெளியேயுள்ள கம்பி வேலி களுக்குள் மக்கள் படும் அவலம் அதிகம் என்பதனைத் தெளிவுபடுத்தியிருந்தார்.

வன்னிப்போர் உக்கிரமடைந்த உயிரழிவை ஏற்படுத்தியருந்த பொழுது ஐ.நா. வின் நவநீதம் பிள்ளை, நம்பியார் போன்றவர்கள் இந்தியாவுக்கு நேரடியாகச் சென்று போர் நிறுத்தம் மனித உரிமை மீறல், கனரக ஆயுதம் பயன்பாடு, செய்தி ஊடகத்துறை அனுமதி மறுப்பு, தொண்ட நிறுவனங்களை ஏற்றுக்கொள்ளுதல் ஆகியவற்றுக்கு இலங்கை அரசு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று குறிப்பிட்ட பொழுதிலும் கூட அவர் களது கருத்துக்கள் ஐ.நா.வுக்கு ஆக்கபூர்வ மாக சென்றடையவில்லை.

ஜோன் ஹோம்சின் வருகையுடன் பிரித்தானிய வெளியுறவு அமைச்சர் மில்லிபாண்டும் பிரான்சின் வெளியுறவு அமைச்சர் பேர்னாட் குச்லரும் இலங்கை அரசுக்கு பெரிய அழுத்தத்தைக் கொடுத்திருந்தனர். ஆயினும் கூட தற்காலிகப் போர் நிறுத்தம், ஊடகத்துறை அனுமதி, தொண்டு நிறுவனத்தின் பங்கேற்பு போன்றனவற்றிற்கு உடனடியாக ஒத்துழைப்பு வழங்க இலங்கை அரசு மறுத்துவிட்டது. இவை விரைவில் சாத்தியமாகும் எனக் காலத்தைத் தள்ளிப்போட்டது

விடுதலைப் புலிகளைத் தடை செய்யாத நோர்வே, சுவீடன் நாடுகளின் அனுபவ அறி வினையும் அதன் மூலமாகக் கொடுக்கப் போகும் அறிவுறுத்தல்களையும் தவிர்ப்பதற்காக முன்னர் நோர்வேயையும் பின்னர் சுவீடனையும் வன்னிப் போர்க்களத்துக்குள் வரவிடாமல் தடுப்பதில் இலங்கை அரசு தனது தீவிரத்தைக் காட்டியது. சுவீடன் நாட்டின் வெளியுறவு அமைச்சரினை தடுத்தமை மிகப் பெரிய தவறாக ஐ.நாவால் சுட்டிக்காட்டியிருந்த பொழுதிலும் உடனடியாக அவரது வருகை அவசியமில்லை என்றும் அவர் பின்னர் வரலாம் என்றும் இலங்கை அரச அமைச்சர்கள் குறிப்பிட்டனர்.

இவற்றிற்கு மேலாக வன்னிப் போரின் மக்கள் அவலம் உள்நாட்டு விவகாரம் அதனை இலங்கை அரசே கையாளட்டும் என்று சீனாவும் இரசியாவும் பாதுகாப்புச் சபையின் நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டை போட்டுக் கொண்டிருக்கின்றன. சீனாவின் தீபெத்தும், தாய்வானும் இரஷ்யாவுக்குச் செஸ்னியாவும் இருக்கும் வரை, வன்னிக் கொலைகளத்தில் வெளித்தலையீடு இருப்பதை ஐ.நா.வின் பாதுகாப்புச்சபை தலையீடு தடுக்கப்பட்டுக் கொண்டேயிருக்கும் என்று கூறப்படும் பொழுது, சேபியாவிலிருந்து கொசோவைப் பிரித்தெடுத்தபொழுது ஐ.நாவின் தலையீட்டில் இருந்த முரண்பாடானது சுட்டிக்காட்டப்பட்டது. அமெரிக்கா முன்னிலையில் இருந்த பொழுதில் அது ஒரு வல்லரசுப் போராகவோ அல்லது கிழக்கு ஐரொப்பிய கேந்திரத்தின் அவசியத்தினை அமெரிக்கா உணர்ந்திருந்ததினால் அமெரிக்கா ஏனைய வல்லசுகளை அடக்கும் வகையில் அடக்கிவைத்துக்கொண்டது.

சீனாவும், பாகிஸ்தானும், இந்தியாவும் இலங்கையின் கேந்திர முக்கியத்துவத்தில் பங்கெடுத்துக்கொள்ள வேண்டும் என்பதில் போட்டி போட்டுக்கொண்டிருக்கும் பொழுது வன்னிப் போர் இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினை என்ற நாடகத்தினை பிராந்திய வல்லரசுகளும் துணை வல்லரசுகளும் நடாத்திக்கொண்டிருக்கின்றன. பயங்கரவாதத்தை ஒழிக்கப்போகும் பல்தேசிய நாடகத்தில் உள்ளூர் வல்லரசுகள் தமது நிறைவேற்றப் படாத நிகழ்ச்சித்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு தத்தமது பாணியினைப் பின்பற்றிச் செயற்படுகின்றன.

ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டு விடுதலைப் புலிகள் சரணடையச் சொல்லும் இலங்கை அரசு பயங்கரவாதத்தை ஒழிப்பதற்குக் கேட்கும் கால அவகாசத்தை இலங்கைக்குக் கொடுத்துக்கொண்டிருக்கின்றன. இந் நிலையில் இலங்கை அரசே உலக நாடுகளின் உதவியினைக் கேட்டுப் பிரச்சிகைளைத் தீர்க்க வேண்டும் என்று கேட்கும் பொழுது தமது சொல்லு எடுபடும் என்பதனை மேற்குலக வல்லரசுகள் நம்புகிறார்கள்.

இன்று இலங்கைக்குப் பயணத்தேவையினைச் சர்வதேச நாணய நிதியத்திலிருந்து இலங்கை பெறப்போகும் 1.9 மில்லியன் டொலரினை வாய்ப்பினைக் காலதாமதப்படுத்துவதன் மூலம் இலங்கையினைக் கட்டுப்படுத்தலாம் என்றும், அதன்மூலம் மறுக்கப்பட்ட கொலைக்களத் துக்கு அனுமதி கிடைக்கும் என ஐ.நா.வும் உதவிநாடுகளும் அணுகுவதில் கடந்த கால அனுபவங்கள் உதவுவனவாக உள்ளன.

போர் நிறுத்தமும், சர்வதேசக் கண்காணிப்பும், போர் வலயத்துக்குள் போக வேண்டுமாயின் எவ்வளவு காலத்துக்கு விடுதலைப் புலிகள் தாக்கிப் பிடிக்கப் போகிறார்கள், அங்குள்ள ம்க்களின் அன்றாட இறப்பினை எவ்வாறு உலகு குறைக்கும் திட்டத்தை வைத்திருக்கிறது, என்பவற்றிலேயே தங்கியுள்ளது. இலங்கை அரசு விடுதலைப் புலிகளுக்கு கொடுத்த காலக்கெடு பலமுறை முடிவடைந்து விட்டது. ஆயினும் இலங்கை அரசு விடுதலைப் புலிகள் ஒன்றில் ஆயுதங்களை விட்டு சரணடைவார்கள். அல்லது தற்கொலை செய்து கொள்ளுவார்கள். அல்லது கடலினுள் மூழ்கிவிடுவார்கள் என்று வெளிப்படையாகத் தெரிவிக்கிறது. போரை அரைமணித்தியாலத்திலகூட முடித்து விடுவோம் மக்களை மீட்கப் போராடுகிறோமென மார்தட்டுகிறது.

பல்வேறு ஊடகங்களும் இலங்கை வன்னிப் போரினை விமர்சனம் செய்கின்ற பொழுதில் இலங்கை அரசு எத்தனை விடுதலைப் புலிகள் களத்தில் இருக்கிறார்கள் என்பதனையும் பிரபாகரன் எங்கிருக்கிறார் என்பதனையும் தெரியாமலே போராடுகின்றது என்றும் இதனால் இலங்கை அரசு அர்த்தமில்லாமல் பாதுகாப்புப் பிரதேசத்தைப் போர் பிரதேசமாக மாற்றியிருக்கிறது என்றும் குறிப்பிடுகிறார்கள்.


மக்களை மீட்கும் போர் எனப் பெயர்மாற்றம் பெற்றிருக்கும் இப்போர்க்களம் கொலைக் களமாக மாறாதிருக்க பாதுகாப்புச்சபையின் முடிவினை எதிர்பார்க்காமல் ஐ.நா. மக்கள் பாதுகாப்பு முன்னுரிமை அடிப்படையில் கண்டிப்பான நடவடிக்கை எடுக்க வேண்டும். இது எதிர்காலத்தில் ஏற்படப்போகும் அரசியல் தீர்வுகளுக்கும் அதன் வழியில் அமைந்த சமாதானத்துக்கும் உதவுவதாக அமையும். இல்லாவிடில் அதுவே எதிர்காலப் போருக்கு என உதித்த அக்கினிக் குஞ்சாக மாறிவிடும் என்பதும் தெளிவாகத் தெரிகிறது.

kanapathi@thaiveedu.com

■ ■ ■

எலி பூச்சித் தொல்லையா...?

RUBAN PEST CONTROL



▸▸ வீடுகள்
▸▸ தொடர்மாடி வீடுகள்
▸▸ தொழிற்சாலைகள்
▸▸ வியாபார நிலையங்கள்
ஆகிய அனைத்து இடங்களிலும் எலி, பூச்சித் தொல்லைகளை அறவே நீக்க அழையுங்கள்!

KANTHAN
416•291•3997



HUNGRY!

PROPERTY MAX.
HIGHER ACHIEVEMENTS
Realty Inc. Brokerage

FOR BUYING, SELLING, INVESTING......

Call Mohan @ 416-321-2300

Mohan Subramaniyam
Broker of Record/President
Property/Max Realty Inc, Brokerage
203 – 3321 Mcnicoll Ave,
Toronto, ON. M1B 5B3

New Listing ADDED!!!
www.mlscentre.com

ONE STOP REAL ESTATE & MORTGAGE NEEDS!!!

- Re-Financial
- New Mortgage (Residential, Commercial, Investment)
- Renewal
- No Down Mortgage

We Bring Canada's Leading Lenders To You!
PMCI
PROPERTY MORTGAGE CANADA
416-332-9464

# மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்...




McCowan / Denision
3 Bedrooms 2 Washroom
Finished Basement w/o




Morningside / Staines
3 Bedrooms 3 Washroom

வீடு வாங்கவும் விற்க்கவும்
குறைந்த வட்டி விகிதத்தில்
மோட்கேஜ் ஒழுங்கு செய்வதற்கும்
அழையுங்கள்

**Ravi. Paramu**
Broker
**Direct: 416-262-4176**

HOMELIFE
HIGHER STANDARDS




14th / McCowan
3 Bedrooms 3 Washroom
Part Finished Basement w/o



**HomeLife Today Realty Ltd., Brokerage***

**Bus: 416-298-3200**

31 Progress Ave., Suite 210,
Toronto, ON, M1P 4S6

*Independently Owned and Operated, Realtor



# RBC RESIDENTIAL MORTGAGES

- 1st Time Home Buyers
- Pre–Approvals
- Builder Rate Hold Programs
- Refinance, Renewals & Switch for Free
- Debt Consolidation
- Home Equity Line of Credit
- New Immigrant & Self Employed Programs



| RATE SPECIAL | |
|---|---|
| 4 Yrs Fixed | **4.29 %** |
| 5 Yrs Fixed | **4.34 %** |
| Variable Closed | **3.30 %** |
| Variable Open | **3.50 %** |

**Three Locations to Serve you**

**Royal Bank**
Eglinton & Sinnott
2043 Eglinton Ave E
Scarborough, ON
M1L 2M9

**Royal Bank**
Kingston & Steeple Hill
670 Kingston Road
Pickering, ON
L1V 1A6

- digi Media -

RBC

**Ram Krish**
RBC Mortgage Specialist

Direct **416-526-4996**

Email: ram.krish@rbc.com



# உங்கள் வீடும் புற்தரையின் அழகும்

## புற்தரையில் காற்றோட்டத்தினை ஏற்படுத்துதல் (Lawn Aeration)

இலை துளிர் காலம் ஒரு பசுமையானதும் ஓர் புத்துணர்ச்சியை ஏற்படுத்தக் கூடியதுமான காலமாகும். எனவே நாம் குளிர் காலத்திற்கும் குளிர் ஆடைகளுக்கும் விடை கொடுத்து விட்டு, பசுமை நினைவுகளோடு வெளியேறும் பொழுது நம் கண்களில் தெரியும் இவ் அழகான புற்தரை மனதுக்குள் ஓர் புத்துணர்ச்சி எம்மை அறியாமலே ஏற்படும்.

நாம் கனேடிய நீரோட்டத்தில் வாழ்வதாலும், எம்மில் பலர் வீட்டு உரிமையாளராக இருப்பதினாலும் இது எம்மில் பலருக்கு உதவும் என்ற எண்ணத்தில் இதனை வரைகின்றேன். உங்களுக்கு இது பிரியோசனப்பட்டால், உங்கள் விமர்சனத்தை எதிர் பார்க்கின்றேன்.

புற்தரையில் காற்றோட்டம் ஏற்படுத்துதல் பல்வேறு நன்மைகளை ஏற்படுத்தும் என்பது உங்களுக்கு தெரியுமா?

பல வருடங்கள் கடந்த பின்னர் மண்ணின் மேற்பரப்புக்கும் ஆரோக்கியமான பசும்புற்தரைக்கும் இடையில் உள்ள இறந்த புற்கள் thatch என்று அழைக்கப்படும் படலமாக உருவாகிறது. இலை துளிர் காலத்தில் அல்லது இலையுதிர் காலத்தில் புற்களுக்கு காற்றோட்டத்தை ஏற்படுத்துவதனால், இந்த படலத்தின் அளவு பெருமளவு குறைக்கப்பட்டு பல நன்மையான விளைவுகள் ஏற்படும்.

## புல்தரையில் காற்றோட்டத்தை ஏற்படுத்துதல்

மண்ணில் துளைகளை ஏற்படுத்தி மண் கட்டிகளை இழுத்தெடுப்பதே புற்தரை காற்றோட்டம் என அழைக்கப்படுகிறது. Core aerator என்ற கருவியே இச்செயற்பாட்டுக்கான மிகச்சிறந்த கருவியாகும். இக்கருவி மண்ணில் இருந்து 1/2" - 3/4" விட்டமுடைய மண் பகுதிகளை பிரித்தெடுத்து உங்களது புற்தரையின் மீது போடுகின்றது.

மண்ணின் மீது துவாரங்களை ஏற்படுத்துவதே இந்த செயற்பாட்டின் அர்த்தம். புல்தரையில் காற்றோட்டம் ஏற்படுத்துவதனால் கீழே குறிப்பிடப்படும் பயன்கள் ஏற்படுகின்றன.

- ஒட்சிசன் வாயு வேர்களையும், மண்ணையும் சென்றடைவதற்கு வழி செய்தல்.
- சேதன பசளைகளும், கனிப்பொருட்களும் வேர்களை சென்றடைய வழி செய்தல்.
- மண் அதிகளவில் நீரை உறிஞ்சக்கூடிய தன்மையைப் பெறுதல்.
- உலர்ந்த புல் ஏற்படுத்தும் படலத்தை (thatch) உடைத்து இறுக்கமான மண்ணை இளகச் செய்து, வேர்கள் படர்ந்து வளருவதற்கு வழி செய்தல்.

## புற்தரைக்கு காற்றோட்டம் ஏற்படுத்துவது எப்படி?

காற்றோட்டம் ஏற்படுத்தும் கருவி (Aerator) மூலம் இதனை செய்ய முடியும். இக்கருவிகள் இரு வகைப்படும்.

- கையினால் இயக்கும் கருவி
- மின்சாரத்தினால் இயங்கும் கருவி

இதனை நீங்கள் வாடகைக்கு கூட எடுத்து பயன் படுத்த முடியும்.

## புற்தரையில் காற்றோட்டம் ஏற்படுத்தும் போது என்ன நடைபெறுகின்றது?

காற்றோட்டம் ஏற்படுத்தும் கருவி (Aerator) யின் உதவியுடன் மண்ணின் மேற்பரப்பில் துளைகள் ஏற்படுத்துவதன் மூலம் புற்தரையில் உள்ள மண்ணுக்கு காற்றோட்டம் ஏற்படுத்தப்படுகிறது. அதன் காரணமாக மண்ணின் இறுக்கமான தன்மை குறைக்கப்பட்டு, அதே சமயம் இறந்த புல் படலத்தின் அளவு கட்டுப் படுத்தப்படுகின்றது. அதேவேளை வேர்கள் படரும் வலயப் பகுதியினுள் காற்றும் பசளையும் பரவிச் செல்ல வழி ஏற்படுகிறது.

புல்தரையில் இருந்து மண் கட்டிகள் வெளியே இழுக்கப்படுவதனால் மட்டுமே சிறந்த காற்றோட்டம் ஏற்படுத்தப்படுகிறது. மண்ணில் ஏற்படுத்தப்படும் துளைகள் 2-3" அங்குல ஆழம் கொண்டதாகவும் 2"-4" இடைவெளிகள் கொண்டதாகவும் அமைய வேண்டும். மண்ணில் துளைகளை இட்டு மண் கட்டிகளை (Plugs of Soil) இழுத்தெடுப்பதற்கு இலகுவாக, காற்றோட்டம் ஏற்படுத்துவதற்கு முன்னைய தினத்தில் புல்தரையின் மீது நிறைவான நீர் பாய்ச்சுதல் வேண்டும். Sprinkler heads, ஆழமற்ற நீர்ப்பாசன கோடுகள், கேபிள் தொலைக்காட்சி இணைப்பு வழிகள் என்பவை பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்வதற்காக அவை ஏற்கனவே தெளிவாக அடையாளமிடப்பட வேண்டும். அதன் பின்னரே மண்ணில் துளைகளை ஏற்படுத்த வேண்டும்.

தரை உறையாமல்உள்ள எந்த வேளையிலும் புல்தரையில் காற்றோட்டம் ஏற்படுத்தலாம். ஆனால், தரை மிகவும் வெப்பமாகவும் உலர்வாகவும் உள்ள வேளையில் இதனை செய்யக்கூடாது. மக்கள் நடமாட்டம் அதிகமாக உள்ள புல்தரை பகுதிகளில் அடிக்கடி காற்றோட்டம் ஏற்படுத்த வேண்டும்.

புல்தரையில் காற்றோட்டம் ஏற்படுத்திய பின்பு அவற்றின் மீது பசளைகள் இடப்பட்டு, புல் விதைகளும் தூவப்படலாம்.

## காற்றோட்டம் ஏற்படுத்துவதினால் புற்தரையில் என்ன விளைவுகளை ஏற்படுத்தும்?

புற்தரைகள் முதிர்வடையும் போது அல்லது வாகன போக்குவரத்து, வளர்ப்பு பிராணிகளின் நடமாட்டம், விளையாட்டு செயற்பாடுகள் என்பன பாதிப்பு ஏற்படுத்துவதன் காரணமாக மண் கட்டிபடுகின்றது. மிகக் குறைவான நீர்வடியும் தன்மை கொண்ட நிலப்பகுதிகளிலேயே மண்கட்டிபடுதல் மிகவும் கடுமையாக நடைபெறுகின்றது. இதனால் மண்ணில் உள்ள காற்றின் அளவு பெருமளவு குறைகிறது. இதன் விளைவாக வேர்களின் வளர்ச்சியும் கனிப்பொருட்களையும் நீரையும் உறிஞ்சும் செயற்பாடுகளும் பாதிக்கப்படுகிறது. எனவே வருடம் ஒரு முறையாவது புற்தரைக்கு காற்றோட்டம் ஏற்படுத்துவதினால், உங்கள் புற்கள் மிகவும் செழிப்பாக காணப்படும். மண்ணில் துளைகளிட்டு காற்றோட்டம் ஏற்படுத்தும் போது மேலும் பின்வரும் நன்மையை உருவாக்கும்.

இறந்த புற்களுடன் இணைந்த மண்படைகளை சிதைவடையச் செய்யும் நுண்ணங்கிகளின் செயற்பாடு அதிகரிக்கும்.

மண்ணினுள் நீர், கனிப்பொருட்கள், ஒட்சிசன் என்பவற்றின் பரவுதலை அதிகரிக்கும்.


வேர் படருவதை தூண்டுகிறது.

மழைநீர் உட்புகுவதை அதிகரிக்கிறது.

மண்ணில் இடப்படும் பசளைகள், பீடை கொல்லிகள் (Pesticide) என்பவை மண்ணில் இருந்து வழிந்தோடுவதை தடை செய்ய உதவுகிறது.









## காற்றோட்டம் ஏற்படுத்த வேண்டும் என எவ்வாறு அறிய முடியும்?

உங்களது வீட்டின் புற்தரையில் 6 அங்குல அகலமான ஒரு சதுர அடி மண்பரப்பை கிண்டி எடுக்கவும். புற்களின் வேர்கள் 1-2 அங்குலங்களுக்கு மட்டுமே நீண்டிருந்தால் உங்களது வீட்டை சூழவுள்ள மண் இறுக்கமடைந்துள்ளது என்று தீர்மானிக்கலாம். இவ்வாறான சந்தர்ப்பத்தில் மண்ணில் காற்றோட்டம் ஏற்படுத்துவது, நன்மையை ஏற்படுத்தும்.

## காற்றோட்டம் ஏற்படுத்துவதற்கான ஏனைய காரணங்கள்.

உங்களது வீட்டைச் சூழவுள்ள புல்தரை அதிக அளவு பாவிக்கப்பட்டாலும்.

உலர்ந்த புல்படையின் அளவு 1/2 அங்குலத்திற்கும் அதிகமானதாக இருந்தாலும்.




மகேன் சிங்கராஜா

- வீடு விற்பனைப் பிரதிநிதி -


உங்களது மண் அதிகளவான களிமண் தன்மை கொண்டதாக இருந்தாலும் இதனை நடைமுறைப்படுத்தலாம்.

## புற்தரையில் காற்றோட்டம் ஏற்படுத்துவதற்கு பொருத்தமான தருணம் எது?

மண் ஈரலிப்பாக இருக்க வேண்டும். ஆனால், நீரில் தோய்ந்திருக்கக் கூடாது.

காற்றோட்டம் ஏற்படுத்துவதற்கு முன்னைய இரு தினங்களுக்கு மண்ணில் நீரூட்டம் ஏற்படுத்துவதன் மூலம் மண்கட்டிகளை வெளியேற்றுவது இலகுவாக்கப்படலாம்.

நீண்டநேர மழைவீழ்ச்சியின்பின் காற்றோட்டம் ஏற்படுத்துவதானால், மண் காயும் வரை காத்திருப்பது அவசியம்.

புற்தரையை செழிப்பாக வைத்திருப்பது எப்படி என பார்த்தோம், இனி வரும் இதழில் எப்படியான பசளைகளை எந்த எந்த இனப் புற்களிற்கு பாவிக்க வேண்டுமென்பதினையும், எந்த எந்த காலத்திற்கு பசளை இடப்பட வேண்டும் என்பதினையும் பார்ப்போம். மீண்டும் அடுத்த இதழில் சந்திக்கும் வரை, உங்களிடம் இருந்து விடைபெறுகின்றேன்.

mahen@thaiveedu.com

■ ■ ■


ROYAL SHUTTERS & BLINDS INC.

DIRECT FROM MANUFACTURER — Everything Factory Direct Prices

உங்கள் இல்லத்தின் உட்புறத்திற்கு ஏற்றவகையில் யன்னல்களை மறைப்புச் செய்திடவும் அழகு படுத்திடவும் நாடுங்கள்



Sales - Service - Installations

Custom Made

| Wood & Vinyl Shutters | Blinds | Draperies |
|---|---|---|
| California Style Shutters | Vertical Blinds | Swags |
| Plantation Style Shutters | Venetian Blinds | Sheers |
| Traditional Style Shutters | Wood Blinds | Valance |
| Arches | Bamboo Shades | Curtains |
| (We Do Any Colour Of Paint & Stain) | Roller Shades | And More |
| | And More | |



Workmanship Guaranteed

Free Shop At Home

CALL FOR A FREE ESTIMATE:

தாஸ் Thaas Sivathason

13 Years of Experience in Shutter Business

Tel: (416) 562-0340

Full Satisfaction Guaranteed

# All your Real Estate needs

"வீடு வியாபார நிலையங்கள் வாங்க விற்க"




ஜூடி ஞானேந்திரன்
Sales Representative
416-629-9797

## Attractive low mortgage Rate

**3.05%** 3year closed


**2.89 %** Open Variable

**Office: 416-321-6969**



ஞானி நரசிங்கம்
Sales Representative
416-937-8090

CONCORD CITYPLACE *in Downtown, Toronto*



*Special Price to HomeLife GTA Realty Inc.*
*Incentive Upto* **$71,865.00``**

**$419,900**




**Staines/Morningside**
Detached brick 2 Storey
4 bedrooms/ 2full washrooms
5 years old, Separate Entra
Approx 2,200 square feet
**Exclusive**

**$354,000**




**Markham / Steeles**
For sale/Lease
- For Sale and also for Lease
- Brand new 2 Retail Store s Available
- In high traffic area /many usage Facing to Markham Road
- Near to Walmart / Price shoppers

**$ 529,000**




**Brimley/Eglinton**
Golden Opportunity To Own Attractive Updated Medical / Prof Building
' Main Floor Has 5 Fully Equip Exam. Rooms,1 W/R,Reception Area And Waiting R.
' 2nd Floor Has 7 Ex R,2 W/R &Office.
• Ideally Set Up For All Types Of Medical & Professional Practices.

**Markham**

9th line/14th Ave
**$539,900**
Newer detached 2 Storey
5bedrooms + 1bedroom
Approx 3,351 sq ft, 3full W/R
Hardwood floor,

**Brampton**

Dixie/Sandalwood
**$314,900**
Semi Detached brick 2 Storey
4 bedrooms/ 2full washrooms
Newer House w/ wood Floor
Approx 2,200 square feet

**Markham**

Markham/14th
**$539,900**
Detached 2 Storey
4 bedrooms & 2 full &half
Wood floor, double garage
2 bedroom basement Apt

**Scarborough**

Kennedy & Finch
**$899,000**
Brand New Custom built home
Detached 2 story home
Approx 3700 sq ft 4 bedroms
Hardwood &Finished basement


**Scarborough**
Convenience Store
Kennedy/Lawrence
**$38,000**
Convenience/Variety store
in Strip Plaza plus stock
Easy to run,649 Lotto Com.
And good weekly sale

**Scarborough**

Warden/Ellesmere
**$339,000**
Detached Brick Bangalow
3 bedrooms /full washrooms
Ba semen Apt with separa te
entrance Walk to TTC

**Scarborough**

Markham/ Ellesmere
**$389,000**
Detached 2 Storey Brick Home
4 Bedrooms/ 2 full washroom
Basement finished Rec, Room
Step to Woburn School, TTC &
Shopping

**Toronto**

KENNEDY/LAWRENCE
**$324,900**
New Condo Townhouse
Approx 2000 sq ft 3 bedrooms
Walk to Lawrence Subway
Walk out basement

**Markham**

McCowan/ Steeles
**$339,000**
Newer detached 2 Storey
4 bedrooms & 2full Wash Rm
Basement apartment with
2 bedrooms w/ sep entrance

**Gas Station**

Baxter Ontario
**$799,000**
Gas Station and Convenient
28 Seat Restaurant
One Hour drive from Toronto
Two Apart on second floor

**Restaurant/Bar**

Oshawa, Park Rd.
**$309,000**
26 Years same owner
185 Seat Restaurant & Bar
50 Patio seat & Entertainments
Financial Available

**Strip Plaza**

Oshawa, Park Rd.
**$2.2 Million**
Call for more details
7 Units Fully Leased
22 Years Same owner
Financial Available

Coming soon!
New plaza in Scarborough
call us for more information

**HomeLife GTA Realty Inc., Brokerage*1711 Mccowan Rd, Suit # 206 Toronto, ON M1S 3Y3**

This is not intended to solicit properties currently under contract*Independently Owned and Operated**Some Conditions may apply

# கண்ணுக்குள் நூறு கதைகள்



கந்தையா
செந்தில்நாதன்
- Echo - Cardiogapher -

அகத்தின் அழகு கண்களில் தெரியும் - கவிஞனுக்குக் கண்கள் ஓர் வர்ணனையிடம். அவன் கண்களை வைத்தே பல கவிதைகள் படைத்து விடுகிறான். அகத்தின் அழகை மட்டுமல்லாமல் அகத்தின் நோய்களையும் காட்டிவிடும் சாளரமாகக் கண்கள் திகழ்கின்றன.

கண்ணுக்குள் நூறு கதைகள் உண்டு. கண்களைப் பற்றித் திருவள்ளுவர் பல கோணங்களில் இருந்து ஆராய்ந்து எழுதியிருக்கிறார். வள்ளுவப் பெருந்தகையின் ஒரு குறளை வாசகர்களுடன் பகிர்ந்துகொள்வதில் மனமகிழ்வு கொள்கிறேன். இலக்கியச் சுவை, இயற்கையுடன் ஒன்றிய வாழ்வுகள் என்பனவும் கூட இதயங்களை மலர வைத்து பல நோய்களை விரட்டியடிக்க வல்லவை.

'யான் நோக்கும் காலை நிலன்நோக்கும்,
நோக்காக்கால்
தான் நோக்கி மெல்ல நகும்'
குறள் 1094

பரிமேலழகர் தந்த உரை:

யான் அவளை நோக்கும் போது அவள் நிலத்தை நோக்குவாள். யான் நோக்காத போது அவள் என்னை நோக்கித் தன்னுள் மகிழ்வாள்.

இது காதலர்களுக்கும், கணவன் மனைவியர்களுக்கும் பொருந்தும். நேர்முகப் பரீட்சையில் நிலம் நோக்கலாமா? கண்வைத்தியரிடமும் இது செல்லுபடியாகாது. நிலம் நோக்கினால் எப்படி அவர் உங்கள் கண்களைப் பரீட்சிப்பது?

கண்களைப்பற்றி நன்கு விளங்கிக் கொள்வதற்கு அதன் அமைப்பைப்பற்றி அறிந்திருப்பது அவசியம். கண்களை நோக்கும் பொழுது எமக்கு முதலில் தெரிவது கருவிழியும் அதனைச் சுற்றியுள்ள விழிவெண்படலமுமாகும். கருவிழியின் நடுவே சிறிய வட்டவடிவமான கண்மணி உண்டு. இக்கண்மணிகள் ஊடாக ஒளிக் கிரணங்கள் கண்களினுள் செல்லும் பொழுது புறத்தேயுள்ள பொருட்களின் விம்பங்கள் கண்ணின் அகத்தேயுள்ள விழித்திரையில் வீழ்கின்றது. இவ்விம்பங்கள் பார்வை நரம்பினூடாக மூளைக்குக் கடத்தப்பட்டு மூளையில் உணரப்படுகின்றது.


கண்வைத்தியர் அல்லது குடும்ப வைத்தியர் ஒருவரினால் கண்களின் விழித்திரையில் உள்ள மாற்றங்களை அவதானித்து அவரது இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் என்பன எவ்வளவு தூரம் அவரது உடலையோ, பார்வையையோ பாதித்துள்ளன என்பதைக் கூறிவிட முடியும். கட்டுப்படாத நீரிழிவு நோய் விழித்திரையை மாத்திரமல்லாது விழிவில்லைகளையும் பாதித்து அதனூடாக ஒளி புகும் தன்மையையும் குறைத்து விடுவதனால் பார்வை குறைந்து கொண்டு வந்து இறுதியில் குருட்டுத்தன்மை ஏற்பட வாய்ப்பு ஏற்படுகிறது.

குருதியமுக்கம் ஏற்படுவது போல் சிலருக்கு கண்களில் கண் அமுக்கம் (Glaucoma) ஏற்படுகின்றது. கண்களில் உள்ள வேறு சில குறைபாடுகளை நேரகாலத்துடன் கண்டறிந்து சிகிச்சை பெறுவதன் மூலம் நமது கண்களின் பார்வைத்திறனை நன்கு பேணமுடிவதுடன் பல விதமான குறைபாடுகள் பார்வையைப் பாதிக்காதவாறு எம்மை நாமே கவனித்துக் கொள்ள முடியும். சோர்வுக்கண் (Amblyopic) வாக்குக்கண் (Strabismus) போன்று பல குறைபாடுகள் உண்டு. ஒருமுறையாவது கண்வைத்தியரை அணுகி அவற்றினால் ஏதாவது குறைபாடுகள் பிற்காலத்தில் ஏற்படுமா என்று அறிந்து கொள்வது நல்லது.

### சோர்வுக்கண் (Amblyopia)

சோர்வுக்கண் என்ற குறைபாட்டை மாத்திரம் இங்கு கவனிப்போம். சோர்வுக்கண் நோயை Amblyopia என்று அழைப்பார்கள். இது ஒரு கிரேக்க மொழிச் சொல்லாகும். அதன் கருத்து மங்கிய பார்வை என்பதாகும். இந் நோயை Lazy Eye என்றும் ஆங்கிலத்தில் அழைப்பதனால் சோர்வுக்கண் என்றே தமிழில் அழைக்கலாம்.

சோர்வுக்கண்ணில் இருவகைகள் உண்டு. முதல் வகை நச்சுத்தன்மையான பதார்த்தங்களாகிய மதுசாரம், புகைத்தல், உணவு மூலம் ஏற்படும் உணவு நஞ்சு என்பனவற்றால் ஏற்படுவது. இரண்டாவது வகைதான் பெரும்பகுதியான குறைபாட்டினை ஏற்படுத்துவதுடன், சிறுபிள்ளைகள் பலருக்குக் குறைபாட்டினை ஏற்படுத்துமொன்றாகவும் விளங்குகிறது.




சோர்வுக்கண் குறைபாடு நேரகாலத்துடன் கண்டறியப்படாவிடில் அவர்கள் பார்வை பாதிக்கப்படும். ஒரு பொருளை நாங்கள் பார்வையிடும் பொழுது அப்பொருளின் விம்பங்கள் இருகண்களின் விழித்திரைகளிலும் விழுகின்றன. இரு கண்களிலிருந்தும் பெறப்படும் விம்பங்கள் மூளையினால் ஒருங்கே கிரகிக்கப்படும் பொழுது தெளிவான காட்சியொன்று ஏற்படுகின்றது. பார்வை நரம்புகளால் மூளைக்குக் கடத்தப்பட்ட சமிக்ஞைகள் மூளையின் பார்வை மண்டலத்தினால் முப்பரிமாண ரீதியில் உணரப்பட்டு அப் பொருளை நாம் தெளிவாகக் காண்கின்றோம்.

கண்களில் ஏற்படும் குறைபாடுகளினால் சில விம்பங்கள் தெளிவாக விழுவதில்லை. ஒரு கண்ணில் தெளிவான விம்பமும் மற்றைய கண்ணில் தெளிவற்ற விம்பமும் ஏற்படும் பொழுது எமது மூளையானது தெளிவற்ற கண்ணில் இருந்து வரும் விம்பங்களைப் புறக்கணிக்க முயல்கின்றது.

மூளையின் இச்செய்கையானது பார்வை நரம்பு மண்டலத்தை நன்கு விருத்தியடையச் செய்யமாட்டாது. இப்பார்வை நரம்பு மண்டலம் சுமார் 8-9 வயதளவில் முற்றாக முதிர்ச்சியடைகின்றது. இக்காரணத்தினால் சோம்பல் கண் குறைபாடு மேற்கூறிய வயதெல்லைக்குள் மாற்றப்பட்டுவிடுதல் வேண்டும். இவ் வயதெல்லைக்குள் இக்குறைபாடு திருத்தப்படாதுவிடில் நிரந்தரமாகவே சோம்பல் கண் ஏற்பட்டுவிடும். சில சமயங்களில் வயதெல்லை தாண்டியும் சுகமானவர்கள் இருக்கிறார்கள். கண்வைத்தியரின் கண்காணிப்பு மிகவும் அவசியம்.

### இதயம் மலர்கிறது - 11

கண்களில் உள்ள எத்தகைய குறைபாடுகள் இச்சோம்பல் கண்ணினை ஏற்படுத்துகின்றன என்று காண்போம்.

### 1.வாக்குக்கண் (Strabismus)

ஒரு பொருளைப்பார்க்கும் பொழுது இரண்டு கண்களையும் நேராகக் கொண்டு வந்து பொருளின் மீது பார்வையைக் குவிக்க முடியாமை இதன் பொருளாகும். சில சமயங்களில் வாக்குக்கண் தூரப்பார்வையினால் (Farsightedness) ஏற்படுகின்றது. கண்ணாடி அணிவதன் மூலம் இதனைத் திருத்தலாம்.

கண்ணின் அசைவுகள் ஆறு சிறு தசைகளால் கட்டுப்படுத்தப்படுகின்றன. இத்தசைகள் சரியாகத் தொழிற்படுகின்றனவா என்று பரிசோதனைகள் மூலம் அறியலாம். இத் தசைகளில் ஏற்பட்டுள்ள குறைபாட்டை சில சமயங்களில் சத்திர சிகிச்சை மூலம் நீக்கி விடலாம். அப்படி நீக்கும் பொழுது சில வாக்குக்கண் திருந்திவிடும். மிகக் கடுமையான முறையில் வாக்கு அமைந்தால் அதாவது இரு முழிகளும் மூக்கை நோக்கி உட்பக்கமாக அமைந்தால் (Crossed Eyes) அல்லது இரு கன்னங்களையும் நோக்கி வெளிப்பக்கமாக (Wandering Eyes)அமைந்திருந்தால். கண்களை அசைக்கும் தசைகளின் நீள அளவுகளைச் சத்திர சிகிச்சை மூலம் சரிசெய்யும் பொழுது இக்குறைபாடுகள் நீங்குவதுடன், பார்வையும் திருந்துகின்றது.

2. இளவயதில் ஏற்படும் கண்வெண்படல நோய் (Juvenile Cataracts)
3. கருவிழியில் ஏற்படும் கருவிழித் தழும்புகள் (Corneal Scars)
4. தூங்கு விழிகள் (Droopy Lids) / தூங்கு விழிமடல்
5. ஒரு கண் கிட்டப்பார்வையுடையதாகவும் (Nearsighted)அல்லது ஒளித்தெறிப்புப் பிறழ்வு (Astigmatism) உடையதாகவும் இருந்து

13ம் பக்கம் பார்க்க...

முதலுதவி கற்பதற்கும், வர்மப் புள்ளி வைத்திய ஆலோசனைகளிற்கும்

**Dr. Kandiah Senthilathan**

Registered Medical Officer (SLMC)
Acupuncturist (MAcF)

First Aid & CPR Instructor
(Certified in Canada)

ஆறு மாணவர்களுக்கு மேல் சேருமிடத்தில் உங்கள் இடத்திற்கு வந்து முதலுதவி கற்பிக்கப்படும்.

**647-801-9252, 416-502-9252**

கூர் - 2009

விரைவில் வெளிவரவிருக்கும் கனடா தமிழ் கலை, இலக்கியத் தொகுப்புக்கான ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன. கவிதை, சிறுகதை, கட்டுரை எதுவாயினும் ஜூன் 30ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக எமது மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

மின்னஞ்சல்:
**koorcircle@gmail.com**

கூர் கலை, இலக்கிய வட்டம், 102 Hntingdale Blvd., Scarborough, ON M1W 1T1

# Buy & Sell Residential & Commercial Properties



Raj. A. Rasaratnam B.Com.
Sales Representative

416-726-8055
416-299-8570

HomeLife/ GTA Realty Inc.
Real Estate Brokerage*
*Independently own and operated

1711 McCowan Rd., Suite #206,
Scarborough, ON. M1S 3Y3

Bus: (416) 321-6969
Fax: (416) 321-6963

1st PRIZE



NEW CAR - 2008 BMW 3 Series

*You can win!***

** Some terms and conditions apply

2nd PRIZE



WIN a TRIP for 2 to CUBA

3rd PRIZE



46" flat screen TV

*Buy or sell any property with my help and enter the draw!*
*Don't miss out on these wonderful prizes!*

Mortgage arrangement, Business incorporation and corporate tax preparation

**416-726-8055**



# எமக்கென்று ஒரு தனிக்குடில்

சொந்த இல்லத்திற்கு தேவையான அடமானத்தை சுலபமாகப் பெறுவதற்கு பலவருட அனுபவம் பெற்ற முகாமையாளர்களை நாடுங்கள்



**TWO PROFESSIONAL MORTGAGE SPECIALISTS UNDER ONE ROOF WITH RATES YOU CAN'T BEAT**

**MAILVAGANAM (MIKE) AHILAN**
Senior Accounts Manager
Residential Mortgages
(2006 Platinum Award winner)
**416-220-1184**

**VINCE SINNADURAI**
Senior Accounts Manager
Residential Mortgages
(2006 Platinum Award winner)
**416-917-9462**

**416.438.1688**

Fax: 416 438 1612

RBC Financial Group

1421 Kennedy Rd,
Scarborough, ON. M1P 2L6

# "வீடு" வினாவும் விடையும்



கருணா கோபாலபிள்ளை
- வீடு விற்பனை முகவர் -

தமிழர் நாம் இன்று எமது களியாட்டங்களை கைவிட்டு போராட்டங்களில் குதித்துள்ள காலம். எமது உடன் பிறந்த உறவுகள் நாளாந்தம் சொல்லொணா துயரங்களை அனுபவித்து வருவதும், புலம்பெயர் நாங்கள் செய்வதறியாது திகைப்பதும் எமது அன்றாடங்களாகிவிட்டது. உலகளாவிய ரீதியில் நாம் எடுத்துச் செல்லுகின்ற போராட்டங்கள், மக்கள் சக்தியாக காணப்படுகின்றதே தவிர வலுவுள்ள அரசியல் அரவனைப்பினை கொண்டிருக்கின்றதா என்பது கேள்விக்குறியே.

'வீடு' சம்பந்தமான பல தகவல்களை தாங்கி வருகின்ற இச் சஞ்சிகையில் வழமைபோல், வாசகர்களின் கேள்விகளுக்குரிய விடைகளை ஆராய்வோம்.

**நான்கு வருடங்களுக்கு முன்னர் நான் வாங்கிய வீட்டிற்குரிய Mortgage ஐந்து வருடங்களுக்கு வங்கியில் 5.5% வட்டி விகிதத்தில் இருக்கின்றது. இன்றைய வட்டி விகிதம் குறைந்து காணப் படுவதால் நான் எனது Mortgage இனை புதுப்பித்துக் கொள்ளலாமா?**

வேல், எஸ். Scarborough

இன்றைய வட்டி விகிதம் நிச்சயமாக 4%இனை விடவும் குறைந்து காணப்படுகின்றது. இருப் பினும் நீங்கள் ஐந்து வருடங்களுக்கு ஒரு வங்கியுடன் Mortgage வைத்திருப்பதாக ஒத்துக்கொண்டுள்ளீர்கள். இதனை இடைநிறுத்தம் செய்கின்ற வேளைகளில் அவ்வங்கி உங்களுக்கு ஓர் அபராதம் வழங்கும். அவ் அபராத தொகையானது நீங்கள் ஈட்டப்போகின்ற லாபத்திற்கு குறைவானதா அல்லது அதிகமா என்பதனைப் பொறுத்தே நீங்கள் முடிவு எடுக்கலாம்.

உதாரணமாக உங்கள் கடன் தொகை 300,000ஆக இருப்பின் 5.5% வட்டி விகிதத்திற்காக நீங்கள் சுமார் $1700.00 மாதம் மீள் செலுத்துவீர். இதனை இடைநிறுத்தம் செய்வதால் ஏற்படும் அபராதம் சுமார் $3000-4000 வரை காணப்படும். இன்னமும் ஒரு வருடம் 4% குறைவான வட்டி விகிதத்தால் ஏற்படும் சேமிப்பினை அளவிட்டு அத்தொகை $4000ஐ விட குறைவாக இருப்பின் நிச்சயமாக மாற்றிக்கொள்ளலாம். Mortgage ஒழுங்குகள் பல வங்கிகளின் வேறுபட்ட வட்டி விகித மாற்றம் போன்றவற்றினை மாற்று ஒழுங்குனர்கள் நன்கு அறிவர். அவர்களை நாடி உங்கள் லாப நஷ்டங்களை கணக்கிட்டு கொள்ளுங்கள்.

**காணி வாங்கி வீடு கட்டிக் கொள்வது பற்றிய உங்கள் கருத்து என்ன? அதற்குரிய நடவடிக்கைகள் யாது? லாபம் கிடைக்குமா?**

சிறிசங்கர். சி. Brampton

கொள்வனவாளர்களுக்கு வேண்டிய பொருளினை தகுந்த விலையில் வழங்கினால் நிச்சயம் லாபம் கிடைக்கும். ஆனால், அதற்குரிய பெறுமதியினை மிகைப்படாமல் பார்த்துக் கொள்வது அவசியம்.

காணி வாங்கி வீடுகட்டுவது இரண்டு வகைப் படும். ஒன்று ஓர் பாழடைந்த வீட்டினை வாங்கி அதனை தரைமட்டமாக்கி பின்னர் அதே இடத்தில் நிர்மானிப்பது. மற்றையது வெறும் தரையில் புதிதாக வீட்டினை கட்டிக் கொள்வது. இரண்டிற்குமே நீங்கள் வீடு கட்டப்போகின்ற பகுதிக்குரிய 'City Centre' இல் 'Planning Department'இன் அனுமதி பெறவேண்டும். வீடு கட்டுவதற்கான சட்ட ஒழுங்குகளை படிப்படியாக செயன்முறைப்படுத்துவதற்குரிய ஆலோசனைகளை அவர்களிடம் பெறுவது நன்று. ஏனெனில் இறுதியில் அவர்களால் சட்டப் பிரச்சினைகள் வராமல் பார்த்துக்கொள்ளலாம். பொதுவாக ஓர் வீடு இருந்த அதேஇடத்தில் மீளவும் வீடு கட்டிக்கொள்வதனால் Gas, Water, Hydro போன்றவற்றினை பெறுவதற்கும் வீட்டில் இருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர் கால்வாய்களை அமைத்துக் கொள்வதிலும் சிரமம் இருக்காது. இதற்கான அனுமதி ஒரு வகையில் தேவையில்லை என்றே கூறலாம்.



பொறியியலாளர்களின் உதவியுடன் நீங்கள் பெற்றுக்கொள்ளுகின்ற வரைபடத்தினை 'Planning Department' இனூடாக அனுமதி பெற்று பின்னர் 'Contractors'இன் உதவியுடன் பணியைத் தொடங்கலாம். இவ்வாறான Contractors, Custom Home Builders எனவும் அழைக்கப்படுகின்றனர். ஆரம்பத்திலேயே இவ் வீட்டுப் பிரிவினரை நாடுவதன் மூலமும் தரமான தகவல்களை திரட்டிக் கொள்ள முடியும்.

இவ்வகை வீடுகளை கட்டி முடிப்பதற்குரிய செலவீனமாக அண்ணளவாக ஒரு சதுர அடிக்கு சுமார் $120-150 வரை கணக்கிடலாம். அதாவது 2000 சதுர அடி கொண்ட வீட்டினை சுமாரான முறையில் கட்டுவதற்கு அண்ணளவாக $240,000உம் சிறப்பாக கட்டுவதற்கு அண்ணளவாக $300,000உம் செலவாகும். நீங்கள் பெற்றுக் கொள்ளுகின்ற காணியின் விலையையும் சேர்த்து மொத்த பெறுமதியினை கணக்கிட்டு கொள்ளலாம்.

வங்கிக் கடன் பெற்று வீடு கட்டிக்கொள்பவர்கள், குறைந்தது மொத்த பெறுமதியில் 1/3 பங்காவது சொத்தாக வைத்திருந்தால் செயற்பாடுகள் இலகுவாகும். ஏனெனில் இதற்கான கடன்தொகை ஒரே தவணையில் வங்கிகளால் வழங்கப்படுவதில்லை. மாறாக, தவணை முறையில் தரப்படும். அதுவும் வீட்டுப் பணி ஆரம்பித்த பின்னரே ஆரம்பிக்கும். ஆகவே ஆரம்ப செலவுகளுக்கென ஒரு தொகை அவசியம். இது பற்றிய மேலதிக விபரங்களுக்கு இணையத் தளத்தினையோ அல்லது City Centre இனையோ நாடுங்கள்.

**'சக்தி விரய காப்பு' திட்டம் (Energy Efficient) மூலம் அரசாங்கத்தினால் வழங்கப்படும் தொகை யாது? அதனை பெறுவதற்குரிய வழிமுறைகள் எவை?**

ஜெயா .S. Markham

ஒரு வீட்டிற்கு அதி கூடிய தொகையாக $5000.00 வரை வழங்கப்படுகின்றது. மாத்திரமன்றி வீடும் வியாபாரமும் சேர்ந்திருக்கும் கட்டடங்களில் 50%க்கு மேற்பட்ட பகுதி குடியிருப்பாக காணப்படின் அக்கட்டடங்களும் இத்தொகையினை பெறுவதற்கு தகுதியானவையாகின்றது. இத்திட்டம் மூலம் மானியத் தொகையினை பெறுவதற்கு கீழ்வரும் நான்கு படிமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும்.

**Pre. retrofit evaluation:** அதாவது நீங்கள் சக்தி விரயமாவதைத் தடுப்பதற்காக மேற்கொள்ள வேண்டிய திருத்த வேலைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர், கனடிய அரசு அங்கீகாரம் பெற்ற இயற்கை வள Energy Advisor ஒருவரின் உதவியுடன் உங்கள் வீட்டினை பரிசோதித்து முழு விபரம் அடங்கிய அறிக்கையினை பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

**Choose and Implement:** மேற்படி வழங்கப்பட்ட அறிக்கையின் பிரகாரம் நீங்கள் முன்னுரிமைப்படுத்துகின்ற திருத்த வேலைகளை தெரிவு செய்து உங்கள் நிதி நிலைமையையும் கருத்தில் கொண்டு மேற்கொள்ளலாம். உங்கள் திருத்த வேலைகளை முடிப்பதற்கு, அறிக்கை பெற்ற நாளிலிருந்து 18 மாதங்கள் வரை எடுத்துக்கொள்ளலாம். மார்ச் 31, 2011 ஆண்டுக்கு முற்பட உங்கள் வேலைகள் முடிக்கப்பட வேண்டும். ஏனெனில் இச் செயன் முறைக்காக 300 மில்லியன் தொகை மார்ச் 31, 2011 வரையுள்ள காலப்பகுதி வரை ஒதுக்கப்பட்டுள்ளது.

**Post Retrofit Evaluation:** மீளவும் Energy Advisorஇன் உதவியுடன் வீட்டினை பரிசோதனை செய்து அறிக்கை பெற வேண்டும். இத்தருணத்தில் நீங்கள் செலவு செய்ததற்கான அத்தாட்சி சீட்டுக்களையும் சேர்த்து வைக்கத் தவறாதீர்கள். இச்சீட்டுக்கள் பின்னர் 'Home Renovation Tax credit பெற்றுக் கொள்வதற்கு உதவும்.

**Receive your Cheque:** மேற்படி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு 90 நாட்களுக்குள் உங்களுக்கான காசோலை வழங்கப்படும்.

இதுபற்றிய மேலதிக விபரங்களை அறிந்து கொள்வதற்கு 'Natural canada' இணையத் தளத்தில் Ecoenergy பகுதியினை நாடுங்கள். **www.ecoaction.gc.ca/homes** அல்லது தொலைபேசி தொடர்புகளுக்கு **1-800-622-6232.**

**தற்போது வீட்டுவிலைகள் சற்று குறைந்து காணப்படுவதாலும், இது Buyers market என்று செய்திகள் கூறுவதாலும் நானும் ஓர் வீடு தேடி வருகின்றேன். எனது முகவரின் உதவியுடன் நாங்கள் வழங்கிய offer மூன்று வீடுகளுக்கு நிராகரிக்கப்பட்டுவிட்டது. அதற்கான காரணம் நான் மிகக் குறைவாக விலை மதிப்பீடு செய்ததுதான் என்று முகவர் குறை கூறுகிறார். பத்திரிகைகளில் 15% - 20% குறைவாக வீடுகள் காணப்படுவதனால் தான் நான் அவ்வாறு மதிப்பீடு செய்தேன். இதற்கான காரணத்தை விளக்க முடியுமா?**

காயத்திரி S. Ajax

நிச்சயமாக விளக்கமுடியும். இருப்பினும் ஓர் அனுமான ரீதியில்தான் இதற்கான பதில். உங்களுக்காக கடமையாற்றுவதே ஓர் வீடு முகவரின் தொழில். அவர்கள் ஓர் வீட்டினை எவ்வாறு மதிப்பீடு செய்ய வேண்டும் என்பதற்காக பயிற்றுவிக்கப்படுகின்றனர். அது மாத்திரமன்றி அவர்களுக்கென பிரத்தியேகமாக பல அரசு சார் மற்றும் சாரா அமைப்புக்களால் வழங்கப்பட்டுள்ள தரவுகள் இம்மதிப்பீட்டுக்கு உதவுகின்றன. மேலே கூறியது போல் ஓர் கடமையை சரிவர செய்யும் வீட்டு முகவர் தனது வாடிக்கையாளரின் நன்மையை மட்டுமே கருத்தில் கொண்டு இயங்குவார். அத்தகையவர்களின் ஆதாரபூர்வமான தரவுகளை நம்புவதில் தப்பேதும் இல்லை.


நீங்கள் கூறியதுபோல் வீட்டு விலைகள் சற்று சரிந்து காணப்பட்டாலும், விற்பனைக்கு இடப்பட்டுள்ள வீடுகள் அதேசந்தை விலையை கருத்தில் கொண்டே மதிப்பிடப்பட்டிருக்கும். அது மட்டுமன்றி விலை சரிவுகள் எல்லா பகுதிகளிலும் ஒரே அளவில் இடம் பெறவில்லை. ஆகையால் இதுபோன்ற முடிவுகளை ஆதாரங்களின் அடிப்படையில் முன்னெடுப்பதே புத்திசாலித்தனம்.

Buyers Market எனப்படுவது இரண்டு காரணிகளை கொண்டது. ஒன்று 'Affordability' அதாவது குறைந்து காணப்படும் வட்டி விகிதம், மற்றயது 'Supply' அதாவது தெரிவுகள் நிறைந்த காலம். இதனை தவறாக வாங்குபவர்கள் விருப்பத்திற்கு விலையை நிர்ணயம் பண்ணிக்கொள்ளலாம் என்று வரைவிலக்கணப்படுத்துவது முறையற்றது.

மேற்படி தரவுகளை மனதில் கொண்டு உங்கள் முகவரின் தகவல்படி செயற்படுங்கள்.


இன்றைய நாட்கள் நாம் இறப்பினையும் இழப்பினையும் தினம் அனுபவித்துவரும் ஓர் இக்கட்டான கட்டம். இதனால் எம்மில் பலரது குடும்பங்களும் நேரிடையாகவும் மறைமுகமாகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு இத்தாழ் எனது ஆழ்ந்த இரங்கல் செய்திகளை தெரிவிக்கும் அதேவேளை, புலம்பெயர் ஒருங்கிணைப்பு போராட்டங்களில் முடிந்தவரை அனைவரும் பங்கேற்று எமது உரிமையினை வென்றெடுப்பதற்கு நாம் ஒவ்வொருவரும் எம்மாலானதை செய்வதன் மூலம், மீதமுள்ள எம் தமிழ் உறவுகளை காப்பாற்றுவோம்.

karunagopal@thaiveedu.com

TRAFFIC TICKETS!
● SPEEDING
● RED LIGHT
● CARELESS
● STOP SIGN
● ACCIDENT
● TICKETS
TRAFFIC TICKETS $100 மட்டுமே

CALL
PETER JOSEPH
பீற்றர் ஜோசப்
416.757.7707
416.757.7797
2425 Eglinton Ave, E., Unit 1A
(Kennedy & Eglinton)


# வீடு வியாபார நிலையம் வாங்க விற்க

$185.000



McCowan & Steeles
2+1 Bedrooms 2 Washroom

$159.900




Weston & Sheppard
2 Bedrooms 2 Washroom

$334.000




Rutherford / Hwy 400
3 Bedrooms 4 Washroom
Finished Basement

$599.000




Rutherford / Western Rd
4 Bedrooms, 4 Washroom
Finished Basement

$424.000





Gore & Cottrelle
4 Bedrooms,3 Washroom

**In Cambridge**
GAS STATION
WITH CONV.
+ LOTTO 649
+ WAREHOUSE
+GARAGE
$845.000


**In Colborne**
GAS STATION
CAR WASH & CONV.
$89.000
with Property.
$575.000

**In Niagara**





$1,400.000

**In Burlington**




$159.000

**In Fort Erie**




$2,299.900

மேலும் பல GAS STATION களும் விற்பனை
நிலையங்களும் விற்பனைக்குண்டு
நம்பிக்கை நேர்மை நட்பான சேவைக்கும் அழையுங்கள்

*Some conditions may apply



## சத்தி மருதப்பா
Sales Representative
(முழுநேர வீடு விற்பனை முகவர்)

# 416-816-1500

Affiliate Realty Inc.
Brokerage
208 - 80 Corporate Drive,
Toronto, Ontario M1H 3G5
Bus: 416-290-1200
Fax: 416-290-1900

Century 21

brightsun print - 416-845-6565



# HOMELIFE FUTURE REALTY

7 Eastvale Dr #205
Markham, Ontario
L3S 4N8

Office: 905-201-9977
Fax: 905-201-9229

Markham/Mjr.Mack



$2400/Month

- Commercial Unit for Rent
- Mjr.Development in Progress
- Many Possible Uses

Markham/Passmore



$398,000

- 4 Bedrooms
- 3 Washrooms
- Hardwood Throughout

Birchmount/Finch



$309,900

- 3+1 Bedrooms
- 3 Washrooms
- Finished Basement



## 52" SONY LCD HDTV INCLUDED WITH EVERY HOME PURCHASE*

* - Some Conditions Apply



**LOKAN SUNDARAM**
*Broker*

*416-450-3984*
*lokan.homelife@gmail.com*

LOW INTEREST RATES!
OPPORTUNITY TO BARGAIN!
ACT NOW!!
BUY WITH LOKAN!

# தொடரும் போரின் நிழல்

ஜேன் அன்ட் பிஞ்ச் பகுதியில் அமைந்திருக்கும் கிருபா கந்தையாவின் வீட்டில் ஏராளமான உறவினர்கள் அமைதியாக உட்கார்ந்திருக்கிறார்கள். உறவினர்கள், நண்பர்கள் வந்த வண்ணம் இருக்கிறார்கள். அவர்கள் வருகிறபோது விசும்பல் ஒலி கேட்கிறது. கூடத்தின் ஒரு புறத்தில் இரண்டு புகைப் படங்களும் அவற்றின் முன்னே இரண்டு அகல் விளக்குகளும் வைக்கப்பட்டிருக்கின்றன. வன்னியில் இலங்கை இராணுவத்தின் தாக்குதலில் இரண்டு நாட்களுக்கு முன்னர் கொல்லப்பட்ட உறவினர்களின் படங்களே அவை. கடந்த சில நாட்களுக்களுக்குள் கிருபா கந்தையாவின் இருபதிற்கு மேற்பட்ட உறவினர்கள் இராணுவத் தாக்குதலில் உயிரிழந்திருக்கிறார்கள். பலரின் நிலை தெரியவில்லை.

வன்னிப் பகுதியில் தொடரும் தாக்குதல்களில் தினமும் நூற்றுக்கணக்கானோர் கொல்லப்படுகின்றனர். அதிகமானோர் காயமடைகின்றனர். அங்கிருக்கும் மக்கள் எதிர்கொள்ளும் உளவியல் தாக்கங்கள் வார்த்தைகளுக்கு அப்பால் பட்டவை. அதே நேரம் புலம் பெயர்ந்த நாடுகளிலுள்ள ஈழத்தமிழர்களும் அதிகளவிலான உளவியல் தாக்கங்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

வன்னிப் பகுதியில் உள்ள உறவினர்களுடன் தொடர்புகளற்றுப்போய் அவர்களுக்கு என்ன நடந்தது என்று தெரியாதிருப்போர், போர் நடக்கும் பகுதிகளிலுள்ள உறவினர்களுக்கு என்ன நடந்துவிடுமோ என்று அங்கலாய்த்துக் கொண்டிருப்போர், உறவினர்களின் இழப்புகளைச் சந்தித்திருப்போர், தடுப்பு முகாம்களில், இராணுவ முகாம்களில் உள்ள உறவினர்கள் பற்றிய தகவல்கள் இல்லாதிருப்போர், இணையத்தில் தாக்குதல் செய்திகளையும், படங்களையும் தொடர்ந்து பார்ப்பவர்கள் என விரிகிறது இங்கு பாதிப்படைந்தவர்களின் பட்டியல்.



அண்மையில் கனடியத் தமிழ் வானொலி ஒன்றில் உளநல மருத்துவர் ஒருவருடன் நடந்த கலந்துரையாடல் ஒன்றில் பங்கேற்ற ஏராளமான நேயர்கள் பலவிதமான உளவியல் தாக்கங்கள் பற்றிக் குறிப்பிட்டிருந்தனர். நித்திரையின்மை, பசியெடுக்காமை, காரணமின்றி கோபமடைதல், காரியங்களில் கவனம் செலுத்த முடியாமை போன்றவை, இந்த உளவியல் தாக்கத்தின் சில அறிகுறிகளாக அவர்களால் குறிப்பிடப்பட்டன. பல குழந்தைகள் கல்வியில் கவனம் செலுத்த முடியாமல் இருக்கிறார்கள் என ஆசிரியர்களால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளனர். பெற்றார் தொடர்ந்து அழுதுகொண்டிருப்பதாலும் பல குழந்தைகள் அதிகளவில் பாதிப்புற்றிருக்கின்றனர்.

லெபனானில் இஸ்ரேலியர்கள் தாக்குதல் நடத்திய போது வேறுநாடுகளிலிருந்த லெபனானியர்கள் பலவிதமான உளத் தாக்கங்களுக்கு உள்ளாயிருந்தனர். மேற்கூறிய அறிகுறிகளுடன் அவர்களில் சிலருக்கு பல்வலி ஏற்பட்டிருந்ததாயும், சிலருக்கு தாடைப் பகுதியல் தாங்கமுடியாத நோ காணப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இரண்டாம் உலகப்போரின்போது ஹிட்லரின் வதை முகாம்களில் அடைக்கப்பட்டிருந்த யூதர்களில் அவதானிக்கப்பட்ட உளவியல் தாக்கங்களின் பின்னரேயே இந்த உளவியல் தாக்கங்கள் பற்றி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆயினும் எமது சமூகத்தில் இந்த உளவியல் தாக்கங்கள் பற்றிய அறிவூட்டல் அதிகளில் இருப்பதாகத் தெரியவில்லை. ஒருசில நடவடிக்கைகள் சமூகத்தை இந்த உளவியல் தாக்கத்திலிருந்து விடுவித்துவிட முடியாது. இந்தப் பாதிப்புகள் பற்றி விரிவான ஆய்வுகள் செய்யப்படவேண்டும். எமது உறவினர்களின் நாளாந்த நடவடிக்கைகளில் வேறுபாடுகள் காணப்பட்டால் மருத்துவர்களுடன் தொடர்பு கொண்டு சரியான ஆலோசனைகளைப் பெற வேண்டும். காலம் கடந்த பின் கவலைப்படுவதை விட சமூகமாக இந்த உளவியல் தாக்கங்கள் பற்றிய அறிவூட்டல்களில் ஈடுபடுவோம்.

■ ■ ■

# கண்ணுக்குள் நூறு..

9ம் பக்கத் தொடர்ச்சி...

மற்றக்கண் சாதாரணமாகவோ (Normal Eye) அல்லது தூரப்பார்வை (Farsighted) உடையதாகவோ இருந்தால் தெளிவற்ற விம்பம் ஏற்படும்.

ஒளித்தெறிப்புப் பிறழ்வு கண்ணின் முன்பாக உள்ள கருவிழியின் அமைப்பு சீரற்றதாக இருக்கும் பொழுது அல்லது கண்வில்லையில் ஏற்படும் சீரற்ற அமைப்புத்தன்மையினால் ஏற்படுகின்றது. இங்கு ஒளியானது கண்ணில் புகும் பொழுது சீராக முறிவடைந்து கண்ணின் விழித்திரையில் குவியாமல் பிறழ்வடைவதனால் மங்கிய விம்பம் ஏற்படுகிறது.

மேலே கூறப்பட்ட காரணங்கள் 2,3,4 ஆகியவை கண்களில் ஏற்படும் வெண்திரையும், தழும்புகளும், விழிமடலும் கண்களினுள் ஒளியைத் தெளிவாகச் செல்ல விடாமல் எப்படித்தடுக்கின்றன என்பதைக் காட்டுகின்றன. ஆனால், காரணங்கள் 1ம் 5ம் ஒளியானது தெளிவாகக் கண்களினுள் புகுந்து கொண்டாலும் இருகண்களிலும் விழித்திரைகளில் விழும் விம்பங்கள் ஏறுமாறுடையனவாக ஏற்படுகின்றதை சுட்டிநிற்பதை அவதானிக்கவும்.

இக்காரணங்களால் மூளை ஒரு விம்பத்தை ஏற்று மறு விம்பத்தை புறக்கணித்து விடுவதன் மூலம் ஓரளவு தெளிவான காட்சியை ஏற்படுத்த முயல்கிறது.

இங்கு பிரதானமாக நோக்க வேண்டியது சோம்பல் கண் குறைபாடு என்பது வாக்குக் கண் உடையவர்கள், அல்லது சீரற்ற கண்ணுடையவர்கள் என்பதல்ல, மாறாக வாக்குக்கண் அல்லது சீரற்ற கண்ணுடையவர்களை இந்நோய்தாக்கலாம் என்பது உண்மை.

பார்வை நரம்புத்தொகுதி முதிர்ச்சியடைந்த பின்பு (8 அல்லது 9வயது) சாதாரணமாக இந்நோய் ஏற்படுவதில்லை. அதுபோல் சோம்பல் கண் குறைபாடு உடையவர்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சையும் இவ்வயதின் பின்பு போதிய அளவு பலனளிக்காது விடலாம். சில சந்தர்ப்பங்களில் பிந்திய வயதுகளிலும் சிகிச்சை பலனளித்துள்ளமை கவனிக்கப்பட வேண்டியதொன்றாகும்.

### கவனிக்க வேண்டியவை:

கண்கள் சீரற்று இருந்தால், அடிக்கடி கண் சிமிட்டினால், கண்கள் சிவந்து இருந்தால், கண்மடல்கள் தூங்கி வழிந்தால், கண்கள் கூசினால், கண்பார்வையில் மாறுதல்கள் ஏற்பட்டால் தகுந்த வைத்தியரிடம் காட்டி சிகிச்சை பெறுதல் அவசியம்.

### வைத்திய சிகிச்சைகள்

இவை கண்களின் குறைபாட்டிற்கு ஏற்ப வேறுபடும். இதில் முக்கியமாக சோர்வுக்கண்ணுடன் தொடர்புடைய சிகிச்சைகளை குறிப்பிடுகின்றேன். கண்வைத்தியர் ஒவ்வொருவருக்கும் எந்தச் சிகிச்சை பொருத்தமானது என்பதை நோயாளியுடன் கலந்து ஆலோசித்துச் சிபாரிசு செய்வார்.

- சோர்வுக்கண்ணின் முன்னால் ஒரு குவிவில்லை அல்லது குழிவில்லை பொருந்திய கண்ணாடி அணிவதன் மூலம் சோம்பல் கண்ணைப் பலப்படுத்தலாம்.
- நல்ல கண்ணை ஒரு திரையின் உதவியால் மறைப்பதன் மூலம் சோர்வுக்கண்ணைக் கூடுதலாகப் பாவிக்கவைக்கலாம். இதன் மூலம் அந்தக் கண்ணும், நரம்புப் பாதையும் பலப்படுத்தப்படுகின்றன.
- நல்ல கண்ணிற்குள் சில துளி மருந்துகளை இட்டு அதன் பார்வையை மங்கச் செய்வதன் மூலம், சோம்பல் கண்ணைக் கூடுதலாகப் பார்க்க வைக்கலாம்.
- கண்களை அசைக்கும் தசைகளில் குறைபாடுகள் இருந்தால் சத்திர சிகிச்சை மூலம் அவற்றைச் சரி செய்து கொள்ளலாம்.
- தூங்கு விழி மடலை மருந்துகள் அல்லது சத்திர சிகிச்சை மூலம் சரி செய்து பார்வையைத் தெளிவுபடுத்தலாம்.
- வேறும் பல சிகிச்சைகள் உண்டு.

'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்'

mahen@thaiveedu.com

■ ■ ■

Law Office

T. JEGATHEESAN

(Barrister, Solicitor and Notary Public (on)

உங்கள் சட்டப் பிரச்சினை எதுவாகிலும் தமிழிலும் ஆங்கிலத்திலும்
ஆலோசனைகளுக்கும் சட்ட நடவடிக்கைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்.

தி. ஜெகதீசன்

(Barrister, Solicitor and Notary Public (on)

Off: 416 • 266 • 6154
Res: 416 • 449 • 0358
Fax: 416 • 266 • 4677

2620 Eglinton Ave., East # 201
Scarborough. ON
M1K 2S3

# உணவில் காளான் சேர்ப்பதில் ஏற்படும் நன்மைகள்



சிவாஜினி
பாலராஜன்

சிறு வயதில் நாம் குப்பை மேட்டிலும் உக்கிய மரந்தடி உள்ள இடங்களிலும், மழை விட்டதும் சட்டெனத் தோன்றும் வெண்ணிறக் குடைகளையும், சிறிது மண்ணிறம் சேர்ந்த குடைகளினையும் பார்த்திருக்கிறோம். இவற்றிற்கு காளான் என்று பெயர். சிலர் இவற்றை அருவருப்புடன் பார்த்தாலும் பலர் அதனைப் பிடுங்கி அதன் வழுவழு மென்மையினை ரசித்திருக்கிறோம். சிலருக்கு இது இலவச உணவாகவும் பயன்பட்டிருக்கின்றது. இவ் வகையான இக் காளான்களுக்கு மருத்துவக் குணாதிசயங்கள் இருப்பதாகத் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

### காளான் என்றால் என்ன?

காளான்கள் தாவரமும் அல்லாத விலங்கும் அல்லாத மிகவும் பிரத்தியேக குணாதிசயங்களைக் கொண்டவை. சிலர் இவற்றைத் தாவரமாக கருதினாலும் தாவர விலங்கியல் பகுப்புகளில் காளான்கள் பங்கசு எனப்படும் இனமாக வகுக்கப்பட்டவை. அதுமட்டுமன்றி பங்கசுக்களிலேயே இவை வித்தியாசமான குணாதிசயங்களைக் கொண்டதாகக் கூறப்படுகின்றது. ஏனெனில் இவை மிகவும் வித்தியாசமான பழ அமைப்பினைக் கொண்டதாகக் கருதப்படுகின்றது. அதாவது நாங்கள் சாப்பாட்டிற்கு உபயோகிக்கும் குடைகளே அவற்றின் பழங்கள் எனலாம். இக் காளான் குடையானது இனம் பெருக்கும் உறுப்பாகக் கருதப்படுகின்றது. காளான்கள் மிகவும் சிறு விதைகளினால் (SPORES இனால்) இனப் பெருக்கம் செய்கின்றன. இவை இந்த ஸ்போரினால் துப்புதல் முறையில் சுலபமாக இனத்தைப் பெருக்கி விடும். கிட்டத்தட்ட ஒரு துப்புதல் முறையில் இவை இந்த ஸ்போரினைப் பரவச் செய்கின்றன. இவற்றின் இந்த துப்புதிறன் (ஸ்போர் புரொஜட்டைல்ஸ்) மணிக்கு 55 மைல் வேகம் உடையது எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பொதுவாக ஆயிரக்கணக்கான காளான் வகைகள் இருப்பினும் ஒருசில வகைக் காளான்களே உணவிற்காகப் பாவிக்கப்படக் கூடியன. சில வகையான காளான்கள் நச்சுத் தன்மையானவை. ஆனால் இங்கு கடைகளில் நச்சுத் தன்மையான காளான்களை சாப்பிடும் காளான்களுடன் விற்கமாட்டார்கள் ஆதலால் காளான்களை வாங்கி உண்பதில் எங்கட்கு பிரச்சனை இல்லை.

ஒவ்வொரு வருடமும் கனடாவில் இருக்கும் நூற்றுக்கும் மேற்பட்ட காளான் பண்ணைகளிலும் கிட்டத்தட்ட 200 மில்லியன் இறாத்தல் காளான் உற்பத்தியாக்கப்படுகின்றது. இதில் 50 விழுக்காடு காளான் ஒன்ராரியோவிலும் வன்கூவரில் 35 விழுக்காடு காளானும் மிகுதி கியூபெக்கிலும் ஏனைய இடங்களிலும் உற்பத்தியாக்கப் படுகின்றன. ஒவ்வொரு வருடமும் கிட்டத்தட்ட 80 மில்லியன் காளான் கனடாவினால் அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யப் படுகின்றது.

கனடாவில் மிகக் கூடிய அளவில் பயிரிடப்படும் காளான் வகைகளில் மிகவும் பிரபல்யமானது வெள்ளை நிறக் குடைக் காளான் அடுத்து மண்ணிற நிறத்தில் அமைந்த கிரிமினி (Crimini) எனப்படும் இனமும் போட்டபெல்லா (portabella) எனப்படும் இனக் காளானுமாகும். மேலும் மிகவும் பிரத்தியேக இனங்களான Shiitake, Oyster, King Oyster, Enoki ஆகியனவும் பிரபல்யமாகி வருகின்றன.

### காளான் உட்கொள்வதால் என்ன நன்மைகள் உண்டு?

பொதுவாக காளான்கள் கொழுப்பு சத்து, (கலோரி-Calories) சோடியம், மாச் சத்து என்பன குறைந்தவையாயும் போதியளவு செலானியம் உள்ளவையாயும் காணப்படுகின்றன.

ஒரு மனிதன் ஆரோக்கியமாக வாழ்வதற்கு எல்லாவிதமான உணவுகளும் ஒரு குறிக்கப்பட்ட அளவில் உட்கொள்ளப்பட வேண்டும். அதாவது புரதம், கொழுப்பு, காபோவைதரேற்று (மாச்சத்து), விற்றமின்கள் போன்றவை. இது Recommended Dietary Allowance எனப்படும். ஒரு பரிமாறுதலுக்கான கிரிமினி என்னும் வகைக் காளானில் மூன்றிலொரு பங்கு RDA (Recommended Dietary Allowance) திக்கும் அத்துடன் விற்றமின் B12 உடன் சேர்ந்து ஈமோகுளோபின் தயாரிக்கவும் பயன்படுகின்றது. கர்ப்பிணிப் பெண்களுக்கு போலிக் அமிலம் மிக முக்கியமானதும் கிட்டத்தட்ட நாளாந்தம் 4 மில்லி கிராம் தேவைப்படும் ஒன்றாகும். இந்த போலிக் அமிலக் குறைபாட்டினால் Spina Bifida என்னும் குறைபாடு உள்ள பிள்ளைகள் பிறக்கும் வாய்ப்பு ஏற்படுகின்றது. அதாவது முதல்


> “ காளானில் உள்ள கரையும் தன்மையுள்ள நார்ப்பொருளானது குருதியில் உள்ள *LDL cholesterol*லின் அளவினைக் குறைப்பதால் இருதய நோயினைக் கட்டுப்படுத்தக் கூடியது. அத்துடன் குருதியில் உள்ள சர்க்கரையின் அளவினைக் குறைக்கும் தன்மையும், குடற் புற்றுநோய், மார்பகப் புற்று நோய் ஆகியவற்றினைக் குறைக்கும் தன்மையும் இருப்பதாக அறியப்படுகின்றது. ”

க்குரியளவு செலானியம் இருப்பதாகக் கூறப்படுகின்றது. செலானியம் புற்று நோய் எதிர்ப்புத் தன்மை கொண்டதால் போதியளவு காளானினை உள்ளெடுப்பதால் உடலுக்குத் தேவையான அளவு செலானியம் கிடைக்கின்றது. அதுவும் மிக முக்கியமாக ஆண்களுக்கான புரொஸ்ரேற் புற்று நோயினைத் தவிர்த்துக் கொள்ள இது உதவுவதாக ஆராய்வுகள் கூறுகின்றன. தோல் புற்று நோயுள்ளவர்களுக்கும் புறொஸ்ரேற் புற்று நோயுள்ளவர்களுக்கும் செலானியம் கொடுத்து பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட போது தோல் புற்று நோய் உள்ளவர்களில் எதுவித மாறுதலும் அவதானிக்கப் படவில்லை. ஆனால் புறொஸ்ரேற் புற்று நோயுள்ளவர்களில் 60 விழுக்காடு நோய்க்குறைவை அதாவது புறொஸ்ரேற் வளர்ச்சியில் சுருக்கம் ஏற்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது.

Baltimore Longitudinal Study on Aging என்னும் அமைப்பினால் செய்யப்பட்ட ஆராய்வுகளில் புறொஸ்ரேற் உள்ளவர்களின் குருதியில் உள்ள செலானியத்தின் அளவிலும் பார்க்க புறொஸ்ரேற் புற்று நோய் அற்றவர்களின் குருதியில் செலானியத்தின் அளவு நான்கு அல்லது ஐந்து மடங்கு கூடுதலாகக் காணப்பட்டதாக அறியப்பட்டது. அத்துடன் வயது முதிர்கையில் குருதியிலுள்ள செலானியத்தின் அளவு குறைவதால் வயது முதிர்ந்த ஆண்கள் செலானியம் கூடிய உணவினை தேர்ந்தெடுப்பது முக்கியமாகின்றது. இதற்கு காளான் ஒரு சிறந்த உணவாகக் கருதப்படுகின்றது.

கனிமங்களைக் கருத்திற் கொண்டால் காளானில் நிறையவே விற்றமின் B வகையினைச் சேர்ந்த நயாசின், ரைபோபிளேவின்; Pantothenic acid எனப்படும் விற்றமின் B5 இனையும் போதியளவில் கொண்டிருக்கின்றது. அத்துடன் நாளாந்த தேவைக்குரிய விற்றமின் B6, தயாமின், போலேற் (Folate) எனப்படும் நாளாந்த தேவைக்குரிய போலிக் அமிலத்தில் 4% இனையும் கொண்டுள்ளது.

இந்த Folate எனப்படுவது எமது உடலில் புதிய கலங்களை உற்பத்தி செய்வதிலும் முக்கியமாக மரபணுக்களை உற்பத்தி செய்வதற்கான மூலக்கூறான DNA, RNA உற்பத்மாத கர்ப்பத்தில் கருவிற்குரிய முள்ளந்தண்டுக்குரிய பகுதிகள் முழுமையாக மூடப்பட மாட்டாது. கருவில் நரம்பு மண்டலம் பாதிக்கப்படுதல் மூளை வளர்ச்சி குன்றிய அல்லது உடலில் குறைபாடுகள் (அங்கவீனம்) உடைய பிள்ளைகள் உருவாதல் என்பன நடைபெறுவதற்கும் இவ் அமிலம் ஒரு முக்கிய காரணமாக அமைந்து விடுகின்றது. எனவே கருத்தரித்திருக்கும் பெண்கள் காளான் உட்கொள்வது சிறந்தது என ஆராய்வுகள் கூறுகின்றன.




ஒரு பரிமாறலுக்குரிய (100gr) காளானில் கிட்டத்தட்ட 3.6 மில்லி கிராம் நயாசின், 1.5 மில்லி கிராம் விற்றமின் B5, 4 மில்லி கிராம் போலிக் அமிலம், 0.4 மில்லி கிராம் ரைபோபிளேவின், 0.1 மில்லி கிராம் தயாமின், 0.1 மில்லிகிராம் விற்றமின் B6, 0.5 மில்லி கிராம் இரும்புச் சத்து, 9 மில்லி கிராம் மக்னீசியம், 86 மில்லி கிராம் பொஸ்பரசு, 318 மில்லி கிராம் பொட்டாசியம், 0.5 மில்லி கிராம் நாகச் சத்து என்பன உண்டு.

காளானில் கரையக் கூடிய தன்மை கொண்ட நார்பொருளும், கரையாத் தன்மையுள்ள நார்ப்பொருளும் இருப்பதால் இது மிகவும் சுலபமாக மலம் போவதற்கு உகந்ததாக கருதப்படுகின்றது. அதுமட்டுமலல்லாது இதிலுள்ள கரையும் தன்மையுள்ள நார்ப்பொருளானது குருதியில் உள்ள LDL cholesterol லின் அளவினைக் குறைப்பதால் இருதய நோயினைக் கட்டுப்படுத்தக் கூடியது. அத்துடன் குருதியில் உள்ள சர்க்கரையின் அளவினைக் குறைக்கும் தன்மையும், குடற் புற்றுநோய் மார்பகப் புற்று நோய் ஆகியவற்றினைக் குறைக்கும் தன்மையும் காளானில் இருப்பதாக அறியப்படுகின்றது.

அதிக அளவில் காளான் உணவில் சேர்த்துக் கொள்வதால் உடல் எடை அதிகரிப்பு தடை செய்யப்படுவதாக சொல்லப்படுகின்றது. டாக்டர் செஸ்கின் தலைமையில் நடத்தப்பட்ட ஆய்வில் அதிக சக்தி கொண்ட உணவை உட்கொள்வதிலும் பார்க்க குறைந்த சக்தியைக் கொண்ட காளான் போன்ற உணவு வகைகளை உட்கொள்வதால் உடல் குண்டாவதைத் தவிர்க்கலாம் எனவும் தெரியப்பட்டுள்ளது. மேலும் காளானில் அதிகளவில் antioxidantஆன l-ergothioneine இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த வகையான antioxidant இதய நோயினைத் தடுக்கும் ஒரு மிக முக்கிய காரணியாகும்.

Shitake, Maitake என்னும் வகைக் காளான்கள் எங்கள் உடலில் பிறபொருள் எதிரிகள் (அதாவது நோய் எதிர்ப்புச் சக்தியினை தூண்டுபவை) சுரப்பதற்கு உதவுவதாகவும் இவற்றிலுள்ள beta-glucans என்னும் வகையான சர்க்கரை (complex sugars), எயிட்ஸ் போன்ற நோய்களுக்குரிய எதிர்ப்புச் சக்தியினைக் கொண்டிருப்பதாயும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மன அழுத்தம் உள்ளவர்கள் காளான் உணவினை உட்கொள்வதால் அவர்கள் மன அழுத்தம் குறைக்கப்படும். இங்கு முக்கியமாக ஒரு விடயம் கவனிக்கப்பட வேண்டும். சமைத்த காளான் எவ்வளவும் சாப்பிடலாம். ஆனால் சமைக்கப்படாத காளான் அளவுக்கதிகமாக உண்ணும் போது அது பலவிதமான நோய்களைக் கொண்டு வருவதுடன் உடலில் மேலதிக கட்டிகள் வளரவும் வழிசெய்யும். இந்தச் சமைக்கப்படாத காளான்களில் hydrazine எனப்படும் நச்சுத் தன்மையான இரசாயனப் பொருள் உண்டு. சமையல் செய்யும் போது இந்த நச்சுத்தன்மையான இரசாயனப் பொருள் அழிக்கப்படுகின்றது.

Reishi, Cordyceps என்னும் காளான்களிலிருந்து சில வகையான Immune Boosters தயாரிக்கப்பட்டு விற்பனையாகின்றன. சில வகையான காளான்கள் வற்றல் செய்தும் விற்பனை செய்யப்படுகின்றன. ஆகவே தேவையான காளான் வற்றல்களை வாங்கிப் பாவித்துக் கொள்வதற்கு வசதிகள் உண்டு.

காளான் வாங்கும் போது அவதானிக்க வேண்டிய மிக மிக முக்கிய விடயம் என்ன வெனில் பொதுவாக நீலப்பெட்டிகளில் அடைத்து பொலித்தினால் சுற்றிய காளான்களை வாங்குவதிலும் பார்க்க சாதரணமாக வைக்கப்பட்டிருக்கும் காளான்களை வாங்குவது சிறந்தது. காளானுடன் Clostridium botulinum போன்ற பற்றீரியாக்களின் spores கூட வருவதற்கு சாத்தியக் கூறுகள் உண்டு. இவை ஒட்சிசன் கிடைக்காத பட்சத்தில் விருத்தி அடையக் கூடியவை ஆதலால் திறந்த வெளியில் இருக்கும் காளானில் இவற்றின் விருத்திக்கு சாத்தியக்கூறு குறைவு.

சாதாரணமாக வேண்டா வெறுப்பாக முளைக்கும் காளான்களுக்கு கூட இப்போ பெரியளவில் மவுசு வந்து பல பண்ணைகள் உருவாக்கப்படுகின்றன. கனடா கூட மிகப்பெரிய அளவிலான காளான் ஏற்றுமதி நாடாகிறது.

sivagini@thaiveedu.com

■ ■ ■


For all your Real Estate needs...
First Prize
2009
Buy or sell any properties with us and WIN this new BMW car and More prizes**
Buy. Sell. Lease.
$349,400
Well Maintained Home In Quiet Neighborhood, Gleaming Hardwood, Finished Basement With One Bedroom
Sasi Chelvaratnam
Sales Representative
Direct: 416-725-1125
$284,900
Bright Corner Unit W/ 4 Bedroom, Finished Bsmt W/One Bdrm, Kitchen & Bath, Walk To Community Centre & Library
Ravi Raveendran- Broker
Direct: 416-817-8479
$459,000
Beautiful house in Scarborough area. 4 Bedrooms with finished basement. Close to everything. Lots of Upgrades.
Justin William- Broker
Direct: 416-803-7344
$395,900
All Brick, Open Concept 4 Bedroom Detached Home, Professionally Finished 2 Bedroom Basement In-Law Suite With Walk-Out To Patio.
Jayanthi Sritharan-Broker
Direct: 416-918-5872
$149,000
Luxury Mapledale Condo. Well Maintained Building. Bright And Spacious Corner Unit. Unobstructed View
Justin William- Broker
Direct: 416-803-7344
$349,000
Immaculate,Professionally Finished Basement. It's Open Concept, Has A Seperate Enterance
Sasi Chelvaratnam
Sales Representative
Direct: 416-725-1125
$419,900
Hardwood Floor On Main Floor In Living, Family, Dining. Freshly Painted, Lots Of Upgrades Hardwood Floor.
Wilton Gnanapragasam
Sales Representative
Direct: 416-554-4747
$615,000
Beautiful Arista Lavenham Model around 3200 sqft. $15k upgrades, open concept, corner lot
Seelan Siva Aiyadurai-Broker
Direct: 416-451-0271
HOMELIFE
HomeLife GTA Realty Inc., Brokerage*
1711 McCowan Rd, Suite 206, Scarborough, On.
Office: 416.321.6969
This is not intend to solicit properties currently listed for sale
*Independently owned and operated
** conditions apply


Air-On
Home Improvement Centre
Lowest price in Town
Tel:416-840-3093
*HEATING & COOLING
*GAS FURNACES
*AIR CONDITIONERS
*HUMIDIFIERS
*EXHAUST RANGE HOOD
*ELECTRICAL
*PLUMBING
*WINDOWS
*ROOFING
*PAINTING
*FLOORING
Get up to $2,000 Bonus & Rebates plus 10 yrs parts & Labour warranty
No Payment For 6 Months*
Financing Available*
*OAC
@ GTA Square
5215 Finch Ave unit 163, Middledield & Finch
Heating & cooling


வீடு வியாபார நிலையம் வாங்க விற்க...
வீடு வாங்க விற்க அல்லது அது சம்பந்தமான விபரங்களுக்கும் குறைந்த வட்டி விகிதத்தில் மோட்கேச் செய்யவும் நட்புடன் அழையுங்கள்....
$152,000
York Mills & Victoria Park
2 Bedrooms 1 Washroom
$219,900
Ellesmere & Birchmont
2 Bedroom 2 Washroom
Indoor Pool, Sauna.
$237,500
Townline & Adelaide
3Bedrooms 3 Washroom
Part Finished Basement
$269,900
Morningside & Finch
3+2 Bedrooms 4 Washroom
LAND FOR SALE
ST.CLAIR & PHARMACY
$499,900
$304,900
Hoover Par & Nineth Line
3 Bedrooms 3 Washroom
$334,900
Warden & St.Clair
2+1 Bedrooms 2 Washroom
$339,000
Morningside & Staines
3 Bedrooms 3 Washroom
$339,900
Bellamy / Lawrence
3 Bedrooms 2 Washroom
Finished Basement
$339,900
Whites & Highview
4 Bedrooms 3 Washroom
$349,900
Morningside & McLevin
4+2 Bedrooms 43 Washroom
$479,900
14 th & McCowan
3 Bedrooms 3 Washroom
Part Finished Basement W / O
$649,900
Brand New Home
McLaughin Rd & Derry Rd
5 Bedrooms 3 Washroom
Looking for New & Experienced Sales Rep.
Please Contact Us...
Ravi Logarajah B.Sc
Tharsi Rajenthiram B.B.A
*Sales Representative
Call : 416-843-7474
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6
*Independently Owned and Operated, Realtor
BUS: 416-298-3200 / FAX: 416-298-3440


பேரழிவினைக் கொண்டுவரும் நீரழிவு நோயினை
இரண்டே இரண்டு மாதங்களில் முற்றும் முழுதாக கட்டுப்படுத்த முடியும்!
ஊளைச் சதை பெருகுவதை தடுக்கிறது!
வாத வலியை நீக்குகிறது!
உடலுக்கு புதுத்தென்பைக் கொடுக்கிறது!
Diabina HERBAL DRINK
Gluteala HERBAL DRINK
டயபீனா தினமும் அருந்தக்கூடிய மூலிகை ஆரோக்கிய பானம். இது உடலில் மிகுதியான குழுக்கோசினை குறைக்கக்கூடியதும், இரத்தத்திலுள்ள அதிகளவு குழுக்கோசினால் ஏற்படக்கூடிய நோய்களை ஒழுங்கு முறையாக தடுக்கவும் உதவுகிறது. விறைப்புத்தன்மை, பாதங்களில் களுக்கு, அலட்சியத் தன்மை மற்றும் மீண்டும் மீண்டும் வியாதிகளை படிப்படியாக நீக்கிவிடக் கூடியது. டயபீனா கண்டிப்பாக நீரிழிவு நோயினால் வருந்துபவர்கள் மட்டுமே பாவிக்கவேண்டியது.
க்லூட்டியலா பானமானது மிகுதியான உடல் கொழுப்பை குறைக்கக் கூடியதும், குறிப்பாக உடலின் இடுப்பு, தொடை, தோற்பட்டை, கைகள் போன்ற பகுதிகளில் ஏற்படக்கூடிய ஊளைச் சதை பெருகுவதை தடுக்கவும், கொழுப்பினால் விளையக் கூடிய கெடுதியினை கட்டுப்படுத்தவும், உடல் வலியை நீக்கவும், அத்துடன் வாதத்தினால் ஏற்படக்கூடிய வலியினை குறைக்கவும் உதவுகிறது. க்லூட்டியா உடலுக்கு புதுத்தெம்பைக் கொடுப்பதோடு நீண்ட சுகமான வாழ்விற்கும் வழிவகுக்கிறது.
Amazon Health Care
BBB ACCREDITED BUSINESS
SABONA
Tel: 416 264 8787
www.amazonhealthcare.ca
2602, Eglinton Ave East. (Midland/Eglinton)

# மே 1 முதல் மின் கட்டணம் அதிகரிப்பு

**வீடும் விடியலும் - 39**

வேலா சுப்ரமணியம்
- Certified Home Inspector -



**மின்சாரப் பாவனையும் அதற்கான செலவைக் குறைக்கச் சில ஆலோசனைகளும்:**

மே மாதம் 1ந் திகதியில் (2009) இருந்து ஒன்ராறியோ மின்சார சபை (Ontario Energy Board) ஒன்ராறியோவிற்குரிய வீட்டு நுகர்வாளர்களின் மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்க உள்ளது. இப்புதிய மின்சாரக் கட்டணங்கள் மே மாதம் 1ந் திகதியில் இருந்து அமுலுக்கு வரும். இப்புதிய கட்டணம் அக்டோபர் 31ந் திகதிவரை அமுலில் இருக்கும். மீண்டும் நவம்பர் 1ம் திகதி மீளாய்வு செய்யப்பட்ட புதிய கட்டணம் அமுலுக்கு வரும். 6 மாதத்திற்கு ஒருமுறை ஒன்ராறியோவில் மின்சாரக் கட்டணம் மீளாய்வு செய்யப்பட்டு நிர்ணயிக்கப்படுகிறது.

அதாவது மாதாந்தம் முதல் 600 kwh மின்சாரத்திற்கு 5.7 சதமும், அதற்கு மேற்பட்ட அளவு மின்சாரத்திற்கு 6.6 சதமும் அறவிடப்பட உள்ளது. சாதாரணமாக வீடுகளில் 600 kwhக்கு மேலாக மின்சாரத்தைப் பயன்படுத்தும் சந்தர்ப்பமே அதிகமாக உள்ளது.

## வரையறுக்கப்பட்ட கட்டண அட்டவணை:

**Regulated Price Plan: (RPP)**

மே 1ந் திகதி முதல் அக்டோபர் 31ந் திகதி வரை வீட்டு நுகர்வோரிடமிருந்து பாவிக்கப்படும் மாதாந்த மின்சாரத்தின் அளவிற்கேற்ப பின்வரும் அடிப்படையில் மின்சாரக் கட்டணம் அறவிடப்படும்.

1 முதல் 600 KWH - 5.7 சதம்
600 KWHற்கு மேல் - 6.6 சதம்

இக்கட்டணங்கள் நேரடியாக தத்தமது பகுதிக்குரிய மாநகரசபைக்கான மின்சார சபையில் இருந்து நுகரப்படும் பாவனையாளருக்கு மட்டுமே பொருத்தமானது என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

Direct Energy போன்ற தனியார் சில்லறை முகவர்களுடன் ஒப்பந்தம் செய்துகொண்டவர்களுக்கு குறிப்பிட்ட ஒப்பந்தகாலம் முடியும்வரை ஒப்பந்தம் செய்யப்பட்ட கட்டணம் மட்டுமே அறவிடப்படும்.

மின்சாரக் கட்டணத்தின் விலை அதிகரிப்பு ஒருபுறம் இருக்க, அதன் விநியோகச் செலவு என்பது காலத்திற்குக் காலம் கூடிக் கொண்டே போவதை பலரும் அவதானித்திருக்கலாம். எனவே அதன் அதிகரிப்பையும் சேர்த்துப் பார்த்தால் இவ் விலை அதிகரிப்பு நுகர்வோரை ஒரு பழுவில் தள்ளி விடத்தான் போகிறது.

கடந்த காலங்களில் மின்சார உற்பத்திக்கு ஏற்பட்ட செலவை விட, குறைந்த விலையிலேயே நுகர்வோருக்கு மின்சாரம் வழங்கப்பட்டிருப்பதாக சில அறிக்கைகள் கூறுகின்றன. இத்தகைய செலவுகளில் இருந்து விடுபடும் நோக்கத்துடனோ என்னவோ ஒன்ராறியோ மாகாண அரசு மினசார விநியோகத்தைத் தனியார் மயப் படுத்தியுள்ளது. இதனால் பல கம்பனிகள் முண்டியடித்துக் கொண்டு சந்தைப் படுத்தலில் இறங்கியுள்ளன. பல விற்பனை முகவர்கள் கதவைத் தட்டும் தொந்தரவை பல வீட்டு உரிமையாளர்கள் சந்தித்திருப்பார்கள். அவர்கள் 5 வருடத் திட்டம் என்று கூறிக் கொண்டு அதன் விலையை இரட்டிப்பு மடங்காக்கி விற்பனை செய்கிறார்கள். (5years price protection plan) இனிவரும் காலங்களில் பல தடவை மின்சாரக் கட்டணம் உயர இருக்கிறது என்று கூறி, அது தாங்கள் தற்போது தரும் தற்போதைய விலையை விட மிக அதிகமாகவே இருக்கும் என்று வாதிடுகிறார்கள். அவர்கள் கூறுவது சரியாக இருந்தாலும் 2-3 வருடங்களுக்குப் பிறகு ஏற்படப் போகும் அதிகரித்த விலைக்குப் பதிலாக, இப்பொழுதே சந்தை விலையை விட அதிகரித்த விலையில் 5 வருடத்திற்கு ஒப்பந்தம் செய்தல் இலாபகரமானதா? என்பதைக் கண்டு பிடிப்பது நுகர்வோர் மத்தியில் மிகுந்த குழப்பமாக இருக்கிறது. பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும் என்று கூறுவதும் சரியானதா? தெரியவில்லை. ஏனெனில் அது காலங்கடந்த ஞானம் ஆகிவிடும்.

## Smart Meters:

கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட Smart Meter முறை பற்றி பலருக்கும் நினைவிருக்கலாம். 2007 டிசம்பர் 31ந் திகதியளவில் 800,000 வீடுகளுக்கு ஒன்றியோவில் Smart Metersகள் பொருத்தப்பட்டுவிட்டன. 2010ம் ஆண்டு டிசம்பர் முடிவிற்குள் சகல வீட்டுரிமையாளர்களும் இத்தகைய புதிய மீற்றர்களைப் பெற்றுவிடுவார்கள். அதன் பின்னர் ஒன்ராறியோ வீட்டுரிமையாளர்கள் சகலரும் தமது கட்டணங்களை பாவனை நேரத்திற்கு ஏற்ப வேறுபட்ட கட்டண அடிப்படையில் செலுத்தக் கூடியதாக இருக்கும்.

சற்று விளக்கமாகக் கூறுவதானால் நாம் மின்சாரத்தைப் பாவிக்கும் நேரத்தின் அடிப்படையிலும், கிழமை நாட்களின் அடிப்படையிலும் மின்சாரக் கட்டணம் அறவிடப்படும். அதாவது காலை 11 மணி முதல் மாலை 5 மணிவரை பாவிக்கும் மின்சாரத்திற்கு ஒருவகைக் கட்டணமும், பாவனை குறைந்த மாலை, இரவு வேளைகளில் பாவிக்கப்படும் மின்சாரத்திற்கு குறைந்த கட்டணமும், சனி, ஞாயிறு தினங்களில் மேலும் குறைந்த கட்டணமும் அறவிடப்படும்.

உதாரணமாக மாலை 4 மணிக்கு உடுப்பு துவைக்கும் போது ஏற்படக்கூடிய மின்சாரப் பாவனைக்கான செலவு 1 KWHற்கு 9.1 சதமாக இருக்கும். அதேவேலையை நாம் இரவு 10 மணிக்குச் செய்யுமிடத்து அதன் அரைப்பங்கிற்கும் குறைவான கட்டணமான 4.2 சதங்களை மட்டுமே செலுத்தவேண்டி இருக்கும். அல்லது மாலை 4 மணிக்குப் பதிலாக மாலை 5 மணிக்கு அதேவேலையைச் செய்யும்போது 1 KWHற்கான கட்டணம் 7.6 சதமாக இருக்கும். எனவே சமைத்தல், உடுப்பு தோய்த்தல், உலர்த்தல், ஸ்திரிகை போடுதல் போன்ற செயற்பாடுகளுக்குரிய பொருத்தமான நேரத்தை மதிநுட்பமாக தெரிவு செய்யுமிடத்து உச்ச அளவிலான பயன்பாட்டை அதாவது அதிக பணத்தைச் சேமிக்க முடியும் என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

தற்போது வீடுகளில் பொருத்தப் பட்டிருக்கும் மீற்றர்கள் மூலம் இத்தகைய வித்தியாசமான கட்டணத்தை கணிப்பிட முடியாது. ஆனால், தற்போதைய நிலையில் ஒருசில பகுதிக்கு மட்டுமே (TOU) "Time of use Prices" அமுலுக்கு வந்துள்ளது. படிப்படியாக ஒவ்வொரு பகுதிக்கும் இத்தகைய நடைமுறை அமுல் நடாத்தப்பட உள்ளது. குறைந்தது 1 மாதத்திற்கு முன்னர் இத்தகைய Smart Meter மூலமாக அமுல்படுத்தப்பட இருக்கும் பகுதிகளுக்கு (TOU) நேரத்திற்கேற்ற விலைத்திட்டம் பற்றி கடிதம் மூலம் அறிவுறுத்தப்படும். அதன் பின்னர் எமது மின்சாரப் பாவனையையும் அதனுடன் தொடர்புடைய சில பழக்க வழக்கங்களையும் மாற்று வதன் மூலம் அதிக பணத்தைச் சேமித்துக்கொள்ளக்கூடியதாக இருக்கும்.

இத்தகைய புதிய Smart Meters மீற்றருக்கான வாடகையும் நுகர்வோரிடம் இருந்தே மாதா மாதம் அறவிடப் பட இருக்கிறது. SMART METERகள் மூலம் கட்டணங்களை கணிப்பிடும் (BILLING DEPT) மத்திய பகுதியில் இருந்த படியே மின்சாரப் பாவனையைக் கண்டறியக் கூடிய விதத்தில் இருவழிப் (bi directional network) பாதை கொண்ட வலைப் பின்னல் அமைப்பும் இணைக்கப் பட்டிருக்கும். எனவே வீட்டிற்கு ஒருவர் வந்து மீற்றரைப் பார்த்து பாவனையை அறிந்து கொள்ள வேண்டிய அவசியம் இருக்காது. அதே வேளை அதிகளவு மின்சாரத்தைப் பாவிக்கும் கஞ்சா செடி வளர்த்தல் போன்ற சட்ட விரோத செயல்களில் ஈடுபடுபவர்கள் நிலையும் திண்டாட்டம் தான்.


காலம் வெகு தூரத்தில் இல்லை. மிக விரைவில் இதன் தாக்கத்தை நாம் உணரத்தான் போகிறோம். எது எப்படி இருப்பினும் இனி வரும் காலங்களிலும் மின்சாரச் செலவு பல மடங்கு அதிகரிக்கப் பட இருக்கிறது என்பது மறுக்க முடியா உண்மை. எனவே நாம் திறமையாகவும், புத்திசாலித்தனமாகவும் செயற்பட்டு மின்சாரச் செலவைக் கட்டுப்படுத்தல் வேண்டும்.

நேரத்திற்கேற்ற விலை விபரம் கீழே தரப்படுகிறது.

Summer:

| | | |
|---|---|---|
| Off - Peak | 10pm - 7pm | - 4.2 Cents/KWH |
| Mid - Peak | 5pm - 10 pm and 7 am - 11 am | - 7.6 Cents/KWH |
| On -Peak | 11 am -5 pm | - 9.1 Cents/KWH |
| Week End Holidays | | - 4.2 Cents/KWH |

vela@thaiveedu.com





**ரொறொன்ரோ மாநகரத்தில் மே 1ந் திகதி 2009ல், இருந்து அமுல் படுத்தப்பட இருக்கும் மின் கட்டண அதிகரிப்பை விபரிக்கும் வரை படம்.**



# WHO DO YOU CALL? Town Of Markham

Customer Service Centre: (905) 477-5530




Noise Complaints (905) 477-5530

Gas Leak 1-866-763-5427

Garbage / Recycling Collection (905) 415-7535

Street Parking (905) 477-7000 Ext 2050

Low Water Pressure (905) 475-4862

Street Trees (905) 475-5861 (905) 415-7535

Sewer Odour (905) 475-4862

Street Ploughed / Salted (905) 475-4866

Basement Flooding (905) 475-4862

Special Pick Up (905) 415-7535

Yard Waste (905) 415-7535

*Each office is independently owned and operated

Not intended to solicit properties currently listed for sale or those under agency contract

**LIFE INSURANCE | CRITICAL ILLNESS INSURANCE**

**NON MEDICAL INSURANCE | RESP | RRSP**



- **ஆயுட்காப்புறுதி**
  10, 15 அல்லது 20 வருடங்களில் செலுத்தி முடிக்கலாம்
- **வயோதிபர்களுக்கான காப்புறுதி**
  மருத்துவ பரிசோதனை எதுவும் இல்லாமல் பெற்றுக்கொள்ளலாம்.
- **கொடிய நோய்களுக்கான காப்புறுதி**
  காப்புறுதித் தொகையைப் பெற்றுக்கொள்ளலாம் அல்லது கட்டிய பணம் முழுவதும் திரும்பப் பெறலாம்.
- **குழந்தைகளின் உயர்கல்விக்கான சேமிப்புத்திட்டம்**
  20% அரச மானியத்துடன் எமது நிறுவனத்தால் 15% சலுகையும் வழங்கப்படும்.
- **ஈட்டுக்கடன் காப்புறுதி**
  Mortgage Insurance

Apex Creations - 416-297-0707

# வசந்த் விநாயகமூர்த்தி

காப்புறுதி முகவர்

# 647-885-3012



LiLAND INSURANCE INC. | INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC. | RBC Insurance | Assumption Life

**www.vvinsurence.ca**

**www.kaappuruthy.com**

759 Warden Ave. Toronto, ON. M1L 4B5 Tel : 416-759-5453 ext. 362

# இங்கிதம் தெரியாதவர்கள்

குமார் புனிதவேல் பக்கம்

இரண்டாயிரத்து ஐந்நூறு வருடங்களுக்கு முன் ஒரு தாய் தனது ஒரே மகனை இழந்து கண்ணீரும் வேதனையுமாக ஒரு துறவியின் வாசலருகே போய் நின்றாள். வேதனையுற்று வந்து நின்ற தாய்க்கு ஆறுதல் சொல்லாது அத்தருணத்திலும் அந்த துறவி வாழ்வியல் பற்றி போதிக்க முற்பட்டார். போதிமரத்துக்குக்கீழ் ஞானம் வந்த அந்த போதித்தவருக்கு எதை எப்போ செய்ய வேண்டும் என்று தெரியவில்லை. தன்னால் உயிர்த்தரமுடியாவிட்டால் இயலாமையை கூறி ஆறுதல் சொல்லலாமல்லவா? அதைவிட்டு போதிப்பது எவ்வளவு முட்டாள்தனம். நல்லகாலம் அவள் உண்மையை புரிந்து அமைதியடைந்தார். ஆனால் அவள் இருந்த மனநிலையில் மனநோயாளியாக மாறிவிடவும் கூடுமல்லவா? நான் புத்தரின் வாழ்க்கையில் நடந்த சம்பவத்தை குறிப்பிடுகிறேன்.

இன்றும் பலருக்கு சாவை, சாவு ஏற்படும் வேளையில் நடந்துகொள்ள வேண்டிய விதங்களை தெரியாதிருக்கிறார்கள். உதாரணத்திற்கு ஒருவர் தனது நண்பரின் மைத்துனர் இறந்து வேதனையுடன் நிற்கும் வேளையில் கேட்டார் 'டேய் உண்ட மச்சானும் போயிட்டானாமே?' என்று, இந்த பிறவியை என்ன என்று சொல்வது. மச்சான் கல்யாண வீட்டிற்கோ அல்லது கானிவலுக்கோ போய்விட்டதைப் போல் விசாரிப்பதை என்ன செய்யலாம்.

இன்னொரு நகைச்சுவை விரும்பி தனது நண்பர் ஒருவர் இழவு வீட்டிலிருந்து வெளியே வரும் வேளையில் தான் ஜோக் அடிப்பதாக நினைத்துக்கொண்டு 'டேய்' உனக்கு இப்படி ஒரு கூட்டம் வருகிற நாளைப் பார்த்துக் கொண்டுதான் வந்துகொண்டிருக்கிறன். என்கிறார். இது எதைக்குறிக்கிறது என்றால் Bad taste ஐத்தான்.

இப்படியாக நடப்பதற்கு முக்கியகாரணம் ஒரு வித்தில் தவறாக வாக்குப்பிரயோகம் செய்பவருக்கு என்னத்தைச் சொல்வது செய்வது தெரியாமைதான்.

இனிய யுளவாக வின்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று

குறள்: (100)

என்ற வள்ளுவர் வாக்கை இங்கு நினைவு கூறலாம். இப்படி நடப்பதற்கு அறியாமை ஒரு முக்கிய காரணம். எது பிழை என்று எல்லாருக்கும் சொல்ல முடியும். ஆனால் எது சரியென்று சொல்வது தான் சிறப்பு. இத்துடன் சில கருத்துக்களை நான் இங்கு தருவேன். எப்படி உறவை இழந்து தவிப்பவருடன் பழகுவது என்று.

ஒரு மரணம் நடக்கும் வேளைகளில் நாம் எப்படி நடக்க வேண்டும், என்ன சொல்ல வேண்டும் என்பவை மிகக் கடினமான விடயங்கள். அதுவும் நெருங்கிய உறவினர் நண்பர்களுக்கு என்ன சொல்வது என்று மலைத்திருப்பது இயல்பு. நீங்கள் இழந்து தவிப்பவருடைய அந்தரங்கத்தை துளைத்துப்பார்க்க அல்லது தவறான வார்த்தைகளை கூறி வேதனையை அதிகரிக்கச் செய்யக் கூடும் என்ற அச்சம் எழுவது இயல்பானதே.

மற்றவருடைய வேதனையை, இழப்பை உங்களால் ஈடுசெய்ய முடியாது, ஆனால், அவர்களுக்கு அவசரமாக தேவைப்படும் ஆறுதலையும் அனுசரணையையும் தரமுடியும், தரவேண்டும், ஒருவர் தனது உறவை இழந்து வேதனைப்படும் வேளையில் நாம் செய்யக் கூடிய முதல் பெரும் உதவி நாம் அவருக்கு உதவ தயாராயுள்ளோம் என்பதை தெரிவிப்பதே. நெருங்கிய ஒருவர் இறக்கும் வேளையில் முழு உலகமே மறைந்துவிட்டதாக வேதனைப்படுபவரிடம், நாம் இருக்கிறோம் என்பதே அவர்களுக்கு ஆறுதல் தரும்.

## வேதனையை அனுபவிப்பதை தாங்கிக் கொள்ள முயல்வதைப் பற்றி நீங்கள் அறிந்திருக்க வேண்டியது

அன்புக்குரியவர் மரணம், ஒருவர் வாழ்நாளில் தான். உங்கள் அனுசரனையும் அன்புள்ள அனுசரிப்பும் தான் அவர்கள் வேதனையை தாங்குவதற்கு தகுந்த மருந்து, அவர்கள் நோய் குணமாவதற்கு ஆரம்பப்படியாகும்.

## வேதனையின் செயல்பாட்டை புரிந்துகொள்ளுதல்.

வேதனையின் செயற்பாட்டையும் அது எப்படி நிவர்த்தி செய்யப்படுகிறது என்பதையும் புரிந்திருந்தால் நீங்கள் அவர்களுக்கு கூடிய உதவியை வழங்க முடியும்.

வேதனையை எப்படி தாங்குவது என்பதற்கு சரியான அல்லது பிழையான வழி என்று ஒன்றுமில்லை. வேதனை ஒரு குறிப்பிட்ட விதத்தில் வெளிப்படுவதில்லை. அது எதிர்பாராத அதிகரிப்பு, வீழ்ச்சி பின்னடைவு என பல நிலைகளுக்கூடாகச் செல்லும். ஒவ்வொருவரும் தமது வேதனையை வித்தியாச-

> "வேதனையை தாங்குவது இப்படித்தான் என்று வழி ஒன்றுமில்லை.
> வேதனை ஒரு குறிப்பிட்ட விதத்தில் வெளிப்படுவதில்லை.
> அது எதிர்பாராத அதிகரிப்பு, வீழ்ச்சி, பின்னடைவு என பல நிலைகளுக்கூடாகச் செல்லும்.
> ஒவ்வொருவரும் தமது வேதனையை வித்தியாசமாகத் தாங்கிக்கொள்வார்கள்.
> இப்படிச் செய்யுங்கள் அப்படிச் செய்யுங்கள் என அறிவுறுத்துவதை தவிர்த்துக் கொள்ளுங்கள்."

ஏற்படக்கூடிய பாரிய வேதனையான அனுபவம், இழப்புக்கு முகம் கொடுப்பவர் பாரிய அச்சுறுத்தலான மனவேதனைக்கும் மனக்கலக்கத்துக்கும் உள்ளாகி மனநிலைபாதிக்கும் ஒரு நிலையை அடைவது இயல்பு. அந்நிலையில் கோபமும் குற்ற உணர்வும் கூட தோன்றலாம். அவர்கள் தாங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக உணரலாம். அந்நிலையில் தமது தலையை சாய்த்து மனதை ஆற்றுவதற்கு ஒரு வலிமையான தோள்களை எதிர்பார்ப்பது இயல்பு.

உங்களுக்கு ஏற்படும் அசௌகரியங்கள் கஷ்டங்களால், நீங்கள் துன்புற்றிருப்பவர்களுக்கு உதவுவதை தவிர்த்துவிடாதீர்கள். இவ்வேளையில் தான் அவர்களுக்கு வேறு எப்போதுமில்லாத அளவு உங்கள் உதவியும் அனுசரனையும் வேண்டி இருக்கும். உங்களுக்கு என்ன சொல்ல வேண்டும் அல்லது செய்ய வேண்டும் என்பது புரியாதிருக்கலாம். அவர்கள் கேள்விகளுக்கு பதில் தெரியாதிருக்கலாம். ஆனால் நீங்கள் செய்யக்கூடிய பெரும் உதவி அங்கு நீங்கள் இருப்பது

மாகத் தாங்கிக்கொள்வார்கள். எனவே அவர்களுக்கு இப்படிச் செய்யுங்கள் அப்படிச் செய்யுங்கள் என அறிவுறுத்துவதை தவிர்த்துக் கொள்ளுங்கள்.

வேதனை வெவ்வேறு அந்தங்களுக்கு மன நிலையை இட்டுச்செல்லும். குற்றவுணர்வு, கோபம், இயலாமை, அச்சம் போன்றவற்றின் உச்சநிலைக்கு கொண்டு செல்வதியல்பு. வேதனை அனுபவிப்பவர் குளரலாம். எல்லாம் இறக்கப்போகிறது என்னும் நோக்குடையவராய் காணப்படலாம், அல்லது அன்புள்ளவரையே ஏசித் தூற்றலாம், அல்லது மணித்தியாலக்கணக்கில் அழுது கொண்டிருக்கலாம். எப்படி இருப்பினும் அது இயல்பானது தான் என்று அவர்களுக்கு நம்பிக்கையை கொடுக்க வேண்டும். அந்தவேதனையில் அவர்கள் கூறுவதை தனிப்பட்ட விதத்தில் பொருட்படுத்தாதீர்கள்.

ஒருவர் எவ்வளவுகாலம் வேதனையில் இருக்க வேண்டும் என நியதி இல்லை. பொதுவாக 12 முதல் 24 மாதங்களில் மனம் ஆறி மக்கள் இயல்பு வாழ்வு நிலைக்கு திரும்புவார்கள், ஆனால், பலர் அதற்கு குறைவாகவும் சிலர் அதற்கு அதிகமாகவும் காலமெடுத்து தமது வேதனையிலிருந்து விடுபட்டு இயல்பு வாழ்க்கைக்கு திரும்புவார்கள். எனவே ஒருவருக்கும் வேதனையிலிருந்து இயல்பு வாழ்க்கைக்கு திரும்புவதற்கு காலக்கெடுவைக்க வேண்டாம். அப்படிச் செய்வது இயல்பு நிலைக்கு திரும்புவதற்கு கூடிய வேளை எடுக்கும்.

எல்லார்க்கும் என்ன சொல்வது என்ற பிரச்சினை உண்டு. உண்மையை சொன்னால் எனக்கும் அந்தப் பிரச்சினை இருக்கிறது. ஆனால் சில எளிய அனுகுமுறைகளை இங்கு ஆராய்வோம்.

நடந்த அனர்த்தத்தை ஏற்றுக்கொள்ளுங்கள். அதாவது நீங்கள் உங்கள்.................... இறந்துவிட்டாராம் என்று கூறுங்கள். இந்த சொல் 'இறந்து' அல்லது 'செத்து' என்ற பதத்தைப் பாவிப்பதன் மூலம் நடந்த அனர்த்தத்தை ஏற்றுக்கொண்டீர்கள், அறிந்துகொண்டீர்கள் என அறிவிப்பதால் அவர்கள் தங்கள் மனதில் உள்ளதை உங்களுக்கு சொல்ல சந்தர்ப்பத்தை ஏற்படுத்துகிறது.

உங்கள் கரிசனையை வெளிப்படுத்துங்கள். 'இப்படி நடந்துவிட்டதே. வேதனையாயிருக்கிறது' என்ற கருத்துப்பட சொல்லுங்கள்.

நீங்கள் நாடகம் நடிக்க வேண்டாம். உங்களுக்கு என்ன சொல்ல வேண்டும் என்று புரியவில்லை என்றால் எனக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை. இது ஒரு தாங்க முடியாத பெரும் இழப்பு என்று மட்டும் சொல்லுங்கள். நீங்கள் உண்மையாக இரங்குவது அவர்களுக்கு இவ்வசனம் வெளிப்படுத்தும்.

ஏதாவது செய்து தரமுடியுமா என்று வெளிப்படையாகவே கேட்பதுடன், உங்களுக்கு மனதில் எதாவது செய்ய முடியுமானால் குறிப்பிட்டு கேளுங்கள்.

மரணவீட்டிற்கு பின் சந்திக்கும் வேளைகளில் நீங்களாக அவர் மனநிலையை ஊகிக்காமல் இப்போ எப்படி இருக்கிறீர்கள்' என்று கேளுங்கள். இத்தகைய கேள்வி அவர்கள் மனதை திறக்க உதவும்.

வேதனையில் உள்ளவருக்கு செய்யும் பெரும் உதவி அவர் கூறுவதை இளகிய மனதுடன் செவிசாய்ப்பதுவே.

முன்பு குறிப்பிட்டதுபோல் எல்லாருக்குமே வேதனையில் உள்ளவருக்கு என்ன சொல்வது என்பது புரியாதிருக்கலாம். என்ன சொல்கிறீர்கள் என்பதிலும் எவ்வளவு அமைதியாக செவிசாய்க்கிறீர்கள் என்பதுவே முக்கியம். பலசந்தர்ப்பங்களில் உண்மையாகவே நல்ல குறிக்கோளுடன் இருப்பவர் மரணத்தைப் பற்றி பிரஸ்தாபிக்காமல் வேறுவிடயங்களை கதைக்கலாம். ஆனால் வேதனையில் இருப்பவருக்கு அவர் இழப்பை நீங்கள் அங்கீகரிக்கிறீர்கள் என்பது முக்கியம். இழவு நடந்ததை பிரஸ்தாபிப்பது கடினமான விடயமல்ல, இறந்தவரை அவர்கள் மறந்துவிடப்போவதில்லை.

வேதனையில் இருப்பவரை மரணத்தைப்பற்றி கதைக்க வேண்டும் என நிர்ப்பந்திப்பது தவறு. ஆனால், அதுபற்றி அவர் கதைக்கலாம் என்ற சமிக்ஞை அவர்களுக்கு கொடுங்கள். மரணித்தவர் பற்றி இயன்ற அளவு உண்மையை பேசுவதுடன் அவர் பெயர் குறிப்பிடுவதை தவிர்க்க முயலாதீர்கள். மேலும் சந்தர்ப்பம் வரும்போது அவர்கள் உணர்வுகளை பகிர்ந்துகொள்ள இடம்கொடுங்கள். உங்களுக்கு நடந்ததைப்பற்றி கதைக்க வேண்டும் போல் உள்ளதா? என்று கேட்டால் அவர்கள் உள்ளத்தில் அடக்கிவைத்திருக்கும் வேதனையை ஆதங்கங்களை மடைதிறந்த வெள்ளம் போல் வெளிக்கொணர்வார்கள்.

எல்லாவகையான உணர்வுகளையும் ஏற்றுக்கொள்ளுங்கள். அப்படி பேசுகிறவர் கோபப்படலாம், அழலாம், இப்படி பல உணர்வுகளை வெளிப்படுத்தலாம். நீங்கள் அமைதியாக கேட்டுக்கொண்டு இருங்கள். அவர்கள் எப்படி உணரவேண்டும் என கோடு போடாதீர்கள். நீங்கள் என்ன தீர்ப்பு கூறப்போகிறீர்கள் என்ற அச்சமின்றி, மனதிலுள்ளதை வெளிப்படையாக கூற இடம் தருவதில்தான் உங்கள் வெற்றியுள்ளது.

அமைதியாக இருக்க தயாராயிருங்கள். வேதனையுற்றிருக்கும் வேளை மக்கள் ஆலயங்களுக்கு செல்வது மனதில் உள்ள

28ம் பக்கம் பார்க்க...

National Driving Institute
Male & Female Experience Instructors
will Teach For G1, G2 Road Test
Early Appointment For G1, G2 Road Test
Please Call:
Mrs. Saththi 416-816-1500 / 905-653-3878

# கொண்டோ வாங்குவது எப்படி

இவ் ஆக்கம் ஆங்கிலத்தில் Audrey M. Loeb அவர்களால் எழுதப்பட்டு Buying a condominium என்னும் நூலில் வந்த முக்கிய விடயங்களை வாசகர்களின் தேவைகருதி தமிழில் தருகிறேன்.

### கொன்டோமினியம்

இதில் பலருடைய சொத்துக்கள் ஒன்றாக நகரவீடுகளாகவோ, உயர்ந்த தொடர்மாடிக் கட்டிடங்களாகவோ இருக்கும். இதிலுள்ள ஒவ்வொரு ‘கொன்டோவும்’ ஒரு தனி நபரால் வாங்கப்பட்டு அவர் பெயரில் பதிவாகியிருக்கும். ஒரு படிநிலையிலுள்ள கொன்டோக்களின் நிர்மான வேலை முடிந்ததும் அவை ஏற்கனவே நிர்மானிக்கப்பட்ட கொன்டோக்களுடன் இணைக்கப்பட்டு ஒரு தொகுதியாக கொன்டோமினியம் கோர்ப்பரேஷனில் சேர்க்கப்படும். ஒரு பரஸ்பர ஒப்பந்த அடிப்படையில் இவை யாவும் உபயோகம், பராமரித்தல், பங்குக்குரிய பணம் செலுத்ததல் என்பதற்காக இணைக்கப்பட்டுள்ளன.

### பெறுமதியை மதிப்பீடு செய்தல்

எனக்குப் பிடித்த ஒரு கொண்டோவை நான் பார்த்தால் அதன் பெறுமதியை நான் எப்படி மதிப்பீடு செய்யலாம்.

அங்கு ஏற்கனவே மக்கள் வாழ்வதானால் அவர்களிடமே அந்தக் கொன்டோவின் தரம் குறித்து விசாரித்தறியலாம். அவர்கள் அனுபவிக்கும் கொன்டோக்கள், நிர்வாகத் தன்மை, வதிவோருடைய தராதரம், கொண்டோ வாழ்வு உங்களுக்கு ஏற்குமா? அல்லது அங்குள்ளவர்களை நீங்கள் அயலவர்களாக ஏற்று வாழ முடியுமா? என்பதை நீங்கள் தீர்மானிக்கவும்.

புதிதாக நிர்மானிக்கப்பட்ட கொன்டோவானால் இப்படி மதிப்பீடு செய்ய முடியாது. கொன்டோக்களின் அயலில் வதிவோர் எப்படியானவர்கள், அருகாமையில் கடை, அலுவலகங்கள், தொழில் நிலையங்கள், உள்ளனவா என கவனிக்கவும். நல்ல அயலவர்கள் இருந்தால், அவர்கள் மகிழ்ச்சியாக இருக்க உங்களுடைய கொண்டோவுக்கு நல்ல மீள் விற்பனைப் பெறுமதி இருக்கும்.

அதேபோல அதே கட்டிட நிர்மானிப்பவர்களால் கட்டப்பட்ட வேறு கொன்டோக்களில் வசிப்பவர்களிடம் இதைப்பற்றி விசாரித்து அவர் களின் கட்டிடங்கள் பலமானவையா, தரமானவையா, வசதியானவையா? எனத் தெரிந்து கொள்ளலாம்.

மேலும் அவர்கள் திட்டம் Tarring warranty corporation (Tarion)தின் கீழ் பதிவு செய்யப் பட்டவையா என்பதையும், வாழும் பகுதிகளுக்கிடையில் உள்ள தரை களுக்கிடையில் சத்தம் உள்ளே வராமல் தடுக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன எனக் கேட்கவும். பல குடும்பங்கள் வாழும் தொகுதியில் சத்தம் சரியான முறையில் கட்டுப்படத்தப்படாவிட்டால் அது பெரிய தொந்தரவாக இருக்கலாம்.

### யார் எதற்குப் பொறுப்பு?

சகல கொன்டோக்களும் இரண்டு பாகங்களைக் கொண்டவை. ஒன்று தனிப்பட்ட முறையில் சொந்தமாக வாங்கியது. மற்றப் பகுதி அந்தக்கட்டிடத்தில் வாழும் சகலருக்கும் பொதுவானது. அவை பல தொகுதி வதிவிடங்களுடன் இணைந்திருந்தாலும் எல்லாக் குடியிருப்பாளருக்கும் பொதுவானது. கொண்டோ பற்றிய விவரத்தில் இவை யாவும் குறிப்பிடப்பட்டுள்ளன. இவ் விவரங்கள் அல்லது பிரகடனங்கள் (Deceleration) வேறுபடலாம். பொதுவாக ஒரு குடியிருப்புத் தொகுதி அதன் சுற்றுப்புறச் சுவர்களால் வரையறுக்கப்படும். அதில் சில தொகுதிகளைப் பொறுத்தளவில் முன்பக்க நிலம், பின் பக்க நிலத்தையும் சேர்த்துள்ளதால் அவற்றை Free nola condominium என அழைக்கப்படும். இந்த வேறுபாடு சாளரங்களிற்கு மைபூசும் போதோ, வெளிச்சுவர்களை திருத்தும் போதோ, கூரைகளைத் திருத்தும்போதோ முக்கியத்துவம் பெறுகின்றன. பொது விடயங்கள் தனிப்பட்ட குடியிருப்புகளின் அபிவிருத்திப் பகுதிளாகும். அவை நடைபாதை ஏறுபடிகள் இயந்திர மின்சார இணைப்புகள் ஆகியவற்றையும் பொழுதுபோக்கு வாகனத்தரிப்பு முதலியனவற்றையும் கொண்டிருக்கலாம். இவற்றின் பராமரிப்பு மற்றும் திருத்த வேலைகள் Corporationஇன் பொது விடயமாக இருக்கலாம்.

ஒரு சாதாரண வதிவிட Corlors அப்பாட்மென்ற் வசிக்கும் அறைகள், சமையல் அறை, சாப்பாட்டு அறை, படுக்கை அறைகள், குளியல் அறைகள், வாசல் மண்டபம், சுவர் அலுமாரிகள் முதலியவற்றைக் கொண்டுள்ளன. நகர வீடுகள் அல்லது தனி குடியிருப்புகள், நிலக்கீழ் பகுதியையும் கராஜ்களையும் முன்பின் வளவுகளையும் கொண்டவையாக இருக்கும். இவை யாவும் உரிமையாளரின் சொத்துக்கள். இவற்றைப் பராமரிக்க வேண்டியது உரிமையாளரின் பொறுப்பு.

பொதுப் பகுதிகள் தனி வீடுகளுக்குரிய அபிவிருத்தித்தி செய்யக்கூடியவையாகும். இவை Corldors, வரவேற்பறைகள், இயங்கும் ஆட்காவிகள் இயந்திர, மின் அமைப்புக்களைக் கொண்டிருக்கும். அடுக்குமாடி குடியிருப்புக்கள் போன்ற கொண்டோக்களில் பொழுது போக்கு சாதனங்களும் காணப் படும். பொதுவாக பங்காளிகள், வாகனங்கள் நிறுத்துமிடங்கள், களஞ்சிய அறைகள், நகர வீடுகளில் புற்தரைகள் பொதுவாக காணப்படும். இவற்றின் பராமரிப்பு சகல குடியிருப்பு உரிமையாளர்களாலும் கவனிக்கப்படுகிறது. ஒவ்வொரு கொண்டோவிற்கும் பொதுப்பகுதிகள், சொந்தப் பகுதிகள் எவை என்னும் விடயத்தில் சிறு வேறுபாடுகள் காணப்படும்.

### நுகர்வோர் எச்சரிக்கையாக இருக்கவும்

நான் ஒரு கொண்டோ வாங்க வேண்டும். அதுபற்றிய விபரங்கள் எந்த பத்திரங்களில் காணப்படும்?

நீங்கள் ஒரு கொண்டோ வாங்கி விற்கும் அனுபவமுள்ள ஒரு வழக்கறிஞராக இல்லாவிடின், அந்த பத்திரங்களிலுள்ள விடயங்கள் உங்களுக்கு குழப்பத்தை ஏற்படுத்தலாம்.

கொண்டோ வாங்கும் விற்பனைப் பத்திரத்தில் ஒப்பம் இடு முன் உங்களுக்கு மிக முக்கியம் என்று தோன்றும் விடயங்களை

**பாகம் - 2**

வீட்டுப் பத்திர ஒப்பந்தத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டும். விற்பனை முகவர் சொல்லும் வாய்மொழி உறுதிகளை நம்ப வேண்டாம்.

வீட்டுப் பத்திரத்தை (agreement of purchase and sale) நீங்கள் ஒப்பமிடமுன் முழுவதும் விசாரித்து அறிந்து கொள்ளுங்கள். யாரும் சொல்வதை மட்டும் நம்ப வேண்டாம்.

நீங்கள் வாங்கும் வீட்டைப் பற்றிய சகல விபரங்களும் குறிப்பிடப்பட்டுள்ளனவா என்று தெரிந்து கொள்ளவும். கொண்டோ வாழ்வு எப்படி உங்கள் வாழ்வைப் பாதிக்கும் என்பதையும் உங்களுக்கு உணர்த்தும்.

கொண்டோ வாழ்வு, தனி வீட்டில் வாழ்வதை விட வேறுபட்டது. கொண்டோவில் நீங்கள் சில விடயங்களைச் செய்ய முடியாது. இவற்றை நீங்கள் நன்கு தெரிந்து கொள்வது அவசியம். அத்துடன் உங்கள் வழக்கறிஞருடன் உங்கள் வீட்டு விற்பனை/வாங்குதல் ஒப்பந்தத்திலுள்ள சகலவற்றையும் அலசி ஆராயுங்கள்.

நீங்கள் ஒரு புதிய கொண்டோ வாங்குவதானால் அதுபற்றிய சகல விபரங்களும் அடங்கிய Disclosure Statement வீடு கட்டி விற்கும் கம்பனியால் தரப்படும். அதை வாசித்து அதில் கூறப்பட்டமாதிரி வீடு அமைந்துள்ளதா என அறிந்து கொள்ளலாம்.

புதிய வீட்டு விற்பனைச் சட்டம் உங்களுக்குப் பத்து நாள் Cooling off Period உங்களுக்குப் பிடிக்காவிடின் ஒப்பந்தத்தைப் பத்து நாட்களுக்குள் முடிவுக்குக் கொண்டுவரலாம். உங்கள் வைப்புப் பணத்தை நீங்கள் மீளப் பெறலாம். இப்படிச் செய்வதற்கு நீங்கள் எவ்விதக் காரணமும் கொடுக்கவேண்டிய அவசியமில்லை.



S.K. பாலேஸ்
- வீடு விற்பனை முகவர் -

கொண்டோ பற்றிய சட்டம் மீள்விற்பனை செய்யப்படும் தொகுதிகளுக்குப் பொருந்தாது.

### புதிய கொண்டோக்களுக்கு விலை நிர்ணயித்தல்

புதிய கொண்டோக்களை அபிவிருத்தி தொழில், சதுர அடிக் கணக்கில்தான் மதிப்பீடு செய்கிறது. உ+ம், ஒரு சது அடிக்கு $200 என்பது போன்று ஒரு விலைக்கு விற்கிறது.

சது அடி என்பது உள் அளவு அல்ல. சுவர்களின் வெளிப்புறத்திலிருந்து வெளிப்புறத்துக்கு எடுக்கப்படும். அறைகளுக்கிடையிலுள்ள சுவர்களுக்கிடையில் உள்ள அளவைத் தெரிந்துகொள்ள வீட்டின் கொண்டோவின் மத்தியில் உள்ள சுவர்களுக்கிடையில் உள்ள தூரம்தான் கண்கிடப்படும். விற்பனைக்குக் காண்பிக்கப்படும் சதுரப்பரப்பளவுக்கும், உண்மையில் நாம் உபயோகிக்கும் இடத்தின் அளவுக்குமிடையில் 8-12% வித்தியாசம் இருக்கும்.

விற்பதற்கும் வாங்குவதற்கும் இந்தப் பரப்பளவு கனக்கிடப்படுகிறது. ஆனால், பொதுச் செலவு கணக்குப்பார்க்கும் போது இந்தப் பரப்பளவு அடிப்படையில் கணக்கிடப்படவில்லை.

skbales@thaiveedu.com

■ ■ ■

**Business for Sale**
**Mccowan & Hwy 7**




**Canadian Home Appraisals Inc.**
**Baleswaran, K (S.K Bales)**
CRA,CAR,MVA,FRI,CRES.
**Tel- 905-201-0929, Cell- 416-801-3219, Fax- 905-201-8482**
**Web- www.chainc.ca, Email- chai@chainc.ca**

**Canadian Home Appraisals Inc.**
Residential & Commercial Appraisals
CHAI CANADIAN HOME APPRAISALS INC.
**S.K.Bales**
CRA, CAR, MVA, FRI, CRES
Managing Director
Tel: 905-201-0929
Fax: 905-201-8482
www:chainc.ca
email:.chai@chainc.ca


**MY PROFESSIONAL DESIGNATIONS:**
- **CRA** *(Canadian Residential Appraiser)*
  Designation with **Real Estate division of University of British Columbia and The Appraisal Institute of Canada**
- **Car: ( Certified Appraisal Reviewer)**
  Designation with **Canadian National Association of Real Estate Appraisers.**
- **MVA( Market Value Appraiser-Residential**
  Designation with **The Canadian Real Estate Association**
- **FRI (Fellow of the Real Estate Institute)**
  Designation with Real Estate Institute of Canada
- **CRES ( Certified Real Estate Specialist)**
  Designation with Real Estate Institute of Canada
- **RESIDENTIAL AND COMMERCIAL REAL ESTATE BROKER**
  Real Estate Broker licence with Real Estate Council of Ontario.

Century 21
Affiliate Realty Inc.



**S.K.Bales**
CRA, CAR, MVA, FRI, CRES
Real Estate Broker
Residential & Commercial
TEL: 416-290-1200
CELL: 416-801-3219
Commercial Member

# வாழ்க்கை சுவர்க்கமாவது இனிய இல்லமொன்றில்...




## Elaguppllai (Mike) Srinathan B.Sc

**Sales Representative**

**Dir: 416-276-1225 Off: 905-470-9800**


**Email: esrinathan@trebnet.com**

**Birchmount/Ellesmere**




**$225,000**
Condo Apt, Bed rooms 2, Washrooms 2
Luxurious Tridel Condo Penthouse Suite, Close To Park & Transportation

**Brimley/Denison**



**$229,000**
Link 2 story, Bed rooms 3, Washrooms 2
Close To Major Amenities,Walking Distance To School,Park,Church Etc

**Mccowan And Steeles**




**$289,900**
Linke 2 Story Bed rooms 3+1, Washrooms 3
Kitchen In Basement. Windows Installed About 6 Months Ago, Driveway Com-

**Victoria Wood/9th Line**




**$329,900**
Detached 2 story, Bed rooms3, Washrooms 2
Finished Basement With Italian Ceramic Floors, Close To School's, Shopping, Hospital, And Hwy 407

**Finch/Morningside**




**$339,900**
Detached 2 Story, Bedrooms 3, Washrooms 3,
Immaculate Detached Brick Home With Many Upgrades Upgraded Kitchen Cabinets.

**9th Line/Hooverpark**



**$349,900**
Detached 2 Story, Bedrooms 3 Wasroom 3,
Less Than One Year Old!! Two Storey Brick With Oak Stair, Gas Fire Place,

**Morningside/Staines**



**$354, 900**
Detached 2 Story, Bed rooms 3 Washrooms 3,
Four Years New***Three Washrooms***Hard Wood Floor In Lr/Dr/Fam Room

**9th Line & 16th Ave**



**$369,900**
Detached 2 Story, Bed rooms 4 Washrooms 3,
Close To 2000 Sq. Ft Many Upgrades. Hardwood Flooring, Close To School

**Markham & Bur Oak**



**$374,900**
Detached 2 Story, Bed rooms 4 Washrooms 3
Full Brick 4 Bedroom Home With Lots Of Upgrades Apprx 2008 Sqft

**Morningside/Finch**



**$394,000**
Detached 2 story , Bed rooms 4 Washrooms 3,
Over 2000 Sq.Ft.Home With 9' Ceiling Main Floor Double Door Entry

**Markham & Steeles**



**$399,000**
Detached 2 Story, Bedrooms 4 Washrooms 3, Detached Home On Demand Location. Newly Painted, Public Transit At Door

**W,Markham/S.14th**



**$399,900**
Link 2 Storys, Bed rooms 4, Washrooms 3, Fully Fenced Yard*Walk To Ttc/Schools/Shops/Restaurant/Church/Comm. Ctr/Park

**14th Ave/Chatelaine**



**$479,900**
Detached 2 Story, Bedrooms 4, Washrooms 3,
Brick & Stone Front. Open Concept Lr W/Hdwd Flr & Picture Wdws.

**14th Ave./9th Line**



**$479,900**
Detached 2 Story, Bedrooms 4 Washrooms 3
Upgraded Kitchen With Maple Cabinets & Granite Counter Top,

**9th Line & Rizal**




**$569,900**
Detached 2 Story, Bedrooms 4, Washroom 3
Upgraded Kitchen W/Granite Counter Top & Backsplash Upgraded Entry Door

**9th Line & 14th**



**$1,688,000**
Detached 2 Story, Bedrooms 4+1Washrooms 6, Custom Built 6000Sf. On 1.1 Ac Lot With 2 Sep.Houses Together With Sep.Entrances

**Salem Road/ Rossland**




**$499,800**
Detached 2 Story, Bedrooms 4 Washrooms3,
Large 4 Bedroom Home Located In A Great Neighbourhood!

**Sandlewood/Queen Mary**




**$299,900**
Detached 2 Story, Bedrooms 3+1 Washrooms 2
Close To Shops, Parks, Schools, Ideal Family Location. Large Eat In Kitchen

**Mccowan/Denison**




**$324,900**
Link 2 Story Bed rooms 4 ,Was rooms 3 Large Eat-In Kitchen With Ceramic Floors Open To Main Floor Family Room With Fireplace.

**Aldergrove/Dennison**




**$359,900**
Link 2 Story Bed rooms 4+2, Washrooms 4,
Well Maintained 2000 Sq Ft, Corner Lot, Close To All Amenities

**Lawrence/Markham Rd**




**Sale Price**
Wow!Your Search Is Over!Total Reno!Gorgeous!$$$$$ Spent!Large Raised Bungalow W/1Br Bsmt Apt & Separate

**Sales of Businessl**




**$489,900**
Sale Of Business With Property Gas Stations.
Fall Service, Coin Car Wash And Large Convinience Store-

**Sales of Business**




**$239,900**
Sale Of Business Without Property Gas Stations.
Gas Station Plus Convenience Store Business In Gta

RE/MAX
**Realtron Realty Inc. Brokerage**
**Independently Owned and Operated**
**7800 Woodbine Ave. Penthouse, Markham,ON. L3R 2N7**

**'I can also assist you with: Mortgage Financing Home Inspection, Real Estate Lawyer'**

# கனடாவில் புதியவர்களுக்கு உதவ...

# (Newcomers in Canada)



ஜீவா திசைராஜா

கனடாவினுள் வரும் இடப்பெயர்வாளர்கட்கும் அகதிகட்குமான (புதிதாக வருபவர்கள்) சமூக ஆதரவு எவ்வாறு இருக்கிறது, அத்துடன் அவர்கள் பெறும் முறைசார்ந்த (Formal) மற்றும் முறைசாரா (Informal) ஆதரவுகள் மற்றும் அவர்கள் எதிர்நோக்கும் சவால்களை ஆராய்வதும் அவர்கட்கான உதவிகளை எங்கு பெறலாம் என்பது குறித்த வழிகாட்டலுமே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

இக்கட்டுரைக்கான தகவல்களுக்காக அல்பேட்டா பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், கனடிய அரசாங்க புள்ளி விபரத் தகவல்கள், இடப்பெயர்வாளர்களுக்கு உதவும் வெவ்வேறு அரசாங்க மற்றும் சமூக சேவை அமைப்புக்களின் கையேடுகள் போன்றவை பயன்படுத்தப்பட்டன..

## கனடாவைத் தெரிவு செய்தல்

புதிய உள்ளிடப்பெயர்வாளர்களில் அநேகமானோர் (98% - அரசாங்க புள்ளி விபரம்) தாம் இடப்பெயர்வதற்கு விண்ணப்பித்த ஒரே ஒரு நாடு கனடாவே என கூறியுள்ளனர். அநேகர் பொருளாதார காரணங்கட்காக இடம் பெயர்ந்திருக்கின்றனர். சிலர் தமது குடும்பத்துடன் இணைவதற்காக வந்துள்ள அதேநேரம் சிலர் தமது தாய்நாட்டை விட்டு நீங்க வேண்டிய இக்கட்டான நிலைக்குள்ளாகி வேறு வழியில்லாது அகதிகளாகவும் திறன் தொழிலாளராகவும் (Skilled migrants) இடம் பெயர்ந்துள்ளனர்.

கனடாவினுள் இடம் பெயர்ந்தமைக்காக மிகவும் பொதுவாக கூறப்பட்ட காரணங்களுள் தமது குடும்பத்தின் எதிர்காலத்தை முன்னேற்ற (30%), ஏற்கனவே கனடாவில் வாழ்ந்த குடும்பத்துடனோ அல்லது நெருங்கிய உறவினர்களுடனோ இணைவதற்காக (27%) அல்லது கல்வி நோக்கங்கட்காக (11%) என்பன உள்ளடங்கும். இடப்பெயர்வு வகைப்பாட்டின்படி, கனடாவைத் தெரிவு செய்தற்கான மிக முக்கியமான காரணம் வேறுபட்ட போதும் மிகவும் பிரதான காரணம் மேற் கூறப்பட்ட 3 காரணங்களே. ஏனையவற்றை விட அகதிகள் மிகவும் கூடிய விகிதத்தில் (20%) இடம் பெயர்ந்துள்ளனர்.

## அநேகமான இடப்பெயர்வாளர்களின் குடும்பம் மற்றும் /அல்லது நண்பர்கள் ஏற்கனவே கனடாவில் குடியேறியுள்ளனர்.

அநேகமான புதியவர்கள் தமக்கு குடியேற்ற வசதிகளையும் சமூக ஆதரவையும் வழங்கக் கூடிய நண்பர்களும் உறவினர்களும் இருக்கும் இடத்திற்கு அண்மையான இடங்களையே குடியமர்வதற்காக தெரிவு செய்கிறார்கள். ஏற்கனவே இருக்கும் கனடியர்களைப் போலவே புதியவர்களுக்கும் சமூக ஆதரவு என்பது முக்கியமானதாகும். உள்ளிடப்பெயர்வாளருக்கு வீடு, தொழில் அல்லது பாடசாலை மற்றும் சுகாதார சேவைகளை கண்டறிதல், கனடிய சமூகத்துடன் இணைதல், சமூக குழுக்களில் சேர்தல், ஒரு குழுவைச் சார்ந்திருக்கிறோம் என்ற உணர்வு போன்றவற்றிற்கு சமூக வலைப்பின்னல் (Social network system), தொடர்புகள் உதவும்.

கனடாவினுள் புதிதாக வருபவர்களுக்கு நிதி (financial), தகவல் (information), தொழில் (employment), உணர்வு பூர்வமான (emotional) ஆதரவு என்பன உடனடியாகத் தேவைப்படுவதாக உள்ளது. தொழில் தொடர்பிலான ஆதரவே அவர்களது நிதி நிலையை உறுதிப்படுத்தவும், சுயநிறைவான நிலையை அடையவும் அத்தியாவசியமானதாக உள்ளது. கனடிய வேலை அனுபவத்தைப் பெற சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தல், ஆங்கில மொழியில் பயிற்சியை பெற வசதியை ஏற்படுத்திக் கொடுத்தல், புதிதாக வருபவர்களின் கல்வித் தகைமை கனடாவில் எத்தரத்தில் உள்ளது என்பதை அடையாளப்படுத்துவதற்கான உதவிகள் செய்தல் போன்றன தொழில் பெறுவதை இலகுவாக்குவதற்கான வழிமுறைகள் ஆகும்.

முறைசார்ந்த (Formal) மற்றும் முறைசாராத சமூக ஆதரவுகள் புதியவர்களின் உள்ளிடப் பெயர்வு செயல்முறைகளை இலகுவாக்குவதற்கும் புதிய சமூக சூழலுடன் அவர்கள் இயைபாக்கம் பெறுவதற்கும் உதவி புரியும். கலாச்சார நிறுவனங்கள், சமூக சேவை அமைப்புக்கள் (Social Service organization), பொது நூலகங்கள், ஆலயங்கள், சமூக மையங்கள் (Community Centres) ஆகியன சமூக உணர்வை வழங்குவதுடன் புதிதாக வருபவர்களுக்கு இக்கட்டான நேரத்தில் உதவி செய்யும் மூலாதாரங்களாகவும் உள்ளன.

## புதியவர்களுக்கு கிடைக்கும் ஆதரவின் தாக்கங்கள் (Impacts of support)





சமூக ஆதரவுகள், புதிதாக வருபவர்களின் ஆரோக்கியத்தில் சாதகமான தாக்கங்களை ஏற்படுத்துகின்றது. அத்துடன் கனடிய சமூகத்தினுள் இணைதல், சமூக வலையமைப்பை (Social network) கட்டியெழுப்புதலானவை வேலைவாய்ப்பு பெறுவதை இலகுவாக்குவதுடன் அனுபவங்கள்/ பிரச்சனைகளைப் பகிர்ந்து கொள்ளலானது, மனஅழுத்தம் மற்றும் தனிமையுணர்வைக் குறைக்கின்றது. மேலும் நம்பிக்கையின்மையைக் குறைத்து உடலியல் மற்றும் மனநலத்தை முன்னேற்றுகின்றது. நிச்சயமற்ற தொழில், அடிப்படைத் தேவைகட்கும் வருமானம் போதாமல் இருத்தல் என்பன உடலியல் மற்றும் உளவியல் ஆரோக்கியத்தைப் பாதிக்கின்றது. சமூக ஆதரவு போதுமானளவில் இல்லாமை புதிதாக வருபவர்களில் பாதகமான தாக்கங்களை ஏற்படுத்துகின்றது. இத்தகைய பாதகமான தாக்கங்களாக:

- சமூகத்தில் இருந்து தனியாக்கப்படல் (Social Isolation)
- தனிமைத் தன்மை (Loneliness)
- மனஅழுத்தம் (Depression)
- பற்றாக்குறையான நிலை (Inadequacy)
- அலட்சியப்படுத்தப்பட்ட நிலையில் இருத்தல் (Being in limbo)
- இனங்காணப்படுதல் குறைவாக இருத்தல் (lack of identity)
- தொழில் பெறுவதில் கஷ்டம் (Difficulty in seeking employment)
- போதுமான தகவல் கிடைக்கப் பெறாமை (Inadequate information)

கனடாவில் குடும்பம், உறவினர், நெருங்கிய நண்பர்கள் இருத்தல். தோழமைத் தன்மையை (Companionship) வழங்குவதுடன் குடியமர்தலில் புதிதாக வருபவர்கள் எதிர்நோக்கும் சவால்களை எதிர்கொள்ளவும் உதவுகின்றது. அவர்கள் கவலைப்படுவது குறையும்போது அவர்களது ஆரோக்கியத்தில் அது சாதகமான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

அல்பேட்டா பல்கலைக்கழக ஆய்வின்படி, சோமாலிய அகதிகளைப் பொறுத்தவரையில் ஏனையோருடன் ஒப்பிடும்போது குறைந்த நிதிவளம் மற்றும் கனடாவில் குறைந்த உறவினர்கள் இருந்த போதும், தமது தாய் நாட்டில் இருக்கும் தமது உறவினர்கட்கு உதவி செய்ய வேண்டியதை தமது கடமைப்பாடாக உணர்கிறார்கள். தமது எல்லாத் தேவைகளும் சாதிக்கப்படுதல் சாத்தியமற்றதாக இருந்த போதும், தமக்குரிய போதுமான உதவிகளைப் பெற்றுக் கொள்ளுதல் சாத்தியமானது என சோமாலியர் நம்புகின்றனர் (உதாரணம். வருமானத்தைப் பெறுவதற்கு தொழில் பயிற்சி பெறுதல்). சோமாலியரை விட சீன மக்கள் வேறுபட்டவர்களாக உள்ளனர். இதற்கு இவர்கள் கனடாவிற்கு வருவதற்கு முன்னரே உறவினர்கள், நண்பர்கள் அல்லது குடும்பங்களைக் கொண்டிருப்பதே காரணமாகும். இவை இடப்பெயர்விற்கு பின்னரான ஆதரவிற்கான முக்கியமான காரணமாக உள்ளது. சில சீன புதியவர்கள் சமூக ஆதரவை (Social Support) ஒருபோதும் கேட்கக் கூடாது என்பதுடன் தன்னிறைவைக் கொண்டிருக்கவும் பயிற்சியளிக்கப்பட்டிருக்கின்றனர்.

புதியவர்கள் எதிர்நோக்கும் சவால்களாக திறன் உழைப்பாளிகள் (skilled workers), தொழில் நிபுணர்கள் (Professionals) ஆகியோருக்கு தாய்நாட்டில் செய்த தொழிலுக்குச் சமமான தொழில் வாய்ப்பு கிடைக்காமை கீழுழைப்பு (Underemployment போன்றன உள்ளன. ஏனைய சவால்களாக:

- மொழிப் பிரச்சனைகள் (Language difficulties)
- குடும்ப ஆற்றல்கள் (Family dynamics)
- கலாச்சார அதிர்ச்சியை சமாளித்தல் (Coping with culture shock)
- சமூகத்தில் தனித்து விடப்படும் நிலை (Social isolation)
- உணர்வுரீதியான தனிமைத் தன்மை (Emotional loneliness)

இந்த பரந்த சவால்கள் இருந்த போதும் சில உள்ளிடப் பெயர்வாளர்களும் அகதிகளும் தமது தைரியத்தையும், எதிர்நீச்சலையும் வெளிக் காட்டுகிறார்கள். இவர்கள் எதிர்காலத்தில் நல்வாழ்வு பற்றிய நன்னம்பிக்கையைக் கொண்டிருப்பதுடன் தமது தொழில் வாய்ப்புக்களை முன்னேற்றுவதற்கு தமது கல்வித் தகைமைகளை மேம்படுத்துவதற்கான பயிற்சி மற்றும் கனடிய கல்வித் தகைமைகளைப் பெறுவதுடன் புதிதாக வரும் ஏனையோருக்கு சவால்களை எதிர்த்து முன்னேறுவதற்கான தகவல்களையும் வழங்குகின்றனர்.

புதியவர்களின் தேவைகளை சந்தித்து அவர்களது குடியமர்தலை இலகுவாக்குவதற்காக ஏற்கனவே சேவைகளை அதிகரித்து முன்னேற்றுவதற்கான வழிமுறைகள் இனங் காணப்பட்டுள்ளன. அவையாவன:

## சேவைகளை பொருத்தமாகக் கிடைக்கச் செய்தல்

புதிதாக வருபவர்களின் மொழியில் சரியான நேரத்தில் சேவைகளையும் ஆதரவுகளையும் வழங்குதல், கலாச்சார ரீதியில் பாதிப்பு ஏற்படாமல் ஆதரவை வழங்குவதுடன் புரிந்துணர்வைக் கொண்டிருத்தல்.

புதியவர்கள் வந்தவுடன் போதுமான சேவைகள், நிகழ்ச்சித் திட்டங்களை செய்தி ஊடகங்களுக்கூடாக வழங்குதல்.

## தொழில்:

தொழில் தேடும் பிரச்சனைகளை இலகுவாக்குவதற்காக கனடிய தொழில் சந்தை பற்றிய போதுமான தகவல்களை வழங்குதல். அவர்களது தாய்நாட்டில் பெற்ற கல்வித்

38ம் பக்கம் பார்க்க...


Tutoring

Grade 1- 7 : English, Math, Science & Social Studies

Grade 8- 11: English & Math

அஞ்ஜலீன் ஜீவா திசைராஜா

B.A (Hons),M.Sc,Ph.D

(647) 291 1357

(Kennedy & Ellesmere அருகாமையில்)

# ஆயுட்காப்புறுதி

## மருத்துவப்பரிசோதனை இல்லாத காப்புறுதி

## Non - Medical Insurance

- ✓ நிரந்தர ஆயுட்காப்புறுதி
- ✓ வீட்டு அடைமானக்காப்புறுதி
- ✓ கொடிய நோய்களுக்கான காப்புறுதி
- ✓ இயலாமையை ஈடு செய்யும் காப்புறுதி

- ✓ Life Insurance
- ✓ Mortgage Insurance
- ✓ Critical Illness Insurance
- ✓ Disability Insurance

**சியாமளா ரட்ணசபாபதி** காப்புறுதி முகவர்

INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC.

RBC

Protect Your Family Future Today !



**Shiamala Ratnasabapathi**
Life Insurance Broker

INSURANCE • RESP • RRSP

**416.414.2374**

---

# வளமான வாழ்விற்கு வதிவிடம் வாங்கிட......

RED CARPET® Royal Realty Ltd., Brokerage
INDEPENDENTLY OWNED AND OPERATED
Real Estate Services



$2,250
**9th Line/14th Ave**
5 Bedrooms, 4 Washrooms
Excellent Boxgrove Neighbourhood, New Detached Home, Over 3200 Sq Ft



$154,900
**Kipling/Steeles**
2+1 Bedrooms, 2 Washrooms
Excellent Price For Corner Unit With 2 Car Parkings, One Of The Nicest Units



$219,000
**Morningside/Mclevin**
3 Bedrooms, 3 Washrooms
Affordable Price To Live In A Detached Like House, Close To Schools, Shopping



$314,900
**Meadowvale/Sheppard**
3+1 Bedrooms, 2 Washrooms
Well Maintained Raised Bungalow Thousands Spent On Upgrades New Porch, New Retaining Wall



$319,900
**Steeles / Martin Grove Rd**
3 Bedrooms, 3 Washrooms
Many Upgrades, Pride Of Ownership, Large Front Porch Close To All Amenities



$319,000
**Morningside/Sheppard**
3 Bedrooms, 3 Washrooms
Well Kept Home.Very Spacious Layout With Eat In Kitchen & W/O To Large Back Yard.



$334,900
**Mississauga**
3 Bedrooms, 3 Washrooms
A Beautiful Open Concept Home In A Sought After Area. Close To Square One, Hwy 403



$259,900
**Markham/Mclevin**
3 Bedrooms, 2 Washrooms
Well Maintained House With New Kitchen, Backyard Facing School, Good Location



**இரஞ்சன் பிரான்ஸிஸ்**
Sales Representative

Bus: 416.284.5555
Dir: 416.816.1220

# Tax Time!

வருமான வரி படிவங்கள் செய்து தரப்படும்

செல்வா / இரஞ்சன் பிரான்ஸிஸ்

**416.816.1220**

To Fill any Forms (Sponsors, ODSP, Tax & etc...)

880 Ellesmere Road. Suite 204, Scarborough, ON.

# நலம் நாடுவதும் அதுவே

## உங்கள் மாற்றத்தின் மாற்றத்திற்கு என்னை அழையுங்கள்



Kennedy & Eglinton
$ 104,000



Midland & Lawrence
$ 94,900



Markham & Eglinton
$ 109,900



Kennedy & 401
$ 117,000



Mclevin & Sewells
$ 244,888



Neilson & Sheppard
$ 264,999



Westney & Delaney
$ 269,900



Makham & Denision
$ 369,900



Middlefield & Denison
$ 379,000



Markham & Bur Oak
$ 389,900



Markham & Bur Oak
$ 407,000



Mc Cowan & Denison
$ 489,800

From 1000 sq. ft. to 5000sq.ft Officec space available for lease.

*Also Commercial & Investment Properties*

More than 8 Power of Sale homes
Call me

24 Hrs 416 856 6900

Call me for a change

RE/MAX

Tel: 905 470-9800
Fax: 905 470-7770
www.realtronhomes.com

Realtron Realty Inc., Brokerage
Independently owned and operated
7800 woodbine Ave. PH
Markham ON L3R 2N7



Kathir S Kathirgamanathan P. Eng.
www. kathirsubramaniam.com
Email: kathirhomes@gmail.com


Call me for a change
Sales Representative

# அழகிய பூஞ்செடிகள்

# மல்லிகை

## (ஜெஸ்மின் - Jesmine)

**வீட்டுத் தோட்டம் - 15**



செல்லையா சந்திரசேகரி

### அறிமுகம்

ஜெஸ்மின் (மல்லிகை), குடும்பம் ஒலியேசியேயைச் (Family Oleaceae) சேர்ந்தது. ஏறக்குறைய 150 இனங்கள் காணப்படும். ஜெஸ்மின், மேற்கு சீனாவின் இமயமலைப் பிரதேசத்தில் உற்பத்தியாகி, பின்னர் ஏனைய வெப்ப மண்டலங்களைச் சார்ந்த செடியாக வளர்க்கப்பட்டன. இந்தியா, இலங்கை, மலேசியா தென்ஆசியா போன்ற நாடுகளில், நறுமணத்தைக் கொடுக்கும் பூக்களுக்காக பூந்தோட்டங்களிலும் வீடுகளிலும் பெருமளவில் வளர்க்கப்படுகின்றன. இச்செடியைப் வளர்ப்பதில் பொதுவாக எல்லோருக்கும் ஒருவித சிரமமும் இருக்காது. செடியினது



மெல்லிய தண்டின் கிளைகளை வெட்டிக் கொடியாகப் படரவிடும்போது, அது 8-10அடி உயரமாகவும் வளரக்கூடியது. இலைகள் தனியாக மிகவும் கவர்ச்சியாகத் தென்படுகின்றன. ஈரத்தன்மை, பசளை, சூரியஒளி போன்றவற்றை நன்கு கவனத்தில் எடுத்துச் செடியை வளர்க்கும்போது, வருடம் முழுவதிலும் பூமொட்டுகள் கட்டாயமாகக்கிடைக்கும்.

### பூக்களின் அழகும் நறுமணமும்

வெள்ளைநிற அழகியபூக்கள் நறுமணமுள்ளவை. சில பூக்கள் நான்கு இதழ்களையுடையதாயும், சில இனங்கள் 5 அல்லது 6 இதழ்களை யுடையதாயும் இருக்கின்றன. சில பூக்கள் அடுக்குகளிலும் காணப்படும். பூக்கள் வருடமுழுவதிலும் நறுமணத்தைக் கொடுப்பதால் இதனை வெற்றிகரமாகப் பலரும் வீடுகளில் வளர்ப்பார்கள். நிழலையும் முழு ஒளியையும் சமாளிக்கக்கூடிய தன்மை கொண்ட செடியாக இருப்பதால், குளிர்ப் பிரதேசங்களில் வசிப்பவர்கள் இதனை வீட்டினுள்ளே சாடிகளில் வளர்ப்பதையும் பார்க்கலாம். எனவே, பண்டுதொட்டு இன்று வரை தமிழ்கலாச்சாரப்படி தென் கிழக்கு, தென் ஆசியப்பெண்கள் கூந்தலின் அழகுக்காக இப்பூக்களைச் செருகி வைத்திருப்பதைக் காண்கின்றோம். தென்இந்தியாவில் வீதியோரங்களிலும் கோயில் வீதிகளிலும் பெண்கள் ஒரு தொழிலாக பூமொட்டுகளை மாலைகளாகக் கட்டி விற்பார்கள். கூடுதலானோர் அதிகாலையில் அங்கு சென்று இரண்டு அல்லது மூன்று அடி நீளமான பூமாலை வாங்கி வீடு சேர்ந்து மனைவியின் கூந்தலில் வைப்பது வழமை. கல்யாண வைபவங்களில் திருமணத் தம்பதிகள் கழுத்தணிகளாக பூமாலையினைப் போட்டு அவரவர் உறவினை மேம்படுத்துவது இன்னொரு கைங்கரியமான நிகழ்ச்சியாகும். கூடுதலாகத் தனிமொட்டுகள் மாலை கட்டுவதற்குப் பயன்படுத்துவர். இதோடு மட்டுமல்லாமல், பூச்செண்டுகள் கட்டுவதற்கும் கோயில்களில் பூச்சரங்கள் கட்டுவதற்கும் பூமொட்டுகள் பயன்படுத்தப்படும். பூக்கள் மிகவும் மென்மையானவை. வெப்பநிலை குளிர்ச்சியாக மாறும்போது, மொட்டுகள் இரவிலேயே மலர்கின்றன.

### பசளை

செடியை சாடிகளில் பதிக்கும்போது, விசேடமான பசளைக் கலவை அதாவது இயற்கை



வளமுள்ள போதிய பீற் மொஸ் சிறந்ததாக அமைகின்றது. ஒருபோதும் மற்றைய கலவைகளை உபயோகிக்கக் கூடாது. அப்போது வேர்கள் அழுகி விட வாய்ப்பு உண்டு. எப்போதும் கூடிய பசளை கெடுதலை விளைவிக்கும். சாடிகளில் வளர்க்கும் செடிகளுக்கு மெதுவாக உறுஞ்சிச் செல்லும் பசளை நன்றாக இருக்கும். குளிரான நேரங்களில் குறைவான பசளை போதுமானது. தண்ணீர் விடுவது மட்டுப்படுத்தவேண்டும். ஒளி கிடைக்கக்கூடிய இடங்களில் சாடியை வைக்க வேண்டும். வருடாவருடம் செடி நன்கு தழைத்துச் செளிப்பாக வளரும்போது அதனைப் பெரிய சாடியில் மாற்றிவிட வேண்டும்.

### இனவிருத்தி

சாடியில் செடியை மாற்றும்போது சிலவேளைகளில் வேர்க்குமிழானது அநேக வேர் முடிச்சுக்களை உடையதாயிப்பதைக் காணலாம். அப்போது பக்கங்களில் சிறிது வெட்டி புதிய வேர்களை உண்டுபடுத்துவதற்கு வாய்ப்பை அளிக்கலாம். பின்னர் புதிய செடி தோன்றும்போது அதனை வேறுபடுத்தலாம். தடித்த தண்டுகளை வெட்டி ஊன்றியும் புதிய செடியை விருத்தி செய்யலாம்.

### நீரின் அவசியம்

நிலம் ஈரமாகவிருந்தால் நீரின் அவசியம் முக்கியமானதல்ல. குளிரான காலங்களில் கிழமைக்கு ஒரு தடவை நீர் விட்டால் போதும். எனவே நீரின் தேவை அளவோடு இருக்க வேண்டும். காற்றோட்டமுள்ள நிலம் செடிகளுக்கு உகந்ததாக இருக்கும்.

### உபயோகமான பொருள்கள்

பிரபலிக்கமான நறுமணமுள்ள ஜெஸ்மின் எண்ணெய் சில இனங்களிலிருந்து (Jesmine grandiflora, Jesmine sambac) தயாரிக்கப்படுகின்றது. வாசனைப் பொருள், சவர்க்காரம், அழகுசாதனம், எண்ணெய் வகைகள் போன்றவையும் பயனுள்ள சிலதாகும். ஜெஸ்மின் தேயிலை இன்னொரு முக்கிய உற்பத்தியாகின்றது.

### தாவரத்தின் தாக்கங்கள்

கூடுதலாக நீர் அல்லது பசளை இருக்குமாயின் இலைகள் மஞ்சள் நிறமாக மாறுவதை அவதானிக்கலாம், மொட்டுகள் விரியாமல் உலிர்கின்றன. மிகக் குறைவாக நீர் கிடைக்கின்றபோது இலைகளின் பச்சைநிறம் மங்கலாகின்றது, இலைகளின் விழும்புகள் கருகுகின்றன. பசளை இல்லாதபோது அல்லது சூரியவொளி கிடைக்காதபோது பூக்கள் தோன்றமாட்டா. இடையிடையே கிளைகளை ஒழுங்கான முறையில் வெட்டி அழகுபடுத்தினால் செடியானது குளிர்மையாகத் தோற்றமளிக்கும். ஈரத்தன்மை கூடுதலாக இருக்கும் வேளைகளில் வெண்ணிறமான பாசிகள் தண்டுகளைத் தாக்காமல் பாதுகாக்கவேண்டும்.

### சில முக்கிய இனங்கள்

| | |
|---|---|
| Jesmine dichotomum | (Goldcoast Jesmine) |
| Jesmine grandiflora | (Spanish Jesmine) |
| Jesmine sambac | (Arabian Jesmine) |
| Jesmine officinale | (Common Jesmine) |
| Jesmine mesnyi | (Japanese Jesmine) |

segari@thaiveedu.com

■ ■ ■

Family Musaceae:

# வாழைமரம்

**(Botanical name : Musa paradisiaca Eng.Name : Banana)**



வாழை மரம், குடும்பம் மியூசேசியைச் (Family Musaceae) சேர்ந்தது. பழத்தின் பெயரால் அழைக்கப்படும் வாழை, பப்போ நியூ ஜினி என்ற தேசத்தில் முதல்முதலாக வீடுகளில் வளர்க்கப்பட்டது. பின்னர் இது ஆசியா, தென் அமெரிக்கா வெப்ப மண்டலங்களில் பழத்திற்காக வியாபாரநோக்கில் விஸ்தீரணமுள்ள பரப்பளவில் பயிரிடப்படுகின்றது. இதில் பல இனங்கள் காணப்படும். வாழை, ஓரளவு மரமென்று சொல்லக்கூடிய வகையில் திடமானதும் சாதாரண உயரமாகவும் வளருகின்றது. உண்மையில் தண்டு பல மென்மையான மடல்களால் மூடப்பட்டு ஒரு போலியான தண்டாகக் காட்சியளிக்கின்றது. இலைகள் 3-4மீ நீளமுடையதாகவிருக்கும். இறைவழிபாடுகளிலும் ஏனைய வைபவங்களிலும் கும்பம் வைப்பதற்கு பாவிப்பார்கள். பண்டுதொட்டு வைபவங்கள் எல்லாவற்றிலும் உணவு இலையின்மேல் போட்டு விருந்தோம்பல் நிகழ்வதையும் காணலாம்.

இதன் பூக்கள், இருமல், வயிற்றோட்டம் போன்றவற்றிற்கும் சமைக்கப்பட்ட பூக்கள் சலரோகத்தைக் கட்டுப்படுத்தவும் உதவுகின்றது. வேர்கள் வயிற்றுக் கோளாறுகளுக்கு பயன்படும். வித்துக்கள் நாசியால் நீர் வடிதலைப் போக்கும். காய்கள் கீழ்நோக்கி வளரும். குலைகளில் பல வரிசைகளில் 15-20 காய்கள் கொண்ட தொகுதிகளாக ஏறக்குறைய 5-20 வரிசைகளில் காணப்படும். பழுத்த ஒவ்வொரு பழமும் பிரிக்கக்கூடிய தோலினால் உட்புறம் சதையுள்ள இனிமையான பகுதிளையுடையதாகக் காணப்படும். விளையாட்டு வீரர்களுக்கு, உலகில் முதல்தரமான பழமாக விளங்குகிறது. பழத்தில் போதிய கனிச்சத்து A B2 B3 B5 B6, C, கனிப்பொருள் கல்சியம், பெற்றாசியம், இரும்பு, பொசுபரஸ் உண்டு. Sucrose, Fructose, Glucose ஆகிய மூன்று சர்க்கரைகளும் பழத்தில் காணப்படும். காய்ப்பதத்தில் சிறிய துண்டுகளாக வெட்டி உலரவைத்து சிப்ஸ் ஆக பாவிப்பார்கள். உலரவைத்த காய்கள் அரைக்கப்பட்டு மாவாக உணவில் சேரப்பார்கள். வாழைநார் கயிறாகத் திரித்து நூலாகப் பயன்படுகின்றது. வாழைப்பொத்தி கறியாகச் சமைப்பதற்கு பயன்படும். வாழையைச் சுற்றி பல முளைகள் (Suckers) வெளித்தோன்றி, வாழையடிவாழையாக இனத்தை விருத்தி செய்கின்றன.




Tel: 416-836-1946, 416-423-5057
40 Crockford Blvd., Scarborough, ON, M1R 3C3
24 hrs Service
SAM Mobile Mechanic
K.S.TRUCK & CAR TRAILER REPAIR
All Automotive Repairs
Specializing in Mechanical, Body, Electrical Repairs & Wheel Spring


அமைதியான
வாழ்க்கைக்கு
ஓர் அருமையான
தீர்வு காப்புறுதி
Life Insurance • Critical Insurance • Long Term Coverage • Disability Insurance
Final Expenses • Dental & Hospital Expenses • Travel Insurance
All your Insurance Needs
Thaya Balan
Licensed Insurance Broker
Dir: 416.831.4725
Morning Star Financial Service
5050 Dufferin St., Suite 218, Toronto, ON M3H 5T5
Tel: 416.661.9155 ext. 340
INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES INC.
MEDAVIE BLUE CROSS
TRANSAMERICA REINSURANCE
Canada Life
Manulife Financial
RBC Insurance
digi


வீடு வாங்க விற்க...
$514.900
Keele & Mcnaughton
3+1 Bedrooms 4 Washroom
Finished Basement W/O
$499,900
LAND
St Clair/Pharmacy
"சேமிப்பின்
அடையாளம்
அழகானதோர் வீடு"
$325.000
McCowan / Denision
3 Bedrooms 2 Washroom
Finished Basement w/o
$340.000
McCowan / Denision
4+2 Bedrooms 4 Washroom
Finished Basement w/o
Kuga Raveendrarajah
Broker
Direct: 416-843-8585
Mathan Selvendarakumaran
Sales Representative
Direct: 416-625-2870
வீடு வாங்க விற்க அல்லது அது சம்பந்தமான விபரங்களுக்கும் குறைந்த வட்டி விகிதத்தில் மோட்கேஜ் செய்யவும் நட்புடன் அழையுங்கள்
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6
Bus: 416-298-3200
*Independently Owned and Operated, Realtor

# நாளுக்கு ஒரு நன்மை

நான் அப்போது பொஸ்டனில் இருந்தேன். எங்கள் வீட்டில் இரண்டு விதமான ஆட்கள் இருந்தார்கள். உட்கார்ந்து வேலைசெய்து-விட்டு நின்று இளைப்பாறுபவர்கள் நின்று வேலை செய்துவிட்டு உட்கார்ந்து இளைப்-பாறுபவர்கள். நான் மூன்றாவது வகை. நின்று இளைப்பாறிவிட்டு உட்கார்ந்து இளைப்பாறுபவன்.

அப்படியிருக்க அன்று அதிகாலை சூரியன் எழும்ப முன்னர் நான் எழும்பிவிட்டேன். கதவை யாரோ தட்டும் சத்தம் கேட்டது. அந்த நேரத்தில் யார் தட்டுவார்கள் என்று நான் யோசிக்கவில்லை. திறந்துவிட்டேன். பார்த்தால் என்னிலும் உயரமான ஒரு whitetail deer. ஆண் மான் என்றபடியால் இரண்டு பக்கமும் கிளைவிட்டு பரந்த கொம்-புகளை தூக்கமுடியாமல் தூக்கிக்கொண்டு நின்றது. நான்கு கால்களையும் சரிசமமாக ஊன்றி பக்கவாட்டில் நின்று முகத்தை மாத்திரம் திருப்பி என்னை பார்த்தது. வீட்டு அபாய மணியை அணைக்க மறந்துவிட்ட-தால் அது அலறத்தொடங்கியது. வீட்டில் அன்று தூங்கிய அத்தனை நின்று இளைப்-பாறுபவர்களும், உட்கார்ந்து இளப்பாறுபவர் களும் ஓடிவந்தார்கள். அப்ஸராவும் ஓடிவந்து என்னைக் கடந்து போனாள். நான் அவளைத் தூக்கிய பிறகும் அவள் கால்கள் ஓடிக்-கொண்டிருந்தன. இந்தச் சத்தத்திலும் கலவ-ரத்திலும் மான் துள்ளித் திரும்பி ஓடிவிட்டது. அபாய மணியை அணைத்துவிட்டு மற்றவர்கள் திரும்ப படுக்கைக்குப் போய்விட்டார்கள். அப்ஸரா மாத்திரம் என்னுடன் தங்கினாள்.

அவளுக்கு வயது ஐந்து. அறிவாளி. பிரச்சி-னைகள் என்றால் நான் ஆலோசனை கேட்பது அவளிடம்தான். எதற்காக மான் வந்து கதவை தட்டியிருக்கும் என்றேன். அது திரும்பி ஓடி விட்ட துக்கம் என்னிலும் பார்க்க அவளுக்கு அதிகம். கண்களில் நீர் தளும்பி நின்றது. வீட்டுக்கு பின்னால் இருக்கும் காட்டில் பல மான்கள் வாழ்ந்தன. அவ்வப்போது அவை வரும் ஆனால் கதவை தட்டுவதில்லை. அப்ஸரா யோசித்துவிட்டு காலை வணக்கம் சொல்வதற்காக இருக்கலாம் என்றாள். நான் சரி அப்படித்தான் இருக்கும் என்று சொல்லி சிரிப்பு காட்டினேன். அவளும் சிரித்தாள். வந்த கண்ணீரைக் காணவில்லை. எப்படியோ கண்ணீரை கண்களால் உறிஞ்சி உள்ளே இழுத்துவிட்டாள்.

பெற்றோர் தூங்கும்போது முழு வீடும் அவளுக்குத்தான் சொந்தம். "இன்று என்ன நல்வினை?" என்றாள். பூஞ்செடிக்கு தண்ணீர் ஊற்றலாம் என்று சொன்னேன். அவள் சின்னத் தலையை ஆட்டிவிட்டு போனாள். நாளுக்கு ஒரேயொரு நன்மை செய்தால் போதும் என்பது அவள் கற்றுக்கொண்டது.

நான் சிறுவயதில் படித்த பள்ளிக்கூடத்தில் ஒரு வாத்தியார் படிப்பித்தார். காந்தி வாத்தி யார் என்று பெயர். ஐந்தடி நாலு அங்குலம் உயரம் இருப்பார். மேல்சட்டை அணிய-மாட்டார். இரண்டே இரண்டு வேட்டிகள் அவரிடம் இருந்தன. ஒன்று கிழிந்தால்தான் இன்னொரு புதிசு வாங்குவார். காந்திபோல ஒரு போர்வைதான். உரத்துப் பேசத் தெரி-யாது. சிரிக்கும்போதுகூட "ஹி ஹி" என்று இரண்டு ஸ்வரத்தில் மட்டும் சிரிப்பார். காந்தி வைத்திருந்ததுபோல உயரமான தடியை அவர் வைத்திருக்கவில்லை. மற்றும்படிக்கு காந்தியைப் போலவே நடந்துகொண்டார். அவர் என் அண்ணனைப் படிப்பித்தார் தங்-கையை படிப்பித்தார் தம்பியை படிப்பித்தார். ஆனால் என் வகுப்பை அவர் படிப்பிக்கவே இல்லை. ஆனாலும் எனக்கு அவரிலே பிரியம் இருந்தது. அவர் அந்த வயதில் எனக்கு சொன்னது "ஒரு நாளைக்கு ஒரு நன்மை செய்தால் போதும்" என்பது. அது சொல்லி பல வருடங்களாகிவிட்டது என்றாலும் அதை இன்னும் அவ்வப்போது நான் கடைப்பிடித்து வந்தேன். அப்ஸராவுக்கும் சொல்லியிருந்தேன். பெரிதாக ஒன்றும் இல்லை. பெரியவர்களுக்கு வணக்கம் சொல்வது, அஞ்சல் பெண்ணுக்கு நன்றி கூறுவது, முன்பின் தெரியாத ஒரு-வரைப் பார்த்து முறுவல் செய்வது. அவ்வளவு தான். அப்ஸரா ஒவ்வொரு செடியாக தண்ணீர் ஊற்றி வந்தாள். செடிக்கு போன தண்ணீரிலும் பார்க்க வெளியே நீர் பாய்ந்து உற்சாகமாக ஓடிக்கொண்டிருந்தது.

இரண்டு நாட்களுக்கு முன்னர் என் நண்பர் தொலைபேசியில் அழைத்திருந்தார். ஏதோ பேச்சில் காந்தி வாத்தியாருடைய பெயர் வந்தது. அவரும் மனைவியும் கஷ்டத்தில் இருக்கிறார்கள் என்றார். எனக்கு காந்தி வாத்தியாருடன் 50 வருடங்களுக்கு மேலாக தொடர்பே இல்லை. எனினும் இன்றைய என் நன்மை இதுதான் என்று தீர்மானித்து நண்ப ரிடம் முகவரி பெற்று காந்தி வாத்தியாருக்கு

> "ஒரு நாளில்,
> ஆறு மணி
> சாப்பாட்டுக்காக
> உழைக்கவேண்டும்.
> ஆறு மணி
> சுயகருமங்களுக்காக,
> ஆறு மணி
> நித்திரைக்கு,
> மிகுதி ஆறு மணி
> நாட்டு மக்களுக்கு
> சேவைசெய்வதற்கு".

என்னால் இயன்ற சிறு தொகை பணம் அனுப்பிவைத்தேன். இங்கே சிறுதொகை ஆனால் இலங்கையில் அது பெரும் கொடை. அனுப்பியதுடன் அதை மறந்துபோனேன்.

ஆனால் அவர் பற்றிய சின்னச் சின்ன சம்பவங்களை மறக்க முடியவில்லை. நான் புதுப் பாடப் புத்தகம் வாங்கியதும் அதற்கு மாட்டுத்தாள் கடதாசியில் உறைபோட்டு கொண்டுபோய் என்னுடைய பெயரை எழுத காந்தி வாத்தியாரிடம் கொடுப்பேன். புத்தகங்-களில் பெயர் எழுதித் தருவது அவர்தான். அவர் என் பெயரை நான் எதிர்பார்த்த மாதிரி முன்பக்கத்திலோ, மட்டையிலோ எழுதாமல் இருபதாம் பக்கத்தில் எழுதினார். ஏன் என்று கேட்க பதில் சொல்லவில்லை ஆனால் "புத்தகம் பத்திரம்" என்றார். அப்பொழுது எங்கள் பள்ளிக்கூடத்தில் புத்தகங்கள் களவு போய்க்கொண்டிருந்தன. இரண்டே இரண்டு நாளில் என் புத்தகமும் களவு போனது. நான் காந்தி வாத்தியாரிடம் போய் முறைப்பாடு செய்தேன். அங்கே படிப்பித்த எல்லா வாத்தியார்களிலும் இவரிடம் தான் பிரம்பு என்ற பொருள் இல்லை, அடிக்கவும் மாட்டார். ஆனாலும் இவரைத்தான் நான் தெரிவு செய்தேன்.

மாணவர்களிடம் அவர் கேட்கும் முதல் கேள்வி "இன்று என்ன நன்மை செய்தாய்?" ஒரு நாளைக்கு ஒரு நன்மை என்பது அவர் உபதேசம். ஒரு மாணவன் "ஏன் சேர் இரண்டு நன்மை செய்யக்கூடாதா?" என்று கேட்டான். அவர் "அது பேராசை, ஒரு நாளைக்கு ஒன்று போதும்" என்பார்.

காந்தி வாத்தியார் எங்கள் வகுப்புக்குள் நுழைந்து எல்லோருடைய புத்தகங்களையும் வாங்கி ஒற்றையை தட்டிப் பரிசோதித்த பின்னர் திருப்பி கொடுத்துவிட்டு போனார். பள்ளிக்கூடம் முடிந்த பிறகு என்னையும், எப்பொழுதும் வகுப்பில் கடைசி வாங்கில் குடியிருக்கும் கிருட்டிணபிள்ளை என்பவனையும் தன் வகுப்பறைக்கு கூப்பிட்டார். கிருட்டிண பிள்ளை உயரமானவன். ஒரு கண்ணாடி யன்னலுக்கு பின்னால் நின்று முகத்தை அழுத்திப் பார்ப்பதுபோல சப்பையான முகம். அவன் முன்னாலே ஏதோ பரிசு வாங்கப் புறப்பட்டதுபோல நடந்துபோக நான் பின்னால் போனேன். அவனுடைய புத்தகத்தில் இருப-தாம் பக்கம் கிழிக்கப்பட்டிருந்தது. அந்தப் புத்தகத்தை எடுத்து காந்தி வாத்தியார் என்னிடம் தந்தார். அவனுக்கு ஒரு புதுப் புத்தகம் தன் காசில் வாங்கிக் கொடுத்தார். கிருட்டிணபிள்ளை ஓர் அடி பின்னுக்கு நகர்ந்து விம்மத் தொடங்கினான். காந்தி வாத்தியார் சொன்ன அறிவுரை இதுதான். "நீ படிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டது நல்லது. ஆனால் களவெடுத்ததுதான் பிழை." அங்கே நடந்த விசயம் எங்கள் மூவரையும் தவிர வேறு ஒருவருக்கும் தெரியாது.



அவர் வெள்ளிக்கிழமைகளில் முழு நாளும் உபவாசம் இருப்பது மாணவர்களுக்கு தெரி-யும். "பசிக்காதா சேர், உங்களுக்கு நோய் பிடிக்காதா?" என்று கேட்பார்கள். அவர் சொல்வார், போன சனிக்கிழமையில் இருந்து அடுத்த வெள்ளிக்கிழமை நான் விரதம் என்பது எனக்கு தெரியும். என் வயிற்றுக்கும் தெரியும். அது தன்னைத் தயார் செய்துவிடும். எதிர்பார்ப்புத்தான் பசியைக் கொண்டுவரு-கிறது. எங்கள் ஊரில் வரும் நோய்களில் பாதிக்குமேல் தண்ணீரால் வருபவை. தண்ணீரைக் காய்ச்சிக் குடியுங்கள், பாதி நோய் போய்விடும் என்பார். அனைத்து மாணவர்களும் வீடுகளில் போய் தங்கள் தாய்மார்களை தொந்திரவு செய்வார்கள். தண்ணீரைச் சுடவைத்தால்தான் குடிப்பேன் என்று அடம் பிடிப்பார்கள். அடுத்தநாள் பெற்றோர்கள் தலைமையாசிரியருக்கு முறைப்பாடு கொண்டுவருவது நிச்சயம். விடுமுறை நாட்களில் மாணவர்களைச் சேர்த்துக்கொண்டு கிராமத்தில் சிரம தானம் செய்வார். வீதிகளைக் கூட்டி சுத்தமாக்குவது, தண்ணீர் தேங்கி நாற்றம் வீசும் பள்ளங்-களை மண்போட்டு நிரப்புவது போன்ற பணிகள். எங்கள் கிராமத்தில் அவருக்கு பெரும் மரியாதை இருந்தது.

காந்தி வாத்தியாருக்கு கடிதம் போட்டு பல வாரங்களாகியும் பதில் இல்லை. அவர் இருப்பது திருகோணமலையில். அங்கே நிலவரங்கள் சரியில்லை என்று தமிழ் தினசரிகளில் செய்திகள் வந்த வண்ணம் இருந்தன. ஆள் கடத்தலும் குண்டு வெடிப்-புகளும் குறைந்தபாடில்லை. கடிதம் போய்ச் சேர்ந்ததோ என்றுகூடத் தெரியாது. ஒரு பதில் வந்தால் நிம்மதியாக இருக்குமே என்று நினைத்துக்கொண்டேன்.

ஆறு மாதம் கழித்து அப்ஸரா ஒரு நீலநிற வான்கடிதத்தை தூக்கிக்கொண்டு வந்து அஞ்சல் பெண் தந்ததாகச் சொல்லிக் கொடுத்தாள். அஞ்சல் பெண்ணுக்கு நன்றி சொன்னாயா என்று கேட்டேன், சொன்னேன் என்றாள். அன்றைய நாளின் நன்மை அவளுக்கு முடிந்துவிட்டது. வான்கடிதத்தை பிரிப்பதற்கு நிறைந்த பொது அறிவும், வரை கணித திறமையும், பொறுமையும் தேவை. சிறு கவனயீனமும் கடிதத்தை மூன்று துண்டு-களாகப் பிரித்துவிடும். நான் மிகக் கவனம் செலுத்தி முழுக் கடிதத்தையும் திறந்து விட்டேன்.



அ.முத்துலிங்கம்
muthu@thaiveedu.com

காந்தி வாத்தியார்தான் எழுதியிருந்தார். ஒரு 15 வயதுப் பெண்ணின் கையெழுத்துப் போல ஒரு எழுத்தோடு ஒன்று முட்டாமல் வட்ட வட்டமான எழுத்துக்கள். "அன்புள்ள ஐயா" என்று கடிதம் தொடங்கியதும் எனக்கு துணுக்கென்றது. நான் என்னை யாரென்று அவருக்கு நினைவூட்டுவதற்காக என் தங்கை-யைப் பற்றியும், தம்பியைப் பற்றியும், அண்ணனைப்பற்றியும் எழுதியிருந்தேன். நான் அவரிடம் "சத்திய சோதனை" புத்தகம் பரிசு பெற்றதையும் ஞாபகப்படுத்தியிருந்தேன். "தங்களுடைய கடிதம் எனக்கு பெரிய மகிழ்ச்சியையும், ஆனந்தத்தையும் தந்தது. அத்தோடு அதிசயமாகவும் இருந்தது. தங்கள் கடிதத்தை என் மனைவிக்கு வாசித்துக் காட்டினேன். அவர் மிகவும் சந்தோசப்பட்டார். இரண்டு நாள் கழித்து அவர் சிவபதம் அடைந்தார். அவருக்கு வயது 84. எனக்கு 90 நடக்கிறது." இப்படி தொடர்ந்து அவர் பல விசயங்களை நீலக் கடிதத்தின் ஓர் ஓரத்தில் இருந்து மறு ஓரம் வரை நெருக்கி நெருக்கி, கடிதத்தின் முழுப்பெறுமதியையும் பெறும்விதமாக எழுதியிருந்தார். தான் வெள்ளிக்கிழமைகளில் நீராகாரம் மட்டுமே அருந்துவதாகவும் கடந்த 65 வருடங்களில் ஒரு நாள்கூட அதில் தவறியதில்லை என்றும் எழுதியிருந்தார். நடப்பது கஷ்டமாக இருக்-கிறதாம். யாரோவுடைய சைக்கிள் பாரிலும், மோட்டார்சைக்கிள் பின் சீட்டிலும் அமர்ந்து வெளியே போகும்போது பயணம் செய்வதாக-வும் தூர இடம் என்றால் ஓட்டோவில் போவதாகவும் கடிதத்தில் கூறியிருந்தார்.

"ஒரு நாளில் 24 மணி. ஆறு மணி சாப்பாட்டுக்காக உழைக்கவேண்டும். ஆறு மணி சுயகருமங்கள். ஆறு மணி நித்திரை. ஆறு மணி நாட்டு மக்களுக்கு சேவை." சனங்களுக்கு சேவை செய்யாத ஒவ்வொரு மணி நேரமும் கடவுளிடமிருந்து தூரமாகவும், மரணத்துக்கு கிட்டவாகவும் தான் நகர்வதை உணருவதாக அவர் சொன்னது நினைவுக்கு வந்தது. அவருடைய இந்தக் கொள்கையில் கடந்த 65 வருடங்களில் ஒரு மாற்றம்கூட இல்லை என்பதையும் எனக்கு தெரிவித்-திருந்தார்.

காந்தி வாத்தியார் கடிதத்தை இப்படி முடித்திருந்தார்.
"தாங்கள் மனமுவந்து மன நிறைவோடு அனுப்பிய பணம் வங்கிமூலம் பெற்றுக் கொண்டேன். நீங்கள் உங்களைப் பல வகையிலும், பல நிகழ்ச்சிகளிலும் நினைவூட்டி எழுதி அறிமுகப்படுத்தியிருந்தீர்கள். ஆனால் நீங்கள் யாரென்று எனக்கு ஞாபகமில்லை. என்னை மன்னியுங்கள்."

muthu@thaiveedu.com

■ ■ ■

# இங்கிதம் தெரியா...

19ம் பக்கத் தொடர்ச்சி...

வேதனையை சொல்லி ஆறுவதற்கு. கோயிலில் உள்ள சொரூபத்தில் உயிர் இருந்ததோ இல்லையோ மனதுக்கு ஆறுதல் உண்டு. எனவே நீங்கள் புத்தரைப்போல் இருக்கப் பழக வேண்டும். அவருக்கு சொல்ல விருப்பமில்லாவிட்டால் வற்புறுத்த வேண்டாம். மௌனம் எனும் பாசையினால் அமைதியை தரலாம். ஒன்றும் சொல்லவராவிட்டால் பிதற்றாமல் அவர்களின் கண்களை நேரில் பார்த்து, கைகளை மெதுவாக அழுத்துவதாலேயே உங்கள் கரிசனையை அன்பை தெரிவிக்கலாம்.

எப்படி மரணித்தார் என்பதை சொல்ல விடுங்கள். பொதுவாக வேதனை அனுபவிப்பவர் மீண்டும் மீண்டும் அந்த இழவுச் சம்பவத்தைப்பற்றி பிரஸ்தாபிக்க வருவார். அதில் தவறு ஒன்றுமில்லை. அதுவும் மிகவும் துல்லியமாக விபரங்களை தரமுன்வருவர். அதனைக் கேட்டுக்கொண்டு தெரியுமே, தெரியுமே என்று சொல்லாமல் அமைதியாக இருங்கள்.

மரணத்தை சிறுமைப்படுத்தாமல் அவர்களுக்கு நம்பிக்கையை கொடுங்கள். அவர்கள் உணர்வுகளுக்கும் அதேவெளை எனக்குத் தெரியும் என்று சொல்லாதீர்கள். உங்களுக்கும் அண்மையில் ஏதாவது அனர்த்தம் ஏற்பட்டிருந்தால் அதனை நினைவுகூறி நீங்களும் இப்படியான உணர்வுகளால் வேதனைப்பட்டதை பிரஸ்தாபிப்பதால் ஒரு பாலத்தை ஏற்படுத்தலாம்.

### சொல்லக்கூடாத விடயங்கள்.

ஒருபோதும் உங்களுக்கு எப்படி இருக்கிறது என்று விளங்குகிறது என்று சொல்லாதீர்கள். ஆனால், எப்படி இருக்கிறீர்கள் என கேட்கலாம்.

கடவுளின் திட்டப்படி தான் நடக்கிறது என்று சொல்லாதீர்கள். வேதனையில் இருப்பவருக்கு அப்படி திட்டம் ஏதும் இருப்பதாக கடவுள் சொல்லியிருக்கமாட்டார்.

நீங்கள் எவற்றிற்கு நன்றியாய் இருக்க வேண்டும் என்று சொல்லாதீர்கள். அவர்களுக்கு தெரியும் எத்தனையோ விடயங்களுக்கு நன்றியாய் இருக்க வேண்டும் என்று. ஆனால் அவை இப்போ முக்கியமில்லை.

அவர் இதிலும் நல்ல இடத்தில் இருக்கிறார் என்று சொல்லாதீர்கள். உங்கள் நம்பிக்கையை அவர் கொண்டவராயில்லாமல் இருக்கலாம். உங்கள் நம்பிக்கையை உங்களுடன் வைத்திருங்கள்.

நடந்தது நடந்துவிட்டது. இனி எதிர்காலத்தைப்பற்றியோசியுங்கள் என்று சொல்ல வேண்டாம். நீங்கள் சொல்லாமல் சொல்வது நடந்ததை மறந்துவிட்டு எதிர்காலத்தைப் பற்றி யோசியுங்கள் என்று. நீங்கள் இப்படி செய்யுங்கள் அல்லது இப்படித்தான் செய்ய வேண்டும் என்பதிலும் இதைப்பற்றி சிந்தித்தீர்களா அல்லது இதையும் சற்று சிந்தித்து பாருங்கள் என்று சொல்லுங்கள்.

### நீங்கள் செய்யக்கூடிய செயல்முறை உதவிகள்.

இவ்வளவு நேரமும் நாங்கள் மனதுக்கு அமைதியையும் ஆறுதலையும் தரும் விடயங்களை கவனித்தோம். இனிசெயல்முறையில் எப்படி அனுசரனையாக இருக்கலாம் என்று பார்ப்போம்.

வேதனையினை அனுபவித்துக்கொண்டிருப்பவர்க்கு உதவி கேட்பது கடினமாயிருக்கும். குறிப்பாக தான் மற்றவர்களுக்கு பாரமாக இருப்பதாக எண்ணலாம். அல்லது மனநிலை பாதிக்கப்பட்டநிலையில் உதவி கேட்காமல் இருக்கலாம். இப்படியானவர்களுக்கு குறிப்பிட்ட ஒரு விடயத்தை கூறி இதைச் செய்யவா என கேட்கலாம். உதாரணத்திற்கு நான் கடைக்குப் போகிறேன். உங்களுக்கு ஏதும் வாங்கிவரவேண்டுமா? அல்லாவிட்டால் இரவு சாப்பாட்டிற்கு தோசை செய்துள்ளேன் எத்தனை மணிக்குப்போல் கொண்டுவர எனக்கேட்கலாம்.

உங்கள் உதவிகள் தொடர்ச்சியாக இருக்குமானால் மிக நன்று. வேதனையில் இருப்பவர் உங்களை எதிர்பார்த்து இருக்கலாம். உங்களிடம் மீண்டும் மீண்டும் அவர் கேட்பதற்கு வேண்டி இருக்காது. இன்னுமொருவிடயம் நீங்கள் பொதுவாக என்ன செய்து தர முடியும் என கேட்கலாம். இப்படி கேட்பது வேதனையில் இருப்பவருக்கு உதவியை கேட்பதற்கு எளிதாகும்.

நாங்கள் செய்யக்கூடிய பல உதவிகள் உண்டு.

கடையில் சாமான் வாங்கிவரலாம்.

சில உணவு வகைகளை கொண்டுவரலாம். அநேகமானவர்கள் முதல் இரண்டுவாரங்களில் எப்படியாவது சாப்பாட்டை திணித்து விட்டு என்னுடைய பங்களிப்பு முடிந்துவிட்டது என்று இருப்பார்கள். இத்தகைய காலங்களில் பெருமளவு உணவு குப்பைத் தொட்டிக்குத்தான் செல்லும். எமது தாய்நாட்டில் ஒவ்வொருவரும் ஒரு நாளைக்கு உணவை கொண்டு தந்து இழவு வீட்டுக்காரருடன் இருந்து உண்டு, அவர்களுடன் மரணித்தவர் பற்றிய நினைவுகளை கதைத்து ஆறுதல் கூறி செல்வது வழக்கம். இன்று இதற்கு நன்றி கூறி இழவு வீட்டின் 31வது தினம் வீட்டில் ஒரு சடங்கு செய்து விருந்து படைப்பது எமது பண்டைய மரபு. ஆனால் இன்று இழவு வீடு நடந்தவுடன் கூடிய சீக்கிரமே பக்கத்திலுள்ள Takeoutஇல் சாப்பாட்டை வாங்கி இழவு நடந்தவீட்டு வாசலில் நின்று விட்டெறிந்து விட்டு அப்பாடா அந்த வேலை முடிந்தது என்று திரும்புவது வழமையாகிவிட்டது. இது மெத்தத் தவறு.

மரண வீட்டிற்கு தேவையான சடங்குகளை ஏற்பாடு செய்வதில் அனுபவமுள்ளவர்கள் உதவ முன்வரலாம். அதாவது Funeral parlour உடன் தொடர்பு கொள்வது போன்ற விடயங்கள்.

மரண வீடு நடந்தவர்களுடன் தங்கி நின்று தொலைபேசி அழைப்புகளை கவனித்து தகுந்த பதில் தருவதால் அவர்களுக்கு உதவியாயிருக்கலாம்.

காப்புறுதி, மற்றும் ஆவணங்கள் நிறப்புவதில் உதவி செய்யலாம்.

வீட்டுவேலைகள், துடைப்பது, துப்பரவாக்குவது, துவைப்பது போன்ற விடயங்களில் உதவியாயிருக்கலாம்.

பிள்ளைகளை கவனிப்பது, அவர்களை பள்ளிக்கு அழைத்துசெல்வது திரும்புவது போன்றவற்றில் உதவலாம்.

அவர்களை எங்கும் செல்வதானால் வாகனங்களில் அழைத்து செல்வதால் உதவலாம். அவர்கள் வீட்டு வளர்ப்பு பிராணிகளின் தேவைகளை கவனிக்கலாம்.

அவர்களுடன் அனுசரனையாளர் கூட்டங்களுக்கு உடன் செல்லலாம்.

அவர்களை அழைத்துக்கொண்டு வெளியில் நடந்துவரலாம்.

அவர்கள் கவனத்தை ஈர்க்கும் விடயங்களில் (படம் பார்ப்பது, பொழுதுபோக்கு விளையாட்டுக்கள்) பங்கு கொள்ளலாம்.

ஒரு முக்கிய விடயம்.....

வேதனை என்பது 30 நாட்களிலோ அல்லது ஓரிரு வருடத்திலோ முடிவது அல்ல. அவர்கள் மனதின் அடித்தளத்தில் இருந்துகொண்டே இருக்கும். எனவே கூலிக்கு மாரடிப்பவர்கள் போல் மறந்து விடாமல் தொடர்ந்து அவர்களுக்கு அனுசரனையாக இருப்பது அவர்களுக்கு ஆறுதலளிப்பதுடன் உங்களுக்கும் ஆன்ம திருப்தியைத் தரும்.

punithavel@thaiveedu.com

■ ■ ■



I'm here to get your mortgage smarter and faster.

உங்களுக்கு அதிக கடன் பளு இருந்தால் அனைத்தையும் குறைந்த ஒரு மாதக்கட்டணத்தில் கொண்டுவருவதுடன் உங்களுக்கு அதிக பணத்தையும் சேமிக்க உதவுவேன்.

**NO FEE FOR RESIDENTIAL MORTGAGES**

- Rate discount up to 3%
- Give me a call for free consultation
- Mortgages without no down payment

நீங்கள் வங்குரோத்துக்கு போயிருந்தாலும் நிராகரிக்கப் பட மாட்டீர்கள். யாருமே நிராகரிக்கப் படமாட்டார்கள் அனைவரும் தகுதியானவர்கள். குறைந்த வட்டி வீதத்தில் ஈட்டுக்கடன் பெற்றுக்கொள்ளவும், கடன்கள் குறித்த இலவச ஆலோசனைகளுக்கும் அனைவரதும் நம்பிக்கைக்கு பாத்திரமான அகிலா செந்திலை அழையுங்கள்

**Our interest rates starts from 0%**

- First-time Buyers
- Renewal
- Refinancing
- Pre-Approval
- Self Employed
- Bankruptcies
- Poor Credit
- New Immigrants
- Debt. Consolidation
- Construction Loans

invis

- **Residential**
- **Industrial**
- **Commercial**

**1st, 2nd, 3rd Mortgages**

வங்கி வட்டி வீதத்தை விட குறைந்தளவு வட்டி வீதம்

**மாற்றமடைந்திருக்கும் இன்றைய மோட்கேஜ் தேவைகளுக்கான ஆலோசனைகளுக்கு அழையுங்கள்**

When it comes to finding the Right Mortgage Solution to meet your needs, Please call **ME** befor making any **Decision!!!**

**After Approval**

**Joy is yours**
**Pride is ours**





**அகிலா செந்தில்**
**Akila Senthil**, *AMP*
*Lic: M08002166*
*Senior Mortgage Consultant,*
*Team Leader, Platinum Award Winner*
*A Challenging Prosperity Long Term Experienced Team Leader*

**Cell: 416.895.4321**

104-5770 Hurontario St., Mississauga, ON L5R 3G5
Fax: 905-283-3339, Web: www.mortgageprincess.ca, E-mail: akilasenthil@invis.ca
Head Office: Invis Inc., 100-480 University Ave., Toronto, ON M5G 1V2



**Middlefield and Finch**

5 Years New, Largest 3 Bedroom All Brick End Unit in The Complex, Avon Model with 1728 Sq.ft. plus Unspoiled Basement, Close to all Amenities plus 24 Hour TTC, Separate Shower Room in the Master Bedroom, R/I For Central Vac, 5 Appliances, CAC

**Price $ 319,000**





**Staines Road and Finch**

5 Years New 5 Bedrooms Detach Home, Pie Size Lot, Hardwood Floor in Main Floor, 2 car Garage, Separate entrance to Basement, 4 Appliances

**Price $ 379,000**

**விற்பனைக்கு...**

விற்பனைக்கான உங்களது வீட்டினை இங்கே காட்சிப்படுத்தி அதற்கான அதி கூடிய விலையினை பெற்றுக் கொள்ளுங்கள்.



**Brimley and Denison**

Lowest in the Market! Fabulous and Bright 3-Bdrm Home in a Great Neighbourhood. Close to School, TTC, Pacific Mall, Shopping and all other Amenities. Excellent Move-In Condition. No Sidewalk - 4 cars can be parked in the Driveway. Motivated Vendor! 4 Appliances, CAC

**Price $ 289,000**

**McCowan and Sheppard**



Approx. 1600 Sq. Ft. Spacious Suite, Well Managed Condo With Many Facilities. Close to 401, TTC, School. 24 Hour Security. Split Bedrooms. Separate Shower Stall and Tub Ensuite for Master Bedroom. 5 Appliances, CAC

**Price $ 189,000**

தொடர்புகளுக்கு

**V. Logan,** Broker
*Direct Line:*
**416-410-1620 (24hrs)**
vlogan599@yahoo.com



COLDWELL BANKER
*Exceptional Real Estate Services, Brokerage*
*3107 Sheppard Ave East*
*Toronto, ON. M1T 3J7 Office: 416-497-9794*


Thinking of Buying or Selling Real Estate
வீடு, வியாபாரம் வாங்க, விற்க....
RED CARPET. Royal Realty Ltd., Brokerage
INDEPENDENTLY OWNED AND OPERATED
Real Estate Service
Join the Winning Team for your Success !
Bus: 416-284-5555 (24Hrs.)
880 Ellesmere Road, Suite 204, Toronto, ON, M1P 2W6
New & Experienced Agents are Welcome To...
• Regular Sales Training from Experts • Referral leads
33 Years in Real Estate
Joan Miller
Broker of Record
21 Years in Real Estate
Karu Kandiah
Broker/ President
Selva Selvadurai**
Chandrakumar sornalingam**
Ranjan Francis Xavier*
Sajan Shanmuganathan*
Richard Napase Sison**
Killivalavan Chelliah*
Ragu Paramsothy*
Nathan Gurunathan**
Prapagharan Jeganathan*
Charles Deva*
Neelan Thambiah*
Joy Emmanuel*
Meera Ram*
Sabapathy Ganeshalingam*
Allan Dayta Abellanosa*
Kannan Kankesu**
Ananthi Selvasivam*
Balamohan Rajaratnam*
Vithiyatharan Thillainayagam*
Ken Seyon*
Ashok Ragupathy*
Jeya Arputharajah*
Birchmount/Ellesmere
OPEN HOUSE
Sun @ 2 - 4 pm
2+1 Bedrooms, 3 Washrooms
'Tridel Built' W/24 Hr Gate Security
About 1640 Sq Ft. Excellent Layout
Freshly Painted. High End Laminated Floors in Living & Dining Rooms, 4 Appliances
Asking $279,000
Dufferin/Major Mac
4+1 Bedrooms, 4 Washrooms
Exellent Thornbury Neighbourhood,
2046 Square Feet, Fernbrook
Built 2 Years New Home,
Double Door Entrance With Porch
Asking $460,000
Morningside/Mclevin
Just Listed!
$219,000
3 Bedrooms, 3 Washrooms
Affordable Price To Live In A Detached Like House, Close To Schools, Shopping
Eglinton / Kennedy
$339,900
3 Bedrooms,3 Washrooms
A Beautiful Open Concept Home In A Sought After Area. Close To Sq.One And Hwy 403
Morningside/Sewells
$229,000
3+1 Bedrooms, 4 Washrooms
Fabulous And Spacious 3 Bed-room Townhouse With Walkout Basement
Stains/Morningside
$399,000
4 Bedrooms, 3 Washrooms
Freshly Painted Spacious Good Size Family Home.Close To Schools Park & Shopping Centre
Kipling/Steels
$164,900
2 Bedrooms, 2 Washrooms
A Convenient Location, One Bus To Subway, Nicely Kept Unit,Many Upgrades
Mississauga
$379,900
4+2 Bedrooms, 4 Washrooms
Gorgeous Semi Detached With Great Layout. Well Maintained, Clean And Bright
Sewells/Sheppard
$249,000
3+1 Bedrooms, 2 Washrooms
Very Gorgeous,Clean & Well-Kept Detached 2-Storey Home With Finished Basement
Warden/Sheppard
$136,900
2 Bedrooms, 1 Washroom
Bright 2 Bedroom Corner Unit, Well Maintained, Renovated Kitchen And Washroom
Brimley/Eglinton
$289,900
3+1 Bedrooms, 2 Washrooms
Sun-Filled Home With Newer Windows, Mature Neighbourhood
Mccowan/Steeles
$179,900
2+1 Bedrooms, 2 Washrooms
Very Spacious Unit, One Of The Best Layout In The Building, Appx 1200Sq, Well Kept Unit
Dundas/Hwy 10
$176,900
2+1 Bedrooms, 2 Washrooms
Ready To Movie In!!**Fully Ren-ovated Unit, Approx.$10,000 Spent On Upgrades.
RED CARPET. Royal Realty Ltd., Brokerage
Real Estate Service
HOUSE SWEEPSTAKES
Enter for a Chance to Win a FREE House
No Purchase Necessary
CALL OUR OFFICE FOR DETAILS & YOUR NO OBLIGATION BALLOT...
Bus: 416-284-5555
880 Ellesmere Road, Suite 204, Toronto, ON, M1P 2W6
** Broker * Sales Representative
Shiva Shivaram*
Umananthini Rajendram*
Amar Qadeer*
Yen Ly-Chan*
Rebecca David*
Ken Muruganathan*
Mathy Mahendrarajah*
Babar Muhmmad Arifkhan*
Ponniah Balayogeswaran*
Gabriel (Roshan) Thavaratnam*
Saravanan Thangarasu*

# தமிழீழமும் கொசோவாவும்: விடுதலையை நோக்கி

தமிழீழ அரசும் கொசோவாவின் விடுதலையும் புலத் தமிழருக்கு முன்னுள்ள இன்றைய சவால்

கொசோவா 2008 பெப்ரவரி 17 ஆவது நா ள தனது சுதந்திரத்தை அறிவித்தது.

செர்பியாவிலிருந்து விடுவிக்கப்பட்ட தனது சுதந்திரத்தையே கொசோவா இவ்வாறு அறிவித்தது. செர்பியா என்பது முன்னாள் யுகோசுலாவியாவின் உடைந்த நாடுகளின் ஒரு பகுதி.

செர்பியர்களிடமிருந்து தாங்கள் விடுபடுவதாக கொசோவாவின் (அல்பானிய) மக்கள் 1990 செப்பரம்பர் 7 இலிலும் ஒரு தடவை அறிவித் திருந்தார்கள். யுகோசுலாவியா உடைந்த போது ஏற்பட்ட குழப்பநேரத்தில் இது அறி-விக்கப்பட்டது. இதனை வழக்கம் போல ஆளும் செர்பியர்கள் ஏற்றுக் கொள்ள வில்லை.

1996 இல் அல்பேனியர்களின் ''கொசோவா விடுதலை இராணுவம்'' உருவானது. அது செர்பியர்களையும் செர்பியாவுக்கு உதவிய அல்பேனியர்களையும் தாக்கத் தொடங்கியது. இது 1998இல் பெருமளவு போர் என்ற வடிவத்தை எட்டியது. அதுவரை பார்த்துக் கொண்டிருந்த மேற்கு நாடுகள் நேட்டோ படைகளாக கூட்டணி அமைத்து தலையிட்டன. 1998 - 1999இல் 79 நாட்கள் தொடர்ந்து பொழிந்த குண்டு மழை மூலம் செர்பியாவை அடக்கினார்கள்.

அப்போதைய அதிபர் மிலோசேவிச் (முன்-னாள் யுகோசுலாவியாவின் அதிபரும்) அய்.நா வின் கண்காணிப்பு படைகள் வருவதற்கும் கொசோவோவைப் பாதுகாப்புடன் கண்கா-ணிப்பதற்கும் அனுமதித்ததுடன் நேட்டோ நாடுகளின் தாக்குதல் நிறுத்தப்பட்டது. 1999 யூன் மாதம் அய்.நாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் இது செயற் பாட்டுக்கு வந்தது.

இதன் தொடர்ச்சியாக அய்.நாவின் கண் காணிப்பில் கொசோவாவில் படிப்படியான நாடாக உருமாறும் செயல் நிகழ்ந்து வந்த காலத்தில் கொசோவாவின் மக்களவையின் பெரும்பான்மை முடிவின் படி 2008 பெப்ரவரி 17இல் தாங்கள் ஓர் சுதந்திரமான நாடாக, நிலப்பகுதியாக கொசோவா மீண்டும் அறி-வித்துக் கொண்டது.

இதைத் தொடர்ந்த உலகின் வாதப் பிரதி-வாதங்களில் அய்.நாவின் பொதுச் சபை 2008 ஒக்ரோபர் 8இல் கூடியது. கொசோவாவின் சுதந்திரப் பிரகடனத்தின் நியாயத் தன்மை குறித்த கேள்வி முன்வைக்கப்பட்டது. 77 நாடுகள் கொசோவாவிற்கு ஆதரவாக வாக் களித்தன. 6 நாடுகள் எதிர்த்து வாக்களித்தன. 74 நாடுகள் கருத்து தெரிவிக்காமல் விலகி நின்றன.

ரசியா, இந்தியா, செர்பியா போன்றவை எதிர்த்து வாக்களித்தவை. பெரும்பாலான அய்ரோப்பிய வட்டகை மற்றும் வட அமெரிக்க நாடுகள் அதன் ஆதரவு நாடுகள் நோர்டிக் நாடுகள் போன்ற செர்பியாவை ஆதரித்தன.

கொசோவா இரண்டாவது தடவையாக தனது சுதந்திரத்தை உலகின்முன் வைத்தபோது சாக்குப்போக்காகச் சொல்லப்பட்ட இரு காரணங்கள் இன்று தமிழர் கருத்தில் கொள்ளத் தக்கன.

முதலாவதாக 1998-1999இல் நடந்த மனிதப் படுகொலைகளுக்கு நாம் காரணமல்ல என்று செர்பிய இராணுவம் - செர்பியா அறிவித்தது. இந்த நேரத்தில் இருந்த இடைக்கால கொசோவா அரசின் பாதுகாப்பு படையினர் அப்போதிருந்த ''கொசோவா விடுதலை இராணுவத்தை'' எப்படியோ தூண்டிவிட்டு அந்தக் கொலைகளைச் செய்திருப்பார்கள் என்றது செர்பியா.

இரண்டாவதாக நேட்டோ நாடுகள் செய்த குண்டு வீச்சுக்களில்தான் கொசோவாவின் மக்கள் பயந்து இடம் பெயர்ந்து ஓடினர் என்றும் செர்பியப் படைகளுக்கு பயந்து ஓட வில்லை என்றும் செர்பியா சொல்லியது.

ஆனால் இவற்றை மறுத்த ஓர் அய்ரோப்பிய பத்திரிக்கையாளர் சொல்கிறார்...

''நான் நேரடியாக பலவற்றைப் பாரத்திருக்-கிறேன். செர்பியர்கள் பொய்யுரைக்கின்றனர். ஓர் ஊரில் மட்டும் செர்பியப் படைகள் 40 ஆயிரம் அல்பானிய (கொசோவா)மக்களை சுற்றி வளைத்திருந்ததைக் கண்டேன்.'' என்கிறார்.

''பின்னாளில் அந்த இடத்தில்தான் ஆயிரக்-கணக்கில் மக்கள் கொன்று புதைக்கப்பட்ட புதைகுழிகள் கண்டு பிடிக்கப்பட்டன. எரிந்து புகைவரும் அல்பானியக் கிராமத்திலிருந்து வந்த மக்கள் பின்வருமாறு என்னிடம் கேட்டனர்''

''எங்கே அய்ரோப்பா? எங்கே அமெரிக்கா?''

நேட்டோ படைகள் கொசோவாவிற்காக குண்டு போடத் தொடங்குவதற்கு எழு மாதத்திற்கு இது முன்பு நடந்து.

அப்போது உலகம் கோசோவாவின் அல்பா-னிய மக்கள்படும் துன்பத்தைப் பற்றி கொஞ்சம்தான் அறிந்திருந்தது.

''கொசோவா விடுதலை இராணுவம்'' சம்மனசுகளினால் ஆனது அல்ல. சாதாரணர்-களின் ஓர் விடுதலை எழுச்சி இயக்கம்போல அதிலும் அறிவு சீவிகளும் விடுதலைப் போராளிகளும் தேசிவாதிகளும் விவசாயிகளும் அவற்றோடு கூடவே சில குற்றக்கூறுகளும் சேர்ந்ததாக இருந்தது. ஆனால் அவர்கள் பெரும்பான்மை மக்களின் விடுதலைக்கான, சுதந்திரத்துக்கான பிரதிநிதித்துவத்தைக் கொண்டிருந்தார்கள். அவர்களின் செயல்கள் அனைத்தும் பிற எல்லாவற்றையும் விடவும் செர்பிய அரசின் மோசமான கொடுஞ் செயல்களால் ஞாயப்படுத்தப்பட்டன.

தற்போதைய சோசோவா பிரதமர் கொசோவா விடுதலை ராணுவத்தின் முன்னாள் போராளி.

இந்த அய்ரோப்பிய பத்திரிக்கையாளர் பின் வருமாறு குறிப்பிடுகிறார்.

''அய்ரோப்பிய வட்டகை கோசோவாவவை ஆதரிக்கவேண்டும். அதற்காக மூன்று விட-யங்களை நினைவில் வைக்க வேண்டும்.''

- செர்பியர்கள் அல்பேனிய கொசோவோ மக்களின் மீதிருந்த பிடிமானத்தை இழந்து விட்டனர்.
- பெரும்பான்மையான அல்பானிய-கோசோ வோ மக்கள் சுதந்திரத்தை விரும்புகின்-றனர்.
- அவற்றையும் விட, இந்த அல்பானிய கோசோவோ மக்கள் சுதந்திரத்துக்கு மிகவும் தகுதியுடையவர்கள்.

தற்போது செர்பியர்கள் கோசோவாவின் சுதந்திர அறிவிப்புச் செல்லாது என்று சர்வ தேச நீதி மன்றத்தில் கடந்த ஏப்பிரல் 17இல் வழக்கு தாக்கல் செய்துள்ளனர். இதற்காக செர்பியர்கள் அய்.நாவில் போராடி அனுமதி பெற்றது வேறு விடயம்.

> “ உலகம்
>
> நம்மை உற்றுப் பார்க்கும் நிலையை ஏற்படுத்த
>
> அறிவுடையவர்களாய்
>
> நாம் செயற்படவேண்டிய நேரம்
>
> இதைவிட்டால் வேறு வரப்போவதில்லை. ”

இனி 15 பேர்களைக் கொண்ட நீதிபதிகள் அடங்கிய குழு இதனை விசாரித்து சொசோவாவின் அல்லபானிய மக்களின் சுதந்திரத்தின் தலைவிதியை அடுத்த இரண்டு ஆண்டுக்குள் அதாவது 2011இற்குள் தெரி-யப்படுத்துவார்கள்.

கோசோவாவின் பிரதமரும் முன்னாள் போராளியுமான கசிம் தாச்சி ''தீர்ப்பு என்னவாக இருப்பினும் நாங்கள் ஏற்கெனவே விடுதலை அடைந்துவிட்டோம். அவ்வளவுதான்'' என்றி ருக்கிறார்.

நீதி மன்றத்தில் செர்பியாவினால் எழுப்பப் பட்ட கேள்வி இதுதான்.

'அய். நாவின் கண்காணிப்பில் உலக நாடு களால் ஏற்படுத்தப்பட்ட கட்டமைப்பில் உருவான ஓர் இடைக்கால நிர்வாகம் (கோ சோவாவின் - அல்பானிய மக்கள்) தன்னிச்சை-யாக சுதந்திரம் அறிவித்தது சர்வதேசச் சட்டத்துக்கு அமைவானதா முரணானதா?' என்பதே அது.

''கோசோவா இன்று பகுதியாக அங்கீகரிக்-கப்பட்ட அல்லது பகுதியாக இயங்குகின்ற பிற நாடுகளின் பட்டியலில் சேர்ந்து கொண்டுள்ளது. தாய்வான், துருக்கியின் சைப்பிரஸ், அப்காசியா, தெற்கு ஒசற்றியா மற்றும் சிறிலங்காவின் வடகிழக்கில் இயங்கும் அரசான தமிழீழம் என்பனவே இந்த பிற நாடுகள்.'' (இந்தப் பகுதி என் சொந்தச் சரக்கல்ல. ஓர் செய்தி ஊடகத்தில் வெளி-வந்ததன் மொழிபெயர்ப்பே.-கட்டுரையாளர்)

இந்நிலையில்... தமிழராகிய நாம் இந்தப் பட்டியலில் இருக்கும் தாய்வான் எந்த நாட் டிலிருந்து பிரிய நினைக்கிறது என்பதனை இங்கு சிந்தித்து பார்க்க வேண்டும். கொசோவாவின் சுதந்திரத்தை ஏன் இந்தியா



மாமூலன்
maamulan@thaiveedu.com

எதிர்க்கிறது என்று எண்ணிப்பார்க்க வேண்டும்.

ஏன் இந்தியாவும் சீனாவும் வந்து தமிழீழத்தில் சதுராட்டம் ஆடுகின்றன என்று எண்ணிப் பார்க்க வேண்டும். தங்கள் எல்லைகளைப் பாதுகாக்கவேண்டி அவை நடத்தும் நாடகமே.

இதுவரை வெளிப்படையாக அறிவிக்காவிட்-டாலும் முழுமையான அரசாக தமிழீழ விடுதலைப் புலிகளால் இயக்கப்பட்டுக்-கொண்டிருந்த அரசை உலகு உன்னிப்பா-கப் பார்த்து வந்தது. இந்த தமிழீழம்தான் உலகில் மேற்சொன்ன நாடுகளின் பட்டியலில் பலவீனமான சர்வதேச ஆதரவைக் கொண்-டதும் பலமான எதிர்காலத்தைக் கொண்டது மாக அமைந்திருந்தது. அதை இல்லாதொ-ழிப்பது இந்தியா காஸ்மீரையும் தனது தென் கிழக்கிலிருக்கும் அசாம் மணிப்புரி முதலான மாநிலங்களையும் சீனா தாய்வான் மற்றும் உள்ளேயிருக்கும் பிரிவுகளையும் அடக்கிக் காத்துக்கொள்ள வகைசெய்யும் என்ற நிலை.

எம்மைக் கேட்க நாதியில்லை என்று நினைப்-பதனால் ஈழத்தில் நடக்கும் இன அழிப்பு. கொசோவாவில் நேட்டோ தலையிடுகை யில் 11 ஆயிரம் முதல் மேலும் பல ஆயிரம் மக்கள் கொல்லப்பட்டிருக்கலாம் எனப்பட்டது. இன்றுவரை புதைகுழிகளிலிருந்து 3500 வரையே கொல்லப்பட்டவர்களின் உடலங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. கண்ணுக்கு முன்னால் 6,000 தமிழ் மக்கள் கடந்த சில மாதங்களில் மடிந்தும் உலகம் கண்டு எம்மைக் கொள்-ளவில்லை.

கொசோவோ மக்களைப்போல ''எங்கே அய்ரோப்பா? எங்கே அமெரிக்கா?... எங்கே எமது கனடா?'' என்ற கேள்விகள் எழுகின்றன.

நாம் முன்னரேயே எமது சுதந்திரத்தைப் பிரகடனப்படுத்தியிருக்க வேண்டுமா? என்ற கேள்வியும் எழுகின்றது.

உலகம் நம்மை உற்றுப் பார்க்கும் நிலை-யை ஏற்படுத்த அறிவுடையவர்களாய் நாம் செயற்படவேண்டியநேரம் இதைவிட்டால் வேறு வரப்போவதில்லை.

கேட்க நாதியில்லை என்று அவர்கள் நினைப்பதை மாற்றவேண்டும். இறப்பவர்கள் எமது உடன்பிறப்புக்கள் என்பதை உணர வேண்டும். உலகுக்கு உணர்த்தவேண்டும்.

maamulan@thaiveedu.com

■ ■ ■

தாய்வீடு பத்திரிகை பற்றிய
விமர்சனங்களை
எதிர்பார்க்கின்றோம்.
விமர்சனங்கள் எம்மை ஓர்
ஆரோக்கியமான
பாதையில் இட்டுச்செல்லும்.

*E-mail:thaiveedu@gmail.com*
*Fax: 416-849-0594*
*Tel: 416-646-3422*

# ஓய்வூதியம் பற்றி...



கல்யாணி நாதன்
நிதி திட்டமிடல் ஆலோசகர்

சென்றமாதத் தொடர்ச்சி...

வரிச்சட்டங்கள் ஓய்வூதியத்தை தமது துணைவருடன் பகிர்ந்துகொள்ள சட்டம் இடம் கொடுக்கிறது. இதனைப் பயன்படுத்துவதால் பெருந்தொகைப் பணத்தை மீதம் செய்யலாம்.

முன்பு CPP/QPP கட்டுப்பணம் மட்டுமே கணவன்/மனைவிக்கிடையில் பகிர்ந்துகொள்ள சட்டம் இடம்கொடுத்தது. ஆனால், 2006ம் ஆண்டு முதல் ஓய்வூதிய வருமானத்தையும் கணவன்/மனைவிக்கிடையில் பகிர்வதற்கு சட்டம் இடம்கொடுக்கிறது. அவை எப்படிச் செயற்படும் என்பதை சற்று விளக்கமாகக் கவனிப்போம். இது பெருமளவு ஒருவரது வயதைப்பொறுத்து இருக்கும்.

65 வயதுக்கும் அதற்கு மேலானவரும், RPP, RRSP மற்றும் RRIF and LIF அல்லது DPSPயில் பெறப்படும் வருமானத்தில் பல இந்த சலுகைக்கு உட்படுத்தப்பட்டு உள்ளது. எனவே ஒருவரது ஓய்வூதிய வருமானத்தை மற்றவரது வருமானமாக காட்டி வரி கட்ட முடியும்.

65 வயதிற்கு உட்பட்டவர்கள் RPPயில் பெறப்படும் வருமானத்தை மட்டும் தம் துணைவருடன் பங்கிட்டுக்கொள்ளலாம்.

ஏற்றுக்கொள்ளக்கூடிய வருவாய்களில் GIS, OAS, RRSP ஆகியவற்றிற்கு கழிக்கப்படும் தொகையும் RCAகளில் பெறப்படும் வருவாயும் கணிக்கப்படும்.

எனவே அதிகம் வருவாய் உடைய துணைவர் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஓய்வூதியத்தின் பாதியை தனது துணைவருக்கு வருவாயாக காட்டி வரிப்படிவங்களை நிரப்ப முடியும். ஏதோ ஒரே சிக்கலாக இருப்பதாக தெரிகிறது. இதோ ஒரு சிறு உதாரணத்தைத் தருகிறேன் எல்லாம் தெளிவாகிவிடும்.

ஒருவருக்கு 2007ம் ஆண்டு $140,000 வரி கட்ட வேண்டி ஊதியம் பெற்றதாக கொள்வோம். அதில் $80,000 முதலீடுகளிலிருந்தும் மீது 60,000 ஓய்வூதியமாகவும் வந்ததாகக் கொள்வோம். அதே வருடம் அவரது துணைவர் $ 30,000 வருவாயும் அதில் $ 5,000 ஓய்வூதியமாக பெற்றார் என்று கொள்வோம். 2007ம் ஆண்டில் வருடாந்த வரிக்கட்டண பத்திரம் தாக்கல் செய்கையில் கூடிய ஓய்வூதிய வருவாயான $60,000ஐ சமமாகப் பகிர்ந்து ஒவ்வொருவரும் தலா $30,000 கட்டினால்.... கூடிய வருவாய் உள்ளவர் மாகாண, தேசிய மொத்த வரியில் $13,600 குறைத்துக்கட்டுவார். அதேவேளை குறைந்த வருமானம் உடையவர் மேலதிகமாக $9,600 கட்டுவார். எனவே இருவருக்குமான நிகரலாபம் $4,000 ஆகும். இதுவொரு மாதிரிக்கணக்கு, அத்துடன் மாகாணத்துக்கு மாகாணம் சற்று வேறுபடும்.

இத்திட்டத்தினைப் பாவித்து பயன்பெறுமுன் இன்னுமொரு விடயத்தை கவனித்தல் அவசியம். இப்படிச் செய்வதால் குறைந்த வருவாயுடையவருடைய வருவாய் அதிகரிப்பதனால், அவர் பெறுவதற்குரிய வரிச்சலுகைகள் சிலவற்றை இழப்பதற்கு சந்தர்ப்பம் இருப்பதனால் அதனை கவனிப்பதவசியம். மேலும் இப்படிச் செய்வதால் சில சந்தர்ப்பங்களில் உங்கள் ஓய்வூதியத்தையும் குறைக்க சந்தர்ப்பம் உண்டு. எனவே பல கோணங்களிலும் பார்வையிடல் மிக்க அவசியமாகும்.

## துணைவருடைய RRSP களின் விளக்கங்களும் அவற்றை ஏன் பாவிக்க வேண்டும் என்பதனை சற்று விளக்கமாகக் கவனிப்போம்.

காலப்போக்கில் வரவினை துணைவருடன் பகிர்வதில் மேலும் மேலும் முட்டுக்கட்டை வைக்கப்படுவதால் பிரச்சினையில்லாத பகிர்வுகளைப்பற்றி தெளிவான விளக்கம் இருப்பதவசியம். துணைவருடன் இணைந்த RRSP கள் ஓய்வுக்காலத்தில் வருவாயை பகிர்வதற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தும். ஆனால் அதுபற்றிய சட்டதிட்டங்களைப்பற்றிய தெளிவு அவசியம்.

## துணைவர் RRSP என்றால் என்ன?

துணைவர் RRSP என்பது நீங்கள் உங்கள் துணைவருடைய RRSP க்கு பணத்தைச் செலுத்துவுடன் அதன் பேறு துணைவரைச் சேரும். ஆனால், இப்படி இடப்படும் தொகை வரிச்சலுகைக்கு உங்கள் வருமானத்திலிருந்து கழிக்க முடியுமானால் உங்கள் வரிச்சுமை குறையும். நீங்கள் பணத்தை துணைவர் RRSPயில் வைப்புக்காட்டியவுடன் அப்பணத்தின் உரிமையாளராக உங்கள் துணைவர் கணிக்கப்படுவார்.

## துணைவர் RRSPயின் பயன்கள்

இத்தகைய RRSPயின் முக்கிய பயன் இருவருக்கும் சம ஓய்வூதியத்தை பெற்றுக்கொள்வதாகும். ஓர் நல்ல ஓய்வூதியத் திட்டமிடல் இருத்துணைவருக்கும் சமமான ஓய்வூதியத்தை பெற்றுத்தருவதாக இருக்க வேண்டும். அப்போதுதான் குடும்பம் ஓய்வுக்காலத்தில் ஒருவருக்கு அதிக வருவாயைப் பெற்று அதிக வரியைச் செலுத்தவேண்டி வராது. மேலும் அங்கு பணம் இடப்படும் வேளையில் அதிக ஊதியம் பெறுபவர் வரிச் சலுகை பெற்றிருப்பார்.

பொதுவாக அதிக வருமானம் உடையவர் தனது அதிகப்படி RRSP சேமிப்பதால் அவருக்கு அதிக ஓய்வூதியம் பெறப்பட்டு அதிக வரியும் கட்டவேண்டிவரும். துணைவர் RRSPயின் பயனைப் பற்றி சுருக்கமாகக் கூறுவதானால் பணத்தை ஓய்வூதிய வைப்பில் வைப்பவர் கூடிய வருவாயில் வரிவிலக்கு பெறுவதுடன் மீள்பெறும் வேளையில் குறைந்த வருவாய் உடையவர் குறைந்த ஓய்வூதிய வருவாயில் வரி கட்டுவார் என்பதுடன் இடைக்காலத்தில் வட்டியாக வரும் பணம் வரிவிலக்குடன் சேமிக்கப்படும். இதை நாம் வெற்றி வெற்றி அல்லது Win Win Situation என குறிப்பிடலாம்.

துணைவர் RRSPயின் இன்னுமொரு நிபந்தனையுள்ளதை மறந்துவிடலாகாது. இந்த நிபந்தனையை Attribution Rule எனக் கூறுவார்கள்.

> “ பணத்தை ஓய்வூதிய வைப்பில் வைப்பவர் கூடிய வருவாயில் வரிவிலக்கு பெறுவதுடன், மீள்பெறும் வேளையில் குறைந்த வருவாய் உடையவர் குறைந்த ஓய்வூதிய வருவாயில் வரி கட்டுவார் என்பதுடன் இடைக்காலத்தில் வட்டியாக வரும் பணம் வரிவிலக்குடன் சேமிக்கப்படும். ”

இந்த நிபந்தனை குறிப்பிடுவது,

துணைவர் RRSPயிலிருந்து மீள் பெறப்படும் பணம் அங்கு இடப்பட்ட வருடத்திலோ அல்லது பணம் கட்டப்பட்டு இரண்டு வருடத்திற்குள்ளாக மீள் பெறப்பட்டால், அத்தொகைக்கு பணத்தையிட்டவர் வரிவிதிக்கப்படி வரி கட்ட நிர்ப்பந்திக்கப்படுவார்.

உதாரணத்திற்கு ஒருவர் துணைவர் RRSPயில் 2008ம் ஆண்டு பணத்தை முதலீடு செய்தால் அவர் 2011ம் ஆண்டிற்கு முன் பணத்தை மீள் பெற்றால் வைப்பு வைத்தவர் ஊதிய விகிதாசாரப்படி வரி வசூலிக்கப்படுவார். இது நியாயமான காரணம் ஒருவருக்கு வரி விகிதம் 50 விகிதம் என்றால், அவர் தனது துணைவரின் RRSPயில் வைத்துவிட்டு அடுத்தவருடமே துணைவருடைய குறைந்த வருமான வரிவிகிதத்தில் மீள்பெறக்கூடுமாதலால், இந்த நிபந்தனை உள்ளது.

## இந்த நிபந்தனை சில சந்தர்ப்பங்களில் செல்லுபடியாகாது. அவை எவை என்பதனைப் பார்ப்போம்.

ஒரு RRSPயில் வைக்கப்பட்ட பணம் ஒரு RRIFஆக மாற்றப்பட்டு அதிலிருந்து ஆகக் குறைந்த தொகை மீள்பெறப்பட்டால், அதன் மீது மேற்படி நிபந்தனை செல்லுபடியாகாது. ஆனால், எடுக்கக்கூடிய ஆகக்குறைந்த தொகையிலும் அதிகம் மீள்பெறப்பட்டால் அந்த மேலதிகப் படி பெறப்பட்ட தொகைக்கு மேற்படி நிபந்தனை செல்லுபடியாகும். அதுவும் மூன்று வருடங்களுக்கு மட்டுமே அந்த நிபந்தனை இருக்கும்.

அடுத்து அந்தத் தொகையில் ஒரு 90 வயது வரைக்கான வருடாந்த வரவாக (Annuity) மாற்றினால் இங்கும் முன்பு குறிப்பிட்ட நிபந்தனை செல்லுபடியாகாது.

துணைவர் RRSP ஏன் அமைய வேண்டும் என்பதற்கான காரணங்களை கவனிப்போம். பலர் பொதுவாக கேட்கும் ஒரு கேள்வி, துணைவர் RRSPயினை அவர் சொந்த RRSPயுடன் இணைக்க முடியுமா என்பது. நிச்சயமாக செய்யலாம். ஆனால், அப்படிச் செய்கையில் அது துணைவர் பணமாக மாறுவதால் முன்பு கூறிய நியதி செல்லுபடியாகும். அவற்றை இணைப்பதால் பராமரிப்புத் தொகையில் மிகிதப்படுத்தலாமானாலும் சில சந்தர்ப்பங்களில் தனித்தனியாக வைத்திருப்பது நலம். ஒரு உதாரணத்தை இங்கு பார்ப்போம். தனித்தனியாக தனது RRSPஐயும் துணைவர் RRSPஐயும் வைத்திருந்தால், துணைவருக்கு வேலையில் பிரச்சினை ஏற்பட்டு RRSPயிலிருந்து பணம் பெற வேண்டுமானால் தனது தனிப்பட்ட RRSPயிலிருந்து பெறுவதால் அதற்கு வரி வசூலிக்கும் வேளையில் அவரது வரிவிகிதத்தில் (குறைந்த வரி விகிதத்தில்) அறவிடப்படும். இரண்டையும் ஒரு RRSPயில் வைத்திருந்தால் கடைசியாக துணைவர் பணம் முதலீடு செய்து மூன்று வருடங்களுக்குக் குறைவாக இருப்பின் அவரது வரி விகிதத்தில் கணிக்கப்படும்.

இப்படியான துணைவர் RRSP (Special RRSP) யில் பணம் வைக்க முற்படுவார்கள் அதுபற்றி ஒரு தெளிவான விளக்கம் உடையவராயிருத்தல் வேண்டும். பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்குபிடித்த கதையாகக்கூடாதல்லவா?

வளரும்...

kalyany@thaiveedu.com

■ ■ ■

**தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.**

*E-mail:thaiveedu@gmail.com*
*Fax: 416-849-0594*
*Tel: 416-646-3422*



VEEDU REALTY INC. BROKERAGE
1345 Morningside Ave., Unit #8
Toronto, ON, M1B 5K3
Tel: 416.759.6000
Fax: 416.759.6005

• Building permit
• Zoning info.
• Site plan approval
• Rezoning approval

Gop Kalaieswaraan
Master in Architecture
Sales Representative
(Residential, Commercial, Institutional)
Dir: 416.723.7467



# வர்த்தக நிறுவனங்கள் வாங்க, விற்க

**Home Life**
GTA Realty Inc., brokerage
206-1711 McCowan Road, Scarborough, ON. M1S 3YS
Bus: 416-321-6969 Fax: 416-321-6963

HOMELIFE HIGHER STANDARDS

## Baskaran Sinnadurai
Commercial & Residential Sales Representative

**416-880-8585**





Space for banquet hall
liqurar licence for 1000 people ,
very good location , plenty of parking ,
lease for up to 25 years




Weekly Sales $11,000-$13,000
Very Low Rent ($1200/Over 2000 Sq. Ft)
Canada Post, Purolator, Greyhound Bus Depot,
Lotto 639, Nevada Tickets



Dollar store
Only for 39,900
Good locatiion



INDUSTRIAL BUINDING WITH
40,000SQ
$3595000.00



BANQUET HALL WITH 250SEATS
$190,000



10 ACRE LAND WITH
INDUSTRIAL ZONING
$1100,000.00



# Higher Standards Agents...
# Higher Results!

Great Advice!!! Great Service!! Great Properties!

Sell Smart.... Buy Smart....


Call me for a free market evaluation of your property!!!

Call before you list, See the Difference!!!

Assist you with Home Inspection, Lawyers,
and Mortgages with competitive rates!!!

Great Deals For Buyers

Warden / Lawrence




Sold for 102% of asking Price

**I Need More Listings!!!!**

**Low Listing Commission**

HOMELIFE HIGHER STANDARDS



## HomeLife/Future
**Realty Inc. Brokerage**
Independently Owned and Operated
205-7 Eastvale Drive,
Markham, ON L3S 4N8

## Ruby Thambiah
Sales Representative
Dir: **416-999-5337**
Tel: 905-201-9977 Fax: 905-201-9229
rubysri@hotmail.com, www.buyandsellwithruby.com

digi



# Shan Thayaparan

Sales Representative




**Thanking of .....**

Selling

Buying or

Renting....

**For all your Real Estate needs**

**Please Call me First.**

***Dir: 416-567-7675***

***Web:shan123.com, Email: shan123@rogers.com***

***Bus: 416-321-2228***

Flexible Commission

Reliable Service & Full Time Agent

Free Market Evaluation

RE/MAX Above the Crowd!® Vision Realty Inc. 2210 Markham Road. TorontoM1B 5V6

My Team will help you to find Lawyers, Home Inspectors, Mortgages

Also We do Refinances and find Tenants for your Rental properties

*Not Intended to solicit properties currently listed or Buyers under buyers under agreement*

# இறை நமையும் காக்கும் என்ற சொல்லால் அழியும் துயர்



கே. எஸ். பாலச்சந்திரன்

மழைமூட்டத்தின் இருள்சூழ்ந்த வானம்போல எங்கள் வாழ்வு நகருகிறது... சந்தோசம், சிரிப்பு, கலகலப்பு எல்லாம் முன்புபோல தன்னிச்சையாக எங்களைப்பற்றிக்கொள்ளாமல் தள்ளிப்போய் நிற்கின்றன. ஊரிலும், புலத்திலும் நிகழும் மரணங்களின் துயரங்களில் தான் எங்கள் சந்திப்புக்கள் தோய்ந்து போகின்றன. யாருக்கு யார் ஆறுதல் சொல்வது என்று தெரியாமல் போகும் நிலை.

காரணங்கள் வேறாக இருந்தாலும் புலம் பெயர் நாடுகளிலே எங்களோடு வாழும் மற்ற இனத்தவர்களும் நம்பிக்கைகளை சற்று தொலைத்தவர்களாக இருப்பதாக எனக்கு படுகிறது. திடமான பொருளாதார கட்டமைப்புகள் என்று அவர்கள் நம்பியதெல்லாம் உடைந்து சிதறிப்போய் திடுதிடுப்பென அவர்கள் முன்வந்து நிற்கிற Recession என்ற விடயம் அவர்களின் சீரான வாழ்க்கையையும் சீர்குலைக்கும் என்று அவர்கள் நினைக்கு மளவிற்கு காரியங்கள் நிகழ்கின்றன.

ஒன்றில் ஒன்று தங்கியிருக்கிற அமைப்பில் அடுக்கப்பட்ட சீட்டாட்ட காகித அட்டைகளில் ஒன்றை மெதுவாக ஊதிவிட்டாலே. அவை எல்லாமே வரிசையாக சாய்ந்து விழுவதைப் போல வங்கிகள், காப்புறுதி நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் என்று யாவுமே பலமிழந்து, அவற்றை நம்பியிருந்தவர்களை கைவிட்டுவிடும் நிலை.

அமெரிக்காவில் பல மாநிலங்களில் அபரீத வளரச்சியைக்கண்ட வீடு விற்பனைச்சந்தை சென்ற ஆண்டின் இறுதியில் சரியத்தொடங்கியது. வீடு வாங்கியவர்கள் மாதாந்தக் கட்டுப்பணத்தை கட்டமுடியாமல் கைவிட, கடன்கொடுத்த வங்கிகள் பொறுப்பில் அவ் வீடுகள் வந்தன. ஆனால் அவைக்கான சந்தை இல்லாமல் வங்கிகள் அவற்றை வைத்துக் கொண்டு எவ்வளவு காலத்துக்கு தாக்குப் பிடிக்கமுடியும். இவற்றில் முதலீடு செய்திருந்த காப்புறுதி நிறவனங்கள், தனியார் நிறுவனங்களுக்கும் இதேநிலைதான் ஏற்பட்டது.

பொருளாதாரப்பின்னடைவு ஏற்படப்போகின்றது என்ற செய்திகள் கசியத்தொடங்க, பொது மக்கள் தங்கள் செலவுகளை குறைக்கத் தொடங்குவார்கள். புதிதாக உற்பத்தியாகும் பொருட்களை வாங்காமல், இருக்கின்றவையோடு சமாளிக்கும் மனப்பாங்கு அவர்களுக்கு வந்துவிடும். உற்பத்தியாக்கும் பொருட்களை விற்கமுடியாத நிலையில் அந்த நிறுவனங்கள் தங்கள் வேலையாட்கள் தொகையை குறைப்பது நிகழும். இதனால் வேலையில்லாதோர் தொகை அதிகரிக்கும். வேலையை இழந்தவர் அத்தியாவசியமான தேவைகளை விட, மேலதிக செலவுகளைத் தவிர்க்கத்தானே பார்ப்பார். உதாரணமாக பொழுது போக்கு, சுற்றுலா போன்றவற்றை குறைக்க அல்லது தவிர்க்கத் தொடங்குவார்கள். இதனால் அந்தத்துறைகளை நம்பியிருப்பவர்களும் வருவாயை இழப்பார்கள். இப்படியாக 'சங்கிலித்தொடர்'போல நிகழ்வுகள் தொடரும்.

அமெரிக்கா, ஐக்கியராச்சியம், ஜெர்மனி, பிரான்ஸ், கனடா, ஜப்பான் போன்ற நாடுகளில் இந்தச் சங்கிலித்தொடர் சரிவில் பெரிதாக பாதிக்கப்பட்டவை வாகன உற்பத்திசெய்யும் பிரம்மாண்டமான நிறுவனங்கள்தான், பல்லாயிரக்கணக்கான வேலையாட்களை குறைத்ததோடு, அரசாங்கங்களின் உதவிகளைக் கோரியபடி, 'பங்கறோத்து' ஆகிப்போகும் நிலையின் விளிம்பில் அவை நிற்கின்றன.

ஐக்கியராச்சியத்தில் இரண்டாவது உலகப் போரின் பின்னர் இருந்த நிலைபோல ஏராளமானவர்கள் தினமும் வேலைகளை இழந்துவருகிறார்கள். ஏறக்குறைய பத்துப்பேர் ஒரு வெற்றிடத்திற்காக போராடுகிறார்கள் என்று பொருளாதார நிபுணர்கள் சொல்கிறார்கள். பெண்களும், இளந்தலைமுறையினரும் வேலையிழக்கும் வாய்ப்பு அதிகம் இருப்பதாக அவர்கள் கருதுகிறார்கள்.

புலம்பெயர்நாடுகளிலே வாழும் நம்மவர்களில் குறைந்த அளவினரே வேலை வழங்குவோராக இருப்பதும், பெரும்பான்மையினர் நடுத்தரவாழ்வில் அடங்கிப் போனவர்களாக நடுத்தர, சிறிய நிறுவனங்களின் வேலைகளில் தங்கியிருப்பவர்களாக இருப்பதும் நாம் அறியாததல்ல.

நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ இந்தப் பொருளாதார பின்னடைவினால் நாங்களும் பாதிக்கப்படத்தான் செய்கிறோம். வேலைகள் இழக்கப்படத்தான் செய்கின்றன. வருமானங்கள் குறைந்துபோகத்தான் செய்கின்றன. இருக்கின்ற வேலைகளை தக்கவைத்துக்கொள்ள முயற்சிகள் நாமும் எடுக்கத்தான் வேண்டியிருக்கிறது.

இந்தப் பொருளாதாரப்பின்னடைவு எவ்வாறு கணிக்கப்படுகிறது. ஒரு நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 10 சதவீதமான வீழ்ச்சி ஏற்படுமானால் அது பொருளாதாரப் பின்னடைவினை குறிப்பதாகும் என்கிறார்கள். GDP (Gross Domestic Product) என்பது ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் அரசாங்கமும், தனியாரும் பொருட்களை வாங்கவும், சேவைகளைப்பெற்றுக் கொள்ளவும், உழைப்பினைப் பெற்றுக்கொள்ளவும், முதலீடு செய்யவும் செலவழிக்கும் தொகையாகும். பொருளாதாரப்பின்னடைவின் போது குறிப்பிடக்கூடிய அளவிற்கு விலைகள் அதிகரித்தலும் அல்லது விலைகள் வீழ்ச்சி அடைதலும் நிகழலாம். விலைகள் அதிகரிக்கும்போது, நுகர்வோர் (நீங்கள், நான், அரசாங்கம் எல்லோரும்தான்) கொள்வனவைக் குறைத்துக் கொள்வோம். இதனால் GDP வீழ்ச்சி அடையும். இதேபோல விலைகள் கணிசமான அளவிற்கு வீழ்ச்சியடைந்தாலும், தனியாரும், அரசாங்கமும் கொள்வனவிற்காக செலவிடும் தொகை குறைய, GDPயும் குறைந்துபோகும்.

2008ம் ஆண்டின் இறுதி மூன்று மாதகாலத்தில் கனடாவின் GDP 1991ம் ஆண்டிற்குபிறகு மிக அதிகமான வீழ்ச்சியை (3.4 சதவீதம்) எதிர்கொண்டது. இருப்பினும் அமெரிக்கா (6.2 சதவீதம்), ஐரோப்பிய யூனியன்(5.9 சதவீதம்), ஜப்பான் (12.7 சதவீதம்) என்பனவற்றைவிட இது குறைவானதுதான்.

இதன்விளைவாக இன்னமொன்று நடந்திருக்கிறது. தங்கள் வேலைகளின் நிச்சயமற்ற நிலையைக் கருத்தில் கொண்டு கனேடியர்கள் தங்கள் அன்றாட வீட்டுச்செலவுகளையே




குறைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதாவது 1995க்கு பிறகு ஆகக்குறைந்த செலவீனத்தை இதே காலகட்டத்தில் செலவளித்திருக்கிறார்கள்.

Recession என்பது முற்றுமுழுதான தீங்கான சங்கதி அல்ல என்று வாதிடுபவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்கள் சொல்வது இவைதான். இக்காலத்தில் விலைகள் வீழ்ச்சியடைகின்றன, வட்டிவிகிதங்கள் குறைகின்றன. பங்குச்சந்தை மலிவடைகின்றது.

உங்களின் வேலை திடமானதாகவும், கையிருப்பில் பணமும் இருந்தால் பெரிய கொள்முதல்களை இக்காலத்தில் செய்யலாம் என்கிறார்கள், இவர்கள்.

இத்தகைய காலகட்டங்களில் சிறிய சமூகங்களில் உள்ள சிறிய வர்த்தகர்கள் பெரிய சங்கிலித்தொடர்போலச் செயற்படும் வர்த்தக நிறுவனங்களினால் அழித்தொழிக்கப்படும் அபாயம் இருக்கிறது. இந்த அபாயத்தை தவிர்த்துக்கொள்ள சிறிய சமூகங்கள் என்ன செய்கின்றன என்று பார்த்தபொழுது எனக்கு கிடைத்த ஒரு தகவலை உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன்.

அமெரிக்காவில், நியூயோர்க், வடகரோலினா, கான்சாஸ், மசசுசெற்ஸ் போன்ற மாநிலங்களில் தங்களுக்கென ரூபா நோட்டுக்களை அரச அனுமதியுடன் அச்சடித்துக் கொள்கிறார்கள். குறிப்பிட்ட எல்லைக்குள் உள்ள வர்த்தக நிறுவனங்கள் சேர்ந்து இந்த நோட்டுக்களை அடித்து, புழக்கத்தில் விடுகிறார்கள். இதை பாவிப்பவர்களுக்கு உள்ள லாபம் என்னவென்கிறீர்களா? உதாரணமாக, ஒருவர் ஒரு டொலர் என்று குறிக்கப்பட்ட இந்த நோட்டை 95 சதங்கள் கொடுத்துப் பெற்றுக்கொள்கிறார். ஆனால் அந்த எல்லைக்குட்பட்ட வர்த்தகஸ்தாபனங்களில் அதைக்கொடுத்து ஒரு டொலர் பெறுமதியான பொருளை வாங்கவோ, சேவையைப்பெறவோ அவரால் முடியும். வாங்குபவருக்கும் லாபம் - அத்தோடு உள்ளூர் வர்த்தகர்களுக்கும் வியாபாரம் நடக்கிறது. அவர்கள் பெரிய நிறுவனங்களிலிருந்து காப்பாற்றப்படுகிறார்கள். இதனால் சிறிய சமூகங்களின் ஒற்றுமையும் பேணப்படுகிறது.

தன்னம்பிக்கையும், தெய்வநம்பிக்கையும் துயர் துடைக்கும் என்று நம்புபவன் நான். இதைச்சொல்லும்போது இந்த வரிகளைச் சொல்லாமல் விட என் மனம் ஒப்பவில்லை.


"எல்லாம் புரக்கும் இறை நமையும் காக்கும் என்ற சொல்லால் அழியும் துயர்"

ks@thaiveedu.com



# மருத்துவ கேள்வி பதில்

இராஜசேகர் ஆத்தியப்பன்



**டாக்டர், எனக்கு 11 வருடங்களாக தோல்நோய் உள்ளது. சென்ற மாதம் நான் மூலிகை மருந்து எடுத்தேன். சற்று நோயின் தன்மை குறைந்தாலும், பருக்களும் சொடுகும் குறைய வில்லை. உங்களது ஆலோசனை என்ன?**

புஷ்பா சிங்கராஜ்

உங்களுக்கு சக்கரை நோய் இருக்க வாய்ப்பிருக்கின்றது. நீங்கள் சர்க்கரை நோய்க்கும், தோல் நோய்க்கும் சேர்ந்த ஒருங்கிணைந்த கூட்டு மருந்தை பாவிக்க வேண்டும். அதற்கும் முன்பாக 'Colon Hydrotherapy' (நீரினால் குடலைக் கழுவுதல்) அவசியம். வேப்பெண்ணெயில் தயாரிக்கப்பட்ட சவுக்காரம் (Soap)உபயோகிக்கலாம். உங்களுக்கு இருப்பது சொரியாசிஸ் என்ற வகை நோயா அல்லது எக்சிமா (Eczema) என்ற வகையைச் சார்ந்ததா என்பதை அறிந்து கொண்டால் தான் முழுமையான வழிகாட்டுதல் தர இயலும்.

**எனது தகப்பனாருக்கு வயது 65. திடீரென்று வந்த பக்கவாத நோயால் (Stroke) அவரது பேச்சு முற்றிலும் போய்விட்டது. திரும்பவும் பேச்சு வர என்ன செய்ய வேண்டும்?**

திருமதி. ஈஸ்வரன்

இதற்கு O.S தைலம் மற்றும் சங்கு புஷ்பி இரண்டும்தான். இவைகளைக் கொடுக்குமுன் Gem trees மருந்தைக் கொடுத்து வாய்வை வெளியேற்ற வேண்டும். அல்லது அகஸ்தியர் ஹரிதாக்கி சூரணம் கொடுக்கலாம். 21 நாட்களில் பேச்சு வந்துவிடும்.

**டாக்டர், எனது வயது 55. சமீபகால மாக எனக்கு உடலுறவில் ஆர்வம் இல்லை. உங்கள் ஆலோசனைகள் மிகவும் பயனுள்ளதாக இருக்கின்றது. எனக்கு உதவிட வேண்டுகின்றேன்.**

சந்திரகுமார், வான்கூவர்

சந்திரகுமார் கேட்டிருப்பதுபோல இன்றைய காலகட்டத்தில் பல ஆண்கள் கேட்கிறார்கள். இதற்கு பல வகைக் காரணிகள் உள்ளன. சுருக்கமாக இதனை 2 வகைகளாகப் பிரிக்கலாம்.

1. மனப் பிரச்சினை (உளவியல் பிரச்சினை)
2. உடல் சார்ந்த பிரச்சினை

திடீரென்று குடும்ப உறுப்பினர் இறந்து போதல், வேலை இழப்பு, கடன் தொல்லை, பிள்ளைகள் உடல் நலம் பாதிப்பு போன்ற உளவியல் பிரச்சினைகள் மூளையின் ஹைப்போதாலமஸ் பகுதியைப் பாதிக்கும். இதற்கான தீர்வு, சுற்றுலா செல்லுதல், கோவில் குளம் என்று சுற்றிப் பார்த்தல், தினசரி நடை பழகுதல், தியானம், நல்ல நித்திரை இத்துடன் அஸ்வகந்தா என்ற ஆயுர்வேதா மருந்தை எடுத்துக் கொள்ளுதல் போன்றவை மிக நல்ல பயனைத் தரும்.

நீரிழிவு, ஹார்மோன் குறைபாடு போன்ற உடல் ரீதியான காரணங்களுக்கு ஒரு மருத்துவரிடம் தனிப்பட்ட ஆலோசனை பெறுதல் வேண்டும். நரம்புகள் ஊக்கம் பெற சிலாசத்து மற்றும் ஓரிதழ் தாமரை உதவி செய்யும்.


மூளை, நரம்பு மற்றும் மனதிற்கு சேர்த்து ஒருங்கிணைந்த எலக்ட்ரோபதி மருந்துகள் உள்ளன. இதில் கவனத்தில் கொள்ள வேண்டியது உங்கள் இரத்த அழுத்தம் ஆகும். தினசரி விதவிதமாக உங்கள் மனைவியை உடை உடுத்தச் சொல்லி, ஜடை பின்ன சொல்லி (பாவாடை தாவணியில்) உங்கள் முன் வரச் சொல்லி ரசியுங்கள்.

**தீராத சளி என்னை கடந்த 6 மாதங்களுக்கு மேல் அலைக்கழித்து அவதிப்பட வைக்கின்றது. பசியின்மை, இருமல், அலுப்பு, தலைவலி என்று பல தரப்பட்ட தாக்கங்களினால் சிரமப்படும் என்னை தயவு செய்து சுகம்பெற வழி செய்யுங்கள்.**

குழலி மிதுன்

நெல்லிப் பழத்தில் தயாரிக்கப்பட்ட tincture அத்துடன் ஆடாதொடை tincture மாற்றி மாற்றி எடுத்தால் விரைவான நிவாரணம் கிடைக்கும். 'சிட்டோபால்டி" என்ற சூரணம் உங்களுக்கு நலம் பெற உதவும்.

**டாக்கடர் எனக்கு வயது 39. சமீப காலமாக எனது முடி அளவுக்கதிகமாக உதிர்கின்றது. நீங்கள் இதற்கு முந்தைய கட்டுரைகளில் கூறியிருந்தபடி "Cillica', 'Bio-fen" ஆகியவற்றை எடுத்த பின் ஓரளவுக்கு முன்னேற்றம் தெரிந்தது. ஆனால்,**



**மனதில் இனம் புரியாத குழப்பங்கள் இன்னும் இருக்கின்றது. தயவுசெய்து உங்கள் கேள்வி பதில் பகுதியில் இதற்குப் பதில் தாருங்கள்.**

தர்ஷி

'ஜடாமன்சில்" என்ற மூலிகையை பொடியாகவோ, 'tincture" வடிவத்திலோ ஒரு நாளைக்கு இரு முறை எடுத்துவர முடி உதிருதல் முற்றிலுமாகக் குறைந்து மனநிலையும் தெளிவடையும். நீங்கள் பயன்பெற்று உங்கள் பதிலை தாய்வீடு வாசகர் பகுதியில் பகிர்ந்து கொள்வீர்கள் என்று நம்புகின்றேன்.

**எனது மகனுக்கு அடிக்கடி வயிற்றுப் போக்கு வருவதைத் தடுக்க வீட்டு வைத்தியமாக என்ன செய்யலாம்?**

சிவா

'வசம்பு" என்று கடைகளில் கேட்டு வாங்கி அதனைக் கரியாக்கி தேனில் குழைத்துக் கொடுங்கள். எல்லாம் சரியாகிவிடும்.

**டாக்டர், எனது கணவர் என்னிடம், 'காமசூத்திரா" பெண்ணாக நடந்து கொள்ளச் சொல்கின்றார். எனக்குப் பாதி புரிந்தாலும் முழுமையாக விளங்கவில்லை. புரியும்படியாகக் கொஞ்சம் சொல்வீர்களா?**

சில்வியா ரங்கதுரை

சில்வியா அவர்களே, இப்பொழுது காமசூத்திரா ஆடியோ மற்றும் வீடியோ பிரதிகள் கடைகளில் கிடைக்கின்றது. உங்கள் கணவரை வாங்கிவரச்சொல்லி பாருங்கள். வாழ்வியலைப் புரிந்து கொள்ளும் கலைதான் காமசூத்திரா இதனை முழுமையாகப் பின்பற்ற முடியாது. உடல்ரீதியான சில பயிற்சிகள் எளிதில் பின்பற்றி இன்பத்தில் திளைக்க உதவி செய்யும். மற்றபடி காமசூத்திரா பெண் என்று தனிப்பட்ட ஒருவருக்குப் பட்டம் கொடுத்தல் என்பது வேறு விஷயம். எந்திர மயமான மனித வாழ்வில் மானுடத்தைப் போற்றும் ஒரு செயல்தான் காமசூத்திரா இனிமை கூடி இன்பங்கள் பொங்க இதயத்தால் வாழ்த்துகின்றேன்.

**மலச்சிக்கலைத் தவிர்க்க எளிய ஆலோசனை என்ன டாக்டர்?**

சோதி

நிறைய சுடுதண்ணீர் அருந்துங்கள், நார்ச்சத்துள்ள உணவுகளை உண்ணுங்கள், இரவு ஒரு ஆப்பிள் பழத்தைத் தோலுடன் கடித்துச் சாப்பிடுங்கள். 'consitap' என்று ஒரு மூலிகைப் பானம் கடைகளில் விற்கின்றது. வாங்கிப் பயன் பெறுங்கள்.

**எனது வயது 76, நான் ஒரு இதய நோயாளி அத்துடன் நோய் எதிர்ப் பாற்றல் குறைவாக இருப்பதால் அடிக்கடி சளித் தொல்லையும் வாட்டு கின்றது. இயற்கை மருத்துவத்தில் எளிதான தீர்வு ஒன்றை தெரிந்து கொள்ள விரும்புகின்றேன்.**

கனகலிங்கம்

சாதாரண பப்பாளிப்பழத்துடன் ஸ்பைருலினா கலந்து அருந்தி வாருங்கள். இதயம் பலப்படும். நோய் எதிர்ப்பாற்றலும் கூடும்.

**இருமலுக்கான மருந்தை (Antibiotic) நான் தொடர்ந்து எடுத்தும் பலன் ஒன்றும் இல்லை உடலின் எடை குறைந்து இரவில் வியர்வையும் உண்டாகின்றது. என்ன செய்வதென்றே தெரியவில்லை. உங்கள் ஆலோசனை அவசியம் தேவை.**

சின்னய்யா

நீங்கள் இருமும் போது, கோழையுடன் இரத்தம் காணப்படுகின்றதா என்பதை குறிப்பிடவில்லை. அப்படியிருக்குமானால், அது காசநோயாக இருந்திட வாய்ப்புகள் அதிகம். இது மிகப் பெரிய தொற்றுநோய். உங்கள் குடும்ப வைத்தியரிடம் காசநோய்க்கான பரிசோதனையை (T.B. Test) எடுத்துவிட்டு அதன் பின் ஆலோசனை கேட்டால், நல்லதொரு தீர்வை சொல்ல இயலும்.

**டாக்டர் எனது கால்களில் திடீரென்று சுண்டி இழுக்கின்றது இதற்காக வாழைப்பழம் சாப்பிட்டு பொட்டாஷியம் குறைபாட்டை நீக்கலாம் என்று படித்தேன். இப்பொழுது இரும்புச்சத்தும் எனக்கு குறைவாக இருப்பதாகத் தெரியவந்துள்ளது. அதற்கு பேரீச்சையை உண்ணலாமா?**

ஸ்ரீதரன் ராஜா

பாலில் இருப்பதைவிட அதிகக் கல்சியமும், வாழைப்பழத்தில் இருப்பதைவிட அதிக பொட்டாஷியமும் பேரீச்சை போலவே இரும்புச் சத்தும் நிறைந்த ஒரே பழம் அத்திப்பழம். சிறுநீர்ப்பாதை, பித்தப்பைகல், கல்லீரல், தீராத இருமல், எடைக்குறைவு, குடற்புழு, மூலவியாதி, புற்றுநோய், ஜீரண சக்தி குறைபாடு போன்ற எல்லாவற்றிற்கும் ஏற்றதொரு நல்ல பழம் - அத்திப்பழம் (Fig) உலர்ந்த பழங்கள் எப்பொழுதும் கடைகளில் கிடைக்கும்.

**டாக்டர், நானும் மருத்துவத்துறை யில் பணியாற்றுகின்றேன். உங்க ளுடைய கேள்வி – பதில் பகுதியைத் தொடர்ந்து படித்து வருகின்றேன். நல்ல பயனுள்ள விதத்தில் அமைந் துள்ளது. MS நோயாளிகளுக்கான நீங்கள் கையாளும் சிகிச்சை முறை யை பகிர்ந்து கொள்வீர்களா?**

மோகன்

இந்தக் கேள்வியை நீங்கள் கேட்டமைக்கு உங்களைப் பாராட்டுகின்றேன். சுவர்ண வசந்த மால்டி என்ற மருந்துதான் MS நோய்க்கு (Multiple Sclerosis) மிகச்சிறந்தது. இதைத் தவிர 50 வயதிற்கு மேற்பட்ட பெண்கள் என்றால், ஜடாமன்சில், சதாவரி, அஸ்வகந்தா, யோகராஜ் குக்லு, திரிபலா மற்றும் பிரமி போன்ற மூலிகைகள் நல்லது. ஆண்களென்றால், வாச்சா, சதாவரி, அஸ்வகந்தா, யோகராஜ் குக்லு, திரிபலா மற்றும் பிரமி இவைகளைப் பயன்படுத்தலாம்.

ஒருநாள் விட்டு ஒருநாள் மொத்தம் 14 முறை சிரோதாரா என்ற சிகிச்சை செய்ய வேண்டும். MS நோயினால் ஏற்படும் வலிக்கு நல்லெண்ணெயுடன் மகாநாராயன தைலத்தை கலந்து தேய்த்துவிட வேண்டும்.

'நசியம்' மிகவும் அவசியம். உணவு வகை களையும் மாற்றிக் கொடுக்க வேண்டும். மேற்கூறிய எல்லாமே ஆயுர்வேத மருத்துவ முறையில் உள்ளது.

சித்த மருத்துவத்திலுள்ள சிவனார் அமிர்தத்தையும் சேர்த்துக்கொண்டால் நல்லது.

**டாக்டர், தொடர்ந்து விக்கல் வந்து அவதிப்படுகின்றேன். ஆயுர்வேத வைத்தியத்தில் இதனைத் தீர்க்க முடியுமா?**

கிளமெண்ட் .கி

5 வகையான விக்கல்களை ஆயுர்வேதம் எடுத்துரைக்கின்றது. எதுவாக இருந்தாலும், நீராவிக் குளியல் மற்றும் எண்ணெய் மசாஜ் முதலாவது கொடுக்கப்படும். அதேவேளையில் இந்துப்பு வைத்து தேய்த்து விடப்படுவர். அதன்பின் பாசுமதி அரிசிச்சோறு மற்றும் நெய் கலந்து கொடுக்கப்படும். மஞ்சள், பார்லி இவைகளைக் கலந்து நெய்யுடன் புகையேற்றுதல் வேண்டும். சூடான எண்ணெயுடன் சீனியைக் கலந்து எள் அல்லது கோதுமை மாவுடன் நெஞ்சு, கழுத்துப் பகுதியில் தடவ வேண்டும். தசமூலம், பிப்பிலி, திரிகடுகு, சித்தரத்தை, இஞ்சி, கோக்சுரா, கறுப்பு உப்பு இவைகளை தயிர், நெய், உலர்ந்த முள்ளங்கி, பார்லி இவைகளுடன் கொடுக்க வேண்டும். இன்னும், ஆமணக்கு எண்ணெய் அல்லது திரிபலாவுடன் நெய் கலந்து கொடுத்தால் விரைவான தீர்வு கிட்டும்.

**வாய்வு மற்றும் வயிற்றுப் பொரு மலுக்கு என்ன வைத்தியமுறை உண்டு?**

கிரி

ஓமத்தூள் 1 தேக்கரண்டி எடுத்து வெந்நீருடன் ஒரு நாளைக்கு இரண்டு தடவை சாப்பாட்டுக்குப்பின் அருந்தவும். அல்லது கற்றாளைச் சாற்றுடன் உப்பு/சீனி கலந்து ஒரு நாளைக்கு மூன்று முறை குடிக்கவும்.

**மூட்டுவாதத்தால் ஏற்படும் நோவு குறையத் தீர்வு என்ன?**

திலக்

கரட் சாறு, கோவா சாறு மட்டும் அருந்தி வாரத்தில் ஒருநாள் உபவாசம் இருந்தால் இத்தகைய வலி குறையும். மீன் எண்ணெய் குளிசை, நெல்லிக்காய் சேர்த்துக்கொள்வது நலம்.

rajasekar@thaiveedu.com

■ ■ ■

நேரடி மருத்துவ ஆலோசனைகள்
கேரள ஆயுர்வேத மருந்துகள்
பெற்றுக்கொள்ள
416 995 0416

## ச | ரி | க | ம | ப | த | நி

குரல் வளப் பயிற்சி



**VOICE TRAINING**
**VOICE REPAIR**

நீங்கள் வளரும் பாடகரா ?
காந்த குரலால் கவர்ந்திட
உங்கள் குரலை வளப்படுத்த விருப்பமா ?

பயிற்சி காலம் 21 நாட்கள்
20 மாணவ/மாணவியர் மட்டும்

தடுமாற்றமான குரல், தடைபட்ட குரல், பிசிறும் குரல்
எதுவானாலும் மூலிகை உதவியுடன் சரி செய்யலாம்.

**இந்தியாவின் பிரசித்தி பெற்ற பயிற்சியாளரை**

சந்தியுங்கள்
வாய்ப்பு ஒரு முறைதான் வரும்
ஆலோசனை மற்றும் பயிற்சி பெற
முன்பதிவு செய்யவும்

**647 2588 647**

E-mail: jjudhayam@gmail.com

## HEALTH TOUR

**இந்தியா சென்று சிகிச்சை பெற**

- ✔ ஆலோசனைகள்
- ✔ விமான டிக்கட்
- ✔ விசா பெறுதல்
- ✔ போன்ற எல்லா சேவைகளும்



AIR-INDIA

இப்பொழுது உங்களுக்காக

☎ 647 2588 647

**அவிபட்டிகர் கூட்டு மருந்து**

நெஞ்செரிவு,
அமிலத்தன்மை,
செரியாமை,
முழங்கால் வீக்கம்,

போன்ற பித்த ஆதிக்க
நோய்களைத் தீர்க்க வல்ல மருந்து

www.timherbals.com

**ஆஸ்த்துமா தீர**

ஆடாதொடை பொடி $ 38
(Adathoda Powder)

ஆடாதொடை டிங்சர் $ 36
(Adathoda Tincture)

இருமல், சளி, ஆஸ்த்துமா,
நுரையீரல் கோளாறுகள்
போன்றவற்றிற்கு நல்லது.

416 995 0416

## பக்க விளைவுகளற்ற பாரம்பரிய மூலிகை மருத்துவம்

ஆயுர்வேதம் & யுனானி மருத்துவத்தில்
15 ஆண்டுகள் அனுபவம் பெற்ற
Dr. இராஜசேகர் ஆத்தியப்பன்
அவர்களைச் சந்திக்க அழையுங்கள்

416 995 0416
ayurvetha@gmail.com

**கேரளா ஆயுர்வேத சிகிச்சை**

# TIM HERBALS

TIM, A-4, Birmingham Business Center,
80, Birmingham Road, Toronto,
Birmingham/Islington South.

**நல்வருனேந்திரன், ஓட்டுனர் (சாரதி)**



நான் இடுப்பு வலியினால் மிகவும் அவஸ்தைப்பட்ட வேளையில் டாக்டர் அவர்களின் சிகிச்சையால் புதுவாழ்வு பெற்றேன். இப்பொழுது உற்சாகத்துடன் செயலாற்ற முடிகின்றது. நன்றி.

**இராகவன், தொழில்அதிபர்**



திடீரென்று ஏற்பட்ட L-4 பிரச்னைக்கு, டாக்டர் அவர்களின் கேரள ஆயுர்வேத சிகிச்சை அதிசயத் தீர்வைத்தந்தது. இது எனக்கு மறுவாழ்வு என்று தான் சொல்வேன்.

**யமுனா, (Sales Co-ordinater)**



எனக்கு நீண்ட நாட்களாக முடி உதிர்தல் மற்றும் ஒற்றைத் தலைவலி இருந்து கொண்டே இருந்தது. கேரளா ஆயுர்வேத சிகிச்சையில் கடந்த நான்கு மாதங்களாக சிகிச்சை பெற்றேன். இப்போழுது 95 % குணம் பெற்றுவிட்டேன்.

**அருள், சார்ன்யா**



எனது உடம்பு முழுவதும் ஏற்பட்ட சொரியாஸிஸ் என்ற தோல் நோய் 15 வருடங்களாக என்னை வாட்டி வதைத்தது. இப்போழுது சுகம் பெற்று மகிழ்ச்சியாக இருக்கின்றேன்.

## கேரளா ஆயுர்வேத சிகிச்சை

பாரம்பரிய இந்திய மருத்துவத்தில்
15 வருடங்கள் அனுபவம் பெற்ற
Dr. இராஜசேகர் ஆத்தியப்பன்
ayurvetha@gmail.com

**416 995 0416**




# கனடாவில் புதிய...

22ம் பக்கத் தொடர்ச்சி...

தகைமைகளை மதிப்பிடுவதுடன் அவற்றை மேம்படுத்துவதற்குரிய முயற்சிகளை மேற்கொள்ளல்.

### சமூக ஆதரவு:

சுகாதார பராமரிப்பு, அடிப்படைத் தேவைகட்கான ஆதரவு (உதாரணம்: சிறுவர் பராமரிப்பு, உறைவிடம்) ஆலோசனை சேவைகள், கலாச்சார ரீதியில் பொருத்தமான சேவைகள், நீண்டகால சேவைகள், ஆதரவுகள் உள்ளிட்ட ஒருங்கிணைந்ததும் நடைமுறை ரீதியிலானதுமான சேவைகளை வழங்குதல்.

### குடியமர்தல் செயல்முறை:

அகதிகளின் உள்ளிடப் பெயர்வு (Immigration) செயல்முறையை விரைவுபடுத்துவதுடன் குடும்பம் மீண்டும் ஒன்றிணைதலை இலகுவாக்கல் கனடிய கலாச்சாரத்தில் இருக்கும் மக்களுடன் கலந்து பழகுவதற்கான அதிகரித்த வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல். உள்ளிடப் பெயர்வாளர்கள் அகதி சமூகங்களின் இயலளவைக் (Capacity) கட்டியெழுப்புவதற்கு நிதியினை அதிகரித்தல்

### சுகாதாரம்:

உளவியல் தேவைகளை சந்திப்பதற்கு உதவிகள் கிடைக்கச் செய்வதுடன் புதியவர்களின் தன்னம்பிக்கையையும் சுயமரியாதையையும் (Self-esteem) அதிகரிப்பதற்கு உதவுதல், கிடைக்கக் கூடிய சுகாதார சேவைகள் பற்றிய தகவல்களை வழங்குதல்.

### கல்வியும் மொழியும்:

உயர் கல்விக்கான போதுமான மற்றும் உரிய காலத்திலான நிதி ஆதரவை வழங்குதல், எல்லா வயது வகுப்பினருக்கும் மொழிப் பயிற்சியில் உதவி வழங்குதல்.

### உரிய நேரத்தில் உதவி:

புதியவர்களுக்கு உதவ நண்பர்கள், உறவினர்கள், குடும்பம், அரசாங்கம் என்பன இருந்த போதும் பல்வேறு தடைகளினால் இவர்களின் உதவி புதியவர்களுக்கு உரிய நேரத்தில் உரிய அளவில் கிடைக்காமல் போகலாம்.

அவசர யுகத்தில் உங்கள் நெருங்கிய குடும்ப அங்கத்தினர், நண்பர்கள் கூட உங்களுக்கு உதவ முடியாமல் போகலாம். ‘அண்ணன் என்னடா – தம்பி என்னடா அவசரமான உலகத்திலே...’என்ற பாடல் இங்கு தான் பொருந்தும். இத்தகைய சந்தர்ப்பத்தில் நீங்களே உங்களைக் கொண்டு நடாத்தி சவால்களைச் சமாளிக்க பின்வரும் தகவல்கள் உங்களுக்கு உதவலாம்.

### முதல் ஒரு சில கிழமைகளில் நீங்கள் செய்ய வேண்டியவை

- சமூக காப்புறுதி இலக்கத்தை (Social Insurance Number-SIN) பெற விண்ணப்பியுங்கள்.
- சுகாதார அட்டை (Health Card) க்காக விண்ணப்பியுங்கள்.
- பிள்ளைகளின் வரி உதவிக்காக (Child Tax Benefit) விண்ணப்பியுங்கள்.
- வங்கிக் கணக்கொன்றை ஆரம்பியுங்கள்.
- உங்களுக்கண்மையிலுள்ள குடியேற்ற நிறுவனமொன்றை (Settlement Agency) கண்டறியுங்கள்.
- உங்கள் வீட்டிற்கண்மையிலுள்ள சமூக சுகாதார மையமொன்றை (Community Health centre) கண்டறியுங்கள்.
- உங்கள் வீட்டிற்கண்மையிலுள்ள தொழில் வள மையமொன்றை (Employment Resource Centre) கண்டறியுங்கள்.
- உங்கள் வீட்டிற்கண்மையிலுள்ள பொது நூலகத்தை கண்டறியுங்கள்.
- ஓர் தொழிலாளியாகவும் (Employee) ஓர் குடியிருப்பாளராகவும் (Tenant) உங்கள் உரிமைகள் யாவை என்பதைப் பற்றிய தகவல்களைப் பெறுங்கள்.
- உங்கள் பிள்ளையை பாடசாலையில் பதிவு செய்வதற்கு பிள்ளையின் நோய்த் தடுப்பு பற்றிய நிருபணத்தைப் பெறுங்கள்.
- வீதிகள் மற்றும் பொது போக்குவரத்து வழிகளை அறிய வரைபடங்களை புகையிரத நிலையங்களில் (Subway) இலவசமாகப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- உங்களுக்கான ஆங்கில வகுப்புக்கள் பற்றியும் உங்கள் பிள்ளைகட்கான சர்வதேச மொழியொன்று பற்றியும் சிந்தியுங்கள்.
- உங்கள் அடையாள அட்டையாக வாகன லைசென்ஸ் கூடுதலாக பயன்படுத்தப்படுவதால் அதற்கான பரீட்சை எடுப்பதன் மூலம் லைசென்ஸ் பெற்றுக் கொள்வது நல்லது.
- உங்களுக்கு வாகன வசதி இல்லாவிடின் பொதுப்போக்குவரத்தை பயன்படுத்துவதற்காக “மெட்ரோபாஸ்” எனும் போக்குவரத்துச் சீட்டினை வாங்கி வைத்துக் கொள்வது உங்களுக்கு உதவியாக இருக்கும். இதன்மூலம் நீங்கள் வெளியில் செல்லும்போது வழியைத் தவற விட்டாலும் புதிதாக பணம் செலவிடாது அந்த சீட்டினை கொண்டே எங்கும் பயணம் செய்யமுடியும்.
- குடிவரவாளர்களுக்கான தகவல்களுக்கு www.settlement.or எனும் இணையத்தளத்திற்கு விஜயம் செய்யுங்கள்.
- ரொறன்ரோவினுள் சமூக தொடர்புகளைப் பெற 211 எனும் தொலைபேசி இலக்கத்தை அழையுங்கள். இது 24 மணிநேரமும் 7 நாளும் சேவைகளை வழங்குகின்றது. இதன் மூலம் ரொறன்ரோவிலுள்ள சுகாதாரம், அரசாங்க சேவைகள், நிதி உதவி, சட்ட உதவிகள், தன்னார்வ சந்தர்ப்பங்கள் (Volunteer opportunities), சமூக மற்றும் பொழுதுபோக்கு நிகழ்ச்சித் திட்டங்கள், வீட்டு வசதி, ஆங்கில மொழி வகுப்புக்கள் பற்றிய தகவல்களைப் பெற முடியும். அல்லது www.211Toronto.ca எனும் இணையத் தளத்திற்கு விஜயம் செய்யுங்கள்.

### முதல் 6 மாதங்கள்

முதல் ஓர் சில வருடங்களில் ஒருங்கிணைப்புகள் செயல்களில் ஈடுபடுவர். புதிய சூழலில் இயைபாக்கம் அடைதல், குடியமர்தல், வீடு, தொழில், சுகாதார பராமரிப்பு, தமக்கும் தமது பிள்ளைகளுக்குமான பாடசாலை போன்றவற்றை தேடுதலில் ஈடுபடுவர். தமது குடியமர்தல் கனடிய சமூகத்துடன் ஒருங்கிணைதல் (Integration) செயல்முறைகளின் போது அநேக சவால்களை எதிர்நோக்குவர். இதனுள் கனடாவின் ஒன்று அல்லது இரண்டு உத்தியோகபூர்வ மொழியில் சரளமாகுதல், தமது முந்தைய தொழில் திறன்கள், கல்வி ஆகியவற்றை கனடிய தகைமைக்கு ஈடானதாக்குதல், கல்வி மற்றும் தொழில் பயிற்சிகளைப் பெறுதல் என்பன இதனுள் அடங்கும்.

குடியேற்ற செயல்முறையினை விளங்கிக் கொள்தல், இவர்கள் எவ்வாறு கனடிய சமூகத்துடன் ஒருங்கிணைகிறார்கள், கனடிய வாழ்வில் எவ்வாறு திருப்தியடைகிறார்கள் என்பன முக்கியமாகும். ஆரம்ப குடியேற்ற அனுபவங்களை முற்றிலுமாக விளங்கிக் கொண்டு தம்மைத் தாபித்துக் கொள்தல் கடினமாக இருந்தபோதும் இவ் அனுபவங்கள் ஓர் அடித்தளமாக அமையும். பொதுவில் இச் செயல்முறைகளுக்கு 6 மாதங்களாவது தேவைப்படும்.

இவற்றை விட கனடிய வாழ்க்கை முறை – பழக்க வழக்கங்கள் - சட்ட திட்டங்களை நீங்கள் அறிந்து கொள்வதும் அவசியம்.

உசாத்துணை:

http://www.ssrp.ualberta.ca/linked_files_not_pdf/MMSS_Fact_5_Summary.doc

http://www.cic.gc.ca/ENGLISH/newcomers/after-help.asp

http://www.statcan.gc.ca/pub/89-614-x/2005001/findings-resultats/4079122-eng.htm

jeeva@thaiveedu.com

■ ■ ■

# MORTGAGE

1st & 2nd Mortgages
New Immigrants / Self Employed
Refinance
Equity Line of Credit
Renewal
All other Financial Arrangement

**Kethes Sivasubramaniyam**
Mortgage Agent - (Lic # M08006105)

**Cell : 416.873.5780**



Via Financial
(Lic # 10669) Services Inc.

My Office :
5200 Finch Ave. E,
Suite 304,
Scarborough, ON.
M1S 4Z5
Tel : 416-548-8005

Head Office :
120 Traders Blvd.
Suite 206,
Mississauga, ON.
L4Z 2H7

# வருமானவரிச்சேவையில் பலவருடம் அனுபவம் வாய்ந்தவர்களினால் நம்பிக்கையான சேவை

- Personal Tax
- Small Business Tax
- E-File Services
- Arrange RRSP
- Maximum Refund
- Tax Saving Advice

EFILE




**KETVAR**
**TAX & ACCOUNTING**
304-5200 Finch Ave.E, (Middlefield & Finch)
Toronto. ON M1S 4Z5
**Tel : 416-873-5780 / 416-548-8005**
Email : ketvar@gmail.com



# Buying or Selling Homes
## Selling Commission , As Low As 1%

HOMELIFE HIGHER STANDARDS

HomeLife Landmark
Realty Inc. Brokerage

**Call Nada**
Cell: 416 – 616 – 8751
Bus: 416 – 293 – 5093

Nada.G.Nadarajah B.V.Sc
Sales Representative

Platinum Award Winner
Ontario Emerald Club Member




**Middlefield/Steeles**
2-Storey
3+2 Bedrooms - 3 Washrooms
Excellent Location




**Westney/Sullivan**
Detached - 2 Storey
3 Bedrooms - 2 Washrooms
Finished Basement




**Salem/Rossland**
Detached 2-Storey
4 Bedrooms - 3 Washrooms
Approx. 3000 sq. ft




**Dixie/Finch**
Detached 2-Storey
3 Bedrooms - 3 Washrooms
Part. Finished Basement




**McCowan/Steeles**
Linked 2-Storey
3 Bedrooms - 2 Washrooms
1600 sq.ft




**Pharmacy/McNicoll**
Linked - 2 Storey
3 Bedrooms - 2 Washrooms
Finished Basement




**Midland/Sheppard**
Detached Backsplit 4
4 Bedrooms - 2 Washrooms
Finished Basement !




**9th Line/14th**
Detached 2-Storey
4 Bedroom - 3 Washrooms
2000-2500 sq.ft

# காப்புறுதியில் குழப்பமா?

## தொடர்: 2



**சக்திவேல்**

- ஆயுட் காப்புறுதி முகவர் -

### Cost of Insurance

### Limited 10 Pay, 15 Pay, 20Pay, to Age 65

உங்கள் வயதை பொறுத்து, குடும்ப பொறுப்புக்களை பொறுத்து, பணப் புழக்கத்தைப் பொறுத்து, நீங்கள் மேற்கண்ட திட்டங்களுக்கு மனுச் செய்யலாம். உதாரணமாக உங்கள் வயது 20இற்கும் 30இற்கும் இடையில் இருந்து, பிரமச்சாரியாகவோ அல்லது புதிதாக மணம் முடித்த தம்பதிகளாகவோ இருந்து, பணப் புழக்கமும் சீராக இருப்பின் 10 Pay அல்லது 15 Pay திட்டங்களுக்கு மனுச் செய்யலாம். காரணம், இந்த காலவரை முடிந்தவுடன் மேலும் நீங்கள் பணம் செலுத்த வேண்டிய தேவையில்லை. ஆனால் ஆரம்பத்தில் கொடுத்த காப்புறுதி தொகை உங்கள் வாழ்நாள் பூராக தொடர்ந்து கொண்டே போகும்.

சென்ற இதழில் குறிப்பிட்டது போல் இங்கும் 10 அல்லது 15 வருட திட்டங்களுக்கு முறையே, அதி குறைந்த கட்டுப்பணம் (Minimum Payment) அதிகூடிய கட்டுப்பணம் (Maximum Payment), என இரண்டு விதமான அறவீட்டு தொகை இருப்பினும் நீங்கள் உங்கள் பண வசதிப்படி உங்களால் மாதாந்தம் ஒருவித பதட்டமின்றி செலுத்தக்கூடிய கட்டுப்பணத்தை தேர்ந்தெடுக்கலாம். அத்துடன் சென்ற இதழில் குறிப்பிட்டது போல காப்புறுதிக்கான அறவீட்டுப்பணமான Cost of Insurance ஒருபோதும் மாறவே மாறாது என்பதையும் ஆணித்தனமாக குறிப்பிட விரும்புகிறேன். மேலதிகமாக செலுத்தும் மாதாந்த கட்டுப்பணம் சேமிப்பு திட்டத்தின் வளர்ச்சி வீதம் வருமானவரியின்றி வளரும் வளர்ச்சிவீதமென்பதும் குறிப்பிடத்தக்கது.

20 Pay, Payment to 65 பெரும்பாலும் நடுத்தர வயதினர்க்கு வயது 50இற்கு உட்பட்டவர்க்கு உகந்த திட்டம். காரணம் இந்த வயதினர்க்கு அநேகமாக வளர்ந்த பிள்ளைகள், பல்கலைக்கழகத்தில் படிக்கும் பிள்ளைகள், வீட்டு அடமானக்கடன், வேறு கடன்கள் இருக்கக் கூடும். அதன் காரணமாக காப்புறுதி கட்டுப் பணத்தை குறைந்த கட்டுப்பணமாக ஒருவித சிரமமும் இன்றி எத்தருணமும் கட்டக்கூடிய தொகையாக தேர்ந்தெடுக்கலாம். கட்டுப்பணமும் குறைவாக இருக்க வேண்டும், காப்புறுதித் தொகையும் கூடியதாக இருக்க வேண்டும் என நினைப்போர்க்கு இந்த நிரந்தர காப்புறுதித்திட்டத்துடன் எப்போதும் எத்தருணத்திலும் (வயது 70இற்கு முதல்) நிரந்தரமான ஆயுள்காப்புறுதியாக, மருத்துவ ரீதியின்றி மாற்றக்கூடிய தவணைக் காப்புறுதியினை (Renewable and convertible term insurance) இணைத்து ஒரே ஒப்பந்தத்தில் (Contract) விண்ணப்பித்தால் காப்புறுதி ஒப்பந்தம் அளிப்பதற்கு விடுக்கும் (Policy Fee) வருடாந்த பணத்தொகையை துப்பரவாக தவிர்க்கலாம்.

இந்த மாதிரியான காப்புறுதித்திட்டங்களில் இரு வகை உண்டு. முதலாவது ஆரம்பத்திலிருந்து இறுதிவரை "காப்புறுதி தொகையில் ஒருவித மாற்றமும் இல்லாத (Level Death Benefit) காப்புறுதி ஒப்பந்தம்". இதில் அநேகமாக Cost of Insurance வருடாவருடம் "அதிகரித்தபடியே இருக்கும்". இந்த திட்டத்தின்படி திடீரென மரணம் ஏற்படின் காப்புறுதி தொகை மட்டும்தான் வாரிசுதாரரை சென்றடையும். சேமிப்பு வளர்ச்சியின் வாரிசுதாரர் காப்புறுதி நிறுவனம் என்பது குறிப்பிடத்தக்கது. ஏதாவது அவசர தேவைக்கு பணம் தேவைப்படின் இந்த பணத்தை நிறுவனத்திடமிருந்து கடனாகத்தான் பெற்றுக்கொள்ள முடியும். இந்த கடனுக்கு வட்டியும் அறவிடப்படும். இந்த வட்டியானது பெரும்பாலும் வங்கி அறவிடும் வட்டி வீதத்திலும் பார்க்க ஏறத்தாள 2 வீதம் மேலதிகமாக அறவிடப்படும். இந்தக் கடனைப் பெற்றதன்பின் திடீரென மரணம் ஏற்படின் காப்புறுதி தொகையிலிருந்து மனுச்செய்த கடன் தொகை, அதற்காக அறவிட்ட வட்டி ஆகிய இரண்டினையும் எடுத்துவிட்டு மீதிப்பணம் வருமானவரியின்றி வாரிசுதாரரை சென்றடையும். சுருங்கக்கூறின் இந்த ஏற்பாடு "கடன் எடுப்பதால் ஏற்படும் தண்டனை" என்றால் மிகையாகாது. கடன் மனுக்கோரி கடன், கடனுக்கான வட்டியினை ஒழுங்காக கட்டிக்கொண்டு வர மறுத்தால் அல்லது மறந்தால் கடன், கடனுக்காக அற விட்ட வட்டிவீத வளர்ச்சியும் காப்புறுதித் திட்டத்தில் மீதியாக உள்ள சேமிப்பும் (பொதுவாக 90% மட்டுமே கடனாக வழங்கப்படும்) சரி சமனாக வந்ததும் நீங்கள் உயிரோடு இருக்கும்போதே காப்புறுதி மரணமடையும். அதாவது "ரத்து செய்யப்படும்". இது உங்கள் உதாசீனத்தால் உங்களுக்கு கிடைக்கும் தண்டனை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இரண்டாவது வகைத்திட்டம் ஆரம்பத்திலிருந்தே வருடா வருடம் சேமிப்பு வளர்ச்சியின் காரணமாக தொடர்ந்து அதிகரிக்கும் திட்டமாகும். இதனை ஆங்கிலத்தில் Increasing Death Benefit அல்லது Coverage Plus அல்லது Sum Insured + Fund Value என அழைப்பார்கள். இந்த ஒழுங்கின்படி திடீர் மரணம் ஏற்படின் ஆரம்பத்தில் மனுச் செய்த காப்புறுதி தொகையுடன் சேமிப்பு, சேமிப்பின் வளர்ச்சி ஆகிய அனைத்தும் வாரிசுதாரரை வருமான வரியின்றி சென்றடையும். அத்துடன் இந்த ஒழுங்கின்படி ஏதாவது காரணத்தை யிட்டு பணம் செலுத்த முடியாத பட்சம் சேமிப்பிலிருந்து காப்புறுதி அளிப்பதற்கான 'Cost of Insurance'இனை மட்டுமே நிறுவனம் மாதா மாதாம் எடுத்துக்கொண்டுவரும். அத்துடன் மீதிச்சேமிப்பு தொடர்ந்தும் வளர்ந்து கொண்டுபோவதனால் இந்த ஒழுங்கின்படி சேமிப்பின் வளர்ச்சியினை பொறுத்து காப்புறுதி ஒப்பந்தம் இலகுவில் மரணமடையாது. (அது ரத்து செய்யப்பட மாட்டாது) சென்ற இதழில் குறிப்பிட்டது போல நீங்கள் உங்கள் விருப்பப்படி எந்த Cost of Insuranceஇனையும் தேர்ந்தெடுக்கலாம். இதை எழுதிக் கொண்டு இருக்கும்போது எனது வாடிக்கையாளர் இருவருக்கு ஏற்பட்ட உண்மைச் சம்பவம் ஞாபகத்தில் வருகிறது. இருவரும் குறிப்பிட்ட காலவரைக்குள் கட்டி முடிக்கும் ஒழுங்கினை தேர்ந்தெடுத்து அதி கூடிய கட்டுப்பணத்தினையும் தேர்ந்தெடுத்தார்கள். காலவரை முடிவதற்கு ஒருசில வருடங்களுக்கு முன்னர் ஒருவர் வேலையை இழந்தார். மற்றவருக்கு அவரது பிள்ளைகளின் மேற்படிப்பு காரணமாக வெளிநாடு செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதன் காரணமாக பண நெருக்கடி ஏற்பட்டது. இருவரும் காப்புறுதி நிறுவனத்திற்கு எழுதிக் கேட்டபோது கிடைத்த பதில் முறையே 10 வருடங்கள் 14 வருடங்கள் நீங்கள் கட்டவேண்டியதில்லை. இருவரும் கடந்த 5,6 வருடங்களாக பணம் செலுத்த வில்லை. காப்புறுதியும் ரத்து செய்யப்படாமல் வருடாவருடம் நிறுவனம் சேமிப்பு, சேமிப்பின் வளர்ச்சி வீதம் ஆகிய இரண்டினையும் அவர்களுக்கு அனுப்பிக்கொண்டே வருகின்றது. அத்துடன் இந்த இரண்டாவது வகையான திட்டத்தில் இளம் வயதினர் தமது ஓய்வூதியகாலத்தில் காப்புறுதி திட்டத்தையே ரத்துச் செய்யாமல் அவர்கள் மேலதிகமாக கட்டும் மாதாந்த அல்லது வருட கட்டுப்பணத்தைப் பொறுத்து "வருமான வரி செலுத்தாமலேயே" வருமான வரி இலாகா நிபந்தனைப்படி ஒரு கணிசமான தொகையை மீளப் பெறும் வசதிகளையும் பெற்றுக்கொள்ளலாம். இந்த ஒழுங்கினை ஆங்கிலத்தில் Leveraging retirement Savings என அழைக்கிறோம். அந்த ஓய்வூதிய வயதை அடையயுமுன்னர் மரணம் ஏற்படின் இந்த சேமிப்பானது ஆரம்பத்தில் மனுச் செய்த காப்புறுதி தொகையுடன் நீங்கள் காப்புறுதி ஒப்பந்தத்தில் நியமித்த வாரிசுதாரரை வருமானவரி இன்றி சென்றடையும். இந்த விதமான சேமிப்புத்திட்டத்தை ஆங்கிலத்தில் Segregated Funds என அழைப்பார்கள். இதே சேமிப்புத் திட்டம் வங்கிகளிலும், பிரததியேக நிறுவனங்களிலும் உண்டு. இங்கு அதை Mutual Funds என அழைப்பார்கள். இதில் முதலாவது வகையான Segregated Fundsஇனை பொறுத்தவரை இந்த சேமிப்பானது ஒருவரும் (அரசாங்கம், வருமான வரி இலாகா உட்பட) எத்தருணத்திலும், எக்காரணம் கொண்டும் அபகரிக்க முடியாத சேமிப்பு திட்டம் என்பதும் குறிப்பிடத்தக்கது. ஆனால், இந்த ஏற்பாடு இரண்டாவது வகையான Mutual Fundsஇல் கிடையாது. வாழ் நாள் பூராக சேமிப்பின் வளர்ச்சி வீதம் ஒருவராலும் திட்டவட்டமாக நிர்ணயிக்க முடியாது என்பதை நாம் அனைவரும் அறிவோம். ஆகையினால் ஆரம்பத்திலும், இடையில் எப்போதும் சேமிப்பு வளர்ச்சி வீதத்தின் ஏற்றத்தாழ்வை பொறுத்து வாடிக்கையாளர்கள் சேமிப்புதிட்டங்களை கையெழுத்திட்ட விண்ணப்பப் பத்திரத்தில் எழுதி மாற்றுவிக்கலாம். அத்துடன் சேமிப்புத்திட்டங்களை தேர்ந்தெடுக்கும் போது கடந்த 5,10,15 வருடங்களாக அந்த திட்டங்கள் கொடுத்த வட்டிவீதத்தை பொறுத்து ஒவ்வொரு சேமிப்பு திட்டங்களிலும் எத்தனை வீதம் ஒதுக்க வேண்டும் என்பதையும் நீங்கள் நிர்ணயிக்கலாம். சேமிப்புத்திட்டங்களின் எதிர் கால கணிப்பை நிர்ணயிக்கும் போது 'Rule of 72" என்ற கணிப்பு முறையை கையாளுகிறோம். அதாவது சேமிப்பு தொகை எத்தனை வருடங்களுக்கு ஒருமுறை இரட்டிப்பாகும் என்று கணிக்க வேண்டுமாயின் '72"இனை வட்டிவீதத்தால் வகுத்தால் கிடைக்கும் விடை தான் வருடங்களின் எண்ணிக்கை.

உதாரணமாக உங்கள் சேமிப்பு $10,000 ஆக இருந்து சராசரி வட்டி வீதம் 6 வீதமாக இருப்பின் '12" வருடமுடிவில் (72/6) சேமிப்பு $20,000 ஆகவும், இன்னும் 12 வருடமுடிவில் அது $40,000 ஆகவும் அதிகரிக்கும்.

இந்த ஒழுங்கினை சற்றும் புரியாத காரணமாகவோ அல்லது, புரிந்தும் எப்படியாவது இந்த மாதிரியான திட்டங்களை இரத்துச் செய்து புதிதாக ஒரு திட்டத்தை எப்படியாவது திணித்து தமது "தேவையை பூர்த்திசெய்யும்" நோக்கத்துடன் காப்புறுதிக் களத்தில் குதித்த ஒரு சிலர் 'நீங்கள் ஏன் கூட பணம் கட்டுகிறீர்கள்? உங்கள் பிரதிநிதி உங்களை ஏமாற்றிப்போட்டார். என்னிடம் வந்தால் மலிவாக எடுத்துத்தருவேன். அத்துடன் எனது கமிஷனில் இருந்து ஒரு கணிசமான தொகையையும் தருவேன் என்று ஆசை வார்த்தை காட்டி சிக்கலில் மாட்டிவிடுகிறார்கள். அதாவது சுருங்கக்கூறின் ஒழுங்கான காப்புறுதித் திட்டத்தை தெளிவான, துல்லியமான விளக்கத்துடன் கொடுக்காமல் தங்களையே விற்று விடுகிறார்கள். காப்புறுதி விற்பனை ஒரு சந்தையில்விற்கும் மரக்கறியும் அல்ல. எடை போட்டு விற்பதற்கு. உணவகத்தில் விற்கும் சாப்பாடும் அல்ல ஒப்பிடுவதற்கு. இது ஒரு புனிதமான தொழில். மற்றவர் துயர் துடைக்கும் தொழில் இது ஓர் ஆழ்கடல் போன்றது. தொழில்நுட்பம், அறிவுநுட்பம், நேர்மை, பொறுமை ஆகியவை இந்த தொழிலை முழுநேரமாக செய்வதற்கு தேவைப்படும் உபகரணங்கள், முறைப்படி செய்து கொண்டு வந்தால் திருப்திகரமான வாடிக்கையாளர்கள் இந்த ஆழ்கடலில் தாழ விடாமல் தோள் கொடுப்பார்கள்.

தொடரும்...

saththivel@thaiveedu.com

■ ■ ■

**தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.**

***E-mail:thaiveedu@gmail.com***
***Fax: 416-849-0594***
***Tel: 416-646-3422***

**சக்தி என்றால் காப்புறுதி**



1983ஆம் ஆண்டிலிருந்து காப்புறுதித்துறையில்
முழுநேர நெறியான சேவை

"சகல காப்புறுதி நிறுவனங்களினதும் பிரதிநிதி"

- பாரபட்சமின்றி எந்த நிறுவன திட்டமாக இருப்பினும் தெளிவான துல்லியமான இலகுவில் கிரகிக்கும் வண்ணம் விளக்கம்.
- 9000 இற்கும் மேற்பட்ட திருப்திகரமான வாடிக்கையாளர்கள்
- 90க்கும் மேலான துரித காப்புறுதி இழப்பீடுகள்.
- எனது வாடிக்கையாளர் பட்டியலில் ஒருசில
  - வருமான வரி இலாகா, கணக்கியல் சோதனையாளர்கள் (Revenue Canada Auditors) ,
  - நிதியமைச்சு அதிகாரிகள் (Ministry of Financial Services),
  - காப்புறுதி பிரதிநிதிகள், அவர்கள் குடும்ப அங்கத்தவர்கள், முதியோர், சிறார்கள்,
  - பிரபல வர்த்தகர்கள், குடும்பத்தவர்கள்,
  - பிரபல எழுத்தாளர்கள்,
  - வைத்தியர்கள்,
  - வழக்கறிஞர்கள்
- 85 வயதுக்குட்பட்ட எவருக்கும், எச்சூழ்நிலையிலும், நிச்சயமாக காப்புறுதியளிக்கும் திறமை (நிறுவனங்களின் நிபந்தனைப்படி)
- எக்காப்புறுதித் திட்டமாக இருப்பினும், விளக்கத்துடன் மன ஆறுதல் திட்டமாக பெற்றிட தயங்காமல் நாடுங்கள்
- மருத்துவ ரீதியின்றி 275,000 வரை காப்புறுதி

**- சக்திவேல் -**

தொலைபேசி: **416.706.3530, 905.428.9299, 905.763.8912**

Fax: 905.428.9307 Email: george14@sympatico.ca

**மன்னிக்கவும்!**

வாகனக் காப்புறுதி (Car Insurance), தீ காப்புறுதி (Fire Insurance) செய்வதில்லை!

**Make the Right Move, at the Right Time, with the Right Professional**

# முகவரி காட்டும் முகவர்களாய் நாங்கள், வீடு வாங்க விற்க அழையுங்கள்



**HomeLife/Future Realty Inc., Brokerage***
7 Eastvale Dr, Suit 205, Markham On. L3S 4N8
**Bus.: 905-201-9977 Fax : 905-201-9229**
www.realhouse.ca
*Independently Owned and Operated, REALTOR



தமிழ் சுப்பிரமணியம் (செல்வன்)

முகுந்தன் நடராஜா

**Thamil Suberamaniam (Selvan)**
Sales Representative
**Direct : 416.358.6200**
Email : thamilrealtor@gmail.com

**Mugunthan Nadarajah**
Sales Representative
**Direct : 416.276.8025**
Email : homelifemugunthan@gmail.com

**Queen & Mclaughlin**

**$399,900**
4 Bedrooms, 4 Washroom

**Jane & Steeles**

**$319,100**
3+1 Bedrooms, 2 Washroom

**Markham & Lawrence**

**$279,900**
3+2 Bedrooms, 2 Washroom

**Markham & Bur Oak**

**$439,900**
4 Bedrooms 3 Washroom

**Neilson & McLevin**

**$219,900**
3+1 Bedrooms, 3 Washroom

**Markham & Passmore**

**$369,900**
4 Bedrooms, 3 Washroom

**McCowan & Steeles**

**$199,900**
2+1 Bedrooms, 2 Washroom

**Sandalwood/Chinguacousy**

**$279,000**
3 Bedrooms, 3 Washroom

**Markham & Steeles**

**$529,900**
4+2 Bedrooms, 5 Washroom

**McCowan & 16th**

**$375,000**
3 Bedrooms, 3 Washroom

**9th Line & 16th Ave.**

**$369,900**
4 Bedrooms, 3 Washroom

**Morningside & Finch**

**$339,900**
3 Bedrooms, 3 Washroom

**Tounton/Harmony**

**$449,900**
4 Bedrooms, 4 Washroom

**McCowan & 401**

**$218,000**
2 Bedrooms, 2 Washroom

**Markham & Sheppard**

**$199,900**
3+1 Bedrooms, 2 Washroom

**McCowan & Eglinton**

**$127,900**
2 Bedrooms, 2 Washroom

**Midland & Lawrence**

**$176,000**
2 Bedrooms, 2 Washroom

**Markham & Passmore**

**$329,900**
3+1 Bedrooms, 4 Washroom

**Birchmount & Finch**

**$309,900**
3+1 Bedrooms, 3 Washroom

**Kennedy & Eglinton**

**$184,900**
2+1 Bedrooms, 2 Washroom

Not Intended to Solicit Currently Listed Properties or Buyers Under Contract

## கீரை உணவு வகைகள்

# வல்லாரைக் கீரை

### கீரை உணவு - 5

உதயணன்



தமிழில் "கிள்ளுக்கீரை" என்றொரு சொல் வழக்கில் இருக்கிறது. "என்னை என்ன கிள்ளுக்கீரை என்று நினைத்தாயா?" என்று கேட்பதுண்டு. அதாவது, "என்னை என்ன அவ்வளவு அற்பமானவன் என்று நினைத்தாயா?" என்று அதற்கு அர்த்தம். தமிழ் மக்கள் காய்கறிகளை வெட்டுவதற்குப் பெரும்பாலும் அருவாள்மனையைப் பயன் படுத்துவார்கள். கத்தரிக்காய், வழைக்காய் போன்றவற்றை வெட்டுவதற்கு ஒரு கத்தியாவது தேவைப் படும். கீரையைச் சுத்தம் செய்வதற்கு அப்படியொரு "ஆயுத"மும் தேவையில்லை. யாருடனாவது பேசிக்கொண்டோ, தொலைக் காட்சியில் ஒரு தொடர் நாடகத்தைப் பார்த்துக் கொண்டோ காலாட்டிக் கொண்டு நகத்தால் கீரையைக் கிள்ளிப் போட்டுவிடலாம். அவ்வளவு அற்பமான எளிதான வேலை அது. ஆனால் கீரைகளினால் கிடைக்கின்ற பயன்கள் அப்படி ஒன்றும் கிள்ளுக்கீரையல்ல.

இன்னமும் கிராமத்து மக்களின் எளிமையான உணவு கீரை வகைகள்தாம். கிராமங்களில் சில வகைக் கீரைகளை இலவசமாகவே வயல் வரப்புகளில் பறித்துக் கொள்ளலாம், விலைக்கு வாங்குவதானாலும்கூட மிகவும் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம். கிராமங்களில், குறிப்பாக விவசாயம் செய்பவர்களிடம் "கீரைகளில் எத்தனை வகையானவை இருக்கின்றன?" என்று கேட்டால் ஒரு நீண்ட பட்டியலே தருவார்கள். இவற்றில் சில கீரைகள்தாம் எமக்கு நன்கு பழக்கப் பட்டவை. இலங்கை இந்திய நாட்டுக் கிராமப்புறங்களில் இவை இன்னமும் வளர்கின்றன. சில விற்பனைக்காக உண்டாக்கப் படுகின்றன. மழை காலங்களில் வயல் வரப்புகளிலும் மற்றும் இடங்களிலும் சில தாமாகவே வளர்கின்றன. இதில் இன்றைய சோகமான சங்கதி என்னவென்றால், கிராமங்களிலோ வயல் வெளிகளிலோ சில கீரை வகைகளைப் நேரில் பார்த்தாலும், அவை எந்தெந்த வகைக் கீரை, பயனுள்ள செடியா பயனற்ற செடியா என்று எங்களுக்கு அடையாளம் தெரிவதில்லை.

இந்தக் கட்டுரையில் வல்லாரைக் கீரையைப் பற்றிப் பார்க்கலாம். சிலர் வல்லாரையைக் கீரை என்று சொல்வதில்லை. மூலிகை என்றே சொல்கிறார்கள். அந்த அளவுக்கு வல்லாரை மருத்துவப் பயன்பாடுடைய ஒரு முக்கியமான தாவரம். பாரம்பரியமாக சித்த, ஆயுள்வேத மருத்துவத்தில் வல்லாரை ஒரு முக்கிய மூலிகையாகக் கருதப்பட்டது. வல்லாரை இலை, வேர், தண்டு, விதை அனைத்துமே மருத்துவத்திற்குப் பயன்பட்டது. ஆயிரம் வருடங்களுக்கு முன்பிருந்தே இந்தியா சீனா இந்தோனேஷிய நாடுகளில் வல்லாரை மருத்துவத்துக்கு மிகவும் உதவும் ஒரு மூலிகையாக பயன்பாட்டில் இருந்து வந்திருக்கிறது. புண்களை ஆற்றுவதற்கும் மனத் தெளிவைச் சீராக்கவும் தொழுநோய் போன்ற தோல் வியாதிகளைக் குணப்படுத்தவும் உபயோகப் படுத்தப்பட்ட மருந்துகளில் வல்லாரை முக்கிய இடம் வகித்தது. அதனால் இந்தியாவில் வல்லாரையை 'மூளை உணவு' என்றும் அழைத்தனர். வல்லாரை 'வாழ்வின் மந்திர சக்தி' என்றும் அழைக்கப்பட்டது. வல்லாரையை மருத்துவத்தில் கிரமமாக பயன் படுத்திய ஒரு சீன மூலிகை வைத்தியர் 200 வருடங்களுக்கு மேலாக உயிர் வாழ்ந்தார் என்ற ஒரு சீன பரம்பரைக் கதையும் உண்டு. சீன மருத்துவர்களும் திபெத்திய மருத்துவர்களும் வல்லாரையின் மருத்துவ மகத்துவம் பற்றி மருத்துவ நூல்களில் குறிப்பிட்டிருக்கின்றார்கள்.

இப்படியாக வல்லாரை மருத்துவ உலகில் கோலோச்சி வந்த காலத்தில், நாங்கள் ஏன் தலையைச் சுற்றி மூக்கைத் தொட வேண்டும்? நேரடியாகவே மூக்கைத் தொட்டால் என்ன என்ற எண்ணம் வல்லாரை மருந்துகளை அடிக்கடி சாப்பிட்டு வந்த ஒரு மாமனிதனின் மூளையில் பளிச்சிட்டது. நோய் வந்த பின்னர்





வல்லாரை சேர்ந்த மருந்துகளை உண்பதிலும் பார்க்க அவ்வப்போது வல்லாரையை உணவுடன் சேர்த்துச் சாப்பிட்டால் சில நோய்கள் வருவதையே தடுக்கலாமே அல்லது தள்ளிப் போடலாமே என்று அவன் எண்ணினான். இதுதான் சமையலறைக்குள் வல்லாரை வந்த வரலாறு. இதன் மருத்துவப் பயன்களை இயல்பாகப் பெறுவதற்காக வெவ்வேறு விதமாக உணவுக்குள் சேர்த்தோம். இதன் இலைகளில் வல்லாரைச் சம்பல், கறிவேப்பிலை, புளிமாங்காய் சேர்த்த வல்லாரை 'சுப்பர்' சம்பல், வல்லாரைத் துவையல், வல்லாரைக் கஞ்சி, பருப்புச் சேர்ந்த வல்லாரை அவியல், வல்லாரைப் பொடி என பல விதமாகச் சமையல் செய்து உணவாகப் பயன்படுத்தத் தொடங்கினோம். தேவை ஏற்படின் வல்லாரை இலைகளைப் பச்சையாக மென்று விழுங்கவும் ஆயத்தமானோம். பின்னர் வல்லாரைச் சாறு அருந்தும் வழக்கமும் ஏற்பட்டது.

வல்லாரைச் செடி ஆசியா, அவுஸ்திரேலியா நாடுகளுக்குரியது. இலங்கை, இந்தியா முழுவதிலும் மற்றும் இந்தோனேசியா, மலேசியா, திபெத், சீனா ஆகிய நாடுகளிலும் காணப்படுகிறது. சப்தமாதர்களில் பிராம்மி என்ற பெண் தெய்வமும் ஒன்று. இது பிரம்மாவின் சக்தி. வல்லாரைக்கும் பிராம்மி என்றொரு பெயர் உண்டு. மூளை, புத்தி, சிந்தனை, ஞாபகம் ஆகியவற்றை சிறப்பாக்குவதால் பல வைத்திய நூல்களில் வல்லாரையைச் சரஸ்வதி என்றும் குறிப்பிடுகிறார்கள். யோசனாவல்லி, பிண்டீரி, மண்டுகப்பரணி என்பன வல்லாரையின் வேறு பெயர்களாகும்.

வல்லாரை என்னும் இந்தக் கீரை கொடி போன்ற தோற்றம் கொண்டது. வல்லாரை இருவகைப்படும். சமவெளிகளில் வளரும் வல்லாரைக்கு வெளிர் பச்சை நிற இலைகள் இருக்கும். மலைப்பாங்கான இடங்களில் வளரும் வல்லாரைக்கு கரும் பச்சை நிற இலைகள் இருக்கும். மலைப் பகுதியில் வளரும் வல்லாரைக்குச் சக்தி அதிகம் என்று நம்பப்படுகிறது. இதன் இலைகள் கைவிசிறி வடிவத்தில் தட்டையாகவும் மென்மையாகவும் இருக்கும். ஒரு வல்லாரைச் செடியில் 3 - 5 நாவல் கலந்த செந்நிறப் பூக்கள் இருக்கும் என்பர். ஆனால் பூ, மொட்டு, காய்கள் வரும்வரை விட்டுவைக்காமல் இளம் செடிகளைச் சமையலுக்குப் பயன்படுத்துவதால் இதன் பூக்களையும் காய்களையும் பார்க்கும் வாய்ப்பு அரிது. வல்லாரைச் செடி வளர்வதற்கு அதிக நீர் தேவைப்படும். அதனால் இந்தச் செடி ஆற்றங்கரை ஓரங்களிலும் குளம் குட்டை ஓரங்களிலும் சாதாரணமாக வளரும். வல்லாரையைப் பற்றிய பின்வரும் பாடலைப் பாடியவர் பற்றிய விபரம் கிடைக்கவில்லை.

"அக்கர நோய் மாறும் அகலும் வயிற்றிழிவு
தக்க விரத்தக் கடுப்புத் தானேகும் -
பக்கத்தில்
எல்லாரையும் அருந்தென்றே யுரைத்து
நன்மனையுள்
வல்லாரையை வளர்த்து வை"

இருதய நோய்கள் பற்றி ஆய்வு செய்த ஒரு மருத்துவக் குழு வல்லாரை சேர்ந்த ஆயுள்வேத மருந்துகளைப் பயன்படுத்துவோருக்கு இரத்த உயரமுத்தம் குறைந்து காணப்பட்டதாக அறிக்கை செய்துள்ளது. வல்லாரை குளிர்ச்சித் தன்மை உடையது. நோய் எதிர்ப்புச் சக்தியை கூட்டும். இரத்த ஓட்டத்தை அதிகரித்து மூளையைப் பலப் படுத்தி மூளையின் செயற் பாட்டை வளரச் செய்யும். வல்லாரை இலைகளை இடித்துச் சாறெடுத்துப் பனங்கற்கண்டைச் சேர்த்துக் கொடுத்தால் பிரசவத்திற்குப் பின் தாயின் உடல்நிலை தேறும் என்ற நம்பிக்கை தென்னிந்தியாவில் பல இடங்களில் இன்னமும் இருக்கின்றது.

நமது முன்னோர் காவி கட்டிக் கொண்டு சொன்ன தியானம், ஜெபம், மனோசக்தி போன்ற தத்துவங்களை, மேலைத்தேசத்தவர்கள் 'திடீர் உணவு' மற்றும் 'துரித உணவு' போல இலகுவாக்கி "நினை நடக்கும்!" "எடு, தொடு, விடு!" "வாடா வாழ்வோம்!" என்பவை போன்ற அதிரடித் தலைப்புகளில் ஆங்கிலத்தில் நூல்களை வெளியிட்டு கோட்டுச் சூட்டுடன் நின்று விற்கிறார்கள். அவற்றை நாங்கள் வேட்டி சட்டையுடன் நின்று வாங்கிக் கொண்டு போய்த் தலையணைக்கு அடியில் பத்திரமாக வைத்திருக்கிறோம்.

தியானத்தைப் பற்றி நமது முன்னோர்கள் நிறையச் சொல்லியிருக்கிறார்கள். தியானம் என்பது விழிப்புணர்வுடன் தூங்கும் ஒரு பயணம் என்று அறிஞர் கூறுவர். அதாவது விழித்தபடியே தூங்கும் பயணம் இது. இந்தப் பயணம் உணர்வுபூர்வமாக உடலிலிருந்து மனத்துக்கும், மனத்திலிருந்து அறிவாற்றலுக்கும் செல்லும். இதனால் கிடைக்ககூடிய அளப்பரிய சக்தி உடல் பலத்தையும் அறிவுத் திறனையும் பன்மடங்காக்கும். பகுத்தறிவின் பூட்டைத் தட்டித் திறக்கும் மகிழ்ச்சியைப் பெருக்கும் மன நிறைவை ஏற்படுத்தும் ஆரோக்கியம் பெருகும்.

(நன்றி: - http://www.meditationguru.com)

தியானம் என்பது ஒன்றை முழு ஈடுபாட்டோடு இடையறாது நினைத்தல். அதற்கு நினைவாற்றலைப் பெருக்க வேண்டும் மனத்தை ஒருமுகப்படுத்த வேண்டும் சுவாசத்தைச் சீர்ப்படுத்த வேண்டும். நினைவாற்றலைப் பெருக்கவும் மனத்தை ஒருமுகப்படுத்தவும் நரம்புத் தளர்ச்சி மற்றும் நரம்புகள் தொடர்பான கோளாறுகளைக் குணப்படுத்தவும் வல்லாரை உதவும். நுரையீரல் பகுதியில் சேரக்கூடிய கபத்தை அகற்றிச் சீராக மூச்சுவிடவும்

49ம் பக்கம் பார்க்க...

FOR ALL MORTGAGE NEEDS



Rajmogan Selliah
Mortgage Consultant

Canada Trust  Scotiabank

2929 Lawrence Ave. East, Suite 203,
Scarborough, ON M1P 2S8
Head Office: 701 Evans Ave., Suite 600, Toronto, ON M9C 1A3
rajmoganselliah@invis.ca

Dir: 416.569.3200
Bus: 416.430.0111, Fax: 416.430.0222

digi

## எண்ணித்துணிக கருமம் துணிந்த பின் எண்ணுவம் என்பது இழுக்கு.

### உங்கள் கடன் பிரச்சினைகளை தீர்க்கும் போது அதனால் உருவாகும் நன்மை தீமைகளை சரியாக அறிந்துள்ளீர்களா?

## நீங்கள் எடுக்கும் நடவடிக்கையால்

- எதிர்காலத்தில் உங்கள் பிள்ளைகளின் கல்விக்கோ, அவர்களின் தொழில்துறைக்கோ பாதிப்புக்கள் வருமென எண்ணுகிறீர்களா?
- நீங்கள் ஒரு புதிய வேலைக்கு செல்லும்போதோ அல்லது வேறு வேலைக்கு மாறும்போதோ பிரச்சினைகள் வருமென்று எண்ணுகிறீர்களா?
- எதிர்காலத்தில் ஸ்பொன்சர் செய்யும் போது ஏதாவது பிரச்சினைகள் வருமென எண்ணுகிறீர்களா?
- உங்கள் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படுமென எண்ணுகிறீர்களா?

இவைபோன்ற பல கேள்விகளுக்கு சரியான பதில்களை அற்ந்துகொள்ள
இத்துறையில் பலவருட கால அனுபவமுள்ள
பல்லாயிரக்கணக்கான தமிழ்மக்களின் கடன் பிரச்சினைகளைத் தீர்த்துவைத்த

**CRCanada**

## அழையுங்கள்
## சங்கர் அல்லது கிறிஸ்

Having Difficulty
Repaying
Your Student Loan?
New Rule Changes
Can Help

## உங்களுக்குத் தெரியுமா?

நீங்கள் கட்டவேண்டிய கடன் தொகையிலிருந்து 15%-20%த்தை மட்டும் தவணை முறையில் கட்டிமுடிக்கலாம்.



T.SHANKAR
Director

# CRCanada
## Credit Reform Canada

*Judgement in your favour!*

885 Progress Ave, Unit - 202, Scarborough.

CRCanada **416-264-1010**

# Your life.
# Your career.
# *Your call.*

If you're looking for a career that offers the potential for financial success and have the drive, discipline, energy, and self-confidence to run your own business, then consider becoming a Sun Life Financial advisor. Contact us to learn more about this rewarding career opportunity.



**Chandran Rasalingam**
Sales Manager
Bus 416-412-0401 ext 305
Cell 416-909-0400
Fax 416-412-1438
gnanachandran.rasalingam@sunlife.com

2075 Kennedy Road, Suite 1300
Scarborough ON M1T 3V3

Sun Life Financial

Sun Life Financial advisors are contracted with Sun Life Financial Distributors (Canada) Inc., registered in Quebec as a financial services firm.
© Sun Life Assurance Company of Canada, 2008.

# பாதுகாப்பான மற்றும் சௌகரியமான உறக்கம்



## பாதுகாப்பு

Solutions of Home Security Inc.

Authorized Dealer ADT Security Services

### How do Burglars Get into your home?

Statistics show that burglars enter homes using the following entrances,

- 2% from the 2nd floor
- 4% from the basement
- 6% using unlocked entrances
- 9% from the garage
- 22% from the back door
- 23% from the 1st floor windows
- 34% from the front door

உங்கள் இல்லங்களைப் பாதுகாத்துக்கொள்ள இன்றே அழையுங்கள்

E-mail: info@quickhomesecurity.com
Web: www.quickhomesecurity.com

## சுத்தம்

### For all kind of Vacuums

- Central Vacuum Systems
- Commercial Vacuums
- Comfortable & easy to use Vacuums
- Clean hard-to-reach areas
- Great for pets and allergens
- Environmentally friendly products
- Less Energy and Resources
- Whole house cleaning convenience
- Central Vacuum Power Units
- Central Vacuum Yellow Jacket

**Contact Raman Appliances for all your Cleaning needs and enjoy the comfort of your home.**

EUREKA® Invented for the way you clean
Authorized Dealers



## இதமான காலநிலை



### For all your Heating Needs

**Gas Furnaces:**
Every model in our Freedom® Furnaces family is designed to provide maximum heat for minimum fuel usage. The ultimate models even reduce temperature swings and short cycling.

**Oil Furnaces:**
Our oil furnaces are durably constructed with only the finest materials and components. So you can rest easily and warmly. Freedom® 80 oil furnaces heat your home quickly and efficiently, even during the toughest winters.



### For all your Cooling Needs

Stay cool and save a comfortable amount of money with American Standard Air Conditioning's line of Allegiance® air conditioners. Our air conditioners range in efficiency from 13 to 18+ SEER - among the highest efficiency ratings in the industry.

Our Allegiance® family offers a wide range of comfort choices, plus exclusive state-of-the-art technology the quietly, meticulously and efficiently conditions your air. Get ready for a level of comfort you and your family may never have experienced before.

American Standard
HEATING & AIR CONDITIONING
Authorized Dealers

Heating & Air-conditioning Contractors.
Raman Appliances Inc.
www.raheatingcooling.com

## Raman Appliances

## Raman Chelliah

3021 Markham Rd. Unit 51, Scarborough ON. M1X 1L8
**Tel: 416.332.1989**
**Cel: 647.893.4414**
Fax: 416.332.4967
E-mail: info@raheatingcooling.com



# எல்லாமும் எல்லோரும் பெற வேண்டும்

## Non Medical Insurance up to Age 85

- Life Insurance
- Critical Illness Insurance
- Disability Insurance
- Mortgage Insurance
- Home Equity Line of Credit
- RESP / RRSP




INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES INC.
RBC Insurance
Manulife Financial
Unity Life of Canada
Canada Life




3 Bedroom + 1 Washroom
**$ 184,900**



3+1 Bedroom, 3 Washroom
**$ 349,900**



3 Bedroom + 2 Washroom
**$ 229,000**




3+1 Bedroom + 3 Washroom
**$ 335,000**



2 Bedroom + 1 Washroom
**$ 199,000**



3+1 Bedroom, 1 Washroom
**$ 269,900**



2+1 Bedroom + 2 Washroom
**$ 227,000**



3 Bedroom + 2 Washroom
**$ 229,500**



3 Bedroom +2 Washroom
**$ 235,000**



3+2 Bedroom, 2 Washroom
**$ 274,900**



3+1 Bedroom + 3 Washroom
**$ 229,900**



2 Bedroom + 1 Washroom
**$ 189,900**



2 Bedroom + 1 Washroom
**$ 79,000**




Gas Station
**$ 199,000**




3 Bedroom + 3 Washroom
**$ 285,000**



2 Bedroom + 2 Washroom
**$ 88,888**

Apex Creations - 416-297-0707

RE/MAX®
**Rouge River Realty Ltd. Brokerage**
Independently Owned and Operated
37-31 Tapscott Rd. Toronto, ON. M1B 4Y7
Tel : 416-321-1999 Fax : 416-321-2290

## Uthayan Nadarajah
Broker
**Direct : 416-727-9945**



# ‘விடுவிக்கப்பட்ட பகுதி’களிலிருந்து எழும் அவலங்களின் இலக்கிய சாட்சியம்



தேவகாந்தன்

அண்மையில் எனக்கு வாசிக்கக் கிடைத்த நூல் ‘ஒரு மரணமும் சில மனிதர்களும்’. தாட்சாயணி எழுதியது. பன்னிரண்டு சிறுகதைகளின் தொகுப்பு. இதை எழுதியவரைப்பற்றி ஏற்கனவே கேள்வியில் பட்டிருந்தபோதும், இந்நூலைக் கண்டபோது மணிமேகலைப் பிரசுரமாக இது வெளிவந்திருந்த காரணம் சுட்டியே இதை வாங்க மனம் பின்னடித்துவிட்டது.

வாசிப்பு என்பது தொழில் சார்ந்த விஷயமல்ல. மனம் சார்ந்தது. பசி வந்தால் ருசி வேண்டாம், நித்திரை வந்தால் பாய் வேண்டாம் என்று எங்கள் ஊரில் ஒரு சொலவடையுண்டு. பசிக்கு ருசி வேண்டாமென்றாலும், மனப் பசிக்கு ருசியும் தேவை. அந்த ருசியை அடைவதற்கான பண்டத்தின் பரிமாற்றமும் அழகியலோடு இருக்கவேண்டுமென்ற எதிர் பார்ப்பு எல்லாரிடமும்தான் இருக்கிறது. பண்டத்தின் தன்மையைக்கூட இந்தப் பரிமாற்றத்தின் அழகியல் காட்டிக்கொடுத்துவிடுகிறது என்பதையும் நாம் புரிந்துகொண்டிருக்கிறோம். இந்த அடிப்படையில் என் தயக்கத்தை உங்களால் புரிந்துகொள்ள முடியுமென நினைக்கிறேன்.

வாசிப்பை, மைதுனத்தின் கிளர்ச்சி தரும் கூறாகக் கூட விமர்சகர்கள் சிலர் சுட்டியிருக்கிறார்கள். என்றாலும் வாசிப்பு தன்னை மறப்பதற்கான உத்தி, தன்னை அடையாளம் காண்பதற்கான திறவுகோல் என்ற கருத்துக்களையாவது நாம் விவாதமின்றி ஒப்புக் கொண்டுவிட முடியும். அதன் பண்பாட்டுத் தேவை சார்ந்த கூறுகளையும் மறுப்பதற்கில்லை. ஒரு காலகட்டத்தின் வரலாற்றுப் பதிவுகளாகவும் இலக்கியம் அமைந்துவிடுகிறது. வாசிப்பின் சுகிப்பு என்ற தனிமனித எல்லையைத் தாண்டி, இந்த பதிவாகுதல் என்ற அம்சம் ஆகக்கூடுதலான நன்மையைச் சமூகரீதியாக நிறைவேற்றியிருக்கிறது என்பது ஒரு சரியான கணிப்பீடேயாகும்.

காலகாலமாக வரலாற்றில் இடம்பெற்று வந்திருந்த மோசடிகள் மற்றும் மறைப்புகளை, பின்னால் எழுந்த சில இலக்கிய முயற்சிகள் தோலுரித்து அம்பலப்படுத்தியுள்ளதை இந்நேரத்தில் எண்ணிக்கொள்ள முடிகிறது. இலக்கியத்தின் புனைவுத் தன்மை மூலமாகவே விடுபட்ட வரலாற்றின் சில பக்கங்கள் மீளக் கண்டடையப்பட்டன என பின்நவீனத்துவ விமர்சகர் கூறுவர். Alternative History என்ற ஒரு வகைப்பாடே இலக்கியத்தில் உண்டு. இதுபற்றி மிகச் சுவாரஸ்யமான பல விஷயங்கள் உள்ளன. அதன் விவரணம் இப்போது இங்கே அவசியமில்லை.

வாசிப்பு சூழ்நிலைமை சார்ந்ததும் ஆகும். வாசிப்போனின் அனுபவம் ஒரு கூறாக, வாசிப்பின் சூழ்நிலை இன்னொரு கூறாக பிரதியின் அர்த்தமும் பயனும் அமையும் என்பது பொதுப்புத்தியிலும் விளங்கக்கூடியதே. ‘ஒரு மரணமும் சில மனிதர்களும்’ சிறுகதைத் தொகுதியின் வாசிப்பு, ஒரு மகத்தான அவலத்தை என் முன் நிறுத்தியது. அந்த உணர்வையும், அதன் மூலமாக இலக்கியப் பிரதியொன்று பதிவாக ஆகியிருக்கின்ற தன்மையையும் எடுத்துக்காட்டுவதே இந்த உரைக்கட்டின் நோக்கம்.

வாசிப்பு இப்போதெல்லாம் மந்தமாகவே இருக்கிறது. நாட்டில் நாள்தோறும், நாள்கள் தந்த வாரம்தோறும், வாரங்கள் தந்த மாதம் தோறும் தமிழ் உடன்பிறப்புக்களின் மரணங்களை அறிந்து அறிந்து மனம் மறுகிக்கொண்டிருக்கிற வேளையிது. உயிர்ப்பு, உணவு, அதற்கான உழைப்பு என்றளவில் வாழ்க்கையின் பரிமாணம் அடங்கிப்போயிருக்கிறது. தமிழ் மக்களின் அழிப்பினது உச்சம் என்றளவில் மட்டுமல்லாது, அதன் முன்னெடுப்பில் காட்டப்படும் அக்கிரமங்களிலும் அநீதிகளிலும் மனம் கொதித்துப் போயிருக்கிறது. இத்தகைய அதி உச்சபட்ச மோசமான கட்டமானதால்தான் ஈழத் தமிழ்ச் சிறுகதைத் தொகுப்பான அந்த நூலை வாங்கவும் நேர்ந்திருக்கிறது என இப்போது நினைக்கத் தோன்றுகிறது.




சிறீலங்கா அரசாங்கத்தின் தமிழ்நில அபகரிப்பின் மறைமுக நடவடிக்கைகளுக்கு ஒரு நூற்றாண்டுச் சரித்திரமுண்டு. ஆனால் நேரடி நடவடிக்கைகள் ‘பயங்கரவாதத்துக்கெதிரான யுத்தம்’ என்ற பெயரில் தொடங்கப்பட்டு வெகுகாலமில்லை. யாழ்ப்பாணம் அபகரிக்கப்பட்டபோது, அந்தப் பகுதியை பயங்கரவாதத்திலிருந்து மீட்டுவிட்டதாகவே அரசு தெரிவித்தது. அதை ‘விடுவிக்கப்பட்ட பகுதி’ யாகவும் அறிவித்தது. அதுபோல் ஏனைய பகுதிகளும் விடுவிக்கப்படும் என முன்னறிவிப்புச் செய்தது. அதன் பிரகாரம் கிழக்கினை விடுவிக்கும் யுத்தம் தொடங்கியது.

> “ யாழ் மண்ணில்
> தமது சொந்த உறவுகளின் இறப்புக்குக்கூட
> வாய்விட்டு அழமுடியாத மக்களின் சோகத்துக்கு
> நிகரான சோகம் எங்கேனும் இருக்கமுடியுமா?
> மனம் பதைத்து விறைத்துப்போகிறது. ”

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழர் தரப்பு அடைந்த மகத்தான வெற்றியை சிங்களப் பேரினவாதத்தினால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அது இன்னுமின்னும், இத்தனை இனக்கலவரங்களின் பின்னும்கூட எப்படி தமிழ்நிலமாக இருக்கமுடியுமென அது அங்கலாய்த்தது. திருகோணமலையை அது இழக்க தயாராகவே இல்லை. அதை திட்டமிட்ட அல்லது திட்டமிடாத வகையிலேனும் சிங்கள நிலமாக மாற்ற அது தீர்மானமெடுத்தது. அதன் வெளிப்படையான நடவடிக்கைதான் புத்தகோயில் நிர்மாணம்.

பின்னர் வடக்கு - கிழக்கு ஒன்றிணைப்பு சிதறிடிக்கப்பட்டு, படையெடுப்பு தொடங்கியது. கிழக்கும் அரசாங்கம் வசமானது. எஞ்சிய பகுதி வன்னிதான். அதன்மேலும் யுத்தம் தொடர்ந்தது. யுத்தத்தில் முக்கியமான பக்க விளைவு இடம்பெயர்ந்த லட்சக்கணக்கான மக்கள் கூட்டம். தமிழ் மக்கள் உத்தரித்த அவலம் சொல்லி மாளாது. சொல்லிலும் மாளாது. இன்று சிங்களப் பேரினவாத அரசு யுத்தத்துள் அகப்பட்ட மக்களை வவுனியா சென்றுசேரும்படி அறிவித்துக்கொண்டிருக்கிறது. அவ்வாறு சென்று சேர்வதில் மக்கள் காட்டிய தயக்கத்தை சர்வதேச சமூகமே ஏதேதோ காரணங்களைக் கூறி குற்றஞ்சாட்டியது. பாதுகாப்பு வலயம் தமிழர்களின் கல்லறையாக ஆவதைப்போல, வவுனியாவின் அரச கட்டுப் பாட்டுப் பகுதி அங்கு செல்லும் தமிழர்களுக்கு சிறையாக, சித்திரவதைக்கூடமாக மாறியிருக்கிறது. யாழ்ப்பாணம் ஒரு திறந்தவெளிச் சிறையாகவே இருக்கிறதென்பது எவ்வளவு உண்மை! அது தன் இனச் சூறையில் கொதித்துப்போயிருந்த மண். அதை அடங்கியிருக்கச் செய்வதற்கான வன்முறையின் கோரம் எத்தகையதாக இருந்திருக்க முடியும்! நினைத்தாலே நெஞ்சு பதைக்கிறது.

இதை இலக்கியப் பதிவாக முன்வைத்திருக்கிறது, தாட்சாயணியின் ‘ஒரு மரணமும் சில மனிதர்களும்’ சிறுகதை.
கதைகளாக, கவிதைகளாக இதேபோல் பல்வேறு படைப்புக்கள் வெளிவந்திருக்கின்றன. ஆனாலும் இதை இங்கே நான் எடுத்துக் கொண்டிருப்பதற்கு இதன் வீறார்ந்த இலக்கியத் தகைமையே முக்கிய காரணமாகிறது.

1999இல் ‘சஞ்சீவி’ இதழில் வெளியான தாட்சாயணியின் இச் சிறுகதை, 2001இல் பல்கலைக் கழக வெளியீடாக வந்த தொகுப்பிலும் இடம்பெற்றிருக்கிறது. யாழ் பல்கலைக்கழகம் போராட்ட முன்னெடுப்பிலும், இலக்கிய விழிப்பிலும் காட்டிய அக்கறைகள் மகத்தானவை. இவற்றின் சவஅடக்கப் பூமியாக இன்று ஆக்கப்பட்டிருக்கிறது அது. ஆனாலும் உள்ளிருந்து கிளரும் உணர்வுகளின் வெளிப்பாடு எழுத்துக்களில் பதிவாகிவிடுகின்றது. அவ்வாறானவை இலக்கியத் தரமாகிறபோது கவனம்பெறுகின்றன. அவ்வாறு என் கவனத்திலான ஒரு சிறுகதைதான் ‘ஒரு மரணமும் சில மனிதர்களும்’.

இன்று சிறுகதையின் இலக்கணங்கள் மாறி விட்டிருக்கின்றன. சிறுகதையென்றால் என்ன? என்பது மாதிரியான நூறு புத்தகங்களாவது தமிழில் உண்டு. புதுமைப்பித்தன்கூட சிறுகதைக்கான விளக்கத்தைக் கூறியிருக்கிறார். எனினும் இன்றைய சிறுகதையின் இலக்கணம் அன்றுபோல் இல்லை. மாறியிருக்கின்றது. அது மாறியிருப்பதைவிட, மாறி உணரப்பட்டிருப்பதுதான் அதிகம். வாசிப்புக்கான ஒரு சிறிய வடிவத்தில் எதுவுமேதான் இன்று சிறுகதையெனப்படுகிறது. இதன் சரியையோ பிழையையோ நான் பேசவரவில்லை. பத்திரிகை, சஞ்சிகைகளின் தேவைக்கான ஒரு வார்ப்பாக அல்லது வடிப்பாகவே நான் இதைக் காண்கிறேன். ஆனாலும் பிரதியின் உள்ளடங்கிய தொனி, ஊடோடிய மவுனம் என்பன எழுத்தின் அசைவிறுக்கத்தைக் குலைக்கக்கூடியன என்பதில் எனக்கு மாறுபாடான கருத்தில்லை.

‘ஒரு மரணமும் சில மனிதர்களும்’ சிறுகதை, வன்னியிலிருந்து விடுவிக்கப்பட்ட பகுதியிலிருக்கும் அம்மம்மாவினதும், சின்னம்மா குடும்பத்தினதும் வீட்டுக்கு நயனியின் வருகை ஏற்படுத்தும் மகிழ்வு கலந்த சந்தடியோடு ஆரம்பிக்கிறது. சிலநாட்களே அங்கே தங்கப் போகும் நயனி, தன் இளமைக்கால நிகழ்வுகளின் சுகிப்பிலும், உறவுகளின் அரவணைப்பிலுமாய் நாட்களைக் கழிக்கிறாள். திடீரென அவள் பிரிந்து செல்லவேண்டிய நாள் வருகிறது. எல்லாரிடமும் சொல்லிக்கொண்டு நயனி செல்கிறாள்.

அடுத்தடுத்த நாள் பத்திரிகையில் வரும் போட்டோவுடன்கூடிய கரும்புலியின் தற்கொலைத் தாக்குதல்பற்றிய செய்தியிலிருந்து நயனி இல்லாமற்போய்விட்டமையை அறிந்து குடும்பமே துடித்துப்போகிறது. ஆனால் மனத்துள்ளாய்க் கதறுபவர்களால் நயனிக்காக வாய்விட்டு அழுது மனம் ஆறமுடியாத நிலை. அந்த வீட்டில் இருக்கும் இளையோரின் பாதுகாப்புக் கருதி ஒரு மரணத்தின் அவலம் அந்த வீட்டாரினால் மூடிவைக்கப்படுகிறது.

நான்கைந்து நாட்களின் பின் அடுத்தடுத்த வீட்டில் ஒரு விபத்து மரணம் சம்பவிக்கிறது. அந்தச் சாவு வீட்டிற்குச் செல்லும் அம்மம்மா, சிறியதாயார் ஆகியோர் அங்கு எழுப்பும் அழுகையிலும் ஒப்பாரியிலுமாக தமது சொந்த இழப்பினை ஆற்றிக்கொள்வதாகத் தெரிவிப்பதோடு கதை முடிகிறது.

யாழ் மண்ணில் தமது சொந்த உறவுகளின் இறப்புக்குக்கூட வாய்விட்டு அழமுடியாத மக்களின் சோகத்துக்கு நிகரான சோகம் எங்கேனும் இருக்கமுடியுமா? மனம் பதைத்து விறைத்துப்போகிறது.

சம்பவங்களின்மூலம் இந்த முடிவினை வாசகன் அனுமானித்துக்கொள்ளத்தான் முடிகிறது. எதுவுமே விபரமான பதிவாக சிறுகதையில் அமைந்திருக்கவில்லை. இந்த மவுனத்தின் இலக்கியத் தகுதி மகத்தானது. எதையும் இயல்பாகச் சொல்லிவந்து வாழ்வின் இயல்பிழப்பை ஒரு சூட்சுமத்தில் சொல்லிச் செல்லும் இந்த உத்திதான் தென்னமெரிக்க கலைஞர்களிடம் ஒருகாலத்தே காணப்பட்ட இலக்கியக் குணாம்சம். இன்றும்தான் அங்கு பெருமளவில் இந்த நிலைமை மாறிவிடவில்லை. ஆனால் ஈழத்தில், குறிப்பாக ‘விடுவிக்கப்பட்ட பகுதிக’ளில், இதுதான் இன்றைய எதார்த்தம்.

இது இலக்கிய உத்தியாக அல்ல, வாழ்வியலாக வருகிறபோது மனம் அதிர்கிறது.

இம்மாதிரி உத்தியில் அமையும் கதைகளில் மொழியின் வலு அசாதாரணமாகக் கூடியிருக்கும். ஆனால் ‘ஒரு மரணமும் சில மனிதர்களும்’ சிறுகதை இந்தப் பலமின்றியே தன் இருப்பைப் பலமாக்கியிருக்கிறது.

நீண்டகாலத்துக்கு நின்று நிலைக்கக்கூடிய சிறுகதை.

தாட்சாயணியின் உண்மையான பெயரென்ன, அவரது பிறந்த வளர்ந்த வாழும் இடம் பற்றியெல்லாம் இவ்வளவு தொலைவிலிருந்தும்கூட எனக்கு எழுதப் பயமாக இருக்கிறது. சிறீலங்கா ஜனநாயகம் செத்திருக்கிற நிலம்.

devakanthan@thaiveedu.com

■ ■ ■




# வங்கிக் கடன் தொல்லைகளிலிருந்து விடுதலை

## NEW LIFE FRESH START

- கடன் 80% குறைய நடவடிக்கை
  **Reduce your debts upto 80%**
- கடனுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
  **Stop all interest on your debts**
- கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புக்கள், சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்
  **Stop collection calls, legal action & garnishments**
- உங்கள் சொத்துக்கள் பாதுகாக்கப்படும்
  **Protect all your assets**
- மாதாந்த ரீதியில் எலங்லாக்கடனையும் தீர்க்க வசதி செய்தல்
  **Make one monthly payment to all of your creditors**
- வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்
  **Give you solutions with out bankruptcy**

digi Media

வங்குரோத்துக்கு சட்டங்களில் மாற்றங்கள் வரவிருக்கின்றன. மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்
**New Changes are coming from Bankruptcy Act. Call me for Details.**

## Suren Sornalingam

Certified Insolvency Counsellor

Tel: **416.264.1272**

Fax: 416.332.0914

web: www.creditrecoverycanada.com



crc

## CREDIT RECOVERY CANADA

55 Town Centre Court, Suite 700,
Scarborough, ON
M1P 4X4

## காதல் வாழ்க்கை - 5

# கள்வன் மகள்



வி. கந்தவனம்

இவனுக்கு மிகச் சிறிய வயதிலிருந்தே அவளைத் தெரியும். தீராத விளையாட்டுப் பிள்ளையாகத் தெருவிலே அவளோடு இவன் விளையாடியிருக்கின்றான். பின்னர் வளர்ந்து பெரியவனாகியும் அவளது நினைவு இவனை விட்டு அகல்வதாக இல்லை. பெற்றோர் முன்புபோல வெளியிலே விடுவார்களா, என்ன?

இரவிலும் பகலிலும் அவளைக் காண்பதற்கு இவன் எடுத்த முயற்சிகள் யாவும் பயனற்றுப் போயின. அவளுக்கு ஒரு தோழி இருந்தாள். அவளையும் இவனுக்கு நன்கு தெரியும். அவள் மூலமாகத் தன் காதலியைக் காணலாம் என்றால் அவளையும் காணவில்லை.

வேறு வழியின்றி ஒருநாள் நேராகக் காதலியின் வீட்டக்கே சென்று விட்டான் இவன். என்ன துணிச்சல்! இளங் கன்று பயம் அறியாது என்பார்கள். என்ன வந்தாலும் வரட்டும் என்று எவ்வித அச்சமும் இன்றித் தனது இதயம் கவர்ந்த தலைவியின் வீட்டு முற்றத்தில் போய் நின்றான்.

அங்கே ஒரு நாடகமே நடந்து ஓய்ந்தது. அதனைத் தொடர்ந்து தலைவிக்குத் தூக்கமே வரவில்லை.

சில நாட்கள் கழித்து வெளியூரில் உள்ள தனது உறவினர் வீட்டுக்குச் சென்றிருந்த தோழி வந்தாள். அவளுக்கு நடந்த அந்த நாடகத்தை விவரித்தாள் தலைவி.

'ஒளிபொருந்திய வளையல்களை அணிந்த தோழியே, இதனைக் கேள்: முன்பு தெருவில் நாம் தெருவிலே மணலால் சிறுவீடு கட்டிச் சோறுகறி சமைத்து விளையாடியபோது மணல் வீட்டைக் காலால் சிதைத்தும், கூந்தலில் அணிந்த பூக்களைப் பிடுங்கியும், வரியினையுடைய பந்தை எடுத்துக்கொண்டு ஓடியும், நாம் வருந்தும்படி குறும்புகள் செய் தானே ஒரு சிறிய கட்டாக் காலி! (அவனை நினைவிருக்கிறதா?)

'அவன் ஒருநாள் நானும் என் அன்னையும் வீட்டில் இருந்தபோது வந்து தண்ணீர் விடாய்க்கிறது என்றான். அவ்வளவில் என் தாயார், தகட்டுப் பொன்னாற் செய்த செம்பிலே நீரை வார்த்து உண்ணக் கொடு என்று என்னைப் பணித்தாள். யானும் அவனின் இயல்பை உணராதவளாய் தண்ணீரைக் கொண்டுபோய் அருந்தக் கொடுத்தேன். கொடுத்த போது அவன் எனது வளையல் அணிந்த முன் கையை இறுக்கிப் பிடித்து இழுத்தான். நான் அச்சமுற்று 'தாயே இவனின் செயலைப் பார்' என்று கத்தினேன்.

> "தண்ணீரைக் கொண்டுபோய் அருந்தக் கொடுத்தேன். கொடுத்தபோது அவன் எனது வளையல் அணிந்த முன் கையை இறுக்கிப் பிடித்து இழுத்தான். நான் அச்சமுற்று 'தாயே இவனின் செயலைப் பார்' என்று கத்தினேன்."

'அன்னையும் அலறியபடி ஓடோடி வந்தாள். அப்பொழுது (என்னையறியாமல்) நடந்ததை மறைத்து' நீர் அருந்துகையில் இவன் விக்கி வருந்தினான்' என்று ஒரு பொய்யைச் சொல்லிவிட்டேன். உடனே தாய் அவனின் முதுகைப் பலமுறை தடவினாள். அப்பொழுது என்னைக் கடைக்கண்ணால் கொல்வான் போல நோக்கி தனது மகிழ்ச்சியைப் புலப்படுத்தி நின்றான் அக் கள்வன்'.

இவ்வரிய காதற் காட்சி கலித்தொகையில் வருகின்றது. பாடல் பினவருமாறு:

சுடர்த்தொடீஇ கேளாய் தெருவில் நாம் ஆடும்
மணற்சிற்றில் காலிற் சிதையா அடைச்சிய
கோதை பரிந்து வரிப்பந்து கொண்டோடி
நோதக்க செய்யுஞ் சிறுபட்டி மேலோர்நாள்
அன்னையும் யானும் இருந்தேமா 'இல்லிரே
உண்ணுநீர் வேட்டேன்' எனவந்தாற்கு அன்னை
'அடர்பொற் சிரகத்தால் வாக்கிச் சுடர் இழாய்
உண்ணீர் ஊட்டிவா' என்றாளென யானும்
தன்னை அறியாது சென்றேன் மற்று என்னை
வளைமுன்கை பற்றி நலியத் தெருமதிட்டு
'அன்னாய் இவனொருவன் செய்தது காண்'
என்றேனா
அன்னை அலறிப் படர்தரத் தன்னையான்
'உண்ணுநீர் விக்கினான்' என்றேனா
அன்னையும்
தன்னைப் புறம்பழித்து நீவ மற்று என்னைக்
கடைக்கண்ணால் கொல்வன்போல் நோக்கி
கைக்கூட்டம்
செய்தான் அக்கள்வன் மகன்.

-கலித்தொகை: குறிஞ்சிக்கலி 15-

சுடர்தொடீஇ - ஒளிபொருந்திய வளையல்களை அணிந்தவளே: அடைச்சிய – செருகிய: கோதை – சடைமாலை: பரிந்து - பிடுங்கி: சிறுபட்டி - கட்டுக் காவல் அற்றவன்: சிரகம் - நீர்ச் செம்பு: வாக்கி – வார்த்து: தன்னை – தலைவன்: தெருமந்திடல் - மனச் சுழற்சி பெறல், அச்சமுறுதல்: நீவு – தடவு.

தோழிக்கு யாவும் விளங்கிவிட்டது. தலைவன் வெறும் தண்ணீருக்காக வரவில்லை. தலைவியைக் காணவேண்டும் என்பதே அவன் நோக்கம். ஏன் காண வேண்டும்? தலைவியை அவன் விரும்புகின்றான். இல்லையென் றால் அவள் கையைப் பிடிப்பானா? நிச்சயம் தலைவியைக் காண்பதற்கு அவன் பல தடவை முயன்றிருக்க வேண்டும். வெளியில் தலைவியைச் சந்திக்க முடியாத காரணத்தால் அவளைக் காண வேண்டும் என்னும் வேட்கையால் வீட்டுக்கே வந்துவிட்டான்.

இனி, தலைவியும் அவனைக் காதலிக்கின்றாள் என்பது வெளிப்படை. அவன் தன் கையைப் பிடித்ததை மறைத்து தண்ணீர் விக்கிவிட்டது என்று சொல்லி அவனைக் காப்பாற்ற முயன்றதிலிருந்தே அது நன்கு தெரிகிறது. மேலும் 'கொல்வான்போல பார்த்தான்' என்கிறாளே, பொய் சொன்னது இவள் அவன்மீது கொண்ட அன்பினைக் காட்டுகின்றது. 'கொல்வான்போல் பார்த்தான்' என்பது அவன் இவள் மீது ஆராக் காதல் கொண்டுள்ளான் என்பதை உணர்த்துகின்றது. மேலும், அவனைக் 'கள்வன்' என்று சொல்லித் தனது உள்ளத்தை அவன் திருடிக் கொண்டமையையும் அவள் உணர்த்துகின்றாள். இவள் அவனைக் கூடுவள் என்பது உறுதி.

இவ்வாறு தோழி சிந்தித்துத் தலைவியின் நிலையைத் தனக்குள் தெளிவுபடுத்திக் கொள்கிறாள். இனிமேல் அவர்கள் சந்திப்புக்கு ஒழுங்கு செய்யலாம். செய்வது தனது கடமை என்பதையும் அவள் உணர்வாள்.

kanthavanam@thaiveedu.com

■ ■ ■

# வல்லாரைக் கீரை...

42ம் பக்கத் தொடர்ச்சி...

வல்லாரை வழி வகுக்கும்.

கண்களில் ஏற்படும் அரிப்பு, நீர் வடிதல், வீக்கம் போன்ற தொந்தரவுகளைச் சீராக்கிக் கண்களை ஒளிபெறச் செய்யும். மலச் சிக்க லைப் போக்கும். குரல்வளத்தை நன்றாக்கும். வல்லாரைக் கீரையை அடிக்கடி உணவில் சேர்த்தால் குடல் புண், வயிற்றெரிச்சல், வாய்ப்புண், தொண்டைக் கமறல், வெளிப்புண்கள், வீக்கங்கள் ஆகியன குணமாகும். வெறும் வயிற்றில் வல்லாரை இலைகளை மென்று சாப்பிட்டாலும் குடல்புண், வாய்ப்புண் குணமாகும். மன நோய்களை அமைதிப்படுத்தும்.

வல்லாரைக் கீரையை உண்பதினால் ஆண் பெண் இருபாலாருக்கும் பொதுவாக ஏற்படக்கூடிய கை, கால் முட்டுவலி, கண் விழித்து வேலை செய்வதாலோ படிப்பதாலோ வரக்கூடிய கண்வலி மூலச்சூடு மற்றும் பருவ வயதில் வரக்கூடிய முகப் பருக்கள் ஆகியன தீரும். இடுப்புவலி, இதயவலி மற்றும் பெண் களின் மாதவிடாய்க் கோளாறுகளுக்கும் வல்லாரை நல்ல மருந்து.

கர்ப்பமான பெண்கள் வல்லாரையை சாப்பிட்டு வந்தால் அழகும் அறிவாற்றலும் மிக்க குழந்தை பிறக்கும் என்ற நம்பிக்கை தமிழ்ப் பெண்களிடையே உண்டு. அத்துடன் குழந்தைக்குக் கர்ப்பத்திலேயே நோய் எதிர்ப்புச் சக்தியும் அதிகரிக்கும் என்று சொல்லப்படுகிறது.

வல்லாரை தொடர்பான சில 'கைவைத்தியங்களைப்' பார்க்கலாமா?

- வல்லாரைச் சாற்றுடன் அரைத் தேக் கரண்டி தேன் கலந்து அருந்தினால் இரத்தசோகை இல்லாமல் போகும்.
- வல்லாரை இலைகளைக் காய வைத்து இடித்த கால் தேக்கரண்டி பொடியைத் தினமும் தேன் அல்லது பசும்பாலோடு அருந்தினால், பார்வை மங்கல் சீராகும். அத்துடன் உடற்சோர்வு, நரம்புத் தளர்ச்சி, ஆண்மைக் குறைவு என்பன ஓடிப் போகும்.
- வல்லாரை இலையைப் பசு நெய்யோடு சேர்த்துக் கொதிக்க வைத்து ஆறியபின் பழைய புண்கள், எக்சிமாவில் தடவினால் அவை மாறும்.
- 1/2 தேக்கரண்டி வல்லாரைப் பொடியை 1 கப் தண்ணீரில் கொதிக்க வைத்து வடி கட்டி இரவில் படுக்குமுன் குடித்தால் தூக்கமின்மை தூரப் போகும்
- 5 வல்லாரை இலைகளை இடித்துச் சாறெடுத்து ஒரு தேக்கரண்டி தேனுடன் சேர்த்துத் தினமும் ஞாபகமாக உண்டு வந்தால் ஞாபகமறதி மறைந்து போகும்.
- சுத்தம் செய்த வல்லாரைக் கீரையில் பத்து இலைகளையும் ஐந்து மிளகையும் சேர்த்து அரைத்து மோரில் கலந்து காலையில் வெறும் வயிற்றில் மூன்று மாதம் குடித்துவர பலயீனப்பட்ட உடல் இறுகிப் பலம்பெறும் நரம்புத் தளர்ச்சி நீங்கும்.
- மூன்று நான்கு வல்லாரை இலைகளை சீரகம் சர்க்கரையுடன் அரைத்துக் கொடுத்தால் குழந்தைகளின் சீதபேதி நிற்கும்.
- வல்லாரைத் துவையல் செய்து சாப்பிட் டால் வாந்தி குமட்டல் வராது.
- வல்லாரைக் கீரையைப் பால்விட்டு அரைத்து நெல்லிக்காய் அளவு உருட்டித் தினமும் உண்டால் காசநோய் கட்டுப்படும்.
- வல்லாரைக் கீரையை அரைத்துச் சாறெடுத்து அதிமதுரத்தைத் தூள் செய்து பசும் பால்விட்டுக் கலக்கிக் குடிக்க வயிற்று வலி வணக்கம் கூறி விடைபெறும்.
- வல்லாரைச் சாறு இரண்டு பங்குடன் ஒரு பங்கு நல்லெண்ணையைச் சேர்த்துத் தைலம் காய்ச்சித் தலையில் தேய்த்துக் குளித்துவர தலை வலி, மூளை அயர்ச்சி, தலைப் புண் போன்றவை குணமாகும்.

கீரைகள், மூலிகைகள் காய்கறிகள் மற்றும் பழவகைகளின் உபயோகம் பற்றியும் பயன் கள் பற்றியும் பல நூறு வருடங்களாகப் பேசப்பட்டும் எழுதப்பட்டும் வந்தன. இப்பொ ழுது சமூகச் சூழலும், வாழ்க்கை முறையும் தலைகீழாக மாறிவிட்டன. நியூமோரலஜிப்படி பெயர் வைத்தால் காசு கொட்டும் என்று நம்பி வாயில் நுழையாத அர்த்தமே இல்லாத பெயர்களைக் குழந்தைகளுக்கு வைக்கிறோம், இல்லையா? அப்படித்தான் விரைவாகவும் கனமாகவும் பெரிதாகவும் காய்கறிகள் கீரை வகைகளை விளைய வைத்து நிறையப் பணம் சம்பாதிக்க வேண்டும் என்பதற்காக நிலத்தைத் தோண்டி செயற்கை உரங்களை அள்ளிக் கொட்டிப் பயிர் செய்கிறோம். அத னால் இப்பொழுது கடைகளில் சுரைக்காய் சைஸில் இருக்கும் கத்தரிக்காயைப் பார்க்கப் பயமாக இருக்கிறது. வாழையிலை சைஸில் வரும் கீரை இலைகளைப் பார்க்கத் தலை சுற்றுகிறது.

காலத்திற்கு ஏற்ற கோலமாக எங்கள் மத்தி யில் புதுப்புது நோய்கள் உண்டாகின்றன. நோய் வரும் முன்னரே கடைகளில் போலி மருந்துகளும் மாத்திரைகளும் வந்து விடுகின்றன. அதனால் எந்தக் கீரையாயினும் சரி, குறிப்பாக வல்லாரைக் கீரையை அளவோடுதான் உணவில் சேர்க்க வேண்டும் என்ற எச்சரிக்கை உணர்வு இந்த நாட்களில் ஏற்பட்டு வருகிறது. வல்லாரையின் மருத்துவப் பயன் காரணமாக நாட்டு மருந்துக் கடைகளில் வல்லாரை லேகியம், வல்லாரை மாத்திரை, வல்லாரைப் பொடி, வல்லாரை நெய், வல்லாரைத் தேன் ஆகியன விற்பனைக்கு இருக்கின்றன. ஆனால் இவற்றை மருத்துவர்களின் ஆலோசனையின்றி வாங்கிப் பயன்படுத்தக் கூடாது என்று கூறுகிறார்கள். வல்லாரையை உணவில் சேர்ப்பதனால் மூளையின் திசுக்கள் பலப்படும், சிந்தனா சக்தி பெருகும், ஞாபக சக்தி வளரும், மனம் ஒருமைப்படும் என்று பொதுவாகச் சொல்வதுண்டு. ஆனால் வல்லாரையை அதிகம் பயன்படுத்தினால் மூளை பலவீனப்படும், சிந்திக்கும் ஆற்றல் குழம்பும், தலைவலி, மயக்கம் ஏற்படும் என்று சமீப காலமாகச் ஒரு சிலர் சொல்லி வருகிறார்கள். அதனால் அளவோடு சாப்பிடுங்கள்.

தொடரும் ...!

uthayanan@thaiveedu.com

■ ■ ■

IT'S A GOOD TIME TO SELL YOUR HOME
OR
THE INVESTMENT PROPERTY YOU ARE HOLDING ON FOR YEARS

CALL SUBA AYNKHARAN TO PROTECT YOUR HARD EARNED ASSETS IN THIS DECLINING REAL ESTATE MARKET!!!





SUBA AYNKHARAN
Sales Representative

REALTOR® MLS®


VEEDU REALTY INC.
BROKERAGE

Direct: 416-560-1686
saynkharan@trebnet.com

8-1345 Morningside Ave, Toronto, ON M1B 5K3
Tel: 416-759-6000 | Fax: 416-759-6005

ABC Abacus

Abacus training for creative minds



* சிறுவர்களை புத்தி நுட்பம் மிக்கவர்களாக வளர்க்கும் பயிற்சிமுறை.

* உலகரீதியாக எற்றுக் கொள்ளப்பட்டு வேகமாக உலகெங்கும் பரவிவரும் கற்கைநெறி.

* கனடிய சூழலுக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்ட பாடத்திட்டத்தை உடையது, இதன் சிறப்பம்சம்.

* இக் கல்விமுறை உங்கள் பிள்ளைகளை பேரறிவாளராக்கக் கூடியது.

மேலதிகத் தொடர்புகளுக்கு: Active Brain Center

| Head Office: | Brampton | Newmarket | Scarborough N. |
|---|---|---|---|
| 416-615-2520 | 647-476-2532 | 647-890-2768 | 416-754-1141 |
| 2163 Lawrence Ave. E. (Birchmount & Lawrence) | 230 Sandalwood Parkway E. | 905-775-0395 | 80 Nashbene Rd. (Middlefield) |

Web:- www.activebraincenter.com | E-mail:- mail@activebraincenter.com

UNIVERSITY OF TORONTO
MUNK CENTRE
FOR INTERNATIONAL STUDIES
AT TRINITY COLLEGE

CENTRE FOR SOUTH ASIAN STUDIES

வீடும் வெளியும் தமரும் பிறரும்
*Home, Space and the "Other"*

நான்காவது தமிழியல் மாநாடு, தொறொன்ரோ

TRINITY COLLEGE
UNIVERSITY OF TORONTO
MAY 21-23, 2009

சிறப்புப் பேருரை: பேராசிரியர் ராதாகிருஷ்ணன், கலிபோர்னியா பல்கலைக் கழகம்

சிறப்பு அரங்கம்: பேராசிரியர் எம். ஏ. நுஃமான் (கவிஞர்), ஹரிகிருஷ்ணன் (நர்த்தகர்), பிரசன்ன விதானகே (திரைப்படக் கலைஞர்), பத்மா விஸ்வநாதன் (நாவலாசிரியர்)

இந்த மாநாட்டைத் தொறொன்ரோ பல்கலைக்கழகத்தின் தென்னாசியவியல் கற்கைத் துறையும் வின்சர் பல்கலைக் கழகமும் இணைந்து நடத்துகின்றன. கீழே பட்டியல் இடப்பட்டுள்ள பல்கலைக் கழகங்களிலிருந்து எழுபதுக்கும் மேற்பட்ட பேராசிரியர்கள், ஆய்வாளர்கள், கலைஞர்கள் பங்கேற்கிறார்கள்.

University of Bergen (Norway), University of Chicago, Columbia University, Eastern University (Sri Lanka), Harvard University, Jamia Millia Islamia University (New Delhi), Jawaharlal Nehru University, John Hopkins University, Leeds University (England), University of Manitoba, McGill University, University of Morelos (Mexico), University of Otago (New Zealand), University of Pennsylvania, Peradeniya University (Sri Lanka), Princeton University, Ryerson University, Stockholm University, University of Toronto, and York University.

அனைவரையும் வரவேற்கிறோம்.

பதிவுக் கட்டணம் மற்றும் மேலதிக விபரங்களுக்கு

www.tamilstudiesconference.ca

info@tamilstudiesconference.ca

1 Devonshire Place, Toronto, Ontario, M5S 3K7 Canada
Tel: (416) 978-4294 Fax: (416) 978-8744 Email: south.asian@utoronto.ca Web site: http://www.sgs.utoronto.ca/sas


# பாகுபாட்டியலின் முன்னோடி அரிஸ்ரோட்டிலா? தொல்காப்பியரா?


## பாகுபாட்டியலின் அத்தியாவசியத்துவம்:




பொ.கனகசபாபதி

சில மாதங்களுக்கு முன்னர் சுவிஸ் சென்றிருந்தேன். எனது பழையமாணவன் ஒருவனின் வீட்டில் வாசம். மேல்மாடியில் உறங்கிக் கொண்டிருந்தேன். இரவு இரண்டு மணி. திடீரென முழித்தேன். ஏதோ ஒருமெலிதான ஓசை, 'ணிங், ணிங்' என தாளலயத்துடன் கேட்டபடி இருந்தது. அது என்ன ஓசை. மூட்டைப் பூச்சியாக இருக்குமோ, அல்லது வேறு ஏதாவது ஐந்துவாக இருக்குமோ? அதன் பின் எனக்கு உறக்கம் வர மறுத்தது. அது என்ன என ஆராயும் மனதில் எப்படி உறக்கம் வரும்? கடைசியல் ஒருவழியாக அது எங்கிருந்த வருகிறது எனக் கண்டு பிடித்தேன். அது எனது மூச்சுக் குளாயில் இருந்து வந்தது. உங்களில் பலருக்கு இது சிரிப்பினை வரவழைக்கலாம் ஆனால் நடந்தது உண்மை. எனக்கு இந்த அனுபவம் இதற்கு முன்னர் ஏற்பட்டதில்லை.







இதை நான் சொல்வதற்குக் காரணம்? நாம் வாழும் சூழலில் ஏதோ ஒன்று அது வெறும் ஒலியாக இருக்கலாம், அல்லது உருவமாக இருக்கலாம். நாம் இதுவரை கேட்காத காணாத ஒன்று என்றதால் அது எதுவாக இருக்கலாம் என மனத்திலே இனம் கண்டு கொண்ட பின்னரேயே மனம் அமைதி பெறுகிறது.

ஊதாரணமாக, நமது கனடாவிலே குளிர் காலம் வருகிறதோ இல்லையோ அதற்குக் கட்டியம் கூறுவதாக நம்மில் பெரும்பாலானோரை வந்து ஆட்கொள்வது "தடிமன்" (Influenza). ஆகவே அரசாங்கம் அதற்கான தடுப்பு ஊசியைக் காலநேரத்தில் எடுக்குமாறு அறிவுறுத்துகிறது. Rhinovirus எனப்படும் ஒரு வைரஸ் தான் தடிமனுக்குக் காரணமென்பர். இந்த வைரஸ்சினை இனங்காண்பதற்கு உதவுபவை அதற்கெனச் சில சிறப்பியல்புகள் காணப்படுகின்றமையே. இதனைக் கருத்தில் கொண்டே ஊசி மருந்து தயாரிக்கப் படுகிறது. ஆனால் ஒவ்வொரு முறையும் இந்த வைரஸ் சற்று விகாரமடைவதால் ஒரு புதிய வகையாகமாறித் தொற்றினை ஏற்படுத்துகிறது. ரொறன்ரோவில் இதன் காரணமாக சென்ற ஆண்டு தடிமன் தடுப்பூசி வெற்றியளிக்கவில்லை என்கிறார்கள். பொதுவாக வைரஸ்சினை இனம் கண்டு அதற்கான தடுப்பூசியை தயாரிப்பதற்கு உதவியது பாகுபாட்டியலே.

### அரிஸ்ரோட்டிலும் தொல்காப்பியரும்

அரிஸ்ரோட்டில் பற்றிய விபரம் தெளிவாக உள்ளது. அவர் காலம் கிறிஸ்த்துவுக்கு முன் 384 முதல் 324 வரை என்றதும் அவர் பிளாற்ரோவினது மாணவர் என்றும் மாவீரன் அலெக்சாந்தர் அவரது மாணவர் என்பதோடு மாத்திரமல்லாமல் அவரது சிந்தனைகள் பற்றிய விபரங்களும் நிறையவே உள்ளன.

தொல்காப்பியர் பற்றிய விபரங்கள் பெரிதாக ஒன்றும் இல்லை என்றே கூறவேண்டும். அவரது காலம் கூட சர்ச்சைக்குரியதாக உள்ளது. 2000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர் என்போரும், அவர் கிறிஸ்துவுக்கு 300 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்தவர் என்போரும் உள்ளனர். அவரது குருவாக அகஸ்த்தியரையும் சொல்வார்கள். இவைகள் யாவும் உத்தேசவாரியாகச் சொல்லப்படுகிறதே அன்றி எந்த விதமான ஆதாரங்களும் இல்லை.

கிடைத்த தகவல்படி பார்க்கின்ற போது அரிஸ்ரோட்டிலும், தொல்காப்பியரும் ஏறக் குறையச் சமகாலத்திலே வாழ்ந்தவராகக் கருதப்படுவதற்கு இடமுண்டு.

அரிஸ்ரோட்டில் முதல்முதலாக உயிரிகளைப் (living things)பாகுபடுத்தியவர் என்ற பெருமை பெறுகிறார். குழப்பநிலையில் இருந்த உயிரிகளை எல்லாம் பாகுபடுத்தி ஒரு அமைதி நிலைக்கு வழிவகுத்தவர் எனப் பெருமைப்படுத்தப்படுகிறார். அவரது பாகுபாடு இயற்கைப் படிகள் அல்லது இயற்கை ஏணி (Scala Naturae) எனப்படுகிறது. உயிரிகளை எளிமையிலிருந்து சிக்கல் வாய்ந்த அமைப்பினுக்கு ஏணிப்படிகள் போன்று அடுக்கி வைத்துள்ளார் அரிஸ்ரோட்டில். விலங்குகளை அவர் முதலில் குருதி உள்ளவை குருதி அற்றவை என இரண்டு குழுக்களாகப் பிரிக்கிறார். குருதி உள்ளவையினை மீண்டும் குட்டி ஈனுபவை (மனித இனம் மற்றும் முலையூட்டிகள்) முட்டை போடுபவை (பறவைகள் மற்றும் மீனினம்) என இரண்டாக வகுக்கிறார். ஒவ்வொரு உயிரியிலேயும் காணப்படுகின்ற ஆன்மா (soul) வேறுபடுகிறது எனக்கருதும் அரிஸ்ரோட்டில் பாகுபாட்டியலில் அந்த ஆன்மாவிற்கே முக்கியத்துவம் கொடுக்கிறார். தாவரங்களிலே உள்ளது பதியமுறை ஆன்மா (vegetative Soul) என்கிறார் இதுவே அதன் வளர்ச்சிக்கும் இனப் பெருக்கத்திற்கும் காரணமென்கிறார். விலங்குகளிலே இந்த புதிய ஆன்மாவுடன் உணர்திறன் ஆன்மாவும் ( sensitive soul) உள்ளது என்கிறார் .அந்த உணர்திறன் ஆன்மாவே இடப் பெயர்ச்சிக்கும் உணர் திறனுக்கும் காரணமென்பார். அடுத்து மனித இனத்திலே இவற்றுடன் மூன்றாவதாக இன்னொரு ஆன்மாவும் உள்ளதாக அரிஸ்ரோட்டில் கூறுகிறார். அதனைப் பகுத்தறிவு ஆன்மா (rational soul) என்கிறார். இந்த ஆன்மாவானது மூளையில் அல்ல இதயத்திலே தான் உள்ளது என்பது அரிஸ்ரோட்டிலுடைய வாதம்.

இங்கு தான் நாம் தொல்காப்பயரின் பாகுபாட்டியல் சிறப்பினைக் காண்கிறோம். அரிஸ்ரோட்டில் உணர்திறன் ஆன்மா எனக் கூறுவதையே தொல்காப்பியர் அறிவு என்கிறார். இந்த அறிவின் அடிப்படையிலேயே தொல்காப்பியர் உயிரிகளை அற்புதமாக ஆறு கூறுகளாக வகுத்துள்ளார். இததனையே தொல்காப்பியர் நெறிப்படுத்துகை (பாகுபடுத்தல்) என்கிறார். அவை 1. ஓரறிவு உடையவை: உறுத்துணர்ச்சியை உணரக் கூடியவை 2. ஈரறிவுடையவை: சுவை அறிதலோடு சமபந்தப் பட்ட நாக்கு உள்ளவை 3. மூன்றறிவு உடையவை: மணநுகர்ச்சியுடன் சம்பந்தப்பட்ட மூக்கு உள்ளவை 4. நான்கறிவுடையவை: பார்வையுடன் சம்பந்தப்பட்ட கண்கள் உள்ளவை 5. ஐந்தறிவு உடையவை: கேட்டலுடன் சம்பந்தப்பட்டவை: செவி உடையவை 6. ஆறறிவுடையவை: அதுதான் பகுத்தறிவுடன் தொடர்புள்ள மனம். இதனைத்தான் அரிஸ்ரோட்டில் பகுத்தறிவு ஆன்மா என்றார்.

ஒன்றறிவு அதுவே உற்று அறிவு அதுவே
இரண்டறிவு அதுவே அதனொடு நாவே
மூன்றறிவு அதுவே அவற்றொடு மூக்கே
நான்கறிவு அதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறிவு அதுவே அவற்றொடு செவியே
ஆறறிவு அதுவே அவற்றொடு மனனே
நேரிதில் உணர்ந்தோர் நெறிப் படுத்தினரே

தொல்- பொருள் - சூ 571

இந்த நெறிப் படுத்துகையின் படிக்கு உலகில் காணும் உயிரிகளைத் தொல்காப்பியர் வகைப் படுத்துவதைக் காணமுடிகிறது. கிறிஸ்துவிற்கும் முன்னான காலத்தில் நுண்ணங்கிகள் பற்றிய அறிவு ஒருவருக்கும் இருந்திருக்க முடியாது. அரிஸ்ரோட்டிலுக்கும் அவை பற்றித் தெரிந்திருக்கவில்லை.

ஆகவே தொல்காப்பியர் உறுத்துணர்ச்சியை மாத்திரம் உணரும் தன்மையுடைய முதலாவது குழுவினிற்கு உதாரணமாக புல் மற்றும் மரத்தினையுமே கூறுகின்றார். பொதுவாகவே விலங்குகள் உடற் சருமப் பரப்பின் மூலமாகவே உறுத்துணர்சியை உணர்கின்றன. ஆனால் கடினமான வன்கோது உடைய மூட்டுக்காலிகள் மற்றும் நத்தை சிப்பி போன்றவற்றில் உறுத்துணர்ச்சி அறிதற்கென்றே விசேட உறுப்புக்களாக உணர் கொம்புகள் உள்ளன.

தொல்காப்பியர் இரண்டாவது குழுவாக ஈரறிவு உடைய விலங்குகளை எடுத்துக் கூறுகிறார். இவற்றினிலே சுவை அறிதலோடு சம்பந்தப் பட்ட நாக்கு உள்ளதாகக் கூறகிறார். இக்குழுவினுக்கு உதாரணமாக நத்தையையும் மீனையும் (முரள்) கூறுகிறார். முரள் என்பதற்கு முரல் மீன் என்கிறார்கள் உரை

58ம் பக்கம் பார்க்க...

www.inayam.net

- கலை விழாக்கள்
- எழுச்சி நிகழ்வுகள்
- ஊர்ச்சங்க ஒன்றுகூடல்கள்
- திருவிழாக்கள்
- கொண்டாட்டங்கள்
- நடன, நாடக, இசை விழாக்கள்
- குடும்ப நிகழ்வுகள்
- மரணச் சடங்கு நிகழ்வுகள்

எதுவானாலும்,

இணையம் .net மூலமாகத் தெரியப்படுத்துங்கள்.

உங்களுக்கு அனுகூலமான இடம், காலம், நேரங்களில் ஏனைய நிகழ்வுகள் திட்டமிடப்பட்டுள்ளனவா என்பதை முன்கூட்டியே அறிந்துகொண்டு உங்கள் நிகழ்வுகளை நிர்ணயித்துக் கொள்ளுங்கள்.

முன்கூட்டியே inayam.net இல் பதிவு செய்துகொள்வதன் மூலம் ஏனைய நிகழ்வுகளோடு போட்டிகள் உருவாகுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

உங்கள் நிகழ்வுகள் திருப்திகரமாக நடந்தேறுவதற்கு பங்குபெறும் மக்களின் அனுகூலம் முக்கியமானது.

இதைக் கருத்திற் கொண்டு உருவாக்கப்பட்ட ஒருங்கிணைப்புத் தளமே inayam.net

முயற்சி செய்யுங்கள்!

முற்றிலும் இலவசம்

inayam

416•400•6406

# பதின்ம முன் வயதினரின் வளர்ச்சிப் படிநிலைகள்

**பாகம் - 2**

சிவவதனி
பிரபாகரன்



> "உலகில் சரியான சரியென்றும்,
> தவறான தவறென்றும்,
> உண்மையில் எதுவுமில்லை.
> ஒவ்வொருவர் பார்வையிலும் உள்ள
> வேறுபாடுகளே சரி தவறுகளை
> இடமாற்றுகின்றன."

பதின்ம முன் வயதினருக்குள் எழுகின்ற உணர்வுகளுள் சில 'தாம் பெரியவர்களுக்கு ஒப்பான உணர்வுள்ளவர்கள், தம்மைத்தாம் பொறுப்பேற்கும் பக்குவமுள்ளவர்கள், தமக்கு எல்லாம் தெரியும், தமது தன்மானத்தை எவரும் பாதிக்கலாகாது, தாமும் நண்பர்களும் உள்ள இடத்தில் தமது தனிமையை பெற்றோர் மற்றும் இதர பெரியோர் தலையிட்டு குழப்பக்கூடாது போன்றவையாகும்.

தம்மால் எல்லாம் முடியும் என்ற தன்னம்பிக்கையானது இளமை வேகத்துடன் மொட்டவிழ்த்து வீறுகொள்ளும் பருவமிது. ஒருவகையில் இது ஆரோக்கியமானதேயானாலும் வாழ்வின் மேடு பள்ளங்களை அநுபவித்துணராத இவ்வயதில் அறியாமையினால் அதள பாதாளங்களில் வீழ நேரிடுகின்றது. வேண்டா அபாயங்களை சந்திக்கவும் இந்த அசட்டுத்தைரியத்துடனான ஆளுமை சில சமயங்களில் காரணமாகின்றது.

இது நாள்வரை 'அம்மா அப்பா' என காலைச் சுற்றிவந்த தம் பிள்ளை திடீரென தம்மை அவர்கள் உலகினுள் நுழைய அனுமதிப்பதை மறுக்கையிலே அதிர்ச்சியும் சோர்வும் கவலையும் கொள்கின்ற பெற்றோர் எம்மிடையே பலருள்ளனர்.

சிறகு முளைக்கும் வேளையில் பறவைகள் பறக்க நினைப்பதானது இயற்கையானதும் இயல்பானதுமாகும். தாய்க் கோழியின் இறக்கைக்குள் அடைக்கலம் புகுந்து இது நாள்வரை இதம் தேடிய குஞ்சுகள் தமக்கு என சுயமாக இறக்கைகள் முளைக்கையில் சுதந்திரமாக பறக்க நினைப்பது போன்றே இப் பருவத்தினை எட்டிய சிறுவர்களுக்கும் சுதந்திரத்தின் மேல் ஏற்படும் நாட்டம் வெகுவாக அதிகரிக்கின்றது.

இதனை பெற்றோர்கள் புரிந்துகொள்ளத் தவறியவர்களாக இருந்து தமற்கேற்றாற்போல் தம்பிள்ளைகளை அடக்கி ஒடுக்கி மாற்றிவிட முனைந்தால் அச்செயல்கள் அவர்களின் ஆளுமையை, சுதந்திர சிந்தனையை, அறிவு வளர்ச்சியை, சமூகத்துடனான தொடர்பாடலை வெகுவாக சிதைக்கின்றன. அதேவேளை அதீத சுதந்திரத்துக்கும் மனம்போன வழியெல்லாம் போக விட்டோமேயானாலும் அவர்கள் தவறான பாதையில் கொள்கை வகுக்காத மனம் போன போக்கில் சென்று வாழ்வை வீணாக்க நேரிடுவர்.

வண்டில் மாடுகளின் மூக்கணாங்கயிற்றை மாட்டு வண்டி ஓட்டுனர் தன் கைகளில் உறுதியாகப் பிடித்தபடி தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்து விட்டும் தளர்த்தியும் மாடுகளை ஓட்டுவதுபோல் பிள்ளைகளை வழிநடத்தும் கண்ணுக்குத் தெரியாத சூட்சுமமான மூக்கணாங்கயிறுகளை பெற்றோர் இறுக்கமாகப் பிடிக்கவேண்டும். பெற்றோரின் சரியான வழிநடத்தலுக்குள் பிள்ளை இருப்பின் தான் வழிதவறாமல் சரியான பாதையில் சரியான வாழ்வினைப் பயணிக்க முடியும். அவர்களின் உணர்வுகள் வளர்ச்சிபடிநிலைகளில் ஏற்படும் உளவியல் மாற்றங்கள் என்பன பெற்றோரால் புரிந்துகொள்ளப்பட்டு மதிக்கப்படுவதோடு அதற்கேற்ப நெறிப்படுத்துவது அவசியமாகும்.

கனடா போன்ற மேலைத்தேய நாடுகளின் வாழ்வு முறை தமிழர்களின் பூர்வீக வாழ்விடத்தினுக்குரிய கீழைத்தேய வாழ்வு முறைக்கு முற்றிலும் மாறுபட்டது. அதேவேளை புலம் பெயர்ந்து வந்து மேலைத்தேய நாடுகளில் தஞ்சம் புகுந்து வாழும் எமது அடுத்த சந்ததியினரின் வாழ்வோ மேலைத்தேய வாழ்வுச் சுழல்களுக்குள் அகப்பட்டுள்ளது. அவர்கள் தமது இனத்தின் சுய அடையாளங்களைப் பேணும் பொறுப்போடு பல்லின வாழ்வு முறைக்கு முகம் கொடுக்கவும் வேண்டியவராகின்றனர். வேற்றினக் காலாச்சார மோகத்தின் பாதிப்புகளிலிருந்து தம்மை முற்றாக மீட்க முடியாது போனாலும் தமிழ்க் கலாச்சாரத்தைப் பாதிக்காத வகையில் பல்லினகலாச்சாரத்தை பின்பற்றுபவர்களாகவும் தமிழரின் அடையாளங்களைத் தொலைக்காதவர்களாகவும் வாழ்வதற்கு அவர்களின் பெற்றோரின் சரியான வழிநடத்தல் அவசியமாகின்றது. பல்லினச் சூழலிடையேயும் தன்னினத் தனித்துவங்களை அவற்றின் சிறப்புக்களை உணர்ந்து கடைப்பிடிக்கும் தைரியமும் ஆளுமையும் அவர்களுள் அமைவதன் தோற்றுவாயாக பெற்றோரின் ஆளுமை இனவுணர்வு என்பன திகழ்கின்றன.

இத்தகைய தேசப்பணிகளில் தமிழ்ப்பணிகளில் தம்மை ஈடுபடுத்துகின்ற இளையோர் பல்லினப்பண்பாட்டுச் சூழலில் காட்டுவெள்ளம் அடித்துச் செல்லும் துரும்பைப்போல் இலக்கற்று வாழாமல் உறுதியாக நிலைத்திருக்கும் விருட்சம் போல் தம்மை இலக்குகள் வகுத்துப் பயணிக்கும் இலட்சியவாதிகளாக உறுதிப்படுத்திக்கொள்வதை பலதரப்பட்ட செயற்பாடுகளில் வெகுவாக காணமுடிகின்றது. இதனால் அவர்களின் தன்னாளுமை அதிகரிக்கிறது.

மாறாக தமிழன் என்று கூறிக்கொள்ளவே விரும்பாமல் அந்நிய கலாச்சாரத்தினுள் அள்ளுண்டு போனவர்களின் குடும்பங்களில் இந்த பதின்மமுன் வயதுப்பருவத்திலேயே பெற்றோரிடமிருந்து விலகி தொலைதூரம் மனதாலும் உடலாலும் விடுபட்டவராக தனித்து வாழும் பல சிறுவர்களைக் கனடியச் சமூகத்தில் காண்கின்றோம்.

மறுபடியும் மீட்க முடியாத அளவுக்கு வாழ்வைச் சிதைத்த சிறுவர்களின் பின்னணியை ஆராய்ந்தால் பண்பாட்டு வேலியின்றி பெற்றோரின் கவனிப்பின்றி இனவுணர்வு, இலட்சிய வகுப்பு என இல்லாதிருக்கும் குழந்தைகளாகவே இவர்களில் பெரும்பான்மையானவர்கள் இருப்பதனைப் பார்க்கலாம். வேற்றினத்தவரிடையே மட்டுமன்றி எம்மினத்தவரிடையேயும் இங்ஙனம் வழிதவறிய இளையோர் பலர் உள்ளமை வேதனை தரும் விடையமாகும்.

கண்கெட்டபின் சூரிய வணக்கம் செய்து பயனென்ன? பல பெற்றோர் தாம் இந்நாட்டிற்கு குடிபுகுந்த காலத்தில் நல்ல தமிழராக வாழாதமையாலேயே இன்று பல இளையவர்கள் வழிதவறிச் சென்றிருப்பதை காண்கின்றோம்.

இந்த பருவத்தினர்களை, நாம் பெரியவர்கள் என எண்ணி கவனியாது இருப்பதும் தவறு. சிறியவர்கள் என எண்ணி அவர்களின் சுதந்திரச் சிந்தனைக்கு முட்டுக்கட்டையிடுவதும் தவறு.

இவ்வயதினருக்கான விதிமுறைகளை பெற்றோர் பிள்ளைகளிடையே கலந்துபேசி ஒப்பந்தத்துக்குள்ளாக்குவது நன்று. எனின் வீண் வாக்குவாதங்களுக்கும் இடமிருக்காது. விதிமுறைகளை மீறும் எண்ணமும் அவர்களுள் எழாது.

கனடிய சிறாரைப் பொறுத்தவரையில் 12-13 வயதினரை நண்பர் குழாமுடன் திரைப்படம் பார்க்க Mallக்கு தனியே அனுப்பலாம் என்னும் மனோபாவம் உள்ள போதும் அங்ஙனம் தனியே சிறுவர்களை நண்பர்களுடன் இவ் வயதில் அவர்கள் விருப்பப்படியெல்லாம் ஊர்சுற்றி பொழுதை வீணே கழிக்க அனுமதிப்பது சரியல்ல.

குறிப்பாக பெரியோர்களின் துணையின்றி இந்த வயதினர் தனியாகவோ குழுமமாகவோ வெளியே தான்தோன்றித்தனமாக சுற்றுவதற்கு ஒரு பொழுதுமே அனுமதித்தலாகாது என்பது எனது கருத்தாகும். இவ்வயதினரின் தவறுகளிற்கான களங்கள் அதீத சுதந்தரத்தை வழங்குவதனாலேயே உருவாகுகின்றன.

இந்த வயதினருள் Peer Pressure எனப்படும் நண்பர்களின் தூண்டுதலுக்கு இலகுவில் ஆட்படுவதானது பெற்றோருக்கு சவாலான ஒன்றாகும். ஆனால், குழந்தைகளுடன் நட்புணர்வுடன் கருத்துக்களைப் பரிமாறும் பெற்றோரின் கருத்துக்களிலுள்ள நியாயங்களை தெளிவாகப் புரிந்துகொள்ளும் பிள்ளையானது நண்பர்களின் தூண்டுதலை தன்னாளுமையுடன் எதிர்கொண்டு சுயகருத்தில் வெற்றி பெறுகின்றது. பொதுவாக பெற்றோரின் வார்த்தைகள் கசப்பான மருந்தினைப் போன்று இருக்கும். ஆனால் நண்பர்களின் தவறான தூண்டுதல் வார்த்தைகளோ இனிப்பான நஞ்சிற்க்கு ஒப்பாக இருக்கும். இதனை இவ்வயதினர் சொன்னாலும் இலகுவில் புரிந்துகொள்வதில்லை. காரணமே அவர்களின் வயது தான். அனாலும் பெற்றோர் மேல் பிள்ளை வைத்திருக்கும் மரியாதை அன்பினால் எதையும் வெல்ல முடியும் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

ஒரு பிள்ளையினுள் இவ்வயதில் பிரதிபலிக்கும் சுய கருத்தானது பெற்றோரின் கருத்துக்களின் பிரதிபலிப்புகளாகவே பொதுவில் இருக்கும். இவ்வயதினரிடையே ஆளுமை பெற்ற கருத்துக்களாக யாரேனும் ஊட்டிய கருத்துக்களே அமைவதனை இயல்பாக காண முடியும். எனவே கருத்தூட்டலிற்கு முன்னர் இவர்களுக்குக் கருத்தூட்டும் பெரியவர்கள் சரி தவறுகளை தெளிவாக புரிந்து தம்மை அறிவூட்டியிருப்பது அவசியமாகும்.

இவ்வயதினர் தாமாகவே முடிவெடுக்கும் ஆற்றலுள்ளவர்களாக மெல்ல மெல்ல வளர்க்கப்படுவது அவசியமாகும். கருத்தூட்டல் இருக்க வேண்டுமேயொழிய கருத்துத் திணிப்பினால் சிறுவர்கள் சொந்தமாக சிந்திக்கும் ஆற்றலை இழக்கக் கூடாது. சரி தவறை பெற்றோரிடமிருந்தோ புற உலகத்திடமிருந்தோ கற்றுக்கொள்ளும் சிறுவர்கள் தமது தீர்மானங்களை இயன்றவரையில் தாமாகவே முடிவுசெய்து அதிலுள்ள நியாயங்களை பெற்றோருக்கு எடுத்து விளக்கி அவர்களை ஏற்கச் செய்யுமளவு கொள்கை விளக்கம் செய்ய வல்லவர்களாக வளர்க்கப்பட வேண்டும். நியாயமெனப்பட்டால் அக்கருத்து சிறுவர்களுடையதேயானாலும் நாம் ஏற்றுக்கொள்ளப் பழக வேண்டும். பொதுவாக இவ்வயதெல்லைச் சிறார்கள் தமக்கு சரியான நியாயமெனப் பட்டால் அவற்றை ஏற்றுக்கொள்ளத் தயங்கமாட்டார்கள்.

உலகில் சரியான சரியென்றும், தவறான தவறென்றும், உண்மையில் எதுவுமில்லை. ஒவ்வொருவர் பார்வையிலும் உள்ள வேறுபாடுகளே சரி தவறுகளை இடமாற்றுகின்றன.

எனினும் உலகப் பொது மனுதர்ம நீதி என ஒன்று உண்டு. அதை நிலைநிறுத்திச் சொல்லும் ஆற்றல் அனைவரதும் மனச்சான்றுகளுக்கு உண்டு. எனினும் மனச்சாட்சிக்கு செவிசாய்த்து நீதி நெறியில் வாழும் தவத்தை எல்லோராலுமே முழுமையாக

55ம் பக்கம் பார்க்க...

**TYPE SETTING**

தமிழிலும் ஆங்கிலத்திலும் தட்டெழுத்து செய்து கொடுக்கப்படும்.

தொடர்புகொள்ளவும்.

**416 551 3972**

# விரும்பியோ அல்லால் விதிவசமோ.... புலம்பெயர்ந்தோம்

முடிந்தவரை மேல்நாட்டவர் போல் வாழவும் பழகிக்கொண்டோம். இருந்தும் சில பின்னடைவுகள் எம்மிடம் எஞ்சி நிற்கின்றன. அதில் ஒன்றுதான் நீண்டகால பாதுகாப்பான ஆயுட்காப்புறுதி செய்யாதிருத்தல் என்பது. நெருங்கிய உறவுகளிலோ அல்லது நமது குடும்பத்திலோ ஒரு இழப்பு ஏற்பட்டபின் வரும் ஞானோதயம் யாருக்கும் உதவாது. ஆகையால் யாராவது ஒரு முகவரை அணுகி ஏதாவது நல்ல நிறுவனத்தில் கட்டாயம் ஆயுட் காப்புறுதி செய்து வையுங்கள். நீங்கள் தெரிவு செய்யும்

**அந்த முகவர் நானாக இருந்தால் எனக்கும் மகிழ்ச்சிதான்.**



**Life RESP RRSP Non Medical Critical Illness**



**Insurance Broker**

# Guna Selliah

**416.371.7776**

digi Media

INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES INC.

RBC


759 Warden Ave., Toronto, Ontario, M1L 4B5, Tel: 416.759.5453 ext: 401
Fax: 416.759.6220, E-mail: guna@lilandinsurance.com

# நெடுஞ்சாலை நடனம்


குரு அரவிந்தன்

பொதுவாக நெடுஞ்சாலைகளைப் பல பெயர்களிலும் அழைப்பார்கள். கனடாவில் கைவே, ஓட்டோறூட் (Highway, Autoroute) என்றும், அமெரிக்காவில் இன்ரர் ஸ்ரேட் கைவே (Inter state highway) என்றும், ஜெர்மனியில் ஓட்டோபான் (Autobahn) என்றும், பிரான்சில் ஓட்டோறூட் (Autoroute) என்றும், இத்தாலியில் ஓட்டோஸ்ட்றாடா (Autostrada) என்றும், அவுஸ்ரேலியாவில் பிறீவே, மோட்டவே (Freeway/Motorway) என்றெல்லாம் பல பெயர்களிலும் நெடுஞ்சாலையை அழைப்பார்கள். நெடுஞ்சாலை உள்ள நாடுகள் எல்லாம் தங்கள் வசதிக்கு ஏற்ப இந்தப் பெயர்களைச் சூடியிருக்கிறார்கள். நெடுஞ்சாலைகள் என்றால் என்ன என்று இதுவரை ஒருவரும் சரியான விளக்கம் கொடுக்கவில்லை. அதனால் நெடுஞ்சாலைகள் பற்றிக் கருத்து வேறுபாடுகள் இப்பொழுதும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. மிகநீண்ட தூரத்திற்கு, விரைவாகத் தொடர்ந்து செல்லக்கூடிய, முக்கியமாக நகரங்களைத் தொடுக்கும், அகலமான பாதைகளைக் கொண்ட சாலைகளையே பொதுவாக நெடுஞ்சாலைகள் என்று எல்லோரும் குறிப்பிடுவர்.

வடஅமெரிக்காவில் உள்ள நெடுஞ்சாலைகளில் பயணிப்பவர்கள் பல விதமான அனுபவங்களையும் பெறவேண்டிவரும். அதிகாலையில் தூங்கிக் கிடக்கும் நெடுஞ்சாலை அனேகமாக ஆறு மணிக்கெல்லாம் விழித்துக் கொள்ளும். வேகமாக நகர்ந்து கொண்டிருந்த வண்டிகள் காலை ஏழு மணியாகும் போது மெதுவாக ஊர்ந்து செல்லத் தொடங்கி விடும். பின் சுமார் ஒன்பது மணிவரை இந்த நிலை நெடுஞ்சாலைகளில் நீடிக்கும். இதே போல மாலை நேரத்திலும் வேலை முடிந்து வீடு திரும்புபவர்களின் வண்டிகளால் நெடுஞ்சாலை இறுகிப் போயிருப்பதை அவதானிக்கலாம். நெடுங்சாலையில் வண்டி ஓட்டுபவர்கள் பலதரப் பட்டவர்களாகவும் இருப்பார்கள். மெதுவாக வண்டி ஓட்டுபவர்கள், வேகமாக வண்டி ஓட்டுபவர்கள், அதிவேகமாக ஓட்டுபவர்கள், மற்றவர்களைப் பற்றிக் கவலைப்படாமல் வண்டி ஓட்டுபவர்கள், புதிய ஓட்டுனர்கள் என்று பலவிதமான முகங்களை நெடுஞ்சாலைகளில் காணமுடியும். தூரத்தில் வரும்போதே இவர்கள் வண்டியை வைத்துக் கொண்டு நெடுஞ்சாலையில் நடனமாடுகிறார்கள் என்பதை அவதானித்துவிடலாம். நெடுஞ் சாலையில் தினமும் நடனமாடும் இவர்களில் குறிப்பாக மதுபானம் அருந்திவிட்டு வண்டி ஓட்டுபவர்கள், மனநோயால் பாதிக்கப்பட்டு விரக்தியோடு வண்டி ஓட்டுபவர்கள், குறிக்கப்பட்ட வேகத்தைவிட அதிவேகமாக வண்டி ஓட்டுபவர்கள் எல்லாம் மிகவும் ஆபத்தானவர்கள். நீங்கள் கவனமாக ஒதுங்கிப் போனாலும் வலிய வந்து உங்கள் வண்டியில் முட்டி மோதி விபத்தை ஏற்படுத்துவார்கள். அதனால் உயிர் உடமைகளை இழப்பது மட்டுமல்ல பாதிக்கப்படும் பயணிகள் தேவையில்லாத மன உளைச்சலுக்கும் உள்ளாக வேண்டியும் வரலாம். சிலர் செல்லிட பேசியில் தங்களைமறந்து பேசியபடி, கனவில் மிதந்து கொண்டே போய்க் கொண்டிருப்பார்கள். சிலர் வானம் இருண்டு இருக்கும்போது மழை நாட்களிலும்சரி அல்லது கடும் பனி கொட்டும் நாட்களிலும் சரி தங்கள் வண்டியின் விளக்கைப் போடாமலே நெடும்சாலையில் ஓட்டுவார்கள். தங்கள் வண்டியின் விளக்கைப் போடுவதால் அது மற்றவர்களுக்கு உதவியாக இருக்குமே என்ற சிந்தனைகூட இல்லாதவர்கள். வேறு சிலர் அடிக்கடி பாதையை மாற்றி மாற்றி, ஏதோ தங்களது சொந்த நெருஞ்சாலைபோல ஓடுவார்கள். வேறுசிலர் பாதுகாப்புக்கருதி சிறிய இடைவெளி விட்டு ஓடும்போது, திடீரென அதற்குள் தங்கள் வண்டியைக் கொண்டு வந்து செருகித் தாங்கள் மற்றவர்களை விடத் திறமையாக வண்டி ஓட்டக்கூடியவர்கள் என்று பின்னால் வண்டியில் வருபர்களுக்குப் படம் காட்டுவார்கள். அனேகமான நேரங்களில் நெடுஞ் சாலையில் வண்டிகள் மெதுவாக நகருவதற்கும், விபத்துக்கள் நடப்பதற்கும் இவர்களைப் போன்ற சுயநலம் மிக்கவர்களே முக்கிய காரணமாகிறார்கள்.




பனிக்காலங்களில் அதிக விபத்து நடப்பதற்கு முக்கிய காரணம் வண்டியை விரைவாக ஓட்டுவது மட்டுமல்ல கவலையீனமாக ஓட்டுவதுமேயாகும். பனி உறைந்து இருக்கும் போது திடீரென பிறேக் பிடித்தால் வண்டி சறுக்கத்தான் செய்யும். இதனால் அருகே வரும் வண்டிகளும் விபத்தைச் சந்திக்க நேரும். இதைவிட முன்னால் செல்லும் வண்டியில் இருந்து பனிச்சேறு பின்னால் வரும் வண்டியின் கண்ணாடியில் பட்டு ஓட்டுனரின் பார்வையை மறைப்பதும் முக்கிய காரணமாகும். கனடாவில் அனேகமான வண்டிகளுக்குப் பின்பக்க மட்காட் கவர் (Mudguard/Splash) என்று சொல்லப்படுகின்ற சேற்றை வாரி இறைக்காமல் பாதுகாக்கும் கவசம் இருப்பதில்லை. அதனால் வேகமாக முன்னால் செல்லும் வண்டியில் இருந்து வாரி இறைக்கப்படும் பனிச்சேறு பின்னால் வரும் வண்டியின் முன்கண்ணாடிலில் பட்டு ஓட்டுணரின் பார்வை மறைப்பதால்தான் பனிக்காலத்தில் அனேக விபத்துக்கள் நெடுஞ் சாலையில் நடக்கின்றன. நெடுஞ்சாலை விபத்தில் சிக்கிய பலரிடம் கேட்டபோது அவர்கள் இதையும் ஒரு முக்கிய காரணமாகக் குறிப்பிட்டார்கள். இப்படியான அனுபவம் பனிக்காலத்தில் உங்களுக்கும் அனேகமாக நெடுஞ்சாலையில் ஏற்பட்டிருக்கலாம்.

உலகிலே அதிக வாகனங்கள் பயணிக்கும் இலவச நெடுஞ்சாலைகளில் கனடாவில் உள்ள 401 நெடுஞ்சாலையும் ஒன்றாகும். மேற்கே அமெரிக்க எல்லையான வின்சரில் ஆரம்பித்து கிழக்கே மொன்றியலில் முடிவடையும் இந்த நெடுஞ்சாலை சுமார் 508 மைல் (818 கி.மி) நீளமானது. நடுவில் செல்லும் எக்பிரஸ்வேக்கு பச்சை நிறத்திலும், அதன் இரு பக்கங்களில் தொடர்ந்து செல்லும் கலக்டர்வேக்கு நீல நிறத்திலும் சைகைப் பலகைகள் காட்டப்பட் டிருக்கும். ஏதாவது சைகைப் பலகையின் கீழ் மஞ்சள் நிறத்தில் கோடு போட்டு அம்புக்குறி காட்டியிருந்தால் அந்தப் பாதை வெளியே செல்கிறது (EXIT) என்பதை அறிந்து கொள்ளலாம். இந்த நெடுஞ்சாலையில் செல்லும்போது பயணிகளுக்கு வசதியாக வெளியே சென்று ஓய்வெடுப்பதற்காக பாதையின் அருகிலேயே சுமார் பதினெட்டு உணவருந்தும், ஓய்வெடுக்கும் விடுதிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. 1938ம் ஆண்டு சிறிய பாதைகளாக இருந்தவற்றை, பயணிகளின் அதிகரித்த தேவை கருதி ஒன்றோடு ஒன்று தொடுத்து நெடுஞ்சாலையாக்க முற்பட்டார்கள். 1954 தொடங்கி 1961ம் ஆண்டுவரை கிச்சினர் வரை செல்லும் பாதை போடப்பட்டது. 1964ல் வின்சர் வரை பாதை நீட்டப்பட்டது. 1968ல் வண்டிகளின் தொகை அதிகரித்ததால் நெடுஞ் சாலை நான்கு பாதைகளைக் கொண்டதாக அகலமாக்கப்பட்டது. படிப்படியாக வளர்ச்சி அடைந்து வந்த இந்தப்பாதை, தற்போது சில முக்கியமான இடங்களில் பதினெட்டுப் பாதைகளைக் கொண்டதாக அகலமாக்கப் பட்டிருக்கின்றது.

இந்த 401 நெடுங்சாலையோடு பல்வேறு நெடுஞ்சாலைகளும் தொடுக்கப்பட்டுள்ளன. குறிப்பாக 3, 402, 403, 8, 6, 407, 410, 427, 400, 404, 35, 62, 15, 115, 137, 416, 138, டொன்வலிப்பாக்வே போன்ற நெடுஞ் சாலைகள் இதனுடன் தொடுக்கப்பட்டுள்ளன. தினசரி சுமார் 500,000 வாகனங்களுக்கும் அதிகமானதாக, இந்த நெடுஞ்சாலையில் பயணிப்பதாகக் கணக்கிட்டு இருக்கின்றார்கள்.

ஈழத்தில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்களுக்கு எப்படித் தமிழ்மக்கள் உணர்வு பூர்வமாய்ச் சென்று மதிப்பும் மரியாதையும் கொடுத்து வணங்குகின்றார்களோ அதேபோல 401 நெடுஞ்சாலையையும் கனடிய வீரர்களின் நெடுஞ்சாலை என்று கனடியர்கள் சொல்வார்கள். வெளிநாடுகளில் மரணித்த தங்கள் வீரர்களின் பூதவுடல் இந்த நெடுஞ்சாலையால் எடுத்து வரும்போது வழி நெடுகப் பொதுமக்கள் நின்று அஞ்சலி செய்து, மரணித்த வீரர்களுக்கு மரியாதை செய்கின்றார்கள். அதனால்தான் வீரர்களின் நெடுஞ் சாலை என்றும் இதை அழைப்பர்.

கனடாவில் உள்ள 407 நெடுஞ்சாலையில் செல்வதற்குப் பணம் (407 ETR-Toll Route) அறவிடுவார்கள். பணம் அறவிடப்படுவதால் இது நெரிச்சல் இல்லாமல் பயணிப்பதற்கு இலகுவான நெடுஞ்சாலையாகும். இலக்கத் தகட்டை கமெரா மூலம் (AVI system) படம் பிடித்து பிரயாணம் செய்த தூரத்திற்குரிய கட்டணத்தை அறவிடுவார்கள். பனிக்காலத்தில் தற்செயலாக இலக்கத் தகட்டைப் பனி மூடியிருந்தால் கமராவின் கண்களில் இருந்து தப்பித்துக் கொள்ளும் வண்டிகளும் உண்டு. அதிஸ்டம் இருந்தால் சில சமயங்களில் அது உங்களுடைய இலவச பயணமாகவும் இருக்கலாம்.

அமெரிக்க நெடுஞ்சாலைகளில் செல்லும் போது சிலருக்கு தடுமாற்றங்கள் ஏற்படலாம். அனேகமான அமெரிக்க நெடுஞ்சாலைகளில் இருந்து ஒவ்வொரு முறையும் நீங்கள் வெளியேறும் போது பணம் செலுத்த வேண்டி வரலாம். அமெரிக்காவில் அனேகமாக கிழக்கு மேற்காகச் செல்லும் நெடுஞ்சாலைகள் ஒற்றை இலக்கம் உள்ளதாகவும், வடக்குத் தெற்காகச் செல்லும் நெடுஞ்சாலைகள் இரட்டை இலக்கம் உள்ளதாகவும் இருக்கும். இதைவிட மேற்கில் இருந்து கிழக்காகவும், தெற்கில் இருந்து வடக்காகவும் இலக்கங்கள் அதிகரித்துச் செல்வதையும் அங்கே அவதானிக் கலாம். இலக்கங்களுக்கு முன்னால் ஆங்கிலத்தில் 'ஐ' என்ற எழுத்தைப் போட்டிருந்தால் அவை இன்ரஸ்டேட் நெடுஞ்சாலைகளாய் இருக்கும். (Inter state highway) சிகப்பும் நீல நிறமும் கலந்த வழிகாட்டிப் பலகையில் வெள்ளை நிறத்தில் எழுதப்பட்டிருக்கும். வர்த்தகப் பாதைகளில் (Business Loops) சிகப்பு நிறத்திற்குப் பதிலாகப் பச்சை நிறத்தில் காட்டப்பட்டிருக்கும்.

கனடாவில் கி.மீற்றரில் வேகத்தைக் கணக்கிட்டு வண்டி ஓட்டியவர்கள் அங்கே வண்டி ஓட்டும்போது மைலில் கணக்கிட வேண்டும். பொதுவாக வடஅமெரிக்காவில் பாவனையில் உள்ள வண்டிகளில் இரண்டு விதமான வேகங்காட்டிகளும் இணைக்கப் பட்டிருப்பதால் வண்டி செல்லும் வேகத்தை இலகுவில் அறிந்து கொள்ள முடியும். ஒரு முறை நண்பர்களோடு அமெரிக்காவிற்கு சென்று திரும்பும் போது வண்டியை ஓட்டியவர் அதி வேகமாக ஓட்டவே அமெரிக்க பொலிஸார் நெடுஞ்சாலையில் மறித்து இதற்காக ரிக்கட் கொடுத்தார்கள். அங்கே பொலிஸாரோடு செலவிட்ட நேரத்தையும் சேமிக்க வேண்டும் என்ற அவசரத்தில், அவர்களைத் திட்டிக் கொண்டே மீண்டும் அவர் அதிவிரைவாக வண்டியை ஓட்டினார். சிறிது தூரத்தில் மீண்டும் பொலிசார் தயாராக நின்று மறித்தனர். 'இப்பொழுதுதானே ரிக்கட் வாங்கினாய், மீண்டும் ஏன் விரைவாக ஓட்டுகிறாய்' என்று பொலிஸார் எச்சரித்ததும் ஓட்டுனர் திகைத்துப் போய்விட்டார். தான் ஏற்கனவே ரிக்கட் வாங்கியது இவருக்கு எப்படித் தெரியும் என்று ஆச்சரியப்பட்டார். அமெரிக்காவின் அனேகமான நெடுஞ்சாலைகளில் ஏ.எஸ்.ஈ (Aerial Speed Enforcement) என்று சொல்லப்படுகின்ற வானத்தில் இருந்து வேகமாகச் செல்லும் வண்டிகளை அவதானிக்கும் முறையைக் கடைப்பிடிக்கின்றார்கள். அந்த முறையைக் கடைப்பிடிக்கும் நெடுஞ்சாலைகளின் ஓரத்தில் அதைப் பற்றிக் குறிப்பிட்டும் இருப்பார்கள். வட அமெரிக்காவில் உள்ள எல்லா வண்டிகளின் இலக்கமும் இரண்டு நாடுகளுக்கும் இடையே பரிமாறப் பட்டிருப்பதால் அமெரிக்க நெடுஞ்சாலைகளில் வண்டி ஓட்டும் போது ஓட்டுநர்கள் அவதானமாக

55ம் பக்கம் பார்க்க...

GP TELECOM
இரமணன் திரு
(முன்னாள் பெல் கனடா, ரோஜேர்ஸ் ஊழியர்)
For Your Business We
• Install, Repair, Sell
• Meridian Phone Systems & System Phones
• Structured Voice & Data Cabling
• Install, Repair Home Phone Wiring
• TV Cable (RGB)
• Network Cable
உங்கள் அழகிய வீட்டில் பழுதுகள் ஏதும் ஏற்படாமல் சுவர்களுக்கு உள்ளால் வயர் எடுத்து கொடுக்கப்படும்
416.203.0344


54ம் பக்கத் தொடர்ச்சி...

இருக்க வேண்டும். அகப்பட்டால் அமெரிக்க டொலரில் அபராதம் செலுத்த வேண்டிவரும்.

உலகிலே நீண்ட நெடுஞ்சாலையாக கனடாவில் உள்ள ரான்ஸ் கனடா (Trans Canada) நெடுஞ்சாலையைச் (4,860மைல்) சிலர் குறிப்பிடுகிறார்கள். வேறுசிலர் அவுஸ்ரேலியாவைச் சுற்றிவரும் நெடுஞ்சாலை ஒன்றைக் (HWY-!) குறிப்பிடுகிறார்கள். சில இடங்களில் ஒற்றைப் பாதை மட்டும் இருப்பதால் அதை நெடுஞ் சாலை என்று சொல்லமுடியாது என்றும் சிலர் வாதிப்பர். அமெரிக்காவில் 1955ல் போடப்பட்ட கலிபோனியாவில் உள்ள 405 நெடுஞ்சாலை தான் அதிக வண்டிகள் தினசரி செல்லும் நெடுஞ்சாலையாக இருக்கிறது. சராசரி 390,000 வண்டிகள் தினசரி இந்த நெடுஞ் சாலையில் பயணிக்கின்றன.

நீங்கள் பயணிக்கும் நெடுஞ்சாலைகளில் பெரிய திருத்தவேலைகள் நடந்தால், நீங்கள் வேறுபாதையைப் பாவிக்க வேண்டிவரலாம். எதற்கும் ஆயத்தமாகச் செல்லாவிட்டால் சில சமயம் போகுமிடத்தில் தொலைந்து போகலாம். சி.ஏ.ஏ. (C.A.A.) போன்ற பிரயாணிகளுக்கு வசதி செய்து கொடுக்கும் நிறுவனங்களிடம் முற்கூட்டியே உங்கள் நீண்ட பயணத்தைப் பற்றிக் குறிப்பிட்டால் அவர்கள் உங்களுக்கு வேண்டிய எல்லா வசதிகளையும் செய்து கொடுப்பார்கள். நெவிக்கேற்றர், றூட்பிளானர் (GPS Nevigater, Route Planer,) போன்ற நவீன தொழில் நுட்பவசதிகளைப் பாவிப்பதன் மூலம் உங்கள் பிரயாணத்தை இலகுவாக்கிக் கொள்ளலாம். புதிய இடங்களாயின் சிலசமயம் அவைகூடத் தக்க தருணத்தில் உங்களைக் கைவிட்டுவிடும். இப்படியான நீண்ட பயணங்களின்போது, என்னைப் பொறுத்தவரையில், எனது அனுபவத்தில் வண்டியின் முன் இருக்கையில் உங்களுக்கு அருகே, கோழித்தூக்கம் போடாமல் விழிப் போடு யார் உட்கார்ந்து இருக்கிறார்களோ அவர்கள்தான் சிறந்த வழிகாட்டியாக இருக்க முடியும்!

kuru@thaiveedu.com

■ ■ ■

# பதின்ம முன் வய...

52ம் பக்கத் தொடர்ச்சி...

வாழ்நாள் முழுவதுமே ஆற்றிட முடியாததனால்தான் உலகில் இத்தனை சிக்கல்கள், துன்பங்கள், தோல்விகள், வெறுமைகள், ஏமாற்றங்கள் அவலங்கள் துர்நிகழ்வுகள் என எல்லாமே...!

மனிதர்களுக்கு மனிதர்கள் தன்னியல்புகள் மாறுபடுகின்றன. ஒரு பிரச்சினையை அணுகும் முறையை எடுத்தாலுமே சிலருக்கு சவாலானதாகவும் சிலருக்கு சுலபமானதாகவும் இருப்பதைக் காணலாம்.

இந்த வேறுபாடானது வேற்றுறவுகளிடையே மட்டுமன்றி சொந்த சகோதரரிடையேயும் கூட இருப்பதைக் காணலாம். எமது பிள்ளைகளி டையேயுள்ள இந்த வேறுபாடுகளை முதலில் புரிந்துகொள்ள வேண்டியவர்கள் பெற்றோரே யாவர். பெற்றோரால் புரிந்துகொள்ளப்பட முடியாத பிள்ளைகள் உலகிற்கு புரியாத புதிராகவே இருப்பர். புரிந்துணர்வோடு வளர்க்கப்படும் பிள்ளை தானும் பிறரைப் புரிந்து கொள்ளக் கற்றுக்கொள்கின்றது. மாறாக அடக்கி ஒடுக்கப்படும் பிள்ளையானது தானும் மற்றவர்களை அடக்கி ஒடுக்க முனைகிறது.

அடுத்து இவ்வயதினரின் பாதுகாப்பில் பெற்றோர் அதீத அக்கறை எடுத்துக்கொள்வது அவசியமாகும். அதற்கு சில விதி முறைகளை வகுத்து இறுக்கமாக கடைப் பிடிப்பது அவசியமாகும். இதன் அடிப்படையாக பெற்றோருக்கு தம்பிள்ளைகள் எங்கு யாரோடு ஒவ்வொரு பொழுதிலும் இருக்கிறார்கள் என்ன செய்துகொண்டிருக்கிறார்கள் என்பது நன்கு தெரிய வேண்டும். தனியே எந்த பிள்ளையும் இவ்வயதில் எங்கும் செல்லக்கூடாது. சகவயதினரின் பிறந்தநாள் விழாக்களுக்கு பெற்றோரின் உதவியின்றிச் செல்லும் சிறுவர்கள் யாரேனும் ஒரு பெரியவர்களின் கண்காணிப்பில் இருப்பதானது உறுதிசெய்யப்பட வேண்டும்.

பிள்ளைகளுக்கு தமது வீட்டு முகவரி தொலைபேசி எண் என்பன தெரிந்திருப்பது அவசியம். அத்துடன் அவசரமாக தொலை பேசி அழைப்பதற்கு ஏற்ற சில்லறை பணம் வைத்திருக்க வேண்டும்.

உறவினர் யாரோடேனும் உங்கள் பிள்ளை போனாலும் போய்ச்சேர்ந்தவுடன் அழைத்து உறுதி செய்யும் பழக்கம் உங்கள் பிள்ளைக்கு இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

தனக்கு அன்றாடம் ஏற்படும் நன்மை தீமை களை தன் பெற்றோரோடு குழந்தைகள் பகிர்வதற்கு பயிற்றுவிக்கப்படவேண்டும்.

பாதையோர விதிகள், பாதுகாப்பு விதிகள் என்பன சிறுவர்களுக்கு நன்கு தெரிந்திருக்க வேண்டும். அவர்களுக்கு ஏதேனும் ஒரு ஆபத்து வரும் வேளையில் உடன் அவசர அழைப்பு இலக்கமான 911ஐ அழைக்குமாறு அறிவுறுத்தி வைத்திருக்க வேண்டும். அயல் வீடுகளில் சென்று விளையாடும் குழந்தை தனியாக செல்கையில் வீட்டை விட்டு இறங்கி அவர்கள் வீட்டிற்கு செல்லும்வரை கண்காணிக்க வேண்டும். மனதளவில் அச்சப்டுபவர்களாக சிறுவர்களை ஒருபோதும் வளர்க்கக் கூடாது. எனினும், எச்சரிக்கையுணர்வு உள்ளோராக வளர்ப்பது அவசியமாகும். தன் வயதினர் எதிர்நோக்கும் அபாயங்களை அச்சுறுத்தல்களை குழந்தை நன்கு அறிந்து இருக்க வேண்டியது அவசியமாகும்.

அடுத்து ஒவ்வொரு பெற்றோரும் தமது பிள்ளைகளின் நண்பர்களைப் பற்றி நன்கு விசாரித்து அறிந்திருப்பது அவசியம். ஒருவரைப்பற்றி அறிவதற்கு அவரது நண்பர் களைப்பற்றி தெரிந்தால் போதும் என்பர். நண்பர்கள் எப்பொழுதுமே நன்மை பயப்பவர்களாக மட்டும் இருப்பதில்லை. பலசமயங்க ளில் தீய நண்பர்களின் தீய பழக்கதோசத்தால் பல பிள்ளைகள் வழிதவறி திசைமாறிச் செல்வதுண்டு. நண்பர்களிடமிருந்து நன்மை கள் மட்டுமன்றி தீமைகளும் நிகழலாம் எனும் எச்சரிக்கை உணர்வானது குழந்தைக்கு இருப்பதானது பெற்றோரின் மனப்பகிர்வினாலேயே ஏற்படுகின்றது.

பெற்றோர் பிள்ளைகளுக்கு ‘இல்லை’ என துணிவோடு நண்பர்களின் வற்புறுத்தல்களுக்கு மறுப்பதற்குக் கற்றுக்கொள்ள வேண்டும். பாடசாலை விட்டபின் வீடு வராமல் ஊர்சுற்ற அழைக்கும் நண்பனிடம் “இல்லை, என்னை என் அம்மா எதிர்பார்த்துக்கொண்டிருப்பார் நான் வரமாட்டேன்” என மறுத்துரைக்கும் துணிவை சிறுவர்க்குக் கற்றுக் கொடுக்க வேண்டும். நண்பர்களின் அழுத்தங்களை (Peer Pressure) தந்திரமாக கையாளும் தைரியம் பிள்ளைகளுக்குப் பழக்கப்பட வேண்டும்.

குழந்தை பெற்றேரின் அரவணைப்பிலிருந்து விடுபட்டு வெளிஉலகை கற்க முற்படும் இப்பருவமானது தாய் தந்தையரின் சின்ன விரல் பிடித்தபடி தத்தித்தத்தி நடைபயிலும் குழந்தையின் முயற்சிக்கு ஒப்பானது. உலகியல் கல்வியை ஆர்வத்தோடு கற்கும் இவ்வயதுப் பிள்ளைகள் வீழ்ந்து போகாமல், அச்சப்படாமல் ஆளுமை குன்றாமல் தைரியத்தோடு உலகைக் கற்றிட பெற்றோர் உதவ வேண்டும்.

எனவே உலகியல் கல்விக்கு தேவையான அறிவுத்தேடலை தமது குழந்தைகள் பெற்றிருப்பதற்கு தேவையான ஊக்கத்திறனையும் அவர்களுக்கான பாதுகாப்பையும் பெற்றோர் தம் பிள்ளைகளுக்கு தடையின்றி வழங்குவது அவசியமாகும். நாளைய உலகின் நாயகர்களாக இவர்கள் வாழ வேண்டுமானால் இன்றே நல்லவர்களாகவும் வல்லவர்களாகவும் வாழ வேண்டும். வளரும் பயிரை நிர்ணயிக்கின்ற முளைப்பருவமல்லவா இது? இவர்களின் வளமான வாழ்வு பெற்றோரின் நல்ல வளர்ப்பிலேயே தங்கியுள்ளது.

(தொடரும்)

vathani@thaiveedu.com

■ ■ ■

ROGERS™

For the best deals available, in-home consultations and to move or change your services, call or email me today!
As your Local Rogers Advisor, I will take the time to answer
Your questions and give you the best deal.

• Rogers Digital Cable
• Rogers Hi-Speed Internet
• Rogers Home Phone
• Tvi, Sun TV, Jaya TV, Tamil One

சகலவிதமான தமிழ் தொலைக்காட்சி மற்றும் இன்ரநெற் சேவைகளையும்
நீங்கள் இப்போது தமிழிலும் உரையாடிப் பெற்றுக்கொள்ளலாம்

Norbert Benedict
Local Rogers Advisor
(416)446-7043 (Office)
(416)823-7036 (mobile)
norbert.benedict@rci.rogers.com

ROGERS hi-speed internet
ROGERS™ home phone
ROGERS™ personal tv™

# உள்ளுணர்வு

## (Intuition)

- பொன் குலேந்திரன் -

ஒருவருக்கு வருங்காலத்தில் நடக்கப்போவதையோ, சமூகத்தில் எற்படவிருக்கும் மாற்றத்தையோ தீர்க்கதரிசனமாக முன் கூட்டியே எடுத்துச்சொல்வது எல்லோருக்கும் கைவந்த கலை அல்ல. அது ஒரு வரமென்றே சொல்லலாம். "சொன்ன வார்த்தைகள்படி நடந்துவிட்டது" அவருக்கு "கருநாக்கு" என்று பேச்சுவாக்கில் சொல்வார்கள். இது ஒருவரின் உள்ளுணர்வு காரணமாக தோன்றும் வெளிப்பாடு. சிலசமயம் நல்லதாகவும் இருக்கலாம், கெட்டதாகவும் இருக்கலாம்.

உள்ளுணர்வுச் சக்தி ஞானிகளுக்கு மட்டு மல்ல தன்னம்பிக்கை உள்ளவர்களுக்கும் உண்டு. அது மட்டுமல்ல, ஒரு பிரச்சனை ஆதாரங்களை வைத்து அலசி ஆராய்ந்து முடிவெடுப்பவர்களுக்கும் இருக்கிறது. இது தர்க்க ரீதியாக சிந்தித்து முடிவெடுக்கும் கெட்டித்தனம். பெரும் வணிக ஸ்தாபனங்களை பரிபாலனம் செய்வோருக்கு இந்த உள்ளுணர்வுத் தன்மை வணிகம் வளர உதவுகிறது.


யாழ்ப்பாணத்து யோகர் சுவாமிகளைத் தெரியாத தமிழ் முதியோர்கள் இல்லை. இவருக்கு உள்ளுணர்வு சக்தியுண்டு. தியானத்தின்மூலம் அவர் அதனைக் பெற்றிருக்கலாம். பல வருடங்களுக்கு முன்னர் "இரத்தம் ஓடப்போகுதடா" என்று தமிழ்ச் சமுதாயத்தின் வருங்கால நிலையை தீர்க்கதரிசனமாக ஒரு ஞானியின் மொழியில் சொன்னார். அது அவர் மனதுக்குள் இருந்து வெளிவந்த ஒரு குரல். இப்படி பல வார்த்தைகளை அவர் உதிர்த்துள்ளார்.

யோகர் சுவாமியைப் போலவே ஒரு சித்தர் யாழ்ப்பாணத்தில் உள்ள கோண்டாவில் கிராமத்தில் இருந்தார். அவர் இயற்பெயர் கந்தையா. 1897ல் அவதரித்தார். ஆனால் எல்லோருக்கும் குடைசாமி என்றால்தான் அவரைத் தெரியும். காரணம் அவர் கையில் எப்போதும் ஒரு குடை இருக்கும். எளிமையான தோற்றம். தாடி வைத்திருந்தார். யாரும் அவரைப் பார்த்தால் பைத்தியக்காரன் என்று நினைத்தார்கள். ஒருசமயம் அவர் நல்லூருக்கு வீரமகாகாளி அம்மன் கோயில் வழியாக போய்க்கொண்டு இருக்கும் போது ஒருவன் கார் கராஜுக்கு முன்னர் கவலையோடு இருப்பதைக் கண்டார். அவனிடம் போய் குடைச்சாமி "உன்னிடம் இருக்கிற வாகனத்தை கேட்கிற விலைக்கு விற்றுப் போட்டு கிடைக்கிற பொருளை வாங்கிவை" என்றார். சாமி சொன்னபடி கராஜில் இருந்த வாகனத்தை ஒருவர் விலைக்குத் தரும்படி கேட்டார். சாமி சொன்னது நினைவுக்கு வந்தது. பதில் பேசாமல் வாகனத்தை கேட்ட விலைக்கு விற்று பணத்தை வீட்டில் வைத்திருந்தார். அப்போது வெங்காயக் காலம். இலாபமாக கிடைத்த வெங்காயத்தில் கிடைத்த பணத்தை முதலீடு செய்தார். சில காலத்தில் வெங்காயத்தின் விலை உயர்ந்தது. உடனே அதை விற்று பணமாக்கினார். குடைச்சாமியின் வாக்கு பலித்தது. இப்படி பல சம்பவங்கள் நிகழ்ந்துள்ளது.

ஒருநாள் சுவாமிகள் பாதை வழியே போகும்போது பக்கத்தில் உள்ள ஒரு பனையில் சீவல் தொழிலாளி உருவன் பனையில் ஏறிக்கொண்டிருந்தான். சாமி அவனைப் பார்த்து "ஓலை கிழித்தாச்சு" என்றார். மரம் ஏறியவன் வழுக்கி வட்டேற முடியாமல் விழுந்து மரணித்தான். வருமுன் சொல்லும் வாக்குகள் அவரையறியாமலே நாவில் தவழ்ந்தன.

சித்தம் என்பது மனம், அறிவு. சித்தர் என்ற பதம் அதிலிருந்து தோன்றியது. இது ஆன்மீகத்துடன் இணைந்தது. ஆகவே சித்தத்தில் தோன்றுவது வாக்காக வெளிவருகிறது.

அலுவலகத்தில் முக்கியமான கோப்பொன்றைப் புரட்டிப் புரட்டி பார்த்துக் கொண்டிருந்தேன். நான் எதிர்பார்க்காத மிகப்பெரிய பிழையொன்று தயாரித்த திட்ட கணக்கில் இருந்தது. என்னால் நம்பவே முடியவில்லை. அதை தயாரித்தவர் நம்பிக்கைக்குரிய திறமைசாலியான உதவி முகாமையாளர் மாதவன். என்ன நடந்தது அவருக்கு? இதன்படி திட்டத்திற்கான செலவைக் குறிப்பிட்டு திட்டத்தை செயல்படுத்தியிருந்தால் ஸ்தாபனத்துக்கு பல லட்சம் ரூபாய்கள் நஷ்டம் ஏற்பட்டிருக்கும். வழக்கத்தில் திறமைசாலியான உதவி முகாமையாளர் தயாரித்த கணக்கை நான் திருப்பிப் பார்ப்பதில்லை. ஆனால் என்னவோ அத்திட்டத்திற்கான செலவை திருப்பிப் பார்த்தால் என்ன என்று என் மனம் சொல்லிற்று. பார்த்தது நல்லதாகப் போய்விட்டது. அதில் மிகப்பெரிய செல



வொன்று கணக்கில் உள்ளடக்கப்படவில்லை. அந்த சமயம் பார்த்து தொலைபேசி மணி அடித்தது. ஒரு வேளை அதைத் தயாரித்தவராக இருக்குமோ என்றது உள்ளுணர்வு. தொலைபேசியை எடுத்ததும் "யார் மாதவனா? என்ன? என்னை பார்க்க வேண்டுமா? என்றேன்.

பேசியவருக்கு அவர் பேசமுன்பே நான் அவர் பெயரைக் குறிப்பிட்டது அதிர்ச்சியாக இருந்திருக்கும். அதுவும் என்ன பார்க்க வேண்டுமா என்று கேட்டது ஆச்சரியத்தைக் கொடுத்திருக்கும். அவரின் பேச்சின் பதட்டம் அதை காட்டியது.

"ஆமாம் சேர்"

" சரி வாரும்' என்றேன்.

திட்டஅறிக்கையை தயாரித்த உதவி முகாமையாளர் மாதவன் உள்ளே வந்தார். உள்ளே வரும்போதே வழக்கம்போல் இருக்கும் புன்னகையை அவர் முகத்தில் காணவில்லை. ஒன்றையும் இரண்டையும் சேர்த்து என் மனம் கணக்கு போட்டது. இது என் பழக்கம். அவர் முகத்தில் கவலை எதற்கு? கணக்கில் விட்ட பிழையிலா? அல்லது குடும்பத்திலா?

"என்ன மாதவன். நீர் தயாரித்த திட்ட கணக்கைப் பற்றி பேச வந்திருக்கிறீரா?"

"ஆமாம் சார். கணக்கில் ஒரு பெரிய பிழை விட்டு விட்டேன்".

" தெரியும்"

"வழக்கத்தில் இது போன்ற கணக்கை இரண்டு தடவை நான் திருப்பிப் பார்ப்பது வழக்கம்"

"அதுவும் தெரியும்"

"இந்த முறை ஏதோ சிந்தனையில் திருப்பிப் பார்க்கவில்லை"

"அதுவும் தெரியும். அதன் காரணமும் தெரியும்"

"என்ன சேர் சொல்லுகிறியள்"

"என்ன உம் மனைவிக்கு உடல் நிலை சரியில்லை? மூன்று நாள் லீவில் இருந்திருக்கிறீரே. இப்ப எப்படி மனைவிக்கு?

"ஆமாம் சார். ஒப்பரேசன் செய்ய வேண்டுமாம்."

"அப்ப அதுதான் உமது தவறுக்கு காரணமா? என்ன சரிதானா?"

மாதவன் விழி பிதுங்க என்னைப் பார்த்தபடி நின்றான். என் உள்ளுணர்வினால் தவறு ஏற்படும் காரணத்தை அவர் சொல்வதற்கு முன்னரே நான் சொன்னது மாதவனுக்கு ஆச்சரியத்தை கொடுத்தது. "என்ன இந்த மனுசன் ஞானியா? என் மனதில் உள்ளதை தெரிந்து வைத்திருக்கிறானே" என்று மாதவன் நினைத்திருக்கலாம். நான் ஞானியும் இல்லை. சாஸ்திரியுமில்லை.

1978ம் ஆண்டு "லோரா மார்சின் கண்கள்" (Eyes of Laura mars) என்ற ஒரு புதுமையான கதையமைப்பு கொண்ட திரைப்படம் தயாரிக்கப்பட்டது. அந்த கதையில் ஒரு புகைப்படப்பிடிப்பாளரான பெண்ணொருத்தி நடக்கப்போகும் சம்பவத்தை முன்கூட்டியே தன் கண்களினூடாகப் பார்த்து சொல்லுகிறாள். அது நடந்து விடுகிறது. தனக்கு மரணம் சம்பவிக்க போகிறது என்பதை முன்கூட்டியே அறிந்துவிடுகிறாள்.

ஒரு நாள் பேருந்துக்காக பஸ்தரிப்பில் நின்று கொண்டிருந்தேன். தரிப்பை நோக்கி ஒருவர் விரைவாக நடந்து வந்து கொண்டிருந்தார். அவரது நடையும் தோற்றமும் என் உள்ளுணர்வை தூண்டிவிட்டது. 'இவரை எங்கேயோ பார்த்த மாதிரி இருக்கிறதே. ஆனால் இளமையாக இருக்கிறாரே. அவராக இவர் இருக்க முடியாது.' சிந்தித்தது என் மனம். அருகே வந்து நின்றார். முகத்தை உற்று நோக்கினேன். சிரித்தபடி பஸ் எத்தனை மணிக்கு வரும் என்றார். "இன்னும் ஐந்து நிமிடங்களில் வரும்" என்றேன்.

"நன்றி. நல்ல காலம் பஸ் தவறவிடவில்லை" என்றார்.

அவர் பேச்சு, முகபாவனை, சிரிப்பு என்ன உள்ளுணர்வைத் தூண்டியது. இவர் அவராக இருக்குமோ? பேச்சை ஆரம்பித்தேன்.

"நீங்கள் கரவெட்டியா?"

"ஆமாம். எப்படித் தெரியும்?"

"கரவெட்டி சாஸ்திரி கந்தையாவின் மகனா?

"ஆமாம். அது சரி என் அப்பாவை தெரியுமா உங்களுக்கு ?".

"உரித்து வைத்து அவர் சாயலும் சிரிப்பும் உமக்கு இருக்கிறது. என்ன, சாஸ்திரி வேலை பார்க்கிறீரா?'

"சரியாகக் கண்டு பிடித்திருக்கிறீர்களே. அதெப்படி?.

"குடும்பத்தொழிலாக இருக்கும் என்பது என் கணக்கு. அதோடு கையில் புத்தகக்கட்டும் நெற்றியில் சந்தனமும் காட்டி கொடுக்கிறதே. எல்லாம் உள்ளுணர்வுதான்" என்றேன் சிரித்தபடி. அவர் மௌனமானார்.

உள்ளுணர்வுக்கும் ஆன்மீகத்திற்கு தொடர்புண்டு என்பது பலர் கருத்து. பல ஆன்மீகவாதிகள் சொல்வது நடந்துவிடுகிறது. அமைதி காப்பது, உண்மை பேசுவது, ஆக்கத்திறமையை விருத்திசெய்வது, நடந்ததை மனதில் பதிவு செய்து கொள்வது, அலசி ஆராய்ந்து தீர்மானிப்பது. இது உள்ளுணர்வு சக்தியை விருத்தி செய்கிறது.

மனதுக்குள் தோன்றும் குரல், மனசாட்சி, உள்ளுணர்வு ஆகியவை வேறுபட்டவை. மனதுக்குள் ஒன்றில் விருப்பமோ விருப்பமில்லையோ செய்யத் தூண்டும் ஒரு குரல். இன்று எதை சமைப்பது என்று யோசிக்கும் போது ஒரு குறிப்பிட்ட உணவைச் சமை என்று மனம் சொல்லும். அதையே செய்வீர்கள். ஆம், இல்லை என்பதுதான் மனதுக்குள் தோன்றும் குரலுக்கு பதில்.

நியானத்திற்கும் உண்மைக்கும் மனசாட்சி மதிப்பளிக்கிறது. பிழை என்று தெரிந்தால் மனசாட்சி அதைவிட்டு ஒதுங்கிவிடும். செயற்பட இடம் கொடுக்காது. உள்ளுணர்வானது உடனே தோன்றும் சக்தி. நல்லதோ கெட்டதோ, சரியோ பிழையோ வார்த்தைகள் உடனே உதிர்ந்துவிடும். அதுக்கும் மனச்சாட்சிக்கும் தொடர்பு இல்லை. இவை மூன்றும் கிட்டத்தட்ட தொடர்புடையனவாகத் தோன்றினாலும் பகுத்தறிதலில் மாறுபட்டவை.

உள்ளுணர்வுள்ள முகாமையாளர் திட்டத்தை செயல்படுத்துவதா இல்லையா என்று முடிவெடுப்பதில் வெற்றிகாண்கிறார். பலதை அலசி ஆராய்ந்த பின்னரே முடிவு எடுக்கப்படுகிறது. இதற்கு அனுபவமும் துணை போகிறது.

pon@thaiveedu

■ ■ ■

ஒரே நாளில்

Saree Blouse

உங்கள் சகலவிதமான சாறி புளவுஸ் (Saree Blouse)

தைப்பதற்கும் அழையுங்கள்.

416 264 6400





# அங்கதம் ஆறாத கதை சொல்லலுக்கு

# ஐம்பது ஆண்டுகள்

அ.முத்துலிங்கம் எனும் அங்கதம் ஆறாத கதைசொல்லியின்

ஐம்பது ஆண்டுகள் இலக்கியப்பணி நிகழ்வு


23 May, Saturday 20009 (12pm- 7pm)

Munk center, 1 Deronshire place, Toronto University

சிறப்பு பேச்சாளர்: கருணாகர மூர்த்தி (எழுத்தாளர்- ஜேர்மன்)

சிறப்பு விருந்தினர்: எம்.ஏ. நுகுமான் (தமிழ்துறைத் தலைவர், பேராதனை பல்கலைக்கழகம்)

காலம் வாழும் தமிழ் புத்தகங்களின் கண்காட்சியும் இடம் பெறும்.



தொடர்புகளுக்கு: 416- 7311752



# வீட்டின் வெளிப்பகுதியின் தேவைகளும் திருத்தங்களும்


அலன் சிவசம்பு
- வீடு விற்பனைப் பிரதிநிதி -

### ஓட்டை அடைத்தல்:

வீட்டின் வெளிப்பகுதியில் உள்ள ஓட்டைகளை அடைப்பதற்கு Caulk என்று செல்லப்படும் பசை முக்கியமானதொன்றாகும். ஆனால் ஒரு Hardware கடைக்குச் சென்று ஓட்டை அடைக்கும் பசையைத் தெரிவு செய்தால் அவற்றில் பத்திற்கும் அதிகமான வகையுள்ள (Caulk) பசையைக் காணலாம். அவற்றை ஆறுதலாக இருந்து ஒவ்வொன்றாக வாசித்து அறிவதற்கு ஒருவருக்கும் நேரம் இருப்பதில்லை. ஆனால் சரியான Caulkஐக் அறிந்து அவற்றைப் பாவித்தால் வீட்டைச் சூடாக்கும்போதோ, Air Condition பாவிக்கும் போதோ, அல்லது பூச்சி, புழுக்கள் வராமல் பாதுகாப்பாக வைத்திருப்பதற்கோ உதவியாக இருக்கும்.

சதாரணமாக Caulk பலவிதமான மூலப் பொருட்களினால் செய்யப்பட்டுள்ளது. அவற்றில் Silicone, acrylic, latex அல்லது எல்லாம் சேர்ந்த மூலப்பொருட்களைக் கொண்டு Caulk தயார் செய்வார்கள். ஆனால் சில தயாரிப்புகள் சில தேவைகளுக்கு மட்டும் பிரத்தியோகமாகச் செய்துள்ளார்கள். ஆகவே எமது தேவைக்கேற்ப சரியான Caulkஐத் தெரிவு செய்தல் வேண்டும்.

அதாவது எமது வீட்டிற்குத் தேவையான மின்சாரம், தொலைபேசி Cable, satellite dishes, gas pipes, clothes dryer Vents, light fixtures போன்றவற்றை வீட்டின் வெளியில் போடும்போது ஓட்டை துளைத்தே பொருத்துவார்கள். இவற்றைச் சுற்றி Caulkஐக் போடுவது அவசியமாகும்.

மேலே கூறியதுபோல் பலவகையான caulkகள் உள்ளன. ஆனால் இலகுவாகத் தேவைக்கேற்ப பாவிக்ககூடியது silicone acrylic caulk ஆகும். ஆனால் இந்த caulkகள் சாதாரண acrylic caulkகளைவிட விலை அதிகமாக இருந்தாலும் இலகுவாகப் பாவிக்கக்கூடியதாக இருக்கும். கூடுதலான caulk, clear அல்லது வெள்ளை நிறத்தில்தான்



கிடைக்கும் caulk வெளிப்பகுதியில் உள்ள நிறமும் வித்தியாசமாக இருந்தால், வெளிப்பகுதியில் உள்ள நிறத்திற்கேற்ப பூசுவதால் caulk வித்தியாசமாகத் தெரியாமல் மறைக்கலாம். ஆனால் அந்தப் paint, caulkன் மேலே பாவிக்ககூடியதாக இருத்தல் வேண்டும்.

### உடைந்த யன்னல் கண்ணாடியும் அதன் திருத்துதலும்:

தடித்த கையுறையைப் பாவித்து உடைந்த கண்ணாடித்துண்டுகளை அகற்றுதல் வேண்டும். பின்பு யன்னலில் உள்ள பழைய Grazing Compound அதாவது கண்ணாடியை யன்னலுடன் ஒட்டி இருக்க உதவும் பொருளை heat gun அல்லது hair dryerஐப் பாவித்து அகற்றுதல் வேண்டும். ஒரு இடத்தில் Hair dryer அல்லது heat gunஐப் பிடித்திருக்க வேண்டாம். அது மரத்தைச் சிலவேளைகளில் பழுதாக்கிவிடும்.



அதன் பின்பு putty knifeஜப் பாவித்து இலகுவாக உள்ள பழைய பசைகளை முற்றாக அகற்றி விடவும். அகற்றும்போது கஸ்டமாக இருக்கும் இடம்களில் மீண்டும் Hair dryer அல்லது Heat gunஐப் பாவிக்கலாம். அகற்றிய பின்பு primerஜ பூசிக் காய்ந்தவைத்த பின்பு Frameன் மேல் glazing compoundடைப் போட்டபின்பு புதிய கண்ணாடியை அதன் மேல் வைத்து அழுத்தல் வேண்டும். அழுத்தும்போது சில compound வெளியில் வரலாம். அதை உடனே துடைத்தல் நல்லது. கண்ணாடியைப் போட்ட பின்பு அதன்மேல் சிறிய pin ஒன்றை putty knifeஜப் பாவித்து Frameஇனுள், யன்னலின் அளவிற்கு ஏற்றவாறு Pinஐ Frameயினுள் தள்ளுதல் வேண்டும். Pinகளைத் தள்ளியபின்பு அதன் மேல் compoundஐப் போடுதல் வேண்டும். பின்பு ஒரு கிழமை என்றாலும் காய்ந்த பின்பு வர்ணம் திட்டலாம்.

### வெளிபகுதியும் வர்ணம் தீட்டுதலும்:

வீட்டின் வெளிப்பகுதி மரத்தினாலோ அல்லது தகடுகளாலோ செய்யப்பட்டு இருந்தால் வர்ணம் தீட்டுவது அவசியமாகும். முதலாவதாக ஒரு Brushஜப் பாவித்து தேய்த்த பின்பு தண்ணீரைக் கொண்டு நன்றாகக் கழுவுதல் வேண்டும். பின்பு Paint Scraperஐக் கொண்டு உரியும் paint எல்லாவற்றையும் நன்றாக அகற்றுதல் வேண்டும். பெரிய இடமாக இருந்தால் electric sanderஜப் பாவித்தல் நல்லது. அதன் பின்பு ஏதாவது இடங்களில் இடைவெளிகள் இருந்தால் அவற்றை caulk ஐப் பாவித்து அடைக்கவும். பின்பு எல்லா இடத்திற்கும் வர்ணத்தைத் தீட்டுதல் வேண்டும்.

alen@thaiveedu.com

■ ■ ■

# பாகுபாட்டியலின்...

51ம் பக்கத் தொடர்ச்சி...

ஆசிரியர்கள். எனக்கு இதில் சந்தேகமே. மீனினத்திற்கு மிகவும் தெளிவாக தலையின் இரு புறங்களிலும் கண்கள் உள்ளன. ஆகவே தொல்காப்பியர் மீன் இனத்தினை ஈரறிவு உடையவை எனப் பாகு படுத்தி இருக்க-மாட்டார் எனபது எனது அபிப்பிராயம். சில சமயம் கடலில் வாழும் இழுது மீன் (Jelly fish) போன்றவற்றினைக் குறிப்பிட்டிருக்கலாம். இவை கடல் நீரப்பரப்பினிலே நீந்தித் திரிவதை அன்றும் அவர் அவதானித்திருக்க முடியும். இவற்றினுக்குக் கண்கள் இல்லாமையால் ஈரறிவு உள்ளவையாகக் கொள்ள முடியும்.

மூன்றாவது குழுவாக அமைபவை மூவறிவு உடையதாகக் கருதப்படும் கறையான் (சிதல்) மற்றும் எறும்பும் மணநுகர்ச்சியுடன் சம்பந்தப் பட்ட மூக்கினை உடையவை.

நான்காவது குழுவினில் உட்படுத்தப் பட்டவை பார்வை எனும் உணர்வினைக் கொண்டவை. கண் உள்ளவை. அந்தக் குழுவினிலே நண்டும் தும்பியும் உள்ளன என்கிறார்.

ஐந்தாவதாக தொல்காப்பியர் வகுக்கும் குழு செவியினை கேட்பதற்காக உபயோகிக்கும் குழு. இதற்கு உதாரணமாக அவர் தருவது விலங்குகளும் புள்ளினமும் ஆகும். தொல்காப்பியர் விலங்குகள் என அழைப்பது மனிதர் தவிர்ந்த ஏனைய விலங்குகளையே.

தொல்காப்பியரின் பாகுபாட்டியலின் உச்சத்தில் உள்ளது மனம் எனும் ஆறறிவு உடைய மனித இனம். அரிஸ்ரோட்டலின் பகுத்தறிவ ஆன்மாக்கள் இவர்களே.

புல்லும் மரனும் ஓர் அறிவு இனவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே
தொல்.- பொருள்- சூ 572

நந்தும் முரளும் ஈர் அறிவு இனவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே
தொல்.- பொருள்- சூ 573

சிதலும் எறும்பும் மூவறிவு இனவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே
தொல்.- பொருள்- சூ 574

நண்டும் தும்பியும் நான்கு அறிவு இனவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே
தொல்.- பொருள்- சூ 575

மாவும் புள்ளும் ஐயறிவு இனவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே
தொல்.- பொருள்- சூ 576

மக்கள் தாமேறு அறிவு உயிரே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே
தொல்.- பொருள்- சூ 577

ஒருசார் விலங்கும் உளவென மொழிய
தொல்- பொருள் -சூ 578.

எப்படியாக அரிஸ்ரோட்டலினுடைய பாகுபாட்டியல் வெறுமனே சரித்திர முக்கியத்துவம் உடையதோ அதே அளவு தொல்காப்பியருடையதும் சரித்திர முக்கியத்துவம் வாயந்ததாகக் கருத வேண்டும். விஞ்ஞானம் பெரிதும் முன்னேற்றம் கண்டுள்ளது. எனவே பாகு பாட்டியலிலிலும் அதிக முன்னேற்றத்தைக் காணமுடியுமென்றாலும் முதலில் ஒரு பாகுபாடு தேவை எனக்கருதி அதனைச் செய்து முடித்த தொல்காப்பியர் தலைசிற்ந்த இயற்கையியலறிஞர் என்பதை எண்ணிப் பெருமை கொள்ளலாம்.

(இதனை எழுதுதற்குக் காரணமாயிருந்தவர் வைத்தியகலாநிதி லம்போதரன் அவர்கள். அவருக்கு நன்றி)

■ ■ ■

INPROBUS REALTY CORPORATION
Specialty Investment, Property and Business Brokers

**Convenience store in Mississauga for sale-**
8 years in business. $140,000 plus inventory. Sales on lottery plus ATM-$10-11k/month.

**Carole's Café Kitchen. Franchises now available for sale in Toronto, North York and Oakville.**
Offering the famous Carole's cheesecake and unique fresh and healthy homemade foods in an urban

**Art & framing business for sale in Oakville-**
Net Operating Income over $80,000/yr. 20 yrs. in business. Sale price $180,000 (includes inventory of Approx. $50,000).

**Pharmacy, Variety store and Doctor's office space with Property for sale in London, ON.**
Both Buisnesses, vacant furnished Doctor's office and property. Price $800,000 plus inventory. café atmosphere.

**Please call**
**Alan Sivasambu**
**647-504- 2536**



இயற்கை மூலிகையின் உதவியுடன் உங்கள் கேசத்தை பராமரியுங்கள்!
The ERVAMATIN™ HAIR LOTION
உங்கள் முடியுதிர்வை தடுக்கவும் மீண்டும் தலைமயிர் வளரவும் மிக உன்னதமாக தொழில் புரிகிறது எவமாட்டின் மூலிகை ஔடதம்! உலகெங்கும் பல்லாயிரக்கணக்கானவரின் பாராட்டுதலைப் பெற்ற மூலிகைத் தயாரிப்பு. இப்போது எவமாட்டின் சாம்பூவும் கிடைக்கிறது.
Dreamron HENNA
Treated Natural Henna
The Ervamatin Hair Lotion
Provides effective and fast therapy for hair loss
And its treatment ensures excellent therapeutic results.
Recommended as a treatment for
Hair loss, hair regeneration, dandruff, alopecia,
Thin hair, baldness, fragile and dry hair.
இயற்கை மூலிகையிலான தலை முடி மை
இயற்கை மூலிகையான மருதாண்டி கொண்டு செய்யப்படும் இவ் மை உங்கள் தலை முடியையும் நன்கு பராமரிக்கிறது.
Amazon Health Care
SABONA
Tel: 416 264 8787
www.amazonhealthcare.ca
2602, Eglinton Ave East. (Midland/Eglinton)




S.P.IMPORTERS
Furniture
SP
அனைத்து தளபாடங்களும் மிக மிக மலிவு விலையில்
NO PAYMENT INTEREST for 1 YEAR
416-266-3077
கொள்வனவு விலையில்
மலிவு விற்பனை
S.P. IMPORTERS
Sealy Posturepedic
Special Sealy Mattress on SALE
ஒரே பிளாசாவில் 4 தனிப்பெரும் ஸ்தாபனங்கள்...
2861 Lawrence Ave. East, Scarborough, ON M1P 2S8
(Brimley & Lawrence சந்திப்பில்)

# LOW COST & STRESS FREE TRAVEL

FLY TO INDIA ON ONE OF ASIA'S FINEST AIRLINES

Jet Airways' all-new private suite in **First Class** is smart, newly redesigned **Premiere** and spacious, new **Economy Class** is sure to change the way you will ever fly - for the better.

Fly to India on Jet Airways' Airbus 330 and experience the sheer bliss of luxury. You will experience world-class service on board an aircraft that's designed specially to maximize your comfort.

Take your flying experience to incredible new heights on one of Asia's finest airlines. Now, you can experience world-class service and warm hospitality all the way to various Indian destinations via Brussels.






JET AIRWAYS

starting from **$1137.00** taxes included

Toronto - Brussels - Indian Destinations*

Book before: May 15th

*Indian Destinations: Chennai, Cochin, Trivandrum, Bangalore, Mumbai, New Delhi, Hyderabad

Please call us for other Destinations in India

WE DO

- Sun-Fun Destinations
- Vacation Packages
- Sight Seeing Tours
- Pilgrimage Packages
- Via Rail / Euro Rail
- Travel Insurance
- Hotels
- Cruises

## SUPER SEAT SALE FARES

### Europeon Destinations

Travel up to end of May.

| | | | |
|---|---|---|---|
| London | $369.00* | Rome | $465.00* |
| Paris | $429.00* | Zurich | $659.00* |
| Frankfurt | $654.00* | Geneva | $425.00* |

* Taxes starting from $250 - $350.

### Australia

Direct Flight Fare Starting From:

| | |
|---|---|
| Sydney | $1544.00 including taxes |
| Melbourne | $1695.00 including taxes |
| Brisbane | $1695.00 including taxes |

Above fares are Seat Sale Fares. Certain conditions and restrictions apply. Prices are subject to availability of seats.



## YOUR DREAM VACATION AWAITS YOU . . .

All Inclusive Hotel Packages Starting Form $815.00



ACAPULCO
AVALON EXCALIBUR
7 NIGHTS
ALL INCLUSIVE

VARADERO
CLUB TROPICAL
7 NIGHTS
ALL INCLUSIVE

PUERTO VALLARTA
HOTEL TROPICANA
7 NIGHTS
ALL INCLUSIVE

CAYO COCO
CLUB COJIMAR
7 NIGHTS
ALL INCLUSIVE

SANTO DOMINGO
DON JUAN RESORT
7 NIGHTS
ALL INCLUSIVE

CANCUN
SENS CANCUN
7 NIGHTS
ALL INCLUSIVE

HOLGUIN
CLUB COVARRUBIAS
7 NIGHTS
ALL INCLUSIVE

PUNTA CANA
BAHIA PRINCIPE BAVARO
7 NIGHTS
ALL INCLUSIVE

PURETO PLATA
GRAN VENTANA RESORT
7 NIGHTS
ALL INCLUSIVE

*Your Satisfaction is Our Success.*

Serandib travel.com

Toll Free: 1.888.207.0902
Toronto: 416.750.0009
2075 Lawrence Ave East Suite 202

Mississauga: 905.564.7564 Montreal: 514.448.1389
Calgary: 403.770.9647 Vancouver: 604.625.0495

# மனவளக் கலை

இதுவரை எழுதியவையெல்லாம் பலரும் தமது தொப்பியோ என்று தலைக்கு ஏற்றவாறு போட்டுப் பார்த்து விமர்சனங்களும் வந்து விட்டன. எனக்கு எப்படி இப்படி ஞானம் பிறந்தது என்று ஆராய்ச்சி வேறு. அனுபவத்தை எழுதுகிறாரா அல்லது அனுபவித்ததை எழுதுகிறாரா என்று பட்டிமன்றம் ஒருபுறம். சரி மனிதனாகப் பிறந்தால் சகலதும் கற்றுத் துறப்பது தானே இயற்கை. இல்லாவிட்டால் நானும் காவி தரித்து சந்நியாசம் அல்லவா போயிருக்க வேண்டும். 'கொடுத்ததெல்லாம் கொடுத்தான் அவன் யாருக்காக கொடுத்தான்" என்றுதான் பாடத் தோன்றுகிறது. நடிகவேள் M.R.ராதா சிங்கப்பூர் நிகழ்ச்சி ஒன்றில் சொன்னது போல் 'கோயிலுக்கு போங்க. அங்கு ஐயர் என்ன பண்ணுறார் என்று உள்ளே எட்டிப் பார்க்காதீங்க' எவ்வளவு உண்மை.

மனிதனின் வாழ்க்கையில் எத்தனை ஏமாற்றங்கள், சறுக்கல்கள், ஏமாற்றங்கள், குத்து வெட்டுக்கள், முதுகில் குத்தும் துரோகத்தனங்கள் இப்படி ஒரு பட்டியலே போடலாம். ஏறி விழுந்து சறுக்கி நிமிரும்போது முதிர்ச்சி வந்துவிடுகிறது. மனிதனாகப் பிறந்துவிட்டாலே இவை எல்லாவற்றையும் தாண்டியே ஆக வேண்டும். மனித மனம் ஒரு குரங்கு. அதைத் தாவவிட்டால் தப்பி ஓடவிட்டால் நமது வாழ்க்கையில் தப்புத்தாளங்கள் வசிக்க ஆரம்பித்துவிடும். என்ன செய்வது வாழ்ந்து தான் ஆகவேண்டும் என்று வரும்போது மனத்தை கட்டுப்படுத்தி, வாயை அடக்கி வாழ்ந்து பார்க்க வேண்டிய கட்டாயம் வருகின்றது. மற்றவர்களோடு ஒப்பிட்டுப் பார்ப்பதை என்றைக்கு நாம் விட்டு விடுவோமோ அன்றைக்கு வாழ்வு மலரும். ஆகவே இப்பொழுது எண்ணம் ஏன் ஓடுகின்றது என்று பார்த்தால் முன்பு நாம் என்னென்ன காரியங்கள் செய்தோமோ அதேபோல் உடலில் சக்தி ஏற்படுகிறபோது அந்தச் சக்தியின் காரணமாக அதே எண்ணம் அதே செயல் உண்டாகின்றது. நாம் இப்பொழுது எண்ணத்தை ஒழுங்குபடுத்த வேண்டும் என்று சொன்னால் அதற்கு முறையான பயிற்சி அவசியமாகின்றது. உரிய முறையிலே பயிற்சி செய்ய வேண்டும். அவ்வாறு செய்தால் தான் நம்முடைய மனத்தை நம்முடைய விருப்பப்படி நடத்தி நாம் அடைய வேண்டிய எல்லாப் பயன்களையும் எல்லா இலட்சியங்களையும் வாழ்க்கையிலே அடைய முடியும். அதற்குரிய பயிற்சியைத்தான் யோகம் என்றும் அகத்தவம் என்றும் லயம் என்றும் சொல்வார்கள்.

அந்த மனப்பயிற்சியை பழைய யோகாசன நூல்களிலே நான்கு விதமாக கொடுத்திருக்கிறார்கள். அந்த நான்குவிதமான பயிற்சிகள், பிரத்தியாகாரா, தாரணா, தியானம், சமாதி எனப்படுகின்றன.

'பிரத்தியாகாரா என்றால் இதுவரையிலே என்னென்ன காரியங்கள் செய்தோம் அதன் வழியே மனம் ஓடிக்கொண்டு இருக்கிறதே. அதை முதலில் அதன் வழியே ஓடாமல் திருப்பி விடுவது அல்லது அந்த ஓட்டத்திலிருந்து மாற்றியமைப்பது. இது பிரத்தியாகாரா எனப்படுகின்றது.

இதற்குப் பிறகு 'தாரணா'. தன் விருப்பம் போல ஏதோ ஒரு பொழுது மீது, செயல்மீது, நிகாவின்மீது மனத்தை நிறுத்தி வைத்திருக்கப் பழகுவது (Focussing Attention on one Thing at will) இதை Concentrate என்று கூறுவார்கள். இதுதான் 'தாரணா'.

மூன்றாவது பயிற்சி 'தியானம்' இந்த மனம் எங்கிருந்து புறப்படுகிறதோ, இது புறப்படுகின்ற இடத்திலேயே மனத்தைக் கொண்டுவந்து நிலை நிறுத்தப்பழக்குவது என்பது தான் 'தியானம்' எங்கிருந்து புறப்படுகிறதென் மனம் என்பது வேறு ஒன்றும் இல்லை. நம்முடைய உயிருடைய ஆற்றல் தான். இந்த உடலில் உயிர் இயங்கும் போது அதிலிருந்து ஒரு அலைவீச்சாக உருவாகின்றது. கலையின் மூலமாக புலன்கள் வழியே சென்று உயிரே மனமாக இயங்குகின்றது. அந்த மனத்தை உயிர்மேலே லயித்திருக்கச் செய்வதுதான் தியானம். (Meditation) ஆகும்.

அதற்குப் பிறகு எல்லாவற்றிற்கும் மேலான மெய்ப்பொருளோடு மனத்தை ஒன்ற வைத்துத் தானும் எதுவாகவோ மாறிவிடுகின்ற ஒரு நிலைதான் 'சமாதி' என்று சொல்வார்கள். இந்த பிரத்தியாகரா, தாரணா, தியானம், சமாதி என்ற நான்கு பயிற்சிகளையும் முற் காலத்திலே மனப்பயிற்சியாக ஏற்படுத்தி வைத்திருந்தார்கள்.

மனம் என்று சொல்கின்றோம். எண்ணம் என்று சொல்கின்றோம் என்றால், மனம் இப்போது நான்கு வகையாக இயங்குகின்றது. காலமாக, தூரமாக, பருமனாக, வேகமாக இயங்குகின்றது. எந்தப் பொருளை நினைத்தாலும் காலம் தூரம், பருமன், வேகம் என்ற நான்கு பரிமாணத்திலேதான் மனம் இயங்குகின்றது. மனத்தின் கலைஇயக்கம் எப்பொழுதும் தூக்க நேரம் போக மற்ற நேரங்களில் இயங்கிக் கொண்டேயிருக்கின்றது. பிறந்தது முதல் இறக்கும் வரை அதன் இயக்கம் தொடர்ந்து நடைபெறுகின்றது. அதை நிறுத்திவிட யாரும் நினைத்தால் அது அறியாமையேயாகும். அதைவிட மனத்தை நல்ல முறையிலே இயக்கப் பழக்கிவிடுவோமாயின் அதுவே பெரியதொரு வெற்றியாகும். மனம் அமைதியாக இருக்க வேண்டும். மனம் நிலைத்து நிற்க வேண்டும் என்று நினைக்கின்றீர்களா அது நல்லது. நிறுத்திவிட வேண்டும் என்பது வேறு, நிலைத்து இருக்க வேண்டும் என்பது வேறு.

> அஞ்சும் அடக்கு அடக்கு என்பர் அறிவிலார்
> அஞ்சும் அடக்கும் அமரரும் அங்கு இல்லை
> அஞ்சும் அடக்கின் அசேதனம் என்று இட்டு
> அஞ்சும் அடக்கா அறிவறிந் தேனே.

இதை விலக்கிக் கொள்வது சிறிது கடினமாகத்தான் இருக்கும். ஆனால் மனம் என்பது இதுதான் என்பது பிடிபட்டுவிட்டால் அதை செம்மையாக வைத்துக்கொள்வது என்பதுதான் முக்கியம். மனத்தின் மாண்பு எதுவோ அதுவே மனிதனின் மாண்பு. இந்த உண்மையை உணர்ந்துகொண்டு அதற்கேற்ற முறையில் நமது வாழ்க்கையை சீரமைத்தால் துன்பம் குறைந்து அமைதியும் இன்பமும் பெருகும் என்பதே பலரும் கண்டறிந்த உண்மை.

இந்தப் பயிற்சிகள் மூலமாக மனத்தை திருப்பி வளப்படுத்தி, முறைப்படுத்தி, நம் விருப்பம் போல் எந்தெந்த முறையிலே செயல்படுத்த முடியுமோ அப்படி செய்ய வேண்டுமே தவிர, மனம் நிற்க வேண்டுமென நினைத்தால் மட்டும் நின்று விடாது அதற்கான உளப்பயிற்சியைத்தான் மனவளக்கலை என்றும், அகத்தவம் என்றும் குண்டலினியோகம் என்றும், ராஜயோகம் என்றும் பலவாறாகப் பெயர் சொல்லி அழைக்கின்றோம். மனம் உண்டானால் இடமுண்டு என்று இதைத்தான் சொன்னார்களோ?

மனத்தை வளப்படுத்த வேண்டுமென்பது எல்லோருக்கும் இன்று அவசியமானதொன்றாகிவிட்டது. இக்காலத்திலே அந்தக் கடின முறையெல்லாம் இல்லாமல் ஒரு சுலபமான முறையின் மூலமாக மனத்தை வளப்படுத்த யோகக்கலை வந்துவிட்டது. மனத்தை வளப்படுத்த இல்லை என்றால் மனதில் மிகவும் குழப்பமான சூழ்நிலை ஏற்பட்டு, அதிகமான கலக்கமேற்பட்டு, அந்த அழுத்தங்களின் (Pressures and tensions) விளைவாக தொல்லையும் துன்பமும் பெருகிவிடும்.

தேவையுணர்ந்து தனது ஆற்றலைச் செலவிடவும், தேவையில்லாதபோது செலவிலிருந்து தன்னை மீட்டுச் சேமிப்பு நிலையில் இருக்கவும் ஆன்மாவுக்குத் திறமை பெருகும். உடல்நலம், மனநலம் ஓங்கும். முகம் அழகு பெறும்.

மனிதன் பெற்றுள்ள ஆறாவது அறிவுதான் என்ன? மனம், உயிர், மெய் என்ற மூன்று மறைபொருட்களையும் உணரத்தக்க ஆற்றலே அந்த ஆறாவது அறிவு. அப்படிப்பட்ட ஆறாவது அறிவைப் பெற்ற மனிதன் ஏன் அறிய வேண்டியதை அறியமல் தவிக்கின்றான். இந்த உலகத்திலே தவறுகள் அல்லது தீமைகள் செய்து அதன் வழியாக ஏன் துன்பம் அடைந்து கொண்டே இருக்கின்றோம்? சஞ்சித கர்மம் என்று தொடர்ந்து வந்த பழக்கத்தினால் என்னென்ன காரியங்கள் முன்னர் செய்தாரோ அவையெல்லாம் பதிவாகி இருப்பதாலே அவ்வப்போது அந்தப் பதிவுகள் தூண்டுதல் பெற்று இயக்கம் உண்டாகி சாதாரண ஐந்துணர்வு வயப்பட்ட செய்கைகளாலேயே மனிதன் இழுக்கப்பட்டு போகின்றான்.

> “இந்த உடலில் உயிர் இயங்கும் போது
> அதிலிருந்து
> ஒரு அலைவீச்சாக உருவாகின்றது.
> கலையின் மூலமாக புலன்கள் வழியே சென்று
> உயிரே மனமாக இயங்குகின்றது.
> அந்த மனத்தை உயிர்மேலே
> லயித்திருக்கச் செய்வதுதான் தியானம்.”

உலக நாடுகள் முழுவதும் இன்று அரசியல் பொருளாதாரம் சமுதாயநலம் என்ற துறைகளில் பெரும் குழப்பத்தில் ஆழ்ந்துள்ளன. பெரும்பாலான மக்களுக்கு வறுமையே பிறப்புரிமையாக இருக்கின்றது. அவர்களுடைய வாழ்க்கைத் தரம் வறுமைக் கோட்டுக்குக் கீழேயே இருக்கின்றது. சேறும், சகதியும் நிறைந்த குடிசைகளில் வாழ்கின்றார்கள். இந்த மண்ணின் குழந்தைகளே உலகச் சந்தையில் தங்களது பராமரிப்புக்கு கையேந்தும் உலகின் அநாதைகள் ஆகி விட்டார்கள். கல்வியின்மையும் மூட நம்பிக்கையும் எங்கு பார்த்தாலும் நம்மை முற்றுகை இடுகின்றன. வாழ்க்கைப் பாதையெங்கும் வன்முறை நம் சமுதாயத்தை சூறையாடுகிறது. இலஞ்சம், தகுதியின்மை, குழப்பம் இவை நம் வாழ்க்கையையும், அரச நிறுவனங்களையும், நிர்வாகக் கட்டமைப்பையும் சீர்குலையச் செய்துவிட்டன.



திரு மகேசன்

மனிதனின் பெருமையை மனிதன் உணர்ந்து மதித்துத் தன் தேவை, விருப்பம் இவற்றை ஒழுங்கு செய்து வாழும் ஒரு உயர் பண்பாட்டின் மூலமே எல்லாக் குழப்பங்களும் சிக்கல்களும் தீர்ந்து உலகில் அமைதி ஏற்படும். இத்தகைய பண்பாடு ஆன்மீக அறிவு மூலம் ஏற்பட்டாலன்றி வேறு வழியில்லை. உலக நலம் நாடும் பெருந்தலைவர்களும், அறிஞர்களும் இந்நிலைமையை உணர்ந்திருந்த போதும் மனித குலத்தை ஒருங்கிணைக்கத்தக்க ஒரு நல்ல திட்டமின்றித் தவிர்க்கின்றனர். நமது மனவளக்கலை மனித சமுதாயத்தை வளம்படுத்த வாழ்வில் எல்லாம் நலன்களையும் அளிக்கவல்ல ஓர் உயர்ந்த வாழ்க்கை வாழும் வழியாகும்.

உலகின் பெரும்பாலான மக்கள் புலன் கவர்ச்சியில் மயங்கி ஆன்ம நிலையை மறந்து தப்பான வாழ்வு வாழ்கின்றார்கள். துன்பங்கள் பெருவதாக தலையிலடித்து என்ன பயன்? பாலின கவர்ச்சி வேகத்தில் மயங்கி மயக்க நிலையில்தான் பெரும்பாலும் குழந்தைப் பிறப்புக்கள் நிகழ்கின்றன. அக் குழந்தைகளும் மயக்க நிலையில்தானே விழ முடியும்?

அன்றைய காலத்தில் ஏழைகளாக இருந்த பெரும்பாலானோர் சிந்தனை அற்றவர்களாகவும், சிந்தனை உடையவர்கள் பொறுமை மிக்கவர்களாகவும் ஏழ்மை விதிப்பயன் என்று சொல்லிக்கொண்டே வாழ்ந்தார்கள்.

இன்றைய காலகட்டத்தில் எடுத்தோம் கவிழ்த்தோம் என்று மண்டையைப் போட்டு பிசைந்து மனக் கலத்தத்தில் நிற்கின்றோம். வாழ்க்கையை வளம்படுத்த வழி இருந்தும் முழித்துக் கொண்டு முக்காடிட்டு உட்கார்ந்து இருந்து கண்டபயன் என்ன?

காலம் கனிகின்றது. கனிவாக வாழ்க்கைக்கு வழி இருக்கத் தப்புத்தாளங்கள் போட்டுவிட்டு ஒப்பாரி வைத்து என்ன பயன். வளமான வாழ்க்கைக்கு வழி இருக்க ஒளி மங்கி வாழ்க்கை வாழ்வதால் கண்டபயன் என்ன? உப்பைத் திண்டவன் தண்ணி குடிப்பான். தப்புச் செய்தவன் தண்டனை கொள்வான் என்பது எவ்வளவு உயரிய தத்துவம்.

mahesan@thaiveedu.com

■ ■ ■


## மனவளக் கலைப் பயிற்சி

Classes are conducted every Saturday of the week at 4 - 6 pm.

**The SKY Yoga Canada**

80 Nashdene Road, Unit 130
Scarborough, Ontario M1V 5E4
(Located at Markham & Nashdene intersection)

# சாப்பிடும் முறையும் சாப்பாடும்



மஞ்சுளா ராஜலிங்கம்

இம் முறை table manners என்பதன் அர்த்தம் என்ன என்பதைக் குறிக்கும் குறிப்புக்களாகவும், ஒரு விருந்துக்கு நாம் செல்லும்போது, பொதுவில் இலகுவாக நாம் பின்பற்றக் கூடிய விடயங்களைப் பற்றியதாகவும் பார்ப்போம்.

விருந்துக்குக் குறிக்கப் பட்டிருக்கும் நேரத்திற்கு முன்னரே போய் ஆஜராகுங்கள்.

சாப்பிடப் பாவிக்கும் உபகரணங்களை வெளியிலிருந்து உள்ளாக, ஒவ்வொரு உணவு வகைக்கும் பாவிக்கத் தெரிய வேண்டும்.

சாப்பிடும் உபகரணம் ஒன்று நிலத்தில் கை தவறி விழுந்துவிட்டதா? விடுங்கள். பரிமாறுபவரிடம் அதைப்போல் இன்னுமொரு கத்தியோ, முட்கரண்டியோ கொண்டு வருமாறு பணியுங்கள்! நிலத்தில் தவழ்ந்து உங்கள் கத்தியை உரிமை கொண்டாடினால் அழகல்ல

தனிப்பட்ட விருந்துபசாரங்களில் உங்கள் உடல் மற்றும் சுகாதார, உணவுப் பழக்கவழக்கங்கள் கருதி, நீங்கள் "ஐயோ, இதை என்னால் சாப்பிட முடியாது" என்று சில உணவு வகைகளைத் தள்ளி வைப்பது உங்களை விருந்துக்கு அழைத்தவரை அவமதிப்பது போலாகும். தற்போது பிரதான விருந்துபசாரங்களுக்கு ஒருவரை அழைக்கும்போதே, நம் உணவுப் பழக்கத்தை மற்றும் விருப்பத்தை, அந்த அழைப்பை ஏற்கும்போது, சொல்ல வாய்ப்புக்கள் உள்ளன. அதை முடிந்தளவு, விரைவாகவும், முடிவாகவும் சொல்லிவிட்டால், அவர்கள் அதற்கேற்றாற்போல் உங்களுக்கான பிரத்தியேகமான உணவைத் தயாரிப்பார்கள். விமானத்தில் நாம் பயணிக்கும் முன் உணவைப் பட்டியலிட்டுக் கொடுப்பதில்லையா, அதைப்போல் தான் இதுவும்! பின்னர், எனக்கு இது சரியான விருந்தில்லையே, நான் மட்டும் இந்த விருந்தை சரியாக enjoy பண்ணவில்லையே என்ற மனக்கிலேசம் எழாதல்லவா?

அமெரிக்க பாணியில், வழங்கப்படும் ஒவ்வொரு உணவையும் நீங்கள் உங்கள் தட்டில் வாங்கிப்போட்டுச் சாப்பிட வேண்டிய அவசியமில்லை. அதுபோல், தட்டில் போட்ட எல்லா உணவு வகையையும் நீங்கள் தட்டில் ஒரு அடையாளம் இல்லாமல் முடிக்க வேண்டும் என்றும் இல்லை. சாப்பாட்டின் தரத்தைப் பற்றி இழிவாகப் பேசுவதும், இன்ன உணவை இன்னும் கொஞ்சம் கூடுதலாகத் தந்திருக்கலாமே என்று சொல்வதும் சரியல்ல

பரிமாறுபவர் பக்கத்தில் நின்றால் அவருக்கு நன்றி சொல்லலாம், ஆனால் மற்ற விருந்தினர்களும் இருந்து உரையாடிக் கொண்டிருக்கும் இந்தக் கட்டத்தில், நீங்கள் பணியாளரைச் சந்தோஷப் படுத்த வேண்டும் என்ற அவசியமில்லை.

கைத்தொலைபேசியை அறவே off பண்ணி வையுங்கள். Text message அனுப்புவது போன்றவை இந்நேரத்தில் செய்யத் தகுந்த செயல்களல்ல. அத்துடன் ஒரு புத்தகம் படிப்பது, அல்லது personal playerஇல் இசை கேட்பது இவையெதுவும் இங்கே இருக்கக் கூடாது. அவசரமான ஒரு call வந்துவிட்டதென்றாலும், பணிவாக மற்றவர்களிடம் இருந்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டு அந்த இடத்தைவிட்டு அகன்று, உங்கள் phone callஐக் கவனித்து மீண்டும் அதே மன்னிப்புடன் உங்கள் இருக்கையில்வந்து அமருங்கள்.

உங்களுக்குக் கொடுக்கப்பட்ட கதிரையில் நிமிர்ந்து உட்காருங்கள். மேசையின் மேல் சரிந்து இருத்தல், பின்னால் சரிதல், முழங்கைகளை மேசைமேல் ஊன்றி உட்காருதல் போன்றவை தவிர்க்கப்பட வேண்டும், ஏனெனில் இவை உங்கள் பக்கத்தில் உட்காருபவருக்கு இடைஞ்சலாகும்.

சாப்பிடும்போது தலையை, உங்கள் தட்டு நோக்கிக் கொண்டு செல்ல வேண்டாம். சாப்பிடும் உபகரணங்களை வாய்க்கு அருகாகக் கொண்டு வாருங்கள். நிலத்தில் விழுந்த உபகரணங்களைக் கையால் எடுத்து மேசையில் மீண்டும் போடும் எண்ணம் வேண்டாம். பணியாளரைக் கடைக்கண் பார்வை பார்த்தால் அவர் புரிந்து கொண்டு உங்கள் உதவிக்கு வருவார். ஆனால் உங்கள் napkin பறந்து விட்டதா? குனிந்து அதை எடுக்கும் தறுவாயில் பொதுவில் அந்த விருந்து மேசையைச் சுற்றி அமர்ந்திருக்கும் மற்றவர்களிடம் மன்னிப்புக் கோரி (excuse me) உங்கள் கைக்காரியத்தைத் தொடருங்கள்.

ஒரு உணவு வகையைப் பரிமாறும்போது, அதை இடப்பக்கமிருந்து பரிமாற வேண்டும், அதைப்போல் அதை வலப்பக்கமிருந்தே எடுக்க வேண்டும்.

ஒரு உணவு ஒருவரிடமிருந்து மற்றவருக்கு கைமாற்றம் செய்யப்படும்போது, அதை விருந்துக்கு அழைத்தவர் அல்லது பரிமாறுபவர்தான் முதலில் தொடக்கி வைக்க வேண்டும். உங்கள் கைக்கு வந்த பாத்திரத்தை அதே பாணியிலும், அதே திசையிலும் நீங்கள் மற்றவரிடம் கையளிக்க வேண்டும். கொடுக்கப்படும் உணவை உங்கள் இடப் பக்கத்தில் வைத்து, அதிலிருந்து தேவையானதை எடுத்ததும், வலப்பக்கமிருப்பவரிடம் அதைக் கொடுக்க வேண்டும். அள்ளி எடுத்து உங்கள் தட்டை நிறைத்துக் கொள்ளாதீர்கள். எடுக்கும்போது, "நாம் எவ்வளவு எடுத்தால், விருந்தில் இருக்கும் மற்றவர்களுக்கும் இது போதுமானதாக இருக்கும்?" என்பதைக் கொஞ்சம் கருத்தில் கொண்டு சிறிதளவாகவே எடுங்கள். அடுத்த வந்த பாத்திரத்தில் உள்ள உணவு உங்களுக்குப் பிடிக்கவில்லையா? விமர்சனம் செய்யாமல், அதை அருகிலிருப்பவரிடம் கையளியுங்கள். பரிமாறுபவர் பரிமாறும்போதும், உங்களுக்கு அந்த உணவு வேண்டுமா என்று கேட்டுத்தான் உங்கள் தட்டில் உணவுப் பதார்த்தத்தை வைப்பார்.

ஒருவர் ஒரு உணவுப் பாத்திரத்தை எடுத்துத் தருமாறுப் பணித்தால், அந்தப் பாத்திரம் உங்களுக்குப் பக்கமாக இருந்தால் மட்டுமே எடுத்து பக்குவமாக கொடுங்கள். அதுபோல், கேட்டவர் கைக்குப் போய்வந்த பின்னரே நீங்கள் அந்த உணவை உங்கள் தட்டிலும் பரிமாறிக் கொள்ளல் வேண்டும். உங்களுக்கு ஒருவகை உணவு மேசையில் அந்தக் கோடியிலிருந்து தேவைப்பட்டாலும், மற்றவர் தட்டின்மேல் குறுக்காகப் பாய்ந்து, உங்கள் ஆடைகளை, மற்றவர்களின் தட்டுகளின்மேல், பயணிக்க, மிதக்கச் செய்து பாத்திரத்தை அடைய எண்ண வேண்டாம். கேளுங்கள், எடுத்துக் கொடுக்கப்படும்

மேசையிலிருக்கும் பாத்திரத்தை இழுத்து எடுக்காதீர்கள்

உணவை முதலில் சுவைத்துப் பார்த்தபின், உப்பு, மிளகின் தேவையை அறிந்து அவற்றைப் பயன்படுத்துங்கள். அத்துடன், வேறு யாராவது உங்கள் பக்கத்தில் உள்ள மிளகை அல்லது உப்பைத் தனித்தனியேக் கேட்டாலும், இரண்டு சமாச்சாரங்களையும் சேர்த்தே அவரிடம் அனுப்பி வையுங்கள். சாப்பிட்டுப் பார்த்தபின், உணவின் தேவை பொறுத்து இவற்றைப் பயன்படுத்துவதன் காரணம் என்ன தெரியுமா? அப்படிச் செய்யாமல், முதலிலேயே உப்பு, மிளகை உணவுடன் நீங்களே சேர்த்தால், அது அந்த உணவைச் சமைத்தவரை நீங்கள் அவமதிப்பது போலாகுமாம். அதுபோல், பொதுவில் வைக்கப்பட்டுள்ள ஒரு உணவுப் பதார்த்தத்தில் உங்கள் கைங்கரியத்தைக் காட்டி விடாதீர்கள். உங்களுக்குக் குறைச்சலாக இருக்கும் உப்பு, மற்றவருக்கு ஒரு உணவுக் கட்டுப்பாடாக இருக்கலாம். உங்கள் தட்டில் மட்டுமே உங்கள் விருப்பு, வெறுப்புக்களைக் கையாளுங்கள்

வாயில் உணவை வைத்துக் கொண்டு பேசாதீர்கள். நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள் என்பதை மற்றவர்கள் புரிந்து கொள்ள முயாதிருக்கும். அத்துடன் வாய்பூரா உணவுடன் பேசும்போது, மற்றவர்களுக்கே அதைப்பார்க்க அருவருப்பாக இருக்கும். அதைவிடவும், நீங்கள் உணவு வாயுடன் கதைக்கும்போது, அந்த உணவு வாய்தவறி உங்கள் அயலவர் தட்டில் குடித்தனம் செய்யப்போய் விட்டால், பிறகு கேட்கவா வேண்டும்? ஓ, அத்துடன் கதை என்று வந்து விட்டாலே, இன்னொன்றையும் சொல்லித்தானாக வேண்டும். அதிகம் சத்தம் போட்டு உங்கள் குரலை உயர்த்திப் பேசாதீர்கள்.

உணவை வாய்புடைக்கும் அளவுக்கு உள்ளே தள்ளி சாப்பிட வேண்டாம். கொஞ்சம் கொஞ்சமாக உணவைச் சாப்பிடுவதோடு, மற்றவர்களும் உகந்த நேரத்திற் முடிக்குமாற்போல் அவர்களின் சந்தத்திற்கேற்ப நீங்களும் சாப்பிட்டால், விருந்து எல்லார் தட்டிலிருந்தும் கிட்டத்தட்ட ஒரே நேரத்தில் முடியும். நீங்கள் சாப்பாட்டை முதலில் முடித்துவிட்டு, வெற்றி வீரனைப் போல் உட்கார்ந்திருந்தால், பக்கத்தவர் உங்கள் பக்கம் மெதுவே குனிந்து, "நல்லவேளை, நீங்கள் உங்கள் தட்டையும் சாப்பிடாமல் விட்டீர்களே?" என்று கேட்டால், போனது உங்கள் மானம்.

வாயில் போட்ட உணவை உதடுகளை மூடி சத்தம் வராதவாறு மெல்லுங்கள். ஆனால் அதிக நேரம் மென்றுகொண்டே இருக்காதீர்கள். அது நிறைய எச்சிலை வாய்க்குள்ளேயே கூட்டி வித்தியாசமான ஒலிகளை எழுப்பச் செய்துவிடும்.

பயன்படுத்தப்படும் சாப்பிடும் உபகரணங்களை போரில் மோதவிடுவது போல் சத்தம் அமையச் சாப்பிடுவது அழகல்ல.

பற்களின் இடுக்கில் சமாச்சாரங்கள் மாட்டிக் கொண்டதா? விரலை அனுப்பி உனக்கு உலைவைக்கிறேன் நான் என்று கையைக் கொண்டு வாயினுள்ளே விளையாட வேண்டாம். யாரும் பார்த்தார்களென்றால் அசிங்கம். "excuse me, I will be right back" என்று சொல்லி விட்டு washroom நோக்கி நடையைப் போடுங்கள். அங்குபோய், பல்லிடுக்கில் மாட்டியவருக்கு தண்டனை தரலாம், ஆனால் மறந்தும் " excuse me, I am going to the washroom" என்று மட்டும் சொல்லி விடாதீர்கள்.

ஏவறை, இருமல், தும்மல், கொட்டாவி, விக்கல், போன்றவை நம் கட்டுப்பாட்டுக்குள்ளேயே இருக்க வேண்டும். மீறி வந்து விட்டதா? மெதுவாகவும், பொதுவாகவும் மன்னிப்புக் கேட்கும் பாவனையில் "excuse me" என்ற வார்த்தையைப் பிரயோகியுங்கள்.

மூக்கு தன்னைக் கவனிக்க வில்லையென்று அடம்பிடித்து அழுகைக்குத் தயாராகின்றதா?

66ம் பக்கம் பார்க்க...



S.P ELECTRONICS

அனைத்துத் தமிழ் வானொலிகளும் புதிதாக

வாங்குவதற்கும், திருத்திக் கொள்வதற்கும்.

416 264 6400

2641 Eglinton Ave. Scarborough

(Brimley & Eglinton)

# CREDIT SOLUTION CENTRE

## Trustee in Bankruptcy

இணைந்து ஒரே கூரையின் கீழ் இயங்கும்
ஒரு தமிழர் நிறுவனம்

கடன் பிரச்சனைகளால் நிம்மதியற்ற
வாழ்க்கையா?

நாளாந்த வாழ்க்கை கைநழுவிப்
போகிறதா?

வீடு கார் பறிமுதல் ஆகிவிடும்
என்ற ஏக்கமா?

**Collection Agency**யின் தொலைபேசி
மிரட்டலா?

உங்கள் சம்பளம் **(Salary)** கடன்
தந்தோரினால் பறிமுதல் ஆகிவிடும்
என்ற ஏக்கமா?

உங்கள் அணைத்து
பிரச்சனைகளுக்கும்
இலவச
ஆலோசனைபெற
அழையுங்கள்!

**For Free Consultation
Please Call:**

**Sri**





**CREDIT SOLUTION CENTRE**
**80 Corporate Drive # 309**
**Scarborough, ON M1H 3G5**
**Tel: 416 439 0224 Fax: 416 439 0226**
**creditsolutioncentre@gmail.com**

# A1 TOP QUALITY FLORIST






உங்களின் மங்களகரமான வைபவங்களுக்கு
தேவையான பொருட்களுக்கும் நாடுங்கள்

**பிள்ளை 416-269-5522**

2871 Lawrence Ave. East, Scarborough. Ontario M1P 2S8

# A1 TOP QUALITY FLORIST

## Funeral Services




Floral Arrangement for Funeral Needs

**பிள்ளை 416-269-5522**

2871 Lawrence Ave. East, Scarborough. Ontario M1P 2S8

# இடர் குறைந்த முதலீடுகள்



ராகுலன்
balar@thaiveedu.com

பல்வேறு முதலீடுகளில் இருந்தும் வெளியேறி பலரும் பணமாக வைத்திருக்கும் நிலையில் வருமானம் தரக்கூடிய இடர் குறைந்த முதலீடுகளைத் தேடுவது இயற்கை. தற்போதைய நிலைமை காரணமாக, நிறுவனங்களில் கடன் முறிகளின், விளைவுகள் அதிகரித்துள்ளன என்கிறார் Goodman and Co நிறுவனத்தைச் சேர்ந்த Michael McHugh என்பார். அவர் மேலும் கூறுகையில் அடுத்து என்ன நடக்கும் என அறிவதற்காக பொறுத்திருக்கும் காலகட்டத்தில் அதிகளவு இடரில்லாத முதலீடுகளில் முதலிடுவதன் மூலம் வருமானத்தைப் பெற்றுக்கொள்ளலாம். இவர் இந்த நிறுவனத்தின் Fixed Income பகுதிக்கான முதலீடுகளை நிர்வகிப்பவர் ஆவார்.

மார்ச் 1ல் ஆரம்பிக்கப்பட்ட The Statigec Yield Fund ஆரம்ப விளைவு வீதம் 7 வீதமாகும். இதில் 2/3 பங்கு நிரந்தர வருமான முறிவுகள் ஆகும். இந்த Mutual Fundல் புதிய முதலீடுகள் வரும்பொழுது தொடர்ந்தும் நல்ல முதலீடுகள் முதலிட முடியும். இந்த Fundஐ நிர்வகிப்பதற்கு சுதந்திரமாக முதலீடுகளை தெரிவுசெய்ய முடியும். Investment rated Corporate bonds, Convertible bond, high Yield unrated Government bonds என்பவற்றில் முதலிட முடியும். அத்துடன் Dividend Paying Common shares Proferred or convertible Proferred, income, Trusts and real estate Investment Trust என்பவற்றில் முதலிட முடியும்.

Michael MC Hugh அவர்கள் நியாயவிலையில் கிடைக்கக்கூடிய தரமான முதலீடுகளை தெரிவுசெய்பவராவார். நிறுவனங்களின் Balance Sheet – Visible Cash flows, stable Business, Substantiality என்பனவற்றில் அவர் கவனம் செலுத்துவார்.

பங்குச் சந்தை நிலவரம் சற்று முன்னேற்றம் கண்டு கொண்டிருந்த போதும் இன்னும் அங்கு ஸ்திரமின்மை காணப்படுகிறது. அதனால், அங்கு இன்னும் பல நல்ல முதலீடுகளைச் செய்வதற்கு சந்தர்ப்பம் இருக்கிறது. சில நிறுவனங்களில் முறிகளின் Divined yield அரசாங்க முறிகளின் yieldஐவிட அதிகமாகும். இனிவரும் காலங்களில் வரக்கூடிய லாப அதிகரிப்பு இன்னும் இந்தப் பங்குகளில் விலைகளில் தெரியத்தொடங்கவில்லை. ஆனாலும் கடந்த ஆண்டுகளில் காணப்பட்டது போன்ற 'Bubble' விலை அதிகரிப்பு தோன்ற பல ஆண்டுகள் ஆகும் என எதிர்வுகூறப்படுகிறது.

> “ இந்த உலகின் சரித்திரத்தில் முடிவில்லாமல் ஒரு பொருளாதாரப் பின்னடைவு இருந்ததில்லை. ”

கடந்த காலங்களில் அரசாங்கங்கள் கடன் வசதிகளை அதிகரிப்பதால் பொருளாதார பின்னடைவுகளைச் சரி செய்தார்கள். ஆனால் தற்போது நிதிநிறுவனங்களில் ஏற்பட்ட ஓட்டைகளை அடைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே தற்போதைய நிலையில் அரசாங்கங்களால் ஒரு பாரிய அளவிலான புதிய பொருளாதார நடவடிக்கையை, ஊக்குவிக்க முடியாது. அதனால் இனிவரும் காலங்களில் முதலீட்டாளரின் முதலீடுகளுக்கு ஒரு Balanced approachஐ மேற்கொள்வார்கள்.

TD Capital Trust TV Notes 9.523% June 30,2019

கடந்த January இல் வெளியிடப்பட்ட இந்த முறியைப் போன்ற கனடிய நிதி நிறுவனங்களில் முறிகள் பாதுகாப்பானவை. அதிலும் TD வங்கி நல்ல Capital Base உடன் சிறந்த Risk Managementஐயும் கொண்டது.

Altria Group INC 9.70% Bonds Nov 10,2018

இந்த நிறுவனம் ஒரு நல்ல Balance Sheet கொண்ட சிறந்த நிறுவனம் ஆகும். இவர்களின் சந்தையில் மேலாதிக்கத்துடன் இருக்கிறார்கள். விற்பனையில் ஏற்படும் வீழ்ச்சியை இவர்கள் விலை அதிகரிப்பின் மூலம் சரி செய்திருக்கிறார்கள். கடந்த நவம்பரில் இருந்து இந்த நிறுவனம் 12 பில்லியன் அளவில் கடனை சந்தைகளில் இருந்து எடுத்திருக்கிறது.

இப்படி சந்தை நிலவரம் இருக்கும் போது, இது இந்த நிறுவனம் மீது முதலீட்டாளர்கள் கொண்ட நம்பிக்கையைக் காட்டுகிறது.

Cresent Point Energy Trust (CPgun / TSX)

அண்மையில் இந்த நிறுவனம் Talisman Energy நிறுவனத்திடம் இருந்து பல நல்ல தரமான சொத்துக்களை வாங்கியதுடன் மாதாந்த Divined ஆக 0.23 சதங்களை விநியோகம் செய்வதுமாகும். இனிவரும் காலங்களில் பொருளாதார நிலை சீரானதும் எண்ணெய் விலை அதிகரிக்கும் போது இந் நிறுவனத்தின் பங்கின் விலை மிகவும் உயர்வடையச் சந்தர்ப்பம் உண்டு.

அத்துடன் தற்போது உலகில் பெரும் பேச்சாக இருக்கும் இந்தப் பொருளாதாரப் பின்னடைவைப் பற்றி ஒரு கருத்தைக் கூறி இந்தக் கட்டுரையை முடிப்போம். அதாவது இந்த உலகின் சரித்திரத்தில் முடிவில்லாமல் ஒரு பொருளாதாரப் பின்னடைவு இருந்ததில்லை. 'There hasn't been a recession yet that hasn't been ended' – Abby Joseph Cohen இதை கூறியுள்ளார்கள். இந்த பொருளாதார நிலை ஒரு வண்டிச் சக்கரம் போல மீண்டும் மேல் நிலைக்கு வரும் என்பது அவரது கூற்றாகும்.

ragulan@thaiveedu.com

■ ■ ■


# Arajen Beauty Centre



- Make Up
- Hair Style & Hair Care
- Dying & Highlighting
- Bridal Make Up & Arangetram
- Skin Care (All Kind of Facial)
- Threading & Waxing
- Skin Treatment
- Nail Art
- Dress Making (Saree & Blouse)
- Permanent Hair Removal
- Pedicure, Manicure
- Mehindi
- Bouquet, Sadainagam
- Cryotherapy
- Micro Dermabrasion

Beauty Classes
அழகியல் கலையை கற்க விரும்புகிறீர்களா? எங்களது கலை வகுப்புகளில் இணைந்து கொள்ளுங்கள்

Certificate Courses & Seminars



அரஜன் அழகு நிலையம்

2605-A Eglinton Ave. E.,Scarborough, ON M1K 2S2
(இரா சுப்பர் மார்க்கட் மேல் மாடியில்)

இப்போது ஆண்களுக்கான சேவைகளும்

Tel: 416.509.7978
Web: www.arajenbeauty.ca, E-mail: sasi@arajenbeauty.ca

# சாப்பிடும் முறையும்...

62ம் பக்கத் தொடர்ச்சி...

மேசையில் வைத்து மூக்கை உங்கள் napkin கொண்டு உறிஞ்சி விடாதீர்கள். விருந்து மேஜையைவிட்டு எழும்பி நமக்கு மிகவும் சுவாரசியம் தரும் இடம்நோக்கி நடையைக் கட்டுங்கள் (washroom)

ஏதாவது உணவுவகைகள் உங்கள்மேல் அல்லது அக்கம்பக்க விருந்தினர் மேல் சிந்தி-விட்டதா? பதட்டம் வேண்டாம். இது நடப்பது தான். உங்கள்மேல் சிந்திவிட்டால், பொதுவில் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு, நிலையையை பணியாளரின் உதவியுடன் சமாளிக்கப் பாருங்கள். உங்கள் napkinஐப் பாவிப்பதன் மூலம், மற்றவர்கள்மேல் ஏதும் மேலும் சிந்தாமல் பாருங்கள். ஆனால் மற்றவர்களின் ஆடை-களின்மேல் ஏதும் சிந்திவிட்டதா? உதவி செய்கிறேன் பேர்வழி என்று அவர்களின் ஆடைகளை எக்காரணம் கொண்டும் சுத்தம் பண்ணப் போகாதீர்கள். அது பின்னர் 'sexual harassment' என்ற பெயரில், உங்களைச் சட்டத்தின் பிடியில் சிக்கவைத்தாலும் ஆச்ச ரியப் படுவதற்கில்லை. அவர்களிடம் கறை யைச்சுட்டிக் காட்டி, மன்னிப்புக் கேட்டு, dry cleanஇற்கு நீங்களே பொறுப்பெடுப்பதாய்ச் சொல்லி, அல்லது ஏதோ ஒன்றைச் சொல்லி நிலைமையைச் சமாளியுங்கள்.

சாப்பாட்டு வகையறாக்கள், உணவு உபகர ணங்களுடன் விளையாடாதீர்கள். கைகளில் கத்தி, முட்கரண்டிகளை வைத்துக் கொண்டு, மற்றவர்களின் திசைநோக்கி அவற்றைக் குறிவைத்துக் கொண்டு பேசாதீர்கள்.

அடுத்தவர்கள் சாப்பிடுவதை வைத்தகண் கொட்டாமல் பார்க்காதீர்கள்

உணவுபட்ட விரல்களை ஒருபோதும் விருந்து களில் நக்காதீர்கள். Napkin கொண்டு எப்-போதும் கைகளைச் சுத்தப் படுத்துங்கள்.

இந்த இடத்தில் எந்த நேரங்களில் கைகளை, விரல்களைச் சாப்பிடுவதற்குப் பயன்படுத்த-லாம் என்ற ஒரு முறை உண்டு. Artichoke, asparagus, bacon, sandwich வகையறாக்கள், cookies, சிறுபழங்கள் (காம்புகள் கொண்ட-வை), french fries/potato chips, hamburgers, hotdogs, pickles, corn on the cob போன்றவை கைகளைப் பயன்படுத்திச் சாப்பிட ஏதுவானவை.

உதட்டுச் சாயம் போன்றவற்றை தம்ளர்கள், மற்றும் கிண்ணங்கள் போன்றவற்றில் பதியு-மாற்போல் பாவிக்க வேண்டாம்.

மேஜையில், கைப்பை, உருட்டிப் போட்ட napkins, சாவிக் கொத்துக்கள் போன்றவற்றை வைக்காதீர்கள்.

புகைக்காதீர்கள். அப்படிப் புகைத்தாலும், உங்களை விருந்துக்கு அழைத்தவர் சம்மதம் கொடுத்தால், அல்லது அவர் புகைத்தால் மட்டுமே நீங்களும் அதைப்பின்பற்றலாம்.

அதேபோல், உணவைக் கையில் வைத்துக் கொண்டு நின்றபடியே கொறிக்கும் விருந்து-களில், உணவை வலக்கையில் வைத்துக் கொண்டு, கூடவே ஒரு napkinஐயும் கையுடன் வைத்துக் கொள்ள வேண்டும். அதே கை குலுக்கும் அலுவலுக்கு கை சுத்தமாக இருக்க வேண்டுமல்லவா?

அப்பாடி, ஒருவழியாகச் சாப்பிட்டு முடித்தா-யிற்றா? சாப்பிட்ட கரண்டி, முட்கரண்டி, கத்தி-களை சாப்பிட்ட தட்டின் வலப்பக்கத்தில் உங்களுக்கு எதிர்ப்புறமாக அவற்றின் முனை-கள் இருக்குமாற்போல் வைத்தால், நீங்கள் சாப்பிட்டு முடித்து விட்டீர்கள் என்பதைப் பரிமாறுபவர் சுலபமாகப் புரிந்து கொள்வார். மேசையின் மேல் அவற்றை வைத்தல் நல்ல-தல்ல. இதில் இன்னொரு விதமாயும் நீங்கள் சாப்பிட்டு முடித்துவிட்டதை உணர்த்தலாம். பதினொருமணியின் மணிகாட்டி எப்படி இருக்குமோ அந்த வலத்தில், கத்தியை வலப் பக்கம் பார்க்குமாற்போலும், பின்னர் அதன் மேல் முட்கரண்டியை இடப்பக்கம் பார்க்கு-மாற்போலும் வைத்தாலும், நீங்கள் சாப்பிட்-டாயிற்று என்று அர்த்தம். இதை ஒன்றன் மேல் ஒன்றாய்க் குறுக்காய் உங்கள் தட்டின் மேல் நீங்கள் வைப்பீர்களேயானால், நீங்கள் சாப்பாட்டின் இடையில் சிறிது இடைவெளி விட்டு மீண்டும் உங்கள் சாப்பாட்டைத் தொடரப் போகின்றீர்கள் என்று அர்த்தம். அதை "X" வடிவத்தில் தட்டின்மேல் வைக்-கலாம். இந்த இடத்திலும், முட்கரண்டியின் அடிப்பாகம் இடப்பக்கத்திலும், கத்தியின் அடிப்பாகம் வலப்பக்கமாகவும் வைக்கப்பட்-டிருக்க வேண்டும்.

சாப்பாடு முடிந்ததும் உங்கள் napkinஐச் உங்கள் தட்டின் பக்கத்தில் (இடப்பக்கத்தில்) வைக்க வேண்டும். தாற்காலிகமாக எழும்பிப் போவதானால், மெதுவே, அமரும் ஆசனத்தில் விட்டுச் செல்லலாம். ஆனால் கிட்டத்தட்ட மற்றவர்கள் சாப்பிட்டு, குடித்து முடிக்க முன்னால் உங்கள் napkinஐத் தூக்கி நீங்கள் மட்டும் தனியே வைத்தால், அது மற்றவர்களைத் தாழ்த்துவது போலாகும். எல்லாரும் ஒரே சமயம் சாப்பாட்டை முடிக்கும் தறுவாயில் napkin மேசைக்கு வரலாம். ஆனால் அதையும் உருட்டி, உருவங்கள் செய்து, கசக்கி, கோலிக்குண்டுகளாக்கி மேசையில் எறிய வேண்டாம். Napkinஐ உட்கார்ந்திருக்கும் கதிரையிலும் போட வேண்டாம். அவைகளும் கறைபட்ட உணவு-கள் படுவதனால் அழுக்கடைய வாய்ப்புக்கள் உள்ளன.

இனி வீட்டுக்குப் போகத் தயாரா? உங்க-ளுக்கு விருந்து அழைப்பிதழ் அனுப்பியவர், மேசையைவிட்டு எழும்பும்போது தான், நீங்களும் அவரைத்தொடர்ந்து எழ வேண்டும். ஆனால் அதற்காக ஒரேயடியாய் இங்கேதான் குந்தியிருப்பேன் என்ற எண்ணத்தோடும் இருக்கையுடன் ஒட்டிக் கொண்டிருக்க வேண்டாம். உங்களுக்கு அந்த மேசையை விட்டு எழும்பிப் போகும் எண்ணம் இருந்-தால், மெதுவே மேசையைவிட்டு எழும்பி, "this has been such a nice evening. We hope we can see you again soon" என்று உங்கள் பிரிவுபசாரத்தைத் தெரிவியுங்கள். தொடர்ந்து எல்லாரும் எழுந்துபோகத் தயாராய் இருப்-பார்கள்

போகும்போது மறக்காமல் விருந்து கொடுத்த-வருக்கு உங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்காமல் இருக்காதீர்கள்.

மறக்காமல் உங்களுடன் வந்த பொருட்களை எடுத்துக் கொண்டு போங்கள். விருந்து மயக்கத்தில் சில விடயங்களை மறப்பது இயல்புதானே? மதுவின் மயக்கமும் கூடினால் உங்கள் நிலைமை அதோகதி தான்.

கட்டாயம் ஒரு நாலு காசு செலவுபண்ணி, விருந்து வைத்தவருக்கு நன்றியைச் சொல்லி ஒரு thankyou card அல்லது நன்றியைக் குறிக்கும் ஒரு குறிப்பைப் பிரத்தியேகமாக அனுப்பி வையுங்கள். இம்மாதிரி விருந்துப-சாரங்கள் மீண்டும் வரும்போது, உங்கள் பெயர்தான் பட்டியலில் முதலாவதாக இருக்கும். எல்லாம் thankyou card செய்யும் வேலை.

உசாத்துணை:
http://entertaining.about.com/cs/etiquette/a/tablemanners.htm
http://en.wikipedia.org/wiki/Table_manners

mansu@thaiveedu.com

■ ■ ■

# துயர் பகிர்வோம்



**திருமதி. நீலாம்பிகை கணேசபிள்ளை**

வேலணை மேற்கு வேலணையைப் பிறப்பிட-மாகவும், தற்போது கனடாவில் வாழ்ந்து வந்தவருமான நீலாம்பிகை கணேசபிள்ளை அவர்கள் 15-04-2009 அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னார், காலஞ்சென்றவர்களான சுந்தரம் மீனாட்சி தம்பதிகளின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான மாரிமுத்து நாகமுத்து தம்பதிகளின் மருமகளும், கணேசபிள்ளை (கொழும்பு) அவர்களின் ஆருயிர்த் துணைவி-யும், ஞானசூரியன்(யாழ்ப்பாணம்), ஞானம்பாள் (பொற்கொடி-கனடா), கருணநாயகி (பவளம் - கனடா), தங்கவடிவேல்(கொழும்பு), சண்முக வடிவேல்(கொழும்பு), லோகநாதன்(கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், மதி-வண்ணன்(லண்டன்), காலஞ்சென்ற ரவி-வண்ணன், தர்சினி(கனடா), ஜெகவண்ணன் (கனடா),இதயவண்ணன்(கனடா) ஆகியோரின் அன்புத்தாயாரும், வனஜா(லண்டன்), செல்வ ஞானம்(கனடா), சுபாஜினி(கனடா), சுதர்ஜினி (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், இராசம்மா(இந்தியா), அன்னலட்சுமி (பிரான்ஸ்), வேதநாயகி(இந்தியா), மகாலிங்கம்(இந்தியா), மனோன்மணி(யாழ்ப்பாணம்), சாந்தலிங்கம் (இலங்கை), யோகலிங்கம்(கனடா), சரஸ்வதி (கொழும்பு), பன்னீர்ச்செல்வி (கொழும்பு), மனோகரி (கனடா) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

| | | |
|---|---|---|
| கணேசபிள்ளை | கனடா | 905 6969025 |
| செல்வஞானம் | கனடா | 416 7048378 |
| ஜெகவண்ணன் | கனடா | 905 8288126 |
| இதயவண்ணன் | கனடா | 416 8275866 |
| லோகநாதன் | கனடா | 416 4503984 |
| மதிவண்ணன் | லண்டன் | 442086655707 |



**திரு. சின்னத்தம்பி கோவிந்தபிள்ளை**

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும், 839 கட்சன் வீதி, வட்டக்கச்சியை வாழ்விட மாகவும் கொண்ட சின்னத்தம்பி கோவிந்த-பிள்ளை அவர்கள் 02.05.2009 அன்று மன்னாரில் அகால மரணமானார்.

அன்னார் சீதேவிப்பிள்ளையின் (தங்கம்) அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி வள்ளியம்மை மணஇணையரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - பார்வதி (பாண்டியன்குளம்) மணஇணையரின் அன்பு மருமகனும்,

அம்பிகா, மூர்த்தி, சசி, யோகன், சுந்தரி, சைலி ஆகியோரின் அன்புத் தந்தையும், சுப்பிரமணியம், சுகந்தி, பாஸ்கரன், நந்தா, ரமா, சத்தியசீலன் ஆகியோரின் அன்பு மாமனாரும், சுதன், வினோத், தீபன், அனுசன், கவியரசன், திபாகரன், யபேஸ், சகானா, சுவர்ணன், துசானி ஆகியோரின் அன்புப் பேரனும், வைத்திலிங்கம், காலஞ் சென்ற கதிரவேலு, அப்பையா, சரவணமுத்து, தனுக்கோடி, காலஞ்சென்ற இரத்தினம், தையல்நாயகி, காலஞ்சென்ற தையல்முத்து, சின்னம்மா, இலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும், பசுபதி, தில்லைநாயகி, சின்னம்மா, கமலா, ராசன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதி மரியாதை 05.05.2009 அன்று வவுனியாவில் நடைபெற்றது.

மூர்த்தி (சுவிஸ்) 0041 33 671 4058




**திரு.தேவசகாயம் அந்தோனிப்பிள்ளை**

உயரப்புலம் ஆனைக்கோட்டையைப் பிறப்-பிடமாகவும் பாஷையூரை வசிப்பிடமாகவும் கொண்ட தேவசகாயம் அந்தோனிப்பிள்ளை அவர்கள் 02.05.2009 அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற தேவசகாயம் அன்னம்மாவின் அன்புமகனும், பிலிப்புப்-பிள்ளை ஞானம்மாவின் மருமகனும், கெலனம்மாவின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற உதயகுமார், சாந்தி(கனடா), எலிஸ்ரன் (கனடா), அனற்றஸ் (கனடா), ஜெயந்தி (ஜேர்மனி), வசந்தி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கிளி (இலங்கை), றஞ்சன்(கனடா), கலா(கனடா), பவானி (கனடா), விஜி (ஜேர்மனி), கய்ஸ் (கனடா) ஆகியோரின் மாமனாரும், காலஞ்-சென்ற பூமணி, சாமிநாதர், நடராசா, ஞானப்பிரகாசம், ரத்தினம், குணம், ராசு ஆகியோரின் சகோதரரும், பொன்னுத்துரை, பூபதி, மரியம்மா (கனடா), காலஞ்சென்ற திரேசம்மா, நல்லமுத்து, புஸ்பம், மார்க்ரேட் ஆகியோரின் மைத்துனரும் சரண்யா, டானியல், டியோவன்(கனடா), எனிஸ்ரெலா, எறின்(கனடா), வியோலன், ஜெயோன், எறிக்(ஜேர்மனி), கனிசியா, கனிஸ்ரன்(கனடா) ஆகியோரின் ஆசைத்தாத்தாவும் ஆவார்.

| | | |
|---|---|---|
| எலிஸ்ரன் | - கனடா | 1 905 417 2940 |
| சாந்தி | - கனடா | 1 905 303 4801 |
| அனிற்றஸ் | - கனடா | 1 416 986 8487 |
| ஜெயந்தி | - ஜேர்மனி | 49 63 211 7315 |
| வசந்தி | - கனடா | 1 905 832 6847 |



**திரு. கணேசமூர்த்தி சிவகுமாரன்**

நெல்லியடி கரவெட்டியை பிறப்பிடமாகவும் மேபின் ரொரன்டோவை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. கணேசமூர்த்தி சிவகுமாரன் (நெல்லியடி சிவம்) அவர்கள் 27-04-2009 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணேச மூர்த்தி - பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், துரைராஜா - மீனாட்சி சுந்தரம் தம்பதிகளின் அன்பு மருமகனும், சாந்தினியின் ஆருயிர் கணவரும், சகானா, அனாமிக்கா ஆகியோரின் பாசமிகு தந்தை-யும், காலஞ்சென்ற ராமச்சந்திரன், ரவீந்திரநாத், சாரதாதேவி (லண்டன்), இந்திராதேவி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், மனோரஞ்சிதம் (அவுஸ்திரேலியா) அவர்களின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதி மரியாதை 30-04-2009 அன்று Torontoவில் நடைபெற்றது.

| | | |
|---|---|---|
| சாந்தி | (மனைவி) | - 905-303-6675 |
| ஜெயா | (மைத்துனி) | - 647-202-4292 |
| ரவி | (சகோதரர்) | - 647-997-8529 |

# துயர் பகிர்வோம்




## திருமதி.சிவபாக்கியவதி சொக்கலிங்கம்

கொழும்பைப் பிறப்பிடமாகவும், கொக்குவில்லை வதிவிடமாகவும். தற்போது கனடாவில் வசித்துவந்தவருமாகிய திருமதி சிவபாக்கியவதி சொக்கலிங்கம் அவர்கள் ஏப்ரல் மாதம் 14ம் திகதி கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி - பார்வதி தம்பதிகளின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்ற முருகேசு சொக்கலிங்கத்தின் அன்பு மனைவியும், கலாவதி (டென்மார்க்), மேதினிதேவி (கனடா), கணேஷ் சொக்கலிங்கம் (அவுஸ்ரேலியா), யோகன் சொக்கலிங்கம், பஞ் சொக்கலிங்கம் அகியோரின் அருமை தாயாரும். சுப்ரதீபம் (டென்மார்க்), இராசநாயகம், ரஜனி, கிரியாசக்தி, சியாமளா ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதி மரியாதை 20-04-2009 அன்று Torontoவில் நடைபெற்றது.

| | |
|---|---|
| யோகன் சொக்கலிங்கம்: | 905 790 1317 |
| ” | 416 616 5979 |
| பஞ் சொக்கலிங்கம்: | 416 414 2374 |
| இராசநாயகம்: | 416 208 7350 |
| ” | 416 841 7227 |



## திரு.சின்னத்தம்பி அம்பலவாணர்

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி, D-10 உருத்திரபுரத்தை வசிப்பிடமாகவும், மாத்தளனில் தற்காலிகமாக வசித்துவந்தவருமான திரு.சின்னத்தம்பி அம்பலவாணர் அவர்கள் 02-04-2009 அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற சின்னத்தம்பி பார்வதிப்பிள்ளையின் அன்புமகனும், காலஞ்சென்ற நாகநாதபிள்ளை, தெய்வானைப்பிள்ளையின் அன்புமருமகனும், காலஞ்சென்ற மங்களம் அவர்களின் அன்புக்கணவரும், மதிவதனி(மதி-பிரான்ஸ்), மதிவாணன்(ராஜன் -கனடா), மதிபவானி(பவானி-இந்தியா), மதிமன்னன்(நவம்-பிரான்ஸ்), மதிசேகரன் (சிவம்-மாத்தளன்), மாவீரர் லெப்.இளையவன் (மதிகேசவன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மனோகரசீலன்(மனோ-பிரான்ஸ்), தவலிங்கம்(வவா-இந்தியா), சிவகுமாரி (சிவா-கனடா), சுபோஜினி(சுபோ-பிரான்ஸ்), தீபா(மாத்தளன்) ஆகியோரின் மாமனாரும் ஆவார்,

அன்னாரின் பூதவுடல் 04- 04- 2009 அன்று மாத்தளனில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மதி | பிரான்ஸ் | 33 | 13 | 032 | 3847 |
| ராசன் | கனடா | 1 | 905 | 294 | 1520 |
| பவானி | இந்தியா | 91 | 994 | 454 | 8498 |
| நவம் | பிரான்ஸ் | 33 | 61 | 517 | 9268 |



## திரு. கந்தையா புவனேந்திரராசா

உருத்திரபுரத்தை பிறப்பிடமாகவும் வலைஞர் மடத்தினை தற்காலிக முகவரியகவும் கொண்ட திரு.கந்தையா புவனேந்திரராசா (பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர்) அவர்கள் 21-04-2009 அன்று காலமானார்.

அன்னார், கந்தையா பொன்னம்மா தம்பதியினரின் அருமைபுதல்வனும், வைத்திலிங்கம் நாகமுத்து தம்பதியினரின் அருமை மருமகனும் கோணேஸ்வரியின் பாசமிகு கணவரும், ரதீசியா, ரதீபன், ரதிபா, சங்கீர்த்தனா ஆகியோரின் அன்புத்தந்தையும், கணேசலிங்கம், பிரியசாந்தா, விக்கினேஸ்வரன் (கிருபா-கனடா), மகேஸ்வரன்(பிரான்ஸ்), குககுமாரராசா, பிரபாகரன்(பிரபா) ஆகியோரின் அன்புச்சகோதரரும், மகேந்திரராசா, குகராசா, காலஞ்சென்ற அரியராசா, பரமராசா(கனடா), சாந்தினிதேவி, கலாதேவி, தர்மநாயகம், பவானி(கனடா), யோகநந்தினி (பிரான்ஸ்) வித்தியகுமாரி, தயாநிதி ஆகியோரின் அன்பு மைத்துனரும், யதார்த்திகா, பிரார்த்தன், கவியார்த்திகா, நிரார்த்தன் ஆகியோரின் சித்தப்பாவும் சுரேஸ், ரமேஸ், பிரியா, வித்தியா ஆகியோரின் மாமனாரும், மலரவன், துஷானி, பிரவீன், அட்ஷரா, அஷானா, ஆதித்தன், பவகர்னி, லட்சியன் ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

| | | |
|---|---|---|
| கிருபா | கனடா | 416 661 2968 |
| அப்பன் | கனடா | 416 292 4301 |
| சுரேஸ் | கனடா | 416 877 8826 |
| மகேஸ் | பிரான்ஸ் | 3313 075 0703 |



## செல்வி. கணேசலிங்கம் கவியார்த்திகா

கிளிநொச்சி உருத்திரபுரத்தை பிறப்பிடமாகவும், வலைஞர் மடத்தை தற்காலிக முகவரியாகவும் கொண்ட கணேசலிங்கம் கவியார்த்திகா அவர்கள் 21-04-09 அன்று அகாலமரணம் அடைந்தார்.

அன்னார் கணேசலிங்கம் கலாதேவி அவர்களின் அருமைமகளும், யதார்த்திகா, பிரார்த்தன், நிரார்த்தன் ஆகியோரின் அன்புச்சகோதரியும், கந்தையா, பென்னம்மா, காலஞ்சென்ற சாம்பசிவம், இராஜேஸ்வரி, ஆகியோரின் ஆருயிர் பேத்தியும், காலஞ்சென்ற புவனேந்திரராசா, விக்கினேஸ்வரன் (கிருபா-கனடா), மகேஸ்வரன்(பிரான்ஸ்), குககுமாரராசா(குகா), பிரபாகரன் (பிரபா) ஆகியோரின் அருமை பெறாமகளும், குணராஜன்(ரஞ்சன்,கனடா), பிரியசாந்தா ஆகியோரின் மருமகளும், கஜானி, யாழினி, பிரணவன், சுரேஸ், ரமேஸ், பிரியா வித்தியா ஆகியோரின் மச்சாளும், மலரவன், துஷானி, பிரவீன், அட்சரா, அஷானா, ஆதித்தன், பவகர்னி, லட்சியன், ஆகியோரின் உடன் பிறவா சகோதரியும் ஆவார்.

கிருபா (சித்தப்பா)கனடா- 1 416 661 2968
றஞ்சன் (மாமா) கனடா- 1 416 671 8830
சுரேஸ் (மச்சான்) கனடா- 1 416 877 8826
மகேஸ் (சித்தப்பா)பிரான்ஸ் 3313 075 0703



## திரு. ஆறுமுகம் கணேசலிங்கம்

நெடுந்தீவை பிறப்பிடமாகவும் விசுவமடுவை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் கணேசலிங்கம் அவர்கள் 20-04-2009 அன்று வலைஞர்மடத்தில் அகால மரணமானார்.

அன்னார், காலம்சென்றவர்களான ஆறுமுகம் சின்னம்மா அவர்களின் அருமைப்புதல்வனும், கந்தையா லட்சுமி அவர்களின் அருமை மருமகனும், சத்தியபாமாவின் பாசமிகுகணவரும், தமிழ்ச்செல்வி, தமிழ் மாறன், தமிழ்ச்செல்வன், தமிழினி, தமிழரசி ஆகியோரின் அன்புத் தந்தையும், ரஜீவ்-ஆனந்த் அவர்களின் அருமைமாமனாரும், றெபேக்கா, மதுமிதா அவர்களின் அன்புப பேரனும், அன்னலட்சுமி(இந்தியா), தவமணி (இந்தியா), காலஞ்சென்ற கனகரட்ணம், மற்றும் சிவஞானவல்லி(இத்தாலி), கனகநாயகம், யோகாம்பிகை, கமலாம்பிகை (ஜேர்மனி), விஜயலட்சுமி(ஜேர்மனி) ஆகியோரின் அருமை சகோதரரும், பரமலிங்கம், சபாரட்ணம், யமுனாராணி, சிவநாதன், பதமாவதி, புவனேந்திரன், செல்வராஜா, மகாலிங்கம் ஆகியோரின் அருமை மைத்துனரும் ஆவார்.

தமிழ்ச்செல்வி ரஜீவ்ஆனந்த் - ஜேர்மனி
049 911 478 2616
சிவஞானவல்லி சிவநாதன் - இத்தாலி
039 010 404 6928
கமலாம்பிகை செல்வராஜா - ஜேர்மனி
049 911 431 8220
விஜயலட்சுமி மகாலிங்கம் - ஜேர்மனி
049 911 439 8992



## திரு.கணபதிப்பிள்ளை மகேந்திரலிங்கம்

அச்சுவேலியை பிறப்பிடமாகவும், ஒட்டாவாவை வதிவிடமாகவும் கொண்ட திரு. கணபதிப்பிள்ளை மகேந்திரலிங்கம் அவர்கள் 15-04-2009 அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை பொன்னம்மா அவர்களின் அன்புமகனும், காலஞ்சென்ற செல்லர் சேதுப்பிள்ளை அவர்களின் அருமை மருமகனும், ரதியின் அன்புக்கணவரும், சுபாசினி, பாமினி, ஜெகன், வாசுகி, தெனிஸ்டா ஆகியோரின் பாசமிகு தந்தையும், கஜபரன், விக்னேஸ்வரன் ஆகியோரின் மாமனாரும், ஆரதி, பூர்ணா ஆகியோரின் பேரனும், சிவலிங்கம் (யாழ்), தங்கமலர் (சுவிஸ்), சந்திராதேவி (இந்தியா), செல்வராணி (பரீஸ்), வசந்த குமாரி(கனடா) ஆகியோரின் சகோதரரும், நடராஜா தங்கராணி(யாழ்), யோகராணி சிவலிங்கம் (யாழ்), துரையம்மா சிவகுரு (அவுஸ்திரேலியா), திலகவதி கந்தையா (அவுஸ்திரேலியா), பரிமளம் செல்வரட்ணம் (அவுஸ்திரேலியா), காலஞ்சென்ற தில்லையம்பலம் சரோஜாதேவி (யாழ்), றோசம்மா நல்லையா(கனடா), காலஞ்சென்ற தங்கராசா (யாழ்), வீரசிங்கம் (இந்தியா), நடராஜா (பரீஸ்), தேவராஜா (கனடா), ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதி மரியாதை 17-04-2009 அன்று Torontoவில் நடைபெற்றது.

| | | |
|---|---|---|
| ஜெகன் | - கனடா - | 647 278 9443 |
| மூர்த்தி | - கனடா - | 647 204 4040 |
| விக்கி | - கனடா - | 647 830 9344 |
| வாசுகி | - கனடா - | 647 346 8367 |



## திரு. தனுக்கோடி சின்னத்தம்பி

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் இராமநாதபுரத்தை வதிவிடமாகவும் கொண்ட திரு. தனுக்கோடி சின்னத்தம்பி அவர்கள் 12.04.2009 அன்று வலைஞர்மடத்தில் அகாலமரணமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான தனுக்கோடி, நாகாத்தை தம்பதியினரின் புதல்வரும், ஐயம்பிள்ளை பார்பதிப்பிள்ளை தம்பதியினரின் மருமகனும், காலஞ்சென்ற வேலாசிப்பிள்ளை அவர்களின் அன்புக் கணவரும், தர்மலிங்கம்(பெரியதம்பி-நெடுந்தீவு), இராமநாதன் (நீர்ப்பாசன திணைக் களம்-பெரியகுளம்), கோமளம்(ஓய்வுபெற்ற ஆசிரியை- கிளிநொச்சி), பார்வதிப்பிள்ளை (இராமநாதபுரம்), சபாபதி(ஐயா- இராம நாதபுரம்), பரமானந்தம் (கட்டைகாடு), புஸ்பவதி(கல்மடுநகர்), கனகேஸ்வரி (பூங்கா-கட்டைகாடு), ஆகியோரின் பாசமிகு தந்தையும், முத்துப்பிள்ளை(நெடுந்தீவு), இலட்சுமி(பெரியகுளம்), தில்லையம்பலம் (KTC-கிளிநொச்சி), அமரர் கணபதிப்பிள்ளை (கிளி), தங்கமணி (இராமநாதபுரம்), அமரர் தங்கரத்தினம், வேலாயுதம்(கல்மடு) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

| | |
|---|---|
| சிவகுமாரி பிரபாகரன் (பேத்தி) | 44 152 632 1546 |
| சிவறூபி சேகரன் (பேத்தி) | 44 125 240 6384 |
| இராமநாதன் ரவி (பேரன்) | 44 208 426 7020 |
| இராமநாதன் பவான் (பேரன்) | 41 41 240 5633 |



## செல்வன் சுகந்தன் சிவபாதம்

மார்க்கம் நகரில் வாழ்ந்து வந்த செல்வன் சுகந்தன் சிவபாதம் அவர்கள் 23.04.2009 அன்று காலமானார். அன்னார் அச்சுவேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட சிவபாதம், ஞானகலை (Raathika Trade) தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், கேகயன், உஜாந்தினி ஆகியோரின் பாசமிகு அண்ணனும், விஸ்வலிங்கம், அருமைநாயகி, சிவசம்பு, பூபதி ஆகியோரின் அருமைப் பேரனும், கணேசலிங்கம், சிவமலர், பூபாலசந்திரன், மீனலோஜினி, பாஸ்கரன், விஜித்தா, நடராஜா, இதயரஞ்சினி ஆகியோரின் பெறாமகனும், நாகேஸ்வரி, சந்திரலிங்கம், மகேந்திரன், சிவேஸ்வரி, சிவகுமார், இந்திரகுமார், ஞானசீலி, சக்திகுமார், சுகந்தநிதி ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதி மரியாதை 27-04-2009 அன்று Torontoவில் நடைபெற்றது.

தந்தை சிவபாதம்: (Raathika Trade):
905-944-1254
பாஸ்கரன்:
416-616-1894,
அப்பன்: (AK. Video):
416-839-3846

# புதிய வீடும் உத்தரவாதக் கால எல்லையும்



அன்று மரியசெல்வா

### புதிய வீடு வாங்குபவர்களுக்கான பயனள்ள விடயங்கள் Protecting New Home Buyers

ஒன்ராரியோவில் கட்டப்படும் ஒவ்வொரு புதிய வீட்டிற்கும், ஒன்ராரியோ சட்டத்தின் பிரகாரம் கட்டட நிர்மாணத்தினரால் (Builders) வழங்கப்படும் வீட்டு உத்தரவாதம் கட்டாயமானதும், கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டியதுமாகும். இதற்கு Tarion எனப்படும் உத்தரவாதக் கூடடுத்தாபனம் (warratny coporation) உறுதி வழங்குகின்றது. ஒன்ராரியோவில் புதிய வீடு வாங்குபவர்களால் செலுத்தப்பட வேண்டிய பணத்தில் ஒரு தொகையானது Tarionற்கு உத்தரவாதக் காப்பீட்டிற்கென செலவிடப்படுகின்றது.

இவை பற்றி நாம் விரிவாக அறிந்து வைத்திருத்தல் அவசியம்.

ஒவ்வொரு கட்டட நிர்மாணத்தினராலும் சட்டப்படி வழங்கப்படும் மட்டுப்படுத்தப்பட்ட வீட்டு உத்தரவாதமானது புதிய வீட்டின் உரிமையாளர்களுக்கு வழங்கப்படுகின்றது. இதன்படி புதிய வீட்டின் கட்டுமானத்தில் Ontario Building Codeன் பிரகாரம் செய்யப்படாத வேலைகளையும், திருத்த வேலைகளையும் Construction Performance Guidelinesனின் படி திருத்திக் கொள்வதற்கும், சரிசெய்து கொள்வதற்கும் சந்தர்ப்பம் உள்ளது. உத்தரவாதத்திற்குட்பட்ட அனைத்து விடயங்களையும் கட்டட நிர்மாணத்தினரைக் கொண்டு செய்விப்பது Tarionனின் கடமையாகும். இவற்றை தகுதி வாய்ந்த வீட்டுப்பரிசோதகரை அணுகி, உத்தரவாதத்திற்குட்பட்ட விடயங்களை அறிந்து, வழங்கப்பட்ட கால எல்லைக்குள் அவற்றை அனுப்புவதால் பல சிரமங்களை தவிர்த்துக் கொள்ள முடியம். மேலும் Tarion ஒரு காப்புறுதி நிறுவனமாகவும் கருதப்படுவதனால் அவர்களுக்க வழங்கப்பட வேணடிய சகல விடயங்களும் Ontario Building Code மற்றும் Construction Performance Guidelinesற்கும் உட்பட்டதாக அமைதல் வேண்டும். குறிப்பிடப்பட்ட சகல விடயங்களும் சரிபார்க்கப்படுவதற்கும், சரிசெய்வதற்கும் Tarion தனது உறுதியை வழங்குகின்றது.

### உத்தரவாதத்திற்கு உட்பட்ட விடயங்களாவன:

உத்தரவாத சட்டத்திற்குள் சேரும் முதல் விடயமாக, வைப்பகப் பணத்திற்கான பாதுகாப்பை (deposit protection) உறுதி செய்தல், மற்றும் செய்யப்பட்ட வேலைகளிலும், வழங்கப்பட்ட பொருட்களிலும் ஏற்படும் தவறுகள் (defects in work and materials), அனுமதி பெறப்படாது சொல்லப்பட்ட வகையில் பொருட்களை பாவிக்காது மாற்றீட்டுப் பொருட்களை பாவித்தல்.

(unauthorized substitutions), மற்றும் சொல்லப்பட்ட தேதிகளில் வீட்டினை முடித்துக்கொடுக்காது போதல் அல்லது சரியான விளக்கமளிக்காது வீடு குடிசெல்ல முடியாது இழுத்தடித்தல் என பல்வேறு விடயங்கள் அடங்கும். தொடர்மாடி, மற்றும் தொடர் வீடுகளுக்கும் (condominiums and town homes) இவை பொருந்தும்.

புதிய வீட்டின் உரிமை கிடைத்த நாளில் இருந்தே உத்தரவாத நாள் கணக்கிடப்படுகின்றது. வீட்டை வேறு நபருக்கு விற்றாலும், உத்தரவாத நாள் மாற்றமடையாது.



அதி கூடிய உத்தரவாதத்திற்குட்பட்ட செலவாக புதிய வீடுகளுக்கும், $300,000 வரை உள்ளது.

### உத்தரவாதத்திற்கு உட்பட்ட கால எல்லை பற்றிய விபரம்

புதிய வீடுகளுக்கான உத்தரவாதக் காலமாக, 30 நாட்களுக்குள்ளான உத்தரவாதம், ஒரு வருடத்திற்குள்ளான உத்தரவாதம், இரண்டாம் வருடத்திற்குள்ளான உத்தரவாதம் என வழங்கப்பட்ட பொருட்களிலும், செய்யப்பட்ட வேலைகளிலும் உள்ள தவறுகள் திருத்தக் கூடியதாக அமைகின்றது. மேலும் ஏழாவது ஆண்டில் செய்யப்படக் கூடியதான உத்தரவாதத்திற்குட்பட்ட விடயமாக கட்டட அமைப்பில் ஏற்படும் பாரதூரமான பிழைகள் திருத்திக் கொடுக்கப்பட வேண்டியதாகும்.

### ஊத்தரவாதப் படிவங்களும் அனுப்ப வேண்டிய கால எல்லையும்

வீட்டின் உரிமையாளர்கள் கட்டாயமாக Tarionனினால் வழங்கப்பட்ட விசேட படிவங்களை நிரப்பி குறிப்பிட்ட கால எல்லைக்குள் Tarionக்கு அனுப்பி வைத்தல் அவசியம். உத்தரவாத படிவங்களை அனுப்ப முடிவு செய்திருந்தால் வீடு வாங்கும் போது கட்டட நிர்மாணர்களினால் வழங்கப்பட்ட பத்திரம் (Purchase agreement), அல்லது வீடு குடி செல்லுமுன் வீட்டுப் பரிசோதனை செய்யப்பட்ட (Pre-delivery Inspection -PDI) பத்திரம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு செய்து முடிக்கப்படாத லேைகளையும், தவறுகளையும் சுட்டிக் காட்டி நிரப்ப முடியும். தகுதி வாய்ந்த வீட்டுப்பரிசோதகரால் வீட்டின் உரிமையாளர்களுக்கு எவ்வகையான பிழைகள் திருத்தக் கூடியன என விளக்க முடியும். ஏறத்தாள 300ற்கும் அதிகமான உத்தரவாதத்திற்குட்பட்ட விடயங்களை அவதானிக்க முடியும்.

30 நாட்களுக்குள் அனுப்ப வேண்டிய படிவங்களை உதாரணமாக ஏப்பிரல் 30, 2009ல் புதிய வீட்டின் உரிமை கிடைத்திருந்தால் மே 29,2009ற்குள் அனுப்பப்பட வேண்டும்.

ஒரு வருடத்திற்கான உத்தரவாதப் படிவங்களை, வருடம் முடிவதற்கு ஒரு மாதத்திற்கு முன்பாக அனுப்ப முடியும். உதாரணமாக மே 1, 2008ல் புதிய வீட்டின் உரிமை கிடைத்திருந்தால் 2009 ஏப்பிரல் 1ம் திகதியில் இருந்து 30ம் திகதிக்குள் அனுப்பப்பட வேண்டும்.

கால எல்லைகளிற்குள் அனுப்பப்பட்ட படிவங்களையே Tarion ஏற்றுக் கொள்ளும். வீட்டு உரிமையாளர்கள் இவற்றை கவனத்தில் கொள்ளுதல் மிக அவசியம். ஒரு நாள் தவறினாலும் அடுத்த உத்தரவாதக் கால எல்லை வரை காத்திருத்தல் வேண்டும்.

அக் காலங்களில் அந்தந்த வருடங்களுக்குரிய உத்தரவாங்களையே திருத்திக் கொள்ள முடியும்.

இப்படிவங்களை கட்டட நிர்மாணத்துறையினருக்கும் அனுப்பி வைத்தல் வேண்டும்.

தொடரும்...

andrew@thaiveedu.com

■ ■ ■

VIN
KITCHEN & BATH
Design & Install



Custom & Refacing kitchens
Bath Vanities & Bars
Countertops

15 years experience
100% satisfaction guaranteed

For
free estimates and design

Call: Jey Kumar
647 388 3225
vinkitchen@gmail.com

இல்லறத்திற்கு அழகு அன்பான மனைவி & குழந்தைகள்
இல்லத்திற்கு அழகு அழகிய சமையலறை & குளியலறை

www.inayam.net

- கலை விழாக்கள்
- எழுச்சி நிகழ்வுகள்
- ஊர்ச்சங்க ஒன்றுகூடல்கள்
- திருவிழாக்கள்
- கொண்டாட்டங்கள்
- நடன, நாடக, இசை விழாக்கள்
- குடும்ப நிகழ்வுகள்
- மரணச் சடங்கு நிகழ்வுகள்

எதுவானாலும்,

இணையம் .net மூலமாகத் தெரியப்படுத்துங்கள்.

உங்களுக்கு அனுகூலமான இடம், காலம், நேரங்களில் ஏனைய நிகழ்வுகள் திட்டமிடப்பட்டுள்ளனவா என்பதை முன்கூட்டியே அறிந்துகொண்டு உங்கள் நிகழ்வுகளை நிர்ணயித்துக் கொள்ளுங்கள்.

முன்கூட்டியே inayam.net இல் பதிவு செய்துகொள்வதன் மூலம் ஏனைய நிகழ்வுகளோடு போட்டிகள் உருவாகுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

உங்கள் நிகழ்வுகள் திருப்திகரமாக நடந்தேறுவதற்கு பங்குபெறும் மக்களின் அனுகூலம் முக்கியமானது.

இதைக் கருத்திற் கொண்டு உருவாக்கப்பட்ட ஒருங்கிணைப்புத் தளமே inayam.net

முயற்சி செய்யுங்கள்!

முற்றிலும் இலவசம்

inayam
416•400•6406

digi

# CTR தகவல் பலகை

## ROOMS / BASEMENT RENT

**MORRISON & ELLESMERE**
2 B/R Basements
Mano: 416-617-4671 – Ruban

**NELSON & MCCLEVIN**
1 Room for rent
Kala: 416-754-8947

**BRIMLEY & LAWRENCE**
2B/R Basement
Ragu: 416-264-5073

**MCLEVIN & NELSON**
1B/R Basement
Kumar: 416-427-2855

**MARKHAM & ELLESMERE**
2 B/R Basements
Ambikai: 647-896-8687

**HOUSE FOR RENT**
3+2 B/Room all facilities
416-878-6008

**BRIMLEY & ELLESMERE**
3B/R Basement
Kumary: 416-560-5562

**BRAMPTON**
4 B/R House
2 years – Fully upgrade
Nitharshan: 416-400-2222

**NELSON & FINCH**
1 room for girls
Daycare 3+
chithra: 647-349-5343

**MCCOWAN & ELSON**
2B/R Basement separate Parking
Maran: 647-205-8502

**MARKHAM & ELSON**
2B/R Basement near all
Ambikai: 647-896-8687

**MARKHAM & ELLESMERE**
3B/R Bungalow house for rent
Kannan: 416-433-6344

**NELSON & MCCLEVIN**
Upper level 2 Rooms for rent
Kala: 416-754-8947

**KEELE & MAJOR**
2B/R Walk-out
Magenthiran: 416-624-7104

**BRIMLEY & ELLESMERE**
Separate rooms for rent in basement
Kumary: 416-560-5532

**MCCOWAN & 16TH AVE**
2B/R Basement
Kiruba: 416-414-5562

**TAPSCOTT & CROWTRAIL**
1B/R Basement separate Parking
Balakrishnan: 416-609-9588

**TAPSCOTT & CROWTRAIL**
1B/R Basement
Suba: 416-358-2467

## AUTO FOR SAL

**2004 CRV – HONDA**
1999 CRV – Honda – 56 km
Thevan: 416-206-6842

**2001 HONDA ACURA**
5 Speed 149km
Raja: 905-949-1075

**1998 HONDA CRV**
Green
4X4 $ 3950
Jeevan: 416-274-5847

**TOYOTA SIANNA**
Mani: 416-737-1989

**2000 DODGE**
grand caravan
Thusy: 647-500-8215
416-519-9215

**1998 TOYOTA CAMRY**
416-716-2975

**1991 ACURA**
Black 2 Door $ 1000
Siva: 416-221-3831

**2006 HONDA CIVIC**
auto, 48km
Rajan: 416-569-1385

**98 TOYOTA SIANNA LE**
green 155km
Sri: 416-430-0455

## OTHERS

**FREE YOGA MEDICATION**
Vannipushpa: 647 278 8445

CTR
கனடியத் தமிழ் வானொலி
416 264 8798

**WEDDING SERVICE**
Thavamani: 416-439-8892 – 905-696-0543

**TUTION**
mccowan and finch
416 335 1477
Mayuran: Preschool gr 1 and 2

**DAY CARE**
(markham & ellesemere)
Malar: 416 431 2495, 416 844 4026

பலகாரம்
செய்து கொடுக்கப்படும்
Ottonpark & Lawrence
Prema: 416-439-1599, 647-802-1599

**PAINTING & CARPET CLEANING**
3B/R Houseற்கு Paint $450(With Paint)
Babu: 647-836-3647

**TUTION**
Brimley/ Steel. 1-8 Math and English
Tharma: 905-479-3024

உங்கள்
அறிவித்தல்களும்
இடம்பெற வேண்டுமா
416 400 6406



# குமுதினி படகின் கோரப் படுகொலை!

ராஜ்மோகன் செல்லையா
- ஈட்டுக்கடன் பிரதிநிதி



1985ஆம் ஆண்டு மே மாதம் 15ஆம் திகதி... நெடுந்தீவு மாவிலித் துறைமுகத்தின் அமைதியான காலைப் பொழுது... இனிமையான கடற்கரைக் காற்றின் இதமான சுகம் மனதின் உணர்வுகளையெல்லாம் எங்கோ கொண்டுபோய் விட்டிருந்தது. துறைமுகத்தின் முன்னால் செழித்து வளர்ந்து பரந்து நின்ற புனித அரச மரத்தின் இலைகள் காற்றலையுடன் உறவாடி சலசலத்துக் கொண்டிருந்தன. அதனருகில் ஒரு வாசிகசாலை... துறைமுகப் பாலத்தின் முன்னே ஒரு சிறு கட்டடம்... துறைமுகத்தின் இருமருங்கும் கட்டப்பட்டிருந்த மரக்கலன்கள் மற்றும் தோணிகளின் அசைவுகள்... நீலக் கடலலையின் அழகிய ஆர்ப்பரிப்புக்கள்... இளங்காலை வெய்யிலின் செந்நிறக் கதிர்களினிடையே சிறகடிக்கும் பறவைக் கூட்டங்கள்... என்று அன்றைய நாளை அந்தச் சூழல் அழகுபடுத்திக் கொண்டிருந்தது.



காலை 6.30 மணி... வழமை போல் மாவிலித் துறைமுகத்தின் ஆரவாரம் களைகட்ட ஆரம்பிக்கின்றது. வெளியிடங்களுக்குச் செல்லவிருக்கும் கருவாடு, மீன் வகைகள், பனம் பொருட்கள், தெங்குப் பொருட்கள், வெங்காயம் போன்ற பல உள்நாட்டு உற்பத்திப் பொருட்கள் தயாராகிக் கொண்டிருந்தன. பெண்கள், குழந்தைகள், பெற்றோர்கள், மாணவர்கள், உத்தியோகத்தர்கள், நோயாளர்கள், உழைப்போர்கள், உதவுவோர்கள் என்று மாவிலித் துறைமுகம் சுறுசுறுப்பாக இயங்க ஆரம்பித்துக் கொண்டிருந்தது.

இந்த இயல்பான அழகிய காலைப் பொழுதின் கதகதப்பிலே அன்று நேரவிருக்கும் கொடூரத்தை அறியாமல் "கு...மு...தி...னி" படகும் கரைதட்டி பயணத்திற்காகத் தயாராகிக் கொண்டிருந்தது.

நெடுந்தீவு... யாழ் குடாநாட்டின் வடமேற்கே காணப்படும் சப்த தீவுகளில் முதன்மையாய், யாழ்ப்பாணத்திற்கு தென்மேற்கே 45 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ள ஒரு அமைதியான, அழகிய பசுந்தீவு. சுமார் 48 சதுரக் கிலோ மீற்றர் பரப்பளவு கொண்ட இத்தீவையும், குறிகட்டுவானையும் கிட்டத்தட்ட 7 கிலோ மீற்றர் தூரம் கொண்ட ஆழ்கடல் பிரிக்கின்றது. இதன் காரணமாக இங்கு வாழும் மக்கள் தம் வாழ்வியலோடு தொடர்பு பட்ட சில தேவைகளில் தன்னிறைவு கொண்டிருக்க முடியவில்லை. அந்த வகையில் குறிகட்டுவானுக்கும் நெடுந்தீவுக்குமிடையிலான கடல் பயணம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்பட்டதோடு மட்டுமல்லாது அங்கே இரு வழிச் சேவை செய்த குமுதினிப் படகும் நெடுந்தீவு மக்களின் அன்றாட வாழ்க்கை முறையோடு ஒன்றித்துப் போய் இருந்தது.

> "எனது முறை வந்தது,
> அடையாள அட்டையுடன் நின்றேன்.
> தீடிரென இரும்புக் கம்பியொன்றினால்
> தலையில் பலமான அடி, மண்டை சிதறுவதை
> உணரமுன் கோடரி ஒன்று குறி தவறி என்
> கைகளை வெட்டியது.
> மரண வேதனையுடன் இழுத்துச் செல்லப்பட்டு
> ஒரு பள்ளத்தில் வீழ்த்தப்படுவதை
> உணர்ந்தேன்."

காலை 7 மணி... குமுதினிப் படகு தன் பயணத்தை ஆரம்பிக்க ஆயத்தமாகிக் கொண்டிருந்தது. படகின் முக்கிய தன்டேல்களான அந்தோனிப்பிள்ளை மற்றும் தேவ சகாயம்பிள்ளை ஆகியோர் பயணிகள் ஏறுவதற்கான சைகையைக் காட்டுகின்றனர். சில தினங்களுக்கு முன்னால் அநுராதபுரத்தில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தை அடுத்து கடற்படையினரின் சாதாரண கடல் ரோந்து நடவடிக்கைகள் சற்று அதிகரித்துக் காணப்பட்டன. ஆனால்... இந்த சாதாரண ரோந்து நடவடிக்கைகளிடையே ஒரு பாரிய படு கொலைச் சதி தீட்டப்பட்டதை எவருமே அறிந்திருக்கவில்லை.

குறிப்பிட்ட நேரத்திற்குப் புறப்பட ஆயத்த மாகிய குமுதினிப் படகு சற்றுத் தாமதமாக, வழமையான நயினாதீவு check point ஊடான குறிகட்டுவான் பயணத்தை மொத்தமாக 72 பயணிகள் மற்றும் படகுப் பணியாளர்களுடன் ஆரம்பித்தது.

அலைதிரளும் நீலக் கடலலை மீது அசைந்தாடிச் செல்லும் குமுதினிக்கு விடை கொடுத்து அனுப்பியது மாவிலி இறங்குதுறை. பயணிகளின் மனதை வருடிச் சென்ற கடற்காற்றின் அரவணைப்பிலே ஒவ்வொருவரினதும் கனவுகள், கற்பனைகள், எண்ணங்கள், எதிர்கால திட்டங்கள் எல்லாம் அவர் களது சுய உணர்வுகளை மென்மையாக்கி அசைபோட்டுக் கொண்டிருந்தன.

குமுதினிப் படகு புறப்பட்டு கிட்டத்தட்ட 30-35 நிமிடங்களுக்கு மேல் இருக்கும்... ஆழ்கடலில் சென்று கொண்டிருந்த குமுதினிப் படகு திடீரென கடற்படையினரின் படகுகொன்றினால் வழி மறிக்கப்படுகின்றது. பதற்றத்துடன் குமுதினிப் படகு நடுக்கடலில் நிறுத்தப்படுகின்றது. இதுவும் ஒரு வழமையான சோதனையாகவே இருக்கும் என்ற யூகத்தில் பயணிகள் சற்று அமைதியடைகின்றனர். சிறிய பிளாஸ்டிக் படகில் குமுதினியின் அருகே வந்த 6 கடற்படையினர் முக்கோணக் கூர்க் கத்திகள், கண்டங் கோடரிகள், இரும்புக் கம்பிகள் மற்றும் துப்பாக்கிகள் சகிதம் குமுதினிப் படகில் ஏறுகின்றனர். அவர்களது அசாதாரண ஆயுதங்களைக் கண்ட பயணிகள் பீதியடைகின்றனர்.

படகின் பின்புறம் இருந்த பயணிகள் யாவரையும் இயந்திர அறையின் முன்புறம் செல்லும்படி மிரட்டினார்கள். நடக்கவிருக்கும் கோரப் படுகொலையை அறியாமல் பயணி களும், பணியாளர்களும் தமது அடையாள அட்டையுடன் படகின் முற்புறம் சென்று பதற்றத்துடன் சோதனைக்காகக் காத்திருந்தனர்...வைகாசி மாதக் காற்றின் வேகத்தில் கடல் கொந்தளித்துக் கொண்டிருந்தது பயணிகளின் மனங்களைப் போல. நீல வானிலே சூரியன் தனது வெப்பக் கதிர்களை அள்ளி வீசிக் கொண்டிருந்தான்.

படகின் பின்புறம் இருந்த இருபுற இருக்கை களுக்கு நடுவே, இயந்திரத்தையும் சுழல் விசிறியையும் (propeller) இணைக்கும் ஆடு தண்டுப் பகுதியின் மேற்பரப்பில் பாதுகாப்பிற


72ம் பக்கம் பார்க்க...


# வீடு வாங்க விற்க



உங்கள் வருமானத்திற்கேற்ப எவ்வகையான வீடு வாங்குவதென அறிந்து
கொள்ள முதல் முறை வீடு வாங்குபவர்களின் சலுகைகள் பற்றி
அறிந்துகொள்ள இன்றே எங்களுடன் தொடர்புகொள்ளுங்கள்

Prudential Properties Plus Brokerage
**Bus: 416.962.8113**
Fax: 416.962.4615, Res: 416 964 5955
552 Parliament Street, Toronto, ON, M4x 1P6



**Alfred Soosaipillai**
Broker

# கடந்த மாதத்தில்...




றொறன்ரோவில் உள்ள உதவி
அமெரிக்க தூதுவராலயத்தின் முன்னால். (30.04.09)




றொறன்ரோவில் உள்ள உதவி
அமெரிக்க தூதுவராலயத்தின் முன்னால். (30.04.09)



ஒட்டாவாவில் இடம்பெற்ற உண்ணாவிரதத்திரல்
(18.04.09)




றொறன்ரோவில் உள்ள உதவி
அமெரிக்க தூதுவராலயத்தின் முன்னால். (27.04.09)




ஒட்டாவாவில் இடம்பெற்ற உண்ணாவிரதத்திரல்
(18.04.09)



அமெரிக்காவில் உள்ள UN தலைமைச்
செயலகத்திற்கு முன்னால். (17.04.09)




ஒட்டாவாவில் இடம்பெற்ற உரிமைப்போர் நிகழ்வில் (21.04.09)



அமெரிக்காவில் உள்ள UN தலைமைச்
செயலகத்திற்கு முன்னால். (17.04.09)




மார்க்கம் கிங்சன் சந்திப்பில் இடம்பெற்ற
கவனயீர்ப்பு நிகழ்வில் (01.04.09)




குயின்ஸ் பார்க்கில் இடம்பெற்ற
கவனயீர்ப்பு நிகழ்வில் (06.04.09)




ஒட்டாவாவில் இடம்பெற்ற
கவனயீர்ப்பு நிகழ்வில் (07.04.09)

உங்கள் நிகழ்வுகளை பார்ப்பதற்கும் பதிவதற்கும் www.inayam.net

# குமுதினி படகின்...

70ம் பக்கத் தொடர்ச்சி...

காக மூடப்பட்டிருந்த பலகைகளை கடற் படையினர் அகற்றி ஒரு குழியை ஏற்படுத் தினார்கள். இது படகின் இருக்கை மட்டத் தில் இருந்து கிட்டத்தட்ட நான்கு அடி ஆழம் கொண்டதாக இருந்தது. இதன் உள்ளேயே இயந்திரத்தின் பகுதிகள் அமைந்துள்ளன.

சற்று நேரத்தின் பின்னர்... கடற்படையினர் பயணிகள் ஒவ்வொருவரையும் தனித்தனியாக படகின் பின்புறம் வருமாறு உத்தரவிடுகின்ற னர். பயணிகளும் பணியாளர்களும் சாதாரண ஒரு சோதனை என்ற நம்பிக்கையில் ஆயத்தமாகின்றனர். கடற்படையினரின் திட்டத்தின் படி திடகாத்திரமான இளவயதினர் முன்வரிசையில் நிறுத்தப்பட்டிருந்தனர். நான்கு கடற்படையினர் படகின் பின்பகுதியில் நிற்க மிகுதி இரண்டு பேர் படகின் இரு வாசல் களிலும் காவலுக்கு நிற்கின்றனர்.

முதலில் படகுப் பணியாளர்கள் சிலரில் ஆரம்பித்து ஒவ்வொருவராக படகின் பின்புறம் வருமாறு அழைக்கப்படுகின்றார் கள். தனித்தனியே வந்த ஒவ்வொருவரை யும் தமது பெயர் மற்றும் ஊரின் பெயரை உரத்துக் கூறுமாறு பணிக்கப்பட்டு "பெரிய ஐயா"வை உள்ளே சந்திக்கும்படி கொச்சைத் தமிழில் கொலைக் களத்திற்கு அனுப்புகின்றனர். அங்கே சென்றவுடன் எவரும் எதிர்பாராத வகையில் கொடூரமாக கத்தியால் வயிற்றைக் குத்தியும், கண்டங் கோடரியினால் தலையை பிளந்தும், இரும்புக் கம்பிகளால் மண்டையில் தாக்கியும் படுகொலை செய்து அந்த 4 அடி இயந்திரப் பள்ளத்திலே போட்டனர். குற்றுயிருடனும், உயிர் இல்லாமலும், இரத்த வேதனைகளுடன் ஒவ்வொரு பயணிகளின் உடலும் ஒன்றன் மேல் ஒன்றாக துடிதுடிக்க குவிக்கப்பட்டுக் கொண்டிருந்தன. இவர்களின் மரண ஓலம் மற்றவர்களின் பெயர் மற்றும் ஊர் உச்சரிப்பில் அமிழ்ந்து போய்க் காணாமல் போயிற்று... இரத்த ஆறு படகின் அடிப் பகுதியில் ஓட ஆரம்பித்துக் கொண்டிருந்தது.

இதை அறியாத மற்றைய பயணிகள் சோதனைக்காகக் காத்துக் கொண்டிருக்கின்றனர். குழந்தைகள், தாய்மார்கள், பெண்கள் என்று ஈவு இரக்கமின்றி எல்லோருமே குத்திக் கிழிக்கப்பட்டுக் கொண்டிருந்தார்கள். குற்றுயிருடன் இயந்திர அறையில் கிடந்த சிலர் நடக்கும் கொடுமை கண்டு செய்வதறியாது இறந்தவர்கள் போல் மரண வேதனையுடன் பரிதவிக்கின்றார்கள். இயந்திர அறை எங்கும் இரத்த ஆன்மாவின் கறை படிந்து கொண்டிருந்தது... ஒரு குழந்தையின் வயிறு கிழிக்கப்பட்டு அசைவின்றிக் கிடக்கின்றது. சிறு சிறு புழுக்களைப் போல் மனித உடல்கள் குற்றுயிருடன் துடிதுடித்துக் கொண்டிருந்தன. ஒவ்வொரு உடலின் மீது இரத்தம் சீறியபடி இன்னொரு உடல் வீழ்ந்து கொண்டிருந்தது. கேட்பார் யாருமின்றி கொடூரத்தின் அதி பயங்கரம் அங்கே நடந்தேறிக் கொண்டிருந்தது.

"ஐயோ வெட்டுறாங்கள்..." என்ற ஒரு குரல் கேட்கின்றது. பயணிகள் படுகொலை செய்யப்பட்டுக் கிடந்ததை கண்ட கார்த்திகேசு என்பவர் அபயக் குரல் எழுப்பியபடி கடலில் குதிக்கின்றார். உடனே காவலுக்கு நின்ற கடற்படையினரின் துப்பாக்கிகள் அவரின் உயிரை எடுத்து விடுகின்றன. மிகுதிப் பயணிகள் செய்வதறியாது திடுக்கிட்டு ஓலக் குரல் எழுப்புகின்றனர். பயணிகளுக்கு நடக்கும் விடயம் தெரிந்ததை அறிந்த கடற் படையினர் தமது நோக்கத்தை விரைவு








படுத்துகின்றனர். வெட்டு... கொத்து... கொலை... என்று தொடர்கின்றது... அனைத்துப் பயணிகளையும் படுகொலை செய்துவிட்டோம் என்ற கணக்கில் கடற்படையினர் விரைவாக தமது படகில் ஏறி மறைகின்றனர். கிட்டத்தட்ட ஒன்றரை மணித்தியாலயங்கள் நடந்த இந்தக் கோரத் தாண்டவத்தினால் குமுதினிப் படகு இரத்த மயானத்தில் அநாதரவாக நடுக்கடலில் நின்றது.

நேரம் சென்று கொண்டிருந்தது... கடற்படையினரின் வெளியேற்றத்தை உறுதி செய்து கொண்டு படுகாயம் அடைந்த தப்பிய சிலர் படகை இயக்க முனைந்த முயற்சிகள் எல்லாம் தோல்வியில் முடிவடைகின்றன. அதே வேளை இயக்க நிலை gearஇல் நிறுத்தப்பட்டிருந்த இப் படகு இயக்கப்பட்டிருந்தால் ஆடுதண்டுப் பகுதியில் குற்றுயிருடனும், செத்து மடிந்தும் கிடந்த உடல்கள் ஆடுதண்டின் வேகத்தில் அகப்பட்டு பிணக் குவியல் களாக்கப்பட்டு இன்னும் மோசமான அழிவை ஏற்படுத்தியிருக்கும்.

இயந்திரம் இயங்காத நிலையில் பருவக் காற்றின் திசையில் புங்குடுதீவு கண்ணகை அம்மன் கோயில் கரை நோக்கி குமுதினிப் படகு தானாக மெல்ல மெல்ல நகரத் தொடங்கியது. பின்னர் கடலில் ஏற்பட்ட நீரோட்டத்தின் பாதிப்பினால் அநாதரவாக நயினாதீவு நோக்கி நகர ஆரம்பிக்கின்றது. படு காயமடைந்தவர்கள் காட்டிய உதவிச் சமிக்கைகள் எவரையும் சென்றடையவில்லை.

குமுதினிப் படகு குறித்த நேரத்திற்கு குறிகட்டுவானுக்கு வராததனால் அங்கே பதற்றம் ஏற்பட்டது. இயந்திரக் கோளாறா? எரிபொருள் தீர்ந்துவிட்டதா? அல்லது காலநிலையில் ஏதும் மாற்றமா? என்ற சந்தேகத்தில் படகைத் தேடும் முயற்சியில் இறங்குகின்றனர்.

நயினாதீவு நோக்கி சிறிது சிறிதாக நகர்ந்து சென்று கொண்டிருந்த குமுதினிப் படகு ஆழ் கடல் ஆரம்பிக்கும் களப்புக் கடலின் ஒரு மேட்டுப் பகுதியில் பொறுத்துப்போய் அப்படியே நிற்கின்றது. நேரம் செல்லச் செல்ல காயமடைந்தவர்களும் மயங்கி விழுகின்றனர். இருந்தும் சிலர் தமது சட்டைகளைக் கழற்றி உதவி... உதவி... என்ற சைகை மொழியுடன் உயிர் காத்துக் கிடக்கின்றனர். சற்று நேரத்தின் பின்னர் இவர்களின் சைகை மொழியை குறிகட்டுவான் பகுதியில் இருந்து அவதானித்த சிலர் தகவல் தர மீட்புப் பணிக்காக குறிகட்டுவான் இறங்குதுறையில் இருந்து ஒரு குழு புறப்படுகின்றது.

மனதை உறையவைக்கும் பிணக் குவியல் களைக் கண்ட மீட்புப் பணிக் குழுவினர் அவசர அவசரமாக குமுதினிப் படகை குறிகட்டுவானுக்கு இழுத்து வருகின்றார்கள். காயமடைந்தோர் உடனடியாக புங்குடுதீவு மருத்துவ மனைக்கும், யாழ் போதனா மருத்துவ மனைக்கும் எடுத்துச் செல்லப்படுகின்றனர். இறந்தோரின் உடல்கள் புங்குடுதீவு மருத்துவ மனையில் வைக்கப்படுகின்றது. அனைத்துத் தமிழ் மக்களும் இத்துயரச் சம்பவத்தினால் கொதிப்படைகின்றார்கள். படுகொலைச் சம்பவம் உடனடியாக காவல் துறையினரிடம் முறையீடு செய்யப்பட்டு இறந்தோர் குடும்பத்தினருக்கு செய்தி அனுப்பப்படுகின்றது. மரண ஒப்பாரிகளின் ஆரம்பத்துடன்... ஒரு சரித்திரம் சாகடிக்கப்பட்ட வேதனைகளுடன் அன்றைய நாளும் சோகமாக விடைபெற்றுச் சென்றது.

அறியப்பட்ட தகவல்களின் படி குமுதினிப் படகில் இருந்த 72 தமிழ் மக்கள் கடற்படையினரால் கொடூரமாக வெட்டியும், குத்தியும், மண்டையில் அடித்தும் தாக்கப்பட்டனர். இவர்களில் 32 பேர் நடுக்கடலில் துடிதுடித்து மாண்டுபோயினர். 4 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின் மரணித்துப் போயினர். மொத்தமாக 36 தமிழ் உயிர்கள் அநியாயமாக கடற்படையினரின் கோரத் தாக்குதலினால் கொன்றொழிக்கப்பட்டனர். இந்தச் சம்பவம் நெடுந்தீவு மக்களால் மட்டுமல்ல மனித நேயம் கொண்ட எவராலும் மறக்க முடியாத ஒரு துன்பகரமான சோக நிகழ்வாகும்.

இந்தப் படுகொலையின் முறையீடு இன்று வரை விசாரணைகள் ஏதும் இன்றி கிடப்பில் போடப்பட்டபடியே இருக்கின்றது. 24 வருடங்களாக மூடி மறைக்கப்பட்ட குமுதினிப் படுகொலையின் உண்மைகள் உலகின் வெளிச்சத்திற்குக் கொண்டுவரப்பட்டு நீதி தேடப்பட வேண்டும். இதற்குக் காரணமான அரசாங்கம் தண்டிக்கப்பட வேண்டும். இதுவே மரணித்த உயிர்களுக்கு கொடுக்கும் வரலாற்று மரியாதை.

இன்று...எத்தனையோ துயர வடுக்களை மனதில் தாங்கி நிற்கும் எமது உறவுகளுக்கு இந்த குமுதினிப் படுகொலையும் ஒரு இரத்த சாட்சியாக எங்கோ ஒரு மூலையில் உறைந்து நிற்கின்றது.

rmohan@thaiveedu.com

www.inayam.net

- கலை விழாக்கள்
- எழுச்சி நிகழ்வுகள்
- ஊர்ச்சங்க ஒன்றுகூடல்கள்
- திருவிழாக்கள்
- கொண்டாட்டங்கள்
- நடன, நாடக, இசை விழாக்கள்
- குடும்ப நிகழ்வுகள்
- மரணச் சடங்கு நிகழ்வுகள்

எதுவானாலும்.

இணையம்.net மூலமாகத் தெரியப்படுத்துங்கள்.

உங்களுக்கு அனுகூலமான இடம், காலம், நேரங்களில் ஏனைய நிகழ்வுகள் திட்டமிடப்பட்டுள்ளனவா என்பதை முன்கூட்டியே அறிந்துகொண்டு உங்கள் நிகழ்வுகளை நிர்ணயித்துக் கொள்ளுங்கள்.

முன்கூட்டியே inayam.net இல் பதிவு செய்துகொள்வதன் மூலம் ஏனைய நிகழ்வுகளோடு போட்டிகள் உருவாகுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

உங்கள் நிகழ்வுகள் திருப்திகரமாக நடந்தேறுவதற்கு பங்குபெறும் மக்களின் அனுகூலம் முக்கியமானது.

இதைக் கருத்திற் கொண்டு உருவாக்கப்பட்ட ஒருங்கிணைப்புத் தளமே inayam.net

முயற்சி செய்யுங்கள்!

முற்றிலும் இலவசம்

inayam
416•400•6406


Consult Ranjan
Project Management & Construction Services
Consulting | Engineering | Management
KNOWLEDGE THAT GETS RESULTS
Zoning Changes • Building Permits • Plan Review • Public Relations • Team Leadership • Expert Testimony • Municipal Planning • Project Management • Development Planning • Specifications Review • Contract Administration • Construction Technology • Industrial Reuse Strategies
Tel.: 416.627.5664
E-mail: ranjan@consultranjan.com
www.consultranjan.com


உங்கள் வீட்டு நீரை சூரிய ஒளியில் வெப்பமாக்குங்கள்... உங்கள் பணத்தை மிச்சமாக்குங்கள்...
இதோ உங்களுக்காக
Solar Domestic Hot Water System
BSi
BRIGHT SOLAR INC.
FINANCE PLANS
TD
Prime Plus 2.75% (Over $10,000)
(Prime 2.5% effective Mar 2009)
Prime Plus 3.25% (Over $5,000)
(Prime 2.5% effective Mar 2009)
NO PAYMENT FOR 6 MONTHS !
உங்களுக்கான எமது விஷேட சலுகைகள்
$ 2500 தேசிய மற்றும் மாகாண மட்டத்தில் விலைக்கழிவுகள்
$ 150 வீட்டு மின் உபயோக கணிப்புப் பரிசோதனை கழிவுகள்
HRTC வரியிலிருந்து $ 1350.00 வரையிலான மீள் பெறும் உரிமை
இன்னும் பல...
உங்களது சேமிப்புகள் பாரியளவில் வளர்ச்சி பெற சரியான முதலீடு
நாம் உங்களது வீட்டு மின் உபயோக கணிப்புப் பரிசோதனைக்கு
50% செலுத்துவோம்
* condition apply
CSA# 232467
எமது பிரதான உற்பத்திகள்
சூரியசக்தி மூலம் வீட்டு நீரை வெப்பமாக்கும் முறை (Domestic)
சூரியசக்தி மூலம் வாயு வெப்பமாக்கும் முறை
Photovoltaic மின்சாரம்
காற்றலைகள்
புவி சார்ந்த வெப்பவியல் (Geothermal) மற்றும் உதிரிப்பாகங்கள்
BRIGHT SOLAR INC.
வந்து பாருங்கள், உங்களால் எவ்வளவு சேமிக்க முடியுமென்பதை நீங்களே உணர்ந்து கொள்ளுங்கள்...
5215, GTA Square, Finch Avenue East, Suite 257, Toronto,Ontario, Canada M1S 0C2
Tel: 416 754 8327
www.brightsolarinc.com
இயற்கையிலிருந்து இலவச வாழ்வாதார சக்தி

# Renewable Energy – Ecoaction

# சூரிய ஆற்றலில் வெப்பமாக்குதல்

## Solar Domestic Hot Water Heating


K. கண்ணன்
- Marketing Director -

எந்த வசிக்கும் இருப்பிடத்திலும் அல்லது வர்த்தக சம்பந்தமான அமைப்பிலும் சூரிய ஆற்றல் மூன்று முக்கியமான பலன்களை தரவல்லது. அவை தண்ணீரை வெப்பப்படுத்துதல், காற்றை வெப்பப்படுத்துதல் மற்றும் மின்சாரத்தை உற்பத்தி செய்தல் ஆகியன வாகும். சூரிய ஆற்றல் மிக மலிவான விலையில் நீண்ட கால பயனைதருகிறது. மேலும் சுற்றுச் சூழலுக்கு, பாதிப்பு மிக குறைவாகவே இருக்கும்.

### வசிக்கும் இருப்பிடங்களுக்கான சூரிய ஆற்றலின் பயன்பாடுகள்

கனடாவில் சூரிய ஆற்றலை பயன்படுத்துவதின் மூலம் சுற்றுச்சூழலுக்கு மாசு ஏற்படுத்தாமலும், அல்லது புதைபடிவ எரிபொருள் அல்லது மின்சாரத்திற்கு அதிக கட்டணம் செலுத்தாமலும், தங்கள் வீட்டு அவசியங்களுக்கு தேவையான தண்ணீரை வெப்பப்படுத்த முடியும். மரபு முறையான தண்ணீரை வெப்பப்படுத்தும் உபகரணங்களுக்கு செலவு அதிகமாகும். மேலும் அவை காற்றை மாசு படுத்தும், சூரிய வெப்பப்படுத்தும் கருவிகள் சூரியனிலிருந்து வரும் சுத்தமான ஆற்றலை தான் பயன்படுத்துகிறது. அவை அழுக்கான புதைபடிவ எரிபொருள்களை பயன்படுத்துவதில்லை. மேலும் குறைவான செலவில் சூரிய ஆற்றலை பயன்படுத்தி நிறைய பணத்தை மிச்சப்படுத்த முடியும். சூரிய வெப்பப்படுத்தும் கருவியில் உள்ள பம்ப் (pump) கூட சூரிய மின் ஆற்றலால் இயங்கும்.

தொழில் நுட்ப ரீதியிலான முன்னேற்றங்கள் மற்றும் எரிபொருள்களின் அதிக விலை, தண்ணீரை வெப்பப்படுத்துவதற்கு குறைந்த செலவில் கிடைக்கும் சூரிய ஆற்றலை ஒரு விருப்பதேர்வாக ஆக்கியுள்ளன. பரஸ்பர நிதியில் முதலீடு செய்து ஒவ்வொரு வருடமும் 10 முதல் 20 சதவிகிதம் வரை பணத்தை லாபம் சம்பாதிப்பதற்கு சமமான பணத்தை ஐந்து முதல் 10 வருடங்கள் சூரிய ஆற்றலை பயன்படுத்தி இயங்கும் சூரிய வெப்பப்படுத்தும் கருவியால் மிச்சப்படுத்த முடியும். வசிக்கும் இருப்பிடத்தில் மின் சக்திக்காக செலவிடப்படும் பணத்தில் சராசரியாக கால் பங்கு பணம் தண்ணீரை வெப்பப்படுத்துவதற்கு செலவிடப்படுகிறது. சூரிய வெப்பப்படுத்தும் கருவி அந்த செலவை 50 சதவிகிதம் குறைக்கிறது. அதனால் ஒரு வருடத்திற்கு சராசரியாக 500 டாலர் மிச்சமாகிறது. ஒரு சராசரி வீட்டில் ஒரு சூரிய வெப்பப்படுத்தும் கருவியை நிறுவுவதற்கு $5.000க்கு மேல் செலவாகும். கனடாவின் தட்ப வெப்பநிலைக்கு ஏற்றவாறு சூரிய வெப்பப்படுத்தும் கருவிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. 25 வருடங்களுக்கு முன்பு நிறுவிய கருவிகள் கூட இன்னும் நல்லமுறையில் இயங்கி கொண்டிருக்கின்றன. கோடைகாலத்தின் வெப்பநாட்களில் ஐயத்துக் இடம் இல்லாமல் சூரிய வெப்பப்படுத்தும் கருவிகள் நன்றாக வேலை செய்யும். ஆனால் குளிர்காலத்தில் வெயிலுள்ள நாளில், வெளியே உள்ள வெப்ப நிலை $20^{\circ}$யாக இருக்கும் போதும் அவை குளியலுக்காக $40^{\circ}$ உள்ள வெந்நீரை தர வல்லது. மேலும் அதில் சூட்டடுப்பு (burner) எதுவும் இல்லை என்பதாலும், பம்ப் (pump) மட்டும் தான் சுற்றோட்டம் உள்ள பகுதி என்பதாலும் லேசான பராமரிப்பு இருந்தாலே சூரிய தண்ணீர் வெப்பப்படுத்தும் கருவி பல வருடங்களுக்கு வெப்பமான தண்ணீரை தந்து கொண்டே இருக்கும். இந்த கருவிகள் 20 வருடங்கள் நீடித்து உழைப்பதற்கு தக்க வாறு வடிவமைக்கப்பட்டுள்ளன. மேலும் மரபு முறையான தண்ணீர் வெப்பப்படுத்தும் கருவிகளுக்கு உள்ளதைவிட இவைகளுக்கு நீண்ட உத்திரவாத காலம் உண்டு.

கூரையில் அமைக்கப்பட்டுள்ள தெற்கு திசை நோக்கி இருக்கும் சூரிய தகடுகளில் சூரியனின் ஆற்றல் கிரகிக்கப்படுகிறது. இவை சூரிய ஆற்றலை சேகரிக்கும் கலன்கள் என்று அழைக்கப்படுகிறது. பூமத்திய ரேகையின் வடக்கில் வீட்டின் அகலத்திற்கு சமமான ஒரு கோணத்தில் (உதாரணமாக ஒட்டாவா $45^{\circ}$ அளவு கோணத்தை ஏற்படுத்தும்) இந்த சேகரிக்கும் கலன்கள் வைக்கப்பட வேண்டும். நாள் முழுவதும் இந்த சூரிய ஆற்றல் சேகரிக்கும் கலன்கள், மற்றும் வீட்டினுள்ளே இருக்கும் நீர்தேக்க தொட்டி ஆகியவற்றின் வெப்பநிலைகளை கருவியின் கட்டுப்பாட்டு பொறி ஒப்பிட்டுக் கொண்டே இருக்கும். நீர் தேக்க தொட்டியிலுள்ள நீரை சூடாக்குவதற்கு போதுமான வெப்பம் சேகரிக்கும் கலன்களில் சேரும் போது சூடாக்கப்பட வேண்டிய தண்ணீரை சேகரிக்கும் கலன்களுக்கு அனுப்புமாறும் மற்றும் வெப்பத்தை சேகரிக்கும் படியும் ஒரு பம்பிற்கு சிக்னல்களை (signal) அனுப்பும்.

குளிர்காலத்தின் மிகக் குளிர்ச்சியான இரவில் இந்த கருவிகள் பனியால் உறைந்து போவதில்லை. ஏனென்றால் இக் கருவிகள் பிரத்தியேகமான உறைபனி பாதுகாப்பு உறைகளை கொண்டிருக்கும். அவைகள் கருவிகளை உறைபனியிலிருந்து பாதுகாக்கும். (வீட்டிலுள்ள குடிநீர் சப்ளையுடன் இவை தொடர்பு கொள்வதில்லை).



சூரிய தண்ணீர் வெப்பப்படுத்தும் கருவியின் மூலம் அதிக நன்மை பெறுவதற்கு உங்கள் வீட்டில் நிழல் மறைக்காத கூரை அல்லது சுவர், அல்லது வீட்டிற்கு அருகில் உள்ள தரையில் நிழல் மறைக்காத இடம் இருப்பது அவசியம். உங்கள் வீட்டில் தற்போதுள்ள புதைபடிவ எரிபொருள் செலவு அதிகமாக தேவைப்படும் உபகரணங்கள் இருக்கலாம். மேலும் மின்சாரத்தை பயன்படுத்தி அதிக அளவு சூடான தண்ணீரை நீங்கள் உருவாக்கலாம் அல்லது அடிக்கடி குளிப்பதற்கும் மற்றும் சமையல் பாத்திரங்கள் கழுவுவதற்கும், குளியல் தொட்டியில் குளிப்பதற்கும் நிறைய வெந்நீர் தேவைப்படலாம். இத்தகைய சூழ்நிலைகளில் உங்கள் வீட்டில் சூரிய தண்ணீர் வெப்பப்படுத்தும் கருவியை நிறுவுவது சாலச் சிறந்தது.

### வீட்டில் சூரிய வெப்பப்படுத்தும் கருவியை நிறுவுவது.

சூரியனின் ஆற்றலை “சூரிய சேகரிக்கும் கலன்கள்” என்று அழைக்கப்படும் தெற்கு திசை நோக்கி இருக்கும் சூரிய தகடுகளில் சேகரிக்க முடியும். இந்த சூரிய தகடுகள் சூரிய வெளிச்சத்திலிருந்து கிடைக்கும் ஆற்றலை வெப்பமாக மாற்றுகிறது. நாள் முழுவதும் கருவியிலுள்ள ஒரு கட்டுப்பாட்டு பொறி வீட்டிற்குள் இருக்கும் தண்ணீர்த் தொட்டியின் வெப்ப நிலையுடன் சூரியதகடுகளின் வெப்ப நிலையை ஒப்பிட்டுபார்க்கும். போதுமான அளவு வெப்பம் சேகரிக்கும் கலன்களில் சேமிக்கப்பட்டதும், ஒரு பம்ப் மூலம் வெப்பமான திரவம் வீட்டிற்குள் அனுப்பப்படும்.

உங்கள் சூரிய வெப்பப்படுத்தும் கருவியை கிழக்கு திசை நோக்கி வைப்பது ஆபத்தான விளைவை ஏற்படுத்தும். சேகரிக்கும் கலன்கள் எவ்வளவு முடியுமோ அந்த அளவுக்கு தெற்கு நோக்கி இருப்பது அவசியம். மேலும் உங்கள் மனையின் பரப்பிற்கு சமமாக அது தொடுவானத்திற்கும் மேலே உள்ளது போல ஒருபுறம் சாய்க்க வேண்டும். சூழ் நிலைக்கு தக்கபடி அமைக்கவேண்டும். ஆனால் சூரிய தகடுகள் தெற்கு நோக்கி இல்லாமல் இருந்தால் செயல்திறன் குறைவாக இருக்கும். மேலும் மரங்கள் அல்லது கட்டிடங்கள் சூரியதகடுகளை மறைக்கக்கூடாது. சங்கிலி போன்ற பொருளை கொண்டு உறுதியாக கட்டி வைத்திருக்க வேண்டும். பலத்த காற்று வீசும் போது உடைமைகளுக்கு அல்லது உயிர்களுக்கு சேதம் ஏற்பட்டுவிடக் கூடாது.

### சூரிய வெப்பப்படுத்தும் கருவியை வைக்கும் இடங்கள்

கூரையின் மீது தெற்கு நோக்கி அமைக்கலாம். மேலும் ஒரு புறம் சாய்வான கோணத்தில் அமைக்கலாம் (கிடைமட்டத்திற்கு மேலே உள்ள கோணம்). சூரிய தகடுகளின் உச்சிப் பகுதியை உயர்த்துவதற்கு தட்டடுக்கை பயன்படுத்தலாம் தெற்கு நோக்கி நிற்கும் சுவரின் மீது, தட்டடுக்கைப் பயன்படுத்தி சூரிய தகடுகளை சுவரிலிருந்து ஒருபுறம் சாய்த்து வைத்தால் விரும்பிய பலன்களை அடையலாம். வீட்டிற்கு அருகில் உள்ள தரையின் மீது தட்டடுக்கைப் பயன்படுத்தி கருவியை நிலை நிறுத்தலாம். சூரிய தகடுகளுக்கு தட்டடுக்கு சரியானதக அமைப்பையும் மற்றும் கோணத்தையும் வழங்கும். axis பயன்படுத்தி மாறக்கூடிய தடங்களில் செல்லும் தட்டடுக்கின் மீது சூரியதகடுகளை அமைக்கலாம். இதனால் சூரியனை நோக்கி சூரியதகடுகள் இருக்கும் தக அமைப்பு தானாகவே ஏற்படும். இப்படி அமைப்பதற்கு ஆரம்பத்தில் சற்று கூடுதல் செலவு ஆகும். ஆனால் சூரியனை நோக்கச் செய்யும் தடங்களினால் சூரியதகடுகள் நாள் முழுவதும் நேரடியான சூரிய வெளிச்சத்தை தரும். எனவே இந்த அமைப்பின் மூலம் உயர்ந்த பட்ச அளவு சூரிய ஆற்றலை பெறமுடியும்.

உங்கள் திசையறிவிக்கும் காந்த கருவி காட்டும் காந்த சக்தி தெற்கு திசை, உண்மையான தெற்கு திசை இல்லை என்பதை நினைவில் வையுங்கள். சூரியதகடுகளின் உயரத்தை அல்லது தண்ணீர் குழாய்கள் மற்றும் மின்கம்பி இணைப்பு வேலை தொடர்பான சூழ்நிலைகளை கட்டுப்படுத்தும் சட்ட திட்டங்கள் ஏதாவது உண்டா என்பதை, வீட்டு உரிமையாளர்கள், உள்ளூர் நகராட்சி அலுவலர்களுடன் கலந்தாலோசிக்க வேண்டும்.

### எந்த வகையான சூரிய வெப்பப்படுத்தும் கருவி பொருத்தமானது?

ஒரு சூரிய வெப்பப்படுத்தும் கருவி சூரிய வெளிச்சத்தை வெப்பமாக மாற்றுவதற்கும், அந்த வெப்பத்தை உங்கள் வீட்டு குடிநீர் வினியோகத்திற்கு இடம் மாற்றம் செய்வதற்கும் வடிவமைக்கப்பட்டுள்ளது. வெப்பப்படுத்தும் கருவிகள் மிகக் குளிர்ச்சியான உறைபனி வெப்ப நிலைகளையும் தாங்கும் வண்ணமும், மற்றும் தண்ணீர் குழாய்களுக்கு சேதம் ஏற்படாமல் பாதுகாக்கும் படியும் அமைப்பது அவசியம். எனவே மூன்று வகை கருவிகள் கருத்தில் கொள்ளப்பட்டது.

தண்ணீரை திரும்ப அனுப்பும் கருவிகளில் வெளிப்புறத்தில் உள்ள தண்ணீர் குழாய்களில் உறைபனியை தடுக்கும் அமைப்பு ஒன்றும் வைக்க வேண்டியதில்லை. மேலும் வெப்பத்தை சேகரிப்பதற்கு அவை தண்ணீரை மட்டும் தான் பயன்படுத்தும். தண்ணீரை திரும்ப அனுப்பும் கருவிகள் சூரியன் மறையும் போது அல்லது வெப்பநிலை, உறைபனி வெப்பநிலையை விட குளிரும் போது, சேகரிக்கப்பட்ட தண்ணீரை அனுப்புவதற்கு புவிஈர்ப்புவிசையை பயன்படுத்துகிறது. மூடிய வளையம் உள்ள வெப்பப்படுத்தும் கருவிகள், உறைந்துவிடாமல் தடுப்பதற்கு, propylene glycol அல்லது அதுபோன்ற திரவத்தை வெப்பத்தை இடம் மாற்றம் செய்யும் தண்ணீரில் பயன்படுத்துகிறது. வெப்பத்தை இடம் மாற்றம் செய்வதில் Glycol தண்ணீரைவிட குறைவான திறன் கொண்டது. ஆனால் செம்பு குழாய்களின் ஆயுளை நீடிப்பதற்கு, அரிப்பதை தடுக்கும் பொருள் அதில் போடப்பட்டிருக்கும்.

உங்கள் வீட்டிலுள்ள குடிநீரையும் மற்றும் மற்ற இடங்களையும் வெப்பப்படுத்துவதற்கு ஒருங்கிணைந்த சூரிய வெப்பப்படுத்தும் கருவி அமைக்க முடியும். மேலும் அது ரேடியேட்டர்கள் அல்லது குழாய்கள் மூலம் சூடான தண்ணீரை ஓடச் செய்து வீட்டின் தரைதளத்தை உஷ்ணப்படுத்தும். இந்த வெப்பப்படுத்தும் கருவிகள் சூரிய ஆற்றலை ஒருங்கிணைத்து, கணப்பு அடுப்பின் நிறைந்த இடத்தில் சூரிய ஆற்றலால் சூடான தண்ணீர் ஒரு ‘கெயில்’ மூலம் சென்று ஒரு உஷ்ணப்படுத்தும் ‘பம்ப்’ மாதிரி வேலை செய்யும்.

### வெப்பப்படுத்தும் கருவியை பற்றிய முக்கியமான விபரங்கள்

உங்களுக்கு தேவையான சூடான நீரைப் பொறுத்து, தகுந்த அளவிலான சூரிய தகடுகளையும், மற்றும் நீர்தேக்க தொட்டியையும் நேர்ந்தெடுக்க வேண்டும். இரண்டு குழந்தைகள் உள்ள ஒரு சாதாரண குடும்பத்திற்கு 6 சதுர மீட்டர்கள் பரப்பளவு உள்ள சூரிய தகடுகள் அமைப்பு பகுதியும் (அதாவது 4 x 8 சூரிய தகடுகள்) மற்றும் 270 லிட்டர்கள் கொள்ளளவு (60 கலன்கள் கொண்ட நீர்தேக்க தொட்டியும் அவசியம்) திரவம் செல்லும் குழாய்கள் வெப்பம் இழப்பதை தடுப்பதற்கு அவை எவ்வளவு நீளம் குறைவாக இருக்க முடியுமோ அந்த அளவுக்கு இருக்க வேண்டும். அவை நன்கு வெப்பகாப்பு செய்யப்பட்டிருக்க வேண்டும். ஏனென்றால் சேகரிக்கும் கலன்களுக்கும் மற்றும் வெப்ப இடம் மாற்றம் செய்யப்படும் உபகரணத்திற்கும் இடையே அது ஓடும். மேலும் திரவம் சப்ளை செய்யப்படும் இடம் மற்றும் திரும்பிச் செல்லும் குழாய்கள் ஆகிய இரண்டும் நன்றாக வெப்பகாப்பு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

சூரிய ஆற்றல் சம்பந்தமான பொருள்களை உற்பத்தி மற்றும் வினியோகம் செய்யும் தொழிற்சாலைகள் கனடாவில் பெரிதும் வளர்ச்சியடைந்து வருகிறது. கனடா தட்பவெப்ப நிலையை நன்கு தெரிந்து கொண்டிருக்கின்றது. கடினமான தொழில் நுட்பத்தின் மூலம் மிகச் சிறந்த உபகரணங்களை வடிவமைத்து உள்ளது. தட்பவெப்ப நிலையின் மிக கடுமையான விளைவுகளையும் அவை சமாளிக்கும். நூற்றுக்கணக்கிலான கனடியர்கள் சூரிய ஆற்றல் களத்தில் இறங்கி தங்கள் வாழ்க்கையை செவ்வனே நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு வீட்டிலும் உள்ள சூரிய தண்ணீர் வெப்பப்படுத்தும் கருவி கனடியர்களுக்கு வேலைவாய்ப்பையும் தருகிறது மற்றும் நம் பொருளாதாரத்தையும் வளர்ச்சியடையச் செய்கிறது.

kannank@thaiveedu.com


■ ■ ■

அறியவில்லையானால் அறிந்துகொள்ளுங்கள் - கனடாவில் சில தகவல்கள்

# வாகன காப்புறுதியும் விலைக் கழிவும்

## (Various Discounts In Auto Insurance)

தகவல் தொடர் - 29



சிவ பஞ்சலிங்கம்
- ஆயுட்காப்புறுதி பிரதிநிதி -

### வாகன காப்புறுதியில் காப்புறுதி கம்பனிகள் வழங்கும் பத்து வகையான விலை கழிவுகள் (Various Discounts In Auto Insurance)

கனடாவில் உள்ள ஒவ்வொரு வாகன காப்புறுதி கம்பனியும், காப்புறுதி தொடர்பான விண்ணப்பங்கள் யாவற்றினையும் உங்களால் வழங்கப்படும் தகவல்களின் அடிப்படையில் பரிசீலனை செய்து, பல்வேறு வகையான விலை கழிவுகளை (Discounts) வழங்குவது வழமையாகும். ஒவ்வொரு வாகன காப்புறுதி கம்பனியினதும் விலை கழிவு தொடர்பான தகவல்களும், விகிதங்களும் வெவ்வேறு வகையில் இருந்தாலும், இதனை பிரதானமாக பின்வரும் பத்து வகையான தலைப்பினுள் உட்படுத்தலாம். அவையாவன பின்வருமாறு!

### திருட்டுகள், விபத்துகளில் இருந்து பாதுகாக்கும் கருவிகள் வாகனத்தில் பொருத்தியிருந்தால் அதற்காக வழங்கப்படும் விலை கழிவு! (Anti Theft and Safety Equipment)

பொதுவாக, புதிதாக அண்மைக் காலங்களில் உற்பத்தி செய்யப்பட்டு, விற்பனைக்கு வந்திருக்கும் வாகனங்களில் எவராவது முறைகேடாக வாகனத்தினை சற்று தட்டி பார்த்தாலே போதும் 'எச்சரிக்கை ஒலி' (Security Alarm) அலற ஆரம்பிக்கும்.

இவ் எச்சரிக்கை ஒலி என்பது வாகனங்கள் பெருமளவில் திருட்டுப் போவதனை பாதுகாக்கின்றது. இப்படி பல்வேறு வகையான திருட்டுக்கள், வாகனங்களை உடைத்தல் போன்ற செயல்பாடுகளை எச்சரிக்கை செய்து திருடர்களை எச்சரிக்கும் கருவிகள் வாகனங்களில் பொருத்தப்பட்டிருக்கும்.

இது தவிர விபத்தின் போது சாரதியினையும் முன் ஆசனத்திலிருக்கும் பிரயாணியினையும் விபத்துக்களின்போது பாதுகாக்கும் காற்றினால் நிரப்பப்பட்ட 'பை' (Air Bags) என்பது வாகனங்களில் பொருத்தப்பட்டிருக்கும் இன்னொரு பாதுகாப்பு கவசமாகும். விபத்தின் போது, இக் காற்றுப்பை (Air Bag) உடைந்து காற்றுகளினால் நிரப்பப்பட்ட ஒரு தலையணை போல் வெளியேறி வந்து முன் ஆசனத்தில் இருக்கும் சாரதியினையும், பிரயாணியினையும் பாதுகாத்த சம்பவங்கள் என்பது கனடாவில் நடந்த ஏராளமான விபத்துக்களில் பலரும் அறிந்து கொண்ட விடயமாகும்.

இத்துடன் பனி, மழை பொழியும் காலங்களில் வாகனங்கள் ஓட்டும்போது சறுக்கும் நேரத்திலும், திடீர் என பிரேக் பிடிக்கும் போது வாகனத்தினை ஆடாமல் அசையாமல் நிறுத்தும் 'பிரேக் சாதனம்' ஒன்று (ABS- Anti Brake System) அண்மைய வருடங்களில் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனைக்கு வந்துள்ள வாகனங்களில் பொருத்தப்பட்டிருப்பது வழமையாகும்.

இத்தகைய திருட்டுக்கள், விபத்துக்களில் இருந்து பாதுகாக்கும் சாதனங்கள் வாகனத்தில் பொருத்தப்பட்டு இருக்குமானால் இதற்காக காப்புறுதி நிறுவனங்கள் 5%-10% வரை விலை கழிவு வழங்குவது வழமையாகும்.

ஏனெனில் இத்தகைய சாதனங்கள் உள்ள வாகனங்கள் விபத்து ஏற்பட்டு நட்டஈடு கோரும் நிலைமை உருவாகுதல் குறைவாக இருக்கும் நிலைமையினை உருவாக்குவதாலேயே காப்புறுதி கம்பனிகள் விலைக் கழிவு ஒன்றினை வழங்குவது வழமையாகும்.

### பூரணமான சாரதி பத்திரங்கள் இருந்தால் அதற்குரிய விலை கழிவு (Graduated License Discount)

வெவ்வேறு வாகனங்களை ஓட்டுவதற்கு என (உதாரணம்: பாரிய றக் வண்டி, பாடசாலை பேருந்து, மக்கள் பேருந்து, அம்புலன்ஸ் வண்டி) வெவ்வேறு வகையான சாரதி அனுமதி பத்திரங்கள் இருந்தாலும், ஆரம்பத்தில் உள்ள பொதுவான வாகனமோட்டும் சாரதி அனுமதி பத்திரத்தில் இருவகையான சாரதி அனுமதி பத்திரங்கள் உண்டு.

### எவ்வகையான சாரதி பத்திரம்? (Type of Licence)

புதிதாக வாகனம் செலுத்த ஆரம்பித்தவர்கள் முதலாவது வீதி பரீட்சையில் சித்தியடைந்தவுடன், சில நிபந்தனைகளுடன் தற்காலிகமாக சில வருடங்களுக்கு மட்டும் சுயமாக வாகனம் ஓட்டுவதற்கு வழங்கும் சாரதி அனுமதி பத்திரமே G2 சாரதி அனுமதிப் பத்திரம் (G2 Licence) என்ற லைசென்ஸ் ஆகும்.

இந்த சாரதி அனுமதி பத்திரத்தில் உள்ளவர் இதற்கு மேலான இரண்டாவது வீதி பரீட்சையில் சித்தியடைந்து அடுத்த நிலைப்பாட்டுக்கு போகும் போது இவரது சுயமாக வாகனம் ஓட்டும் திறமை, ஜாக்கிரதை என்பது அனுபவ ரீதியாக வளர்ந்துள்ளது என்ற அடிப்படையில் விபத்துகளை எதிர் கொண்டு நட்டஈடு கோரும் நிலைமைக்கு தள்ளப்படும் நிலைமை குறைவாக இருக்கலாம் என்ற எதிர்பார்ப்பில் சற்று விலை கழிவு வழங்குவது வழமையாகும். இச் சாரதி அனுமதிப் பத்திரமே முழுமையான சாரதி அனுமதிப் பத்திரம் (Fully Graduated G Licence) ஆகும்.

ஏற்கனவே G2 சாரதி அனுமதி பத்திரத்தில் காப்புறுதி பெற்று வாகனம் செலுத்துபவர்கள் இவ் விசேட வீதி பரீட்சையில் சித்தியடைந்து பூரணமான சாரதி அனுமதி பத்திரத்தினை (Fully Graduated G Licence) பெற்று விட்டால் இப் பத்திரத்தின் பிரதியுடன் எழுத்து மூலமாக காப்புறுதி கம்பனிக்கு அறிவிக்கும் போது ஒரு 10% மாக விலை கழிவினை உடனடியாக வழங்கி விலையினை குறைத்துக் கொள்வார்கள். அதாவது 'G' லைசென்ஸ் வைத்திருப்பவர்களுக்கு G(2) லைசென்ஸ் வைத்திருப்பவர்களை விட சற்று விலை கழிவு உண்டு.

### சாரதி பயிற்சி பாடசாலையின் சான்றிதழுக்கு வழங்கும் விலை கழிவு (Driver's Training Discount)

இவ் விலை கழிவு என்பது புதிதாக சாரதி அனுமதி பத்திரம் பெற்று, புதிதாக வாகனம் செலுத்த ஆரம்பிப்பவர்களுக்கு மட்டும் அனேகமான கம்பனிகள் வழங்குவது வழமையாகும்.

மாகாண அரசினால் அங்கீகரிக்கப்பட்ட "டிரைவிங் ஸ்கூல்" ஒன்றில் பூரணமான பயிற்சி பெற்ற தகைமை உள்ள ஒருவர் விபத்துகளில் சிக்காது வாகனம் செலுத்துவார் என்ற நம்பிக்கையில் காப்புறுதி கம்பனிகள் இவ் விலை கழிவினை வழங்குவது வழமையாகும்.

இங்கு பூரணமான பயிற்சி எனப்படும் போது குறிப்பிட்ட மணித்தியாலங்களுக்கு குறைவில்லாது "டிரைவிங் ஸ்கூல்" வாகனத்தில் லைசென்ஸ் பெற்ற சாரதி பயிற்றுனரிடம் பயிற்சி, அத்துடன் சேர்ந்து வகுப்பறையில் போதிக்கும் பாடத் திட்டங்களில் பயின்று மேலதிகமாக, இவையாவும் முடிந்து டிரைவிங் ஸ்கூலினால் நடாத்தப்படும் பரீட்சையிலும் சித்தியடைந்து இருத்தல் வேண்டும் என்பதும், இத் தகவல்கள் யாவும் மாகாண போக்குவரத்து அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டு பின்னர் மாகாண அரசினாலேயே இக் காப்புறுதிகளில் விலை கழிவு பெறும் சான்றிதழ் வழங்கப்படும்.

### வயது முதிர்ந்து ஓய்வூதியம் பெறும் நிலையில் உள்ளவர்களுக்கு விலை கழிவு (Retiree Discount)

இது சகல வாகன காப்புறுதி கம்பனிகளும் வழங்கும் முக்கியமான ஒரு விலை கழிவு

77ம் பக்கம் பார்க்க...


EXPERT
BUILDING INSPECTIONS LTD
"Dedicated to Expert, Honest & Independent Inspections"
Tel: 905 940 0811 Fax 905 940 6108
Toll Free 1 866 373 3315
- Commercial Building Inspections
- Environmental Assessments
- Air Quality Investigations
- Problem Analysis & Solutions
- New Home Warranty Inspections
- Resale Home Inspections
- Complete Home Audit
- Thermal Imaging

www.expertinspector.com

- Tough and Thorough Inspections by University of Toronto educated Building Science Experts Specializing in Defect Recognition
- Our Inspectors are Registered Home Inspectors under the Province of Ontario 1994 Home Inspectors Act-Bill 158 and full members of ASHI and CAHPI-Ontario
- Exceed Nationally Recognized Standards
- Important Maintenance Advice & Follow Up Support For First Time Buyers
- On-Site Narrative Reports
- Seven Days a Week

ASHI MEMBER
CAHPI Ontario

உங்கள் சகல காப்புறுதிகளுக்கும்
பல்வேறு வகையான காப்புறுதி கம்பனிகளிலும்
விலைகளை அறியவேண்டுமா
To shop around insurance price please call
Siva Panchalingam, B.Com.
(Licensed Insurance Broker)
Office: 905-479-3400 Ext. 132
Home: 416-321-0999, Cell: 416-990-4908
800, Denison Ave., Suite 201, Markham, ON



# வாகன காப்புறுதியும்...

76ம் பக்கத் தொடர்ச்சி...

ஆகும். ஆனால் இவ் விலை கழிவினை பெறுவதற்கு பின்வரும் நிபந்தனை நிலைமைக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

- 65 வயது அல்லது அதற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- எதுவிதமான தொழில் வருமானமும் இல்லாது கனடாவின் ஓய்வூதிய வருமானத்தில் வாழ்பவராக இருத்தல் வேண்டும்.
- இவரே முதல் சாரதியாக (Principle driver) வாகன காப்புறுதி ஒப்பந்தத்தில் இருத்தல் வேண்டும். அதாவது இன்னொருவரின் வாகன காப்புறுதியில் இரண்டாவது சாரதியாக (Occasional Driver) பதியப்பட்டு இருந்தால் இவ் விலை கழிவுக்கு தகுதியானவராக கருதப்பட மாட்டார்.

ஓய்வு பெற்ற நிலைமையில் இருப்பவர் ஓய்வாகவே வாகனமோட்டுவார். விபத்துகளில் சிக்கி நட்டஈடு கோர அடிக்கடி வரமாட்டார் என்ற நம்பிக்கையில் 5%-15% வரை விலை கழிவு வழங்கப்படும்.

### பல வாகனங்களுக்கு ஒரே காப்புறுதி கம்பனியில் காப்புறுதி செய்யும் போது வழங்கப்படும் விலை கழிவு (Multi Vehicle Discount)

இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட வாகனங்களை ஒரே காப்புறுதி கம்பனியில் ஒரே ஒப்பந்த இலக்கத்தில் செய்து வைத்திருக்கும் போது இரண்டாவதாக சேர்ந்து கொள்ளும் வாகனத்திற்கு ஒரு குறிப்பிட்ட விலை கழிவு சுமார் 5% - 15% வரை கிடைக்கும்.

### பல்வேறு வகையான காப்புறுதிகளையும் ஒரே கம்பனியில் வைத்திருக்கும் போது வழங்கும் விலை கழிவு (Multi Policy Discount)

உதாரணமாக வாகன காப்புறுதியுடன் சேர்த்து தங்களின் வீட்டு காப்புறுதியினையும் ஒரே கம்பனியில் ஒப்பந்தம் செய்து வைத்திருந்தால் 10% வரையிலான விலை கழிவு வழங்குவது வழமையாகும்.

ஆனால் அடுத்ததாக குறிப்பிடப்படும் விவசாயிகளுக்கான காப்புறுதியில் விலை கழிவு பெறுபவர்கள் இப் பல்வேறு வகையான காப்புறுதிகளையும் சேர்த்து ஒரே கம்பனியில் வைத்திருக்கும் போது வழங்கும் விலை கழிவுக்கு தகுதியானவர்களாக கருதப்பட மாட்டார்கள்.

### விவசாயிகளுக்கு வழங்கும் விலை கழிவு (Farmer's Discount)

கனடாவில் விவசாயத்தினை மட்டும் வருமானம் தரும் தொழிலாக கொண்டு, அதே விவசாயம் செய்யும் இடத்தில் வசித்து வரும் ஒருவர் அதே விலாசத்தில் இருந்து தமது வாகனத்திற்கு காப்புறுதி செய்யும் போது சில கம்பனிகள் ஒரு விலை கழிவு வழங்குவது வழமையாகும்.

### சில குழுக்களுக்கு வழங்கும் விலை கழிவு (Group Discount)

உதாரணமாக ஒரு குறிப்பிட்ட தொழில் சங்கங்களின் அங்கத்தவர்கள் (Member of Professional Association) இலாபகரமற்ற நிறுவனத்தின் அங்கத்தவர்கள் (Members of the Certain Non Profit Organization) என கூட்டான ஒரு நிறுவன அங்கத்தவர்கள் பலர் சேர்ந்து ஒரு குறிப்பிட்ட கம்பனியில் வாகன காப்புறுதிக்கு மனு செய்யும் போது சில கம்பனிகள் இக் குழுவின் உறுப்பினர்களுக்கு வாகன காப்புறுதியில் ஒரு விலை கழிவு வழங்குவது வழமையாகும்.

### வயதானவர்களுக்கு ஒரு விலை கழிவு (Age Discount)

பொதுவாக ஐம்பது வயதினை கடந்தவர்கள், ஜாக்கிரதையாக வாகனம் செலுத்துபவர்கள், விபத்துகளை உருவாக்கி நட்டஈடு கோர வருதல் என்பது புள்ளி விபரங்களின்படி குறைவாக இருப்பதால் இத்தகைய வயதில் உள்ளவர்களுக்கு சில கம்பனிகள் 5%-8% வரை விலை கழிவுகள் வழங்குவது வழமையாகும்.

### பல்கலைக்கழக, கல்லூரி மாணவர்களுக்கு வழங்கும் விலை கழிவு (Discount for Student away at School)

இவ் விலை கழிவினைப் பெற வேண்டுமாயின் பின்வரும் இரு நிபந்தனைகளுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

- பல்கலைக்கழகம் அல்லது கல்லூரி மாணவர் என்பது அடையாள அட்டை மூலம் நிரூபித்தல் வேண்டும்.
- வாகனம் வைத்திருக்கும் விலாசத்தில் இருந்து குறைந்தது நூறு மைல்களுக்கு அப்பால் கல்வி கற்கும் பல்கலைக்கழகம் அல்லது கல்லூரியில் இருந்து அங்கேயே தற்காலிகமாக வசித்துக் கொள்ளும் இடமாக இருத்தல் வேண்டும்.

எப்போதாவது ஒரு முறை அதாவது இடைக்கிடை மட்டும் வாகனத்தினை ஓட்டுபவர் என்ற அடிப்படையில் இவ் விலை கழிவு பல கம்பனிகளும் வழங்குவது வழமையாகும்.

மேற்குறிப்பிட்ட விபரங்கள் யாவும் பொதுவாக வாகன காப்புறுதியில் வழங்கும் பல்வேறு விலை கழிவுகள் ஆகும். ஆனால் மாதா மாதம் செலுத்தும் காப்புறுதியின் விலையினை பின்வரும் அம்சங்கள் சாதாரணமாக தீர்மானிக்கின்றன.


- வயது, ஆணா? பெண்ணா? திருமணமானவரா? (Age, Gender & Marriage Status)
- லைசென்ஸ் வைத்திருக்கும் காலம். இக் காலத்தினுள் தண்டனைக்குள்ளாக்கப்பட்டாரா? என்ற விபரம் (Licence experience & Any Convictions)
- வாகன காப்புறுதி வைத்திருந்த காலம் ஏதாவது நட்டஈடு கோரிய சந்தர்ப்பம் உள்ளதா? என்ற விபரங்கள் (Insurance Experience & Any Claims?)
- வாகனம் தொடர்பான விபரங்கள் (Vehicle Information)
- வசிக்கும் நகரம் (Resident Address)
- வாகனத்தின் உபயோகம்(Usage of Vehicle)
- மேலதிகமாக எவராவது வாகனத்தினை உபயோகிப்பவர்கள் இருந்தால் அது பற்றிய விபரங்கள்(Any Additional Drivers)
- பெற்று கொள்ள போகும் நட்டஈடு பிரிவுகள் (Type of Coverage)

sivapunch@thaiveedu.com

■ ■ ■

**தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.**

*E-mail:thaiveedu@gmail.com*
*Fax: 416-849-0594*
*Tel: 416-646-3422*




from the firm foundations of creative photos

l a  p h o t o g r a p h i e  e s t  u n  a r t





d i g i m e d i a  c r e a t i o n s

**k a r u n a  p h o t o g r a p h y**

- Wedding Photography
- Bridal Portrait Sessions
- Custom Reception Slideshows
- DVD Slideshows
- Custom Designed Albums
- Parent Albums
- Digital Proofs
- Digital Retouching
- Framed Prints & Canvases

elegant memorable real

www.digimediaphoto.com

416.467.4952

# Ontarioவின் வரி இசைவாக்கம்



மாறன் செல்லையா
- நிதி திட்டமிடல் ஆலோசகர் -

கடந்த ஒன்ராறியோ மாகாண வரவு செலவுத் திட்டத்தில், மாகாண விற்பனை வரியையும், மத்திய அரசின் பொருட்களுக்கும் சேவைகளுக்குமான வரியையும் இசைவாக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது. இம் முடிவுவானது நுகர்வோருக்கும், வர்த்தக உரிமையாளர்களுக்கும் சில பல சாதக பாதக பலாபலன்களைக் கொடுத்துள்ளது.

Ontario அரசினதும், சமஷ்டி அரசினதும் விற்பனை வரிகளை இசைவாக்கி 13% - HST பல புதிய சேவைகளை இந்தப் புதிய வரிக்குள் அடக்கியதன் மூலம் பல Ontario வர்த்தகர்களை வெளிநாடுகளுக்கு இட்டுச் செல்வதுடன் வரிக்கு காட்டப்படாத பாதாள உலகப்பொருளாதாரத்தை வளர்க்கும் என எதிர்வு கூறப்படுகிறது.

இந்தப் பதிய வரி July 2010ல் அமுலுக்கு வரும்போது உற்பத்தி (Manufacturing) தொழிற்துறையில் சில இரட்டிப்பு வேலையை தவிர்த்த போதிலும் கணக்காளர்கள், வழக்கறிஞர்கள் என பல சிறிய மத்திய தர வர்த்தகங்களில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தி மாநில அரசின் திறைசேரியை நிரப்பும் அதேநேரத்தில் இந்த வர்த்தகர்களை Alberta போன்ற பாரிய விற்பனை வரி இல்லாத இடங்களுக்கு கொண்டு சென்றுவிடும். Ontario வட அமெரிக்காவிலேயே பெரிய Graphic Designers கொண்ட இடமாகும். இவர்கள் மீது இந்த வரி ஏற்படுத்தும் தாக்கம் இவர்களை இங்கிருந்து வேறு இடங்களுக்கு அனுப்பிவிடும்.

இந்த வரி தாக்கும் இன்னொரு பகுதி Nursing Home Operation ஆகும். இந்த நிறுவனங்களின் வாடிக்கையாளர்கள் இந்த வரி காரணமாக அதிகமாக பணம்தரவேண்டி இருக்கும். அது அவர்களால் முடியாமல் போகலாம். இந்த வரி காரணமாக Ontarioவில் ஒரு பாதாள பொருளாதாரம் உருவாகலாம் என அவதானிகள் அச்சம் தெரிவிக்கின்றனர். கடந்த காலத்தில் GSTயின் அறிமுகம் காரணமாக பல வர்த்தகர்கள், குறிப்பாக வீடு சீர்திருத்தும் வர்த்தகம் பாதாள பொருளாதாரமானதும் அரசாங்கம் 18 வருடங்களுக்கும் பிறகு இன்னும் அந்தத்துறை வர்த்தகர்களுடன் ஈடுகொடுக்க முடியாது இருப்பதும் ஒரு உதாரணமாகும்.

சேவைகளில் விதிக்கப்படும் வரி எல்லையில் அமுல்படுத்துவது கடினமாகும். கனடிய அமெரிக்க எல்லை பாதுகாப்பை அமுல் படுத்தும் அதிகாரிகள் இந்த சேவை வரியை எவ்வாறு அமுல்படுத்துவதுகிறார்கள் என பொறுந்திருந்துதான் பார்க்கவேண்டும். ஆனால் இந்த வரிகள் இரண்டும் இசைவாக்கப்பட்ட மற்ற மாநில சட்டத்தரணிகளோ வேறுவிதமாக கருத்தைக் கொண்டு இருக்கின்றார்கள்; Herry Visse என்ற கணக்காளர் Halifaxஐச் சேர்ந்தவர். அரசாங்கம் தரும் Tax Credit இதனை சமன் செய்து விடும் என்றார். Maurice Chiasson என்ற சட்டத்தரணி சிறிய நடுத்தரமான வர்த்தகர்களுக்கு இது நல்ல விடயம். எல்லா வரிக் கணக்காளர்களும் GSTக்கு மாதிரியே பார்த்து விடலாம். அவர் மேலும் கூறுகையில், 1997ல் Atlantic மாகாணங்களில் வரி இசைவாக்கம் செய்யப்பட்ட போது பெரிய பாதிப்பு ஏற்படவில்லை. வர்த் தகர்கள் முதலீடுகளை வேறு இடங்களுக்கு எடுத்துச்செல்லவில்லை என்றார். Julys Charette Quebec மாகாணத்தைச் சேர்ந்த ஒரு சட்டத்தரணி QST ஒரு இசைவாக்கப் பட்ட மாகாண, மாநில வரி போன்றது. இது பல ஆதாயங்களை வர்த்தகர்களுக்கு தருகின்றது என்றார். வரிகளினால் வர்த்தகர்களுக்கு ஏற்படும் தாக்கம் மிகவும் குறைவாகும். ஆனால் Ontarioவின் PST வர்த்தகர்களுக்கும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

Ontarioவில் Liberal அரசு இந்த இசைவாக்க வரி நிறுவனங்களுக்கு $500 million வரையில் சேமிக்க உதவும். Brian Pd என்ற சட்டத்தரணி PST ஒவ்வொரு தடவை பரிமாற்றம் நடக்கும் போதும் கூட்டப்படுகிறது. ஆனால் HST அப்படியல்ல. அதனால் உண்மையில் சில பொருகளின் விலைகள் குறையக்கூடும்.

அத்திலாந்திக் மாகாணங்களில் வரி இசைவாக்கம் செய்தபோது மாநில அரசுகளுக்கு மத்திய அரசு 1 Billion கொடுப்பனவு செய்தது. ஆனால் Ontarioவுக்கு எவ்வளவு கிடைக்கும் என தற்போது கூறமுடியாது. ஆனால் வர்த்தகர்கள் தங்களது கணக்கு தொகுதியில் மாற்றங்களை செய்யவேண்டும் அதற்கு ஒரு தடவையில் $400 million செலவாகும் என எதிர்வு கூறப்படுகின்றது.

ஆனாலும் இந்த வரியின் தாக்கம் பற்றி எதிர்காலம்தான் பதில்கூற வேண்டும் என வாத்தக சங்கத் தலைவர் கூறியுள்ளார். அவர் மேலும் கூறுகையில் வர்த்தகர்களை எந்தவித பிரதி பலனும் இல்லாமல் இலவசமாக அரச வரியைச் சேர்த்துக் கொடுப்பதற்கு அரச கொடுப்பனவு ஒன்றும் வரப்போவதில்லை என குறிப்பிட்டார்.

maran@thaiveedu.com

■ ■ ■

Dr. முருகர் குணசிங்கம் எழுதிய
"இலங்கையில் தமிழர் ஓர் முழுமையான வரலாறு"
தமிழிலும் ஆங்கிலத்திலும்
தொடர்புகளுக்கு
வேலா: 416 299 0700

லைவ் இன்சூரன்ஸ்
$100,000
லைவ் இன்சூரன்ஸ்
10 Year Term Life insurance (Renewable and Convertible)
புகை பிடிக்காத 50 வயது பெண்ணுக்கு
Only $20.70 Monthly
புகை பிடிக்காத 50 வயது ஆணுக்கு மாதம் $27.45 மட்டுமே
$20,000
வைத்திய பரிசோதனையற்ற காப்புறுதி
புகை பிடிக்காத 70 வயது பெண்ணுக்கு
Only $118.04 Monthly
புகை பிடிக்காத 70 வயது ஆணுக்கு மாதம் $160.43 மட்டுமே
Golden Protection: Providing choices and confidence
> Life Insurance with No Medical Exam
> Premiums and coverage that will never change
> Protection from $1,000 to $50,000
> Immediate coverage
> Insurance amount triples in case of accidental death in a public transportation vehicle
> Insurance amount doubles in case of accidental death




So... Why wait?
Call me if you are ready to buy only.
KEN KIRUPA
Life Insurance Broker
759 Warden Ave., Toronto, ON
www.familyprotection.ca
CELL 416-294-9322
OFFICE 416-759-5453
INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC.
RBC Insurance
Assumption Life
Canada Life
Unity Life of Canada
E & O E

# மானுடத்தின் மீது காதல் கொண்ட மகத்தான மனிதர் "சிவம்"



நடராஜா முரளிதரன்


என்னோடு கடந்த வாரம் சனிக்கிழமை இரவு ஏறத்தாள ஒன்றரை மணிநேரம் "சென்ற்.ஜோர்ஜ்" சப்வேக்கு அருகாமையில் இருந்த "ரொறன்ரோ" பல்கலைக்கழக மண்டபத்திலே நடைபெற்ற கூட்டத்தை முடித்துக் கொண்டு "ஸ்காபுரோ ரவுண்சென்ரர்" கார்த்தரிப்பிடம் வரை நடந்து கொண்டும், "சப்வேயிலே" பயணித்தபடியும் உரையாடிக்கொண்டே வந்த "சிவம்" என்ற கலை, இலக்கிய நண்பர் அதற்கு மறுநாள் ஞாயிற்றுக்கிழமை உயிர் பிரிந்திருக்கின்றார்.



பத்து வருடங்களுக்கு முன்னரே நான் அவரைக் கண்டிருக்கின்றேன். அப்போது அவர் பெயர் எனக்குத் தெரிந்திருக்கவில்லை. ஆயினும் கரகரத்த அவர் "குரல் ஒலி" அவரை மற்றையோரிடம் இருந்து வேறுபடுத்திக் காட்டுகின்ற அடையாளமாக ஒலித்ததை என்னால் இன்னும் ஞாபகப்படுத்திக் கொள்ள முடிகிறது. அந்த நிகழ்வு ஏதோ ஓர் நூல் தொடர்பான "விமர்சனக் கூட்டத்தில்" ஏற்பட்ட சந்திப்பு என நினைக்கின்றேன். அன்று நான் அவரோடு அதிகம் பேசிக்கொள்ளவில்லை. ஆனால் கடந்த மூன்று வருடங்களாக அவரை அவ்வப்போது அடிக்கடி சந்திக்கும்படியான வாய்ப்புக்கள் ஏற்பட்ட வண்ணமேயிருந்தது. அவையெல்லாம் "இலக்கியச் சந்திப்புக்களாகவோ", "நூல் வெளியீட்டு விழாக்களாகவோ", "படைப்பிலக்கிய விமர்சனக் கூட்டங்களாகவோ" அல்லது இலங்கையின் இனப் பிரச்சினை தொடர்பான "கருத்தரங்கங்களாகவோ" இருந்தன. அவற்றில் சில எனது வீட்டிலே கூட நடைபெற்றன. அந்தச் சந்திப்புக்களின் போதெல்லாம் அவர் என்னை நோக்கி வந்து "உரையாடலை" ஆரம்பிப்பது வழக்கமாயிருந்தது. அவர் என்னை நோக்கி, நோக்கியே வந்து கொண்டிருந்தார் என்பதே பொருத்தமான சொற்றொடர்.

முழுக்க முழுக்க இடதுசாரிச் சிந்தனைகளோடு பொதுவாழ்வுக்குள் பிரவேசித்த மனிதர் சிவம். தொழிலாளர்கள் தலைமையிலான "வர்க்கப் போராட்டத்தை" முன்னெடுத்து அதனை வெற்றிகொள்ளச் செய்வதன் மூலம் மனித சமூகத்தின் அனைத்துப் பிரச்சினைகளையும் ஓரளவு வெற்றி கொள்ள முடியும் என்ற "பொதுவுடமைச் சித்தாந்தத்தின்" அடித்தளத்தில் வேரூன்றியிருந்த நம்பிக்கையின் பாற்பட்டது அது. "இடதுசாரிச் சிந்தனைகள்" பரந்தும், "தேசிய இன ஒடுக்குமுறைக்கு" எதிரான உணர்வுகள் மேலோங்கியும் ஒருங்கிணைந்த நிலையில் அரசியலுக்குள் உந்தப்பட்டவன் நான். இன ஒடுக்குமுறையின் கொடூரத்தால் பாதிக்கப்பட்டு அரசியலுக்குள் ஈர்க்கப்பட்ட பலரை "இடதுசாரிக் கருத்தியல்கள்" ஆகர்சித்திருக்கின்றன. அண்மைக்கால உலக வரலாறுகள் எங்கணும் ஒடுக்கப்பட்ட மக்கள் தங்களது விடிவு குறித்துப் பிரக்ஞை கொள்ளவோ, போராடவோ புறப்படுகின்ற வேளைகளில் பல்வேறு காரணங்களை முன்வைத்துப் பொதுவுடமைக் கோட்பாடுகளைப் புறந்தள்ள முடியாத அக, புறச்சூழ்நிலைகள் அவர்களுக்கு ஏற்பட்டுவிடுகின்றன. அந்த வகையில் இங்கு என்னை விடப் பத்து வருடங்களுக்கு முன்னால் பிறந்திருந்த சிவம் அவர்கள் இளவயதிலேயே "சமதர்மக் கருத்துக்களால்" ஈர்க்கப்பட்டு அன்று அவர் வாழ்ந்த யாழ்ப்பாணச் சமூகத்தில் நிலவிய சாதீய அடக்குமுறைகளுக்கு எதிரான "சமூகப் போராளியாகப்" பொதுவுடமைக் கட்சியொன்றின் பின்னணியோடு முகிழ்த்தெழுகின்றார்.

1949களில் இந்திய-பாகிஸ்தானியப் பிரஜாவுரிமைச் சட்டம் இலங்கைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பின்னர் 1960களில் "தமிழ்த் தேசியம்" மிகவும் வலுப்படைத்ததாக மாறுகின்ற தருணங்களிலேயும் தமிழ் பேசும் மக்களிடையே தம்மின மக்கள் என்று கூறிகொள்வோரிடையே ஒரு சாரார் பிறிதோர் சாராரை மனிதநேயத்திற்கு அப்பாற்பட்ட வகையில் சாதியின் பேரால் இழிநிலைக்கு உள்ளாக்குகின்ற கொடுமைகள் நிகழ்த்தப்பட்ட வண்ணமே இருந்தன. அவற்றின் கொடூரம் தற்போது தணிந்து காணப்பட்டாலும் நம்மவரிடையே சாதீயம் பல்வேறு வடிவங்களில் தொடரவே செய்கின்றன. சிவம் அவர்கள் வாழ்ந்த வடமராட்சிப் பிரதேசத்தில் சாதீய ஒடுக்குமுறைகள் உச்சம் பெற்றிருந்த காலகட்டத்திலே "தாழ்த்தப்பட்டவர்கள்" என்று கூறப்படுபவர்களுக்கு எதிராக மேல் சாதியினர் இழைத்த கொடுமைகளையெல்லாம் நேரிலேயே கண்டுகொள்ளும் வாய்ப்பு அவருக்கு இருந்திருக்கும். மற்றும் அவரது குடும்பப் பின்னணியில் பெரிய தந்தையார் பொன்.கந்தையா பொதுவுடமை இயக்கத்தின் தலைமைப்பீடத்தில் இருந்தவர். பருத்தித்துறைப் பாராளுமன்றத் தொகுதியில் பொதுவுடமைக்கட்சி சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற ஒரே தமிழர். அப்பகுதி மக்களிடையே பெரும் செல்வாக்குடன் திகழ்ந்த தன்னல மற்ற தியாகி அவர். எனவே இயல்பாகவே "மனிதநேயம்" கொண்ட எவரையும் பற்றியிழுக்கக் கூடிய பொதுவுடமைக் கருத்தியல் கோட்பாடுகள் சிவம் என்ற மனிதரையும் காலூன்ற வைத்திருக்கின்றது சமூக ஒடுக்குமுறைத் தளத்தில்.

ஆனாலும் 1980களில் சிறுபான்மையினரான தமிழ்பேசும் மக்களுக்கு எதிராகச் சிங்களப் பேரினவாதம் கொடுங் சூறாவளியாக சுழன்று சூறையாடிய வேளைகளில் சிவம் போன்ற சமதர்மப் போராளிகள் இன, மத, மொழி பேதமற்றுத் தொழிலாள வர்க்கம் தலைமை தாங்க வேண்டிய வர்க்கப் போராட்டத்திற்கும் அப்பால் அசுரபலம் கொண்டு ஆர்ப்பரிக்கின்ற தேசிய இன ஒடுக்குமுறை குறித்துத் தீவிரமாகச் சிந்திப்பவர்களாக மாற்றம் பெறுகின்றார்கள் என்பதையே என்னால் உய்த்துணரக் கூடியதாக இருக்கின்றது. எனவே அத்தகைய தேசிய இன ஒடுக்குமுறைக்கு எதிராகக் கிளர்ந்தெழுகின்ற தேசிய விடுதலைப் போராட்டம்; பொதுவுடமைக் கருத்தியல்கள் என்ற விழுதுகளைப் பற்றிக்கொண்டு எழ வேண்டும் என்ற எதிர்பார்ப்பையும் கொண்டவர்களில் ஒருவராகவே சிவம் அவர்கள் அமைந்திருந்திருப்பார் அல்லது அமைந்துள்ளார்.

அவர் என்னை நோக்கி ஓடியோடி வந்த வேளையில் எல்லாம் குறைந்த பட்ச வேலைத்திட்டத்தின் அடிப்படையில்; மானுடத்தின் விடுதலையை நேசிக்கின்ற சக்திகளுக்கிடையில் ஓர் புரிந்துணர்வை, ஐக்கியத்தை ஏற்படுத்திவிட வேண்டும் என்ற ஓயாத உந்துதல் அவர் மன ஆழத்தில் இருந்திருக்க வேண்டும். எனவேதான் அவர் என்னை மாத்திரமல்லாமல் இன்னும் பலரையும் நோக்கி ஓடிக்கொண்டே இருந்திருப்பார். இன்னும் சிலரை அவர் துரத்திக்கொண்டும் இருந்திருப்பதற்கான வாய்ப்புக்களைக் குறைத்து மதிப்பிடவும் முடியாமல் இருக்கின்றது. வெறுமனே தத்துவங்களை மாத்திரம் பேசிக்கொண்டிராமல் அரசியல், சமூக விடுதலைக்கான வேலைத் திட்டங்களையும் மேற்கொள்ள வேண்டுமென்று எண்ணுகின்ற நடவடிக்கையாளர்கள் வரலாற்றை முன்நோக்கி நகர்த்துவதற்கான அதீத ஆவலினால் இவ்வாறு உந்தப்பெற்று மிகச் சரியானவர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக அலைந்து கொண்டிருப்பார்கள். இவர்கள் தங்களை முன்னிறுத்திப் பிரபல்யம் பெறுகின்ற, இலாபம் தேடுகின்ற அரசியலுக்குள் தங்கள் மூக்கை நுழைத்துக் கொள்வதில்லை. இவர்களில் ஒருவராக "யார் குத்தியும் அரிசி ஆக வேண்டும்" என்பதால் தன் உளவியலை நிறைத்துக் கொண்டு திருப்தியடையும் மனிதராகவே சிவம் இப்போதும் என்முன் காட்சியளிக்கின்றார்.

> "சிவம் என்ற மனிதரது வாழ்வியல் பரப்பென்பது, எனது கண் நோக்கும் காட்சியெல்லைகளைக் கடந்தது, அவற்றில் நான் உற்று நோக்கும் சிறு துளிப்பிரதேசங்களைத் துல்லியப்படுத்துவதே. இங்கு நான் மேற்கொள்ளும் வலிதான முயற்சி."

சோவியத்யூனியன் சிதறுண்டு, பொதுவுடமை அரசுகள் வீழ்ந்து, செஞ்சீனத்துக்குள் திறந்த பொருளாதாரம் நுழைந்து பொதுவுடமைச் சித்தாந்தத்திற்கு என்னென்னவோ ஆகிய போதிலும், எப்படியிருந்த போழ்தும் சிவத்தின் ஆழ்மனம் அந்தச் சிந்தாந்தங்களை வலுவாக அணைத்தபடியே இருந்தது. அவை தொடர்பான விவாதங்கள் எங்கள் இருவரினதும் சம்பாசணைகளுக்குள் அகப்படாதபோதும் என்னால் அதை உறிதியாகக் கூறமுடியும்.

சிவம் என்ற மனிதரது வாழ்வியல் பரப்பென்பது எனது கண் நோக்கும் காட்சியெல்லைகளைக் கடந்தது. அவற்றில் நான் உற்று நோக்கும் சிறு துளிப்பிரதேசங்களைத் துல்லியப்படுத்துவதே இங்கு நான் மேற்கொள்ளும் வலிதான முயற்சி.

கடந்த வருடம் நான் மற்றும் டானியல் ஜீவா, மெலிஞ்சிமுத்தன் ஆகிய மூவருமாக இணைந்து இலக்கியம் சார் உரையாடல்களுக்கான களத்தை இங்கு ரொறன்ரோவில் வேறோர் தளத்தில் திறப்பதற்கான முயற்சியை ஆரம்பித்திருந்தோம். பல்வேறு இலக்கிய நண்பர்கள் இலக்கியம் தொடர்பாக வெவ்வேறு வேலைத்திட்டங்களில் தங்களை ஈடு படுத்திக் கொண்டிருந்தார்கள் என்பதையும் இங்கு நான் குறிப்பிட்டாக வேண்டும். இதன் முதற்கட்டமாக சில நூல்கள் குறித்த விமர்சனக் கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன. அவ்வாறு ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டங்கள் அனைத்திற்கும் சிவம் அவர்கள் உரிய நேரத்திற்கு வருகை தந்து விடுவதோடு மட்டுமல்லாமல் தனக்குத் தெரிந்த இலக்கிய ஈடுபாடு கொண்டவர்களையும் அழைத்துக் கொண்டு வருவார்.

இளங்கோ எழுதிய "நாடற்றவனின் குறிப்புகள்" என்ற கவிதைத் தொகுப்பிற்கான விமர்சன உரையாடலை நாங்கள் ஓர் நாள் நிகழ்த்திக் கொண்டிருந்தோம். அப்பொழுது எனது முறை வந்தபோது கவிதை விமர்சனத்துக்குள் நுழைவதற்கு முன்பாக நான் கவிதை என்பதை எவ்வாறு வரையறுத்துக் கொள்வது, எழுதப்படும் எல்லா வரிகளையும் கவிதைகளாகக் கொள்ளலாமா? என்பது குறித்துக் கருத்துக்களை கூற ஆரம்பித்திருந்தேன். நான் தொடங்கிச் ஒரு, சில நிமிடங்கள் ஆகியிருக்கும். சிவம் அவர்கள் வாயை ஒரு பக்கம் இழுத்து முகத்தைக் கோணலாக்கிக் கொண்டு "முரளி உதை விட்டிட்டு விசயத்துக்குப் வோவம்" என்றார். அன்று நான் அந்த விமர்சனக் கூட்டத்திற்கு மயிலிட்டியைச் சேர்ந்த எனது நண்பன் அருளையும் அழைத்து வந்திருந்தேன். கூட்டம் முடிவடைந்து வீட்டுக்குச் சென்ற அருள் "ஏன் மச்சான் அவர் உன்னோடை உப்பிடிக் கதைச்சவர்" என்று தொலைபேசி மூலம் என்னிடம் விசாரித்தான். எனது நண்பன் இலக்கியப் பரிச்சயம் இல்லாதவன். அதற்கும் அப்பால் ஏன் அவர் அவ்வாறு சொன்னார் என்பதற்குப் பதிலாக நாங்கள் ஒவ்வொருவரும் எங்கள் நோக்கில் பல்வேறு விடைகளையிறுத்து விடலாம். அவ்வாறு சொல்லப்படும் விடைகளில் சிலவோ, பலவோ என்னைக் கசப்பில் ஆழ்த்துவதாகவும் அமையலாம். எதுவாக இருந்த போதிலும் விசயத்துக்குள் துரிதமாகச் சென்று விடவேண்டும் என்ற அந்தரமே அவ்வாறு அவர் கூறியதற்கான காரணமாக என்னால் கற்பித்துக் கொள்ள முடிகிறது.

மீண்டும் இக்கட்டுரையின் முதல் பந்திக்கு வருகின்றேன். என்னோடு கடந்த வாரம் சனிக்கிழமை இரவு ஏறத்தாள ஒன்றரை மணிநேரம் நடந்து கொண்டும், "சப்வேயிலே" பயணித்தபடியும் உரையாடிக்கொண்டே வந்த "சிவம்" எதையெல்லாம் பற்றி என்னோடு உரையாடிக்கொண்டு வந்தார் என்பதை பதிவுக்குள்ளாக்க வேண்டிய பணி என்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவே நான் கருதுகின்றேன். அப்போது எங்களோடு சிவத்தின் நண்பரான அருளும் உடனிருந்தார். அதில் ஓர் பகுதியை அவருடைய இறுதி அஞ்சலிக்கான கூட்டத்தின் போது உரையாற்றிய வேளையில் நிறைவேற்றிவிட்டேன். மீண்டும் எழுத்தில் பதிவுக்குள்ளாக்க வேண்டியுள்ளது மிகச்சுருக்கமாக சில வரிகளில். "முரளி இன்று வன்னிப்பிரதேசங்களில் வாழும், போராடும் பொதுமக்களோ, போராளிகளோ அல்லது போராளித் தலைவர்களோ கொல்லப்படக் கூடாது. அவர்கள் அனைவரையும் காப்பாற்றுவதற்கு எங்களால் முடிந்ததைச் செய்ய வேண்டும்" என்ற வார்த்தைகளே சிவம் அவர்கள் என்னிடம் விட்டுச் சென்றவை.

எனவேதான் எம்மையெலாம் விட்டுப்பிரிந்து போன சிவம் என்ற அந்த மனிதரை "மானுடத்தின் மீது காதல் கொண்ட மகத்தான மனிதர்" என்று அழைக்க எனது மனம் அவாவுறுகின்றது.

muralin@thaiveedu.com

■ ■ ■



# வீடு வாங்க, விற்க அழையுங்கள்...

## Vasanthy Niranjan

*Real Estate Broker*

**416-845-8272**

HomeLife
Higher Standards

**HomeLife Today Realty Ltd.**
Brokerage*
31 Progress Ave. Suite 210
Toronto, ON M1P 4S6
*Independently Owned and Operated, REALTOR

**Tapscott & McLevin**



**$189,000**
3 Bedroom, 2 Washroom

**McCowan & Denison**



**$284,900**
3 Bedroom, 2 Washroom

**Middlefield & Finch**




**$1,250**
2 Bedroom 1 Washroom

**Warden & Sheppard**



**$369,000**
3+2 Bedroom, 2 Washroom

**Birchmount & McNicoll**



**$379,900**
3 Bedroom, 3 Washroom

**Birchmount & Finch**



**$314,500**
3+2 Bedroom, 4 Washroom

**Brimley & Denison**



**$229,000**
3 Bedroom, 2 Washroom

**Midland & Lawrence**



**$152,900**
3 Bedroom, 1 Washroom

**Markham & Elson**



**$349,900**
4 Bedroom, 3 Washroom



# குறைந்த செலவில் சிறந்த காப்புறுதி



புகைப்பிடிக்காத 30 வயதுடைய
ஆணுக்கு $200 000 காப்புறுதி
$17.28 மட்டுமே! (T10. R.C.)

RBC Insurance

INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES INC.

தனா
மாணிக்கவாசகர்
*Broker*

## Life Insurance

**Critical Illness Insurance**

## Disability Insurance
## Mortgage Insurance

**RRSP - Start from $25**
Loan approval within 24hrs - Bad credit no problem
**RESP - Start from $25**
(20%-40% Government Grant + 15% Company Bonus)



**INSURANCE SERVICE INC.**
**Cell: 416-728-5772**
Business: 416-290-1200

# மோசமான சாரதி



செந்தூரன் புனிதவேல்
- காப்புறுதி முகவர் -

ஒன்டாரியோவில் ஒருவர் விபத்துக்குள்ளாகாமல் வாகனம் செலுத்துவது மிகச் சிரம மான விடயம். விபத்து ஏற்பட்ட பின் பலரும் அலுத்துக்கொள்வது சர்வசாதாரணம். அப்டிச் செய்தால் இப்படிச் செய்தால் என்று வியாக்கியானம் செய்வார்கள். எனவே தொடர்ச்சியாக ஒருவர் விபத்தில்லாமல், சேமமான சாரதியாக ஏதுவான காரணிகளை இங்கு வகைப்படுத்தி தொகைப்படுத்தி தரலாம் என எண்ணுகிறேன்.

## கட்டளை 1: அவதானமாக இருங்கள்

அவதானமாயிருங்கள், நான் கவனிக்கவில்லை என்பது தான் மிச்சாதாரணமாக தரப்படும் விளக்கம். அப்படி என்ன மற்ற வாகனம் அதரிசனமானதா அல்லது பக்கத்தில் இருந்த தூன் அதரிசனமானதா? ஏறத்தாள எல்லா விபத்துக்களும் ஒருவருடைய அல்லது இரு வருடைய கவனமில்லாமையால் தான் ஏற்படுகிறது. கவனக் குறைவுக்கு பல காரணங்கள் உண்டு. சில பகற்கனா அல்லது ‘மிலாந்துவது’ என்பார்கள், சில வேறுவிடயங்கள் கவனயீர்ப்பு செய்வது, வேறு சில தூக்கம் பற்றாமை, இன்னும் சில களைப்பு மற்றும் பக்கத்தில் இருப்பவருடன் “கதை ருஷி” என்று பட்டியல் நீண்டு கொண்டே செல்லும்.

ஒரு அசையும் வாகனம் எத்தனையோ ஆயிரம் இறாத்தல் அடி விசையுடையதாயிருக்க இயங்கிக்கொண்டிருக்கும். சாரதியான நீங்கள் அந்த விசையை இன்னொருவருக்கு ஊறு விளைவிக்காமல் பார்த்துக் கொள்ளவேண்டிய தார்மீக கடமைப்பாடு உடையவராயுள்ளீர்கள். நீங்கள் அவதானமாயிருந்தால் உங்களுக்கு எதிர்வரும் அனர்த்தத்தை பார்த்து அதற்கேற்ற விதத்தில் வாகனத்தை செலுத்த முடியும். இதுதான் சேமமான சாரதிக்கு முதல் தேவையாகும்.

நீங்கள் வாகனம் செலுத்துவதில் உங்கள் முழக்கவனத்தையும் செலுத்துவது மிக அவசியமானது. அப்படிச் செலுத்துவதால் வருமுன் காத்து கவனமாக விபத்து இல்லாத சாரதியாக நீங்கள் மிளிரலாம்.

புள்ளிவிபரப்படி பெரும்பான்மையான விபத்துக்கள் வீட்டிற்கு அண்மையில் தான் ஏற்படுகிறது. இவ்வண்ணம் நடப்பது ஏன்? ஒரு காரணம் வேறு வேறு இடங்களுக்கு வீட்டிலிருந்து புறப்பட்டு வீட்டிற்கு திரும்புவதால் பெரும்பான்மை வேளைகளில் வீட்டிற்கு மிக அண்மையிலே தான் வாகன விபத்து ஏற்படுகிறது. மேலும் வீட்டிற்கு அண்மித்த வீதிகள் கூடிய பரீட்சயமாய் இருப்பதால் கவனக்குறை ஏற்படுகிறது. மேலும் வீட்டில் என்ன Surprise இருக்கும் என்ற யோசனையும் வந்துவிடுமல்லவா? தயவுசெய்து பிழையாக புரிந்து கொள்ளாதீர்கள். என்ன சாப்பாடு இருக்கும் அல்லது பூந்தோட்டத்துக்கு தண்ணீர் விட வேண்டும் என சிந்தனை போவதால் இப்படி நடக்கும். மேலும் குறைந்த வேகத்திலும் மரணவிபத்து ஏற்படலாம் என சிந்திப்பதில்லை. இத்தகைய கவனக்குறைவே விபத்துகளுக்கு காரணம். மனித மனம் ஒரு குரங்கு போன்றது. ஒரு விடயத்திலிருந்து இன்னொன்றுக்கு தாவிய வண்ணமிருக்கும். வேறு ஒரு விடயத்திலும் மனத்தைச் செலுத்தாது பூரணமாக வாகனம் செலுத்துவதில் மனதைச் செலுத்தப்பாருங்கள். அது எவ்வளவு சிரமம் எனத் தெரியவரும். வாகனத்தரிப்பிலிருந்து வாகனம் வெளியே வரவே மாட்டாது. ஏன் என்றால் மனம் தொடர்ந்து தாவிக்கொண்டிருக்கும். அனுபவம் நிறைய உள்ள சாரதிகள் யோசிக்காமல் வாகனத்தை செலுத்திய வண்ணம் இருப்பர். உதாரணத்திற்கு நடப்பதற்கு வலது காலை எடுத்து வைக்க வேண்டும், பின் இடதுகாலை எடுத்து வைக்க வேண்டும் என சிந்திக்காமல் நடக்கின்றோமல்லவா அது போல் எம்மை அறியாமலே வாகனத்தை செலுத்திக்கொண்டிருப்போம்.

சில சந்தர்ப்பங்களில் சென்று சேரவேண்டிய இடத்தில் சேர்ந்தபின் பயணத்தைப்பற்றிய நினைவு ஏதும் இல்லாது இருப்பது போல் இருக்குமல்லவா. இது உண்மையில் மிக ஆபத்தான நிலையாகும். ஆனால் இதனை மாற்ற முடியும். வாகனம் செலுத்துவதில் கவனத்தை வைத்திருப்பது என்று திட்டவட்டமாக தீர்மானித்துவிட்டால் இதுவே பழக்கமாகி பின் வழக்கமாகிவிடும். நீங்கள் திட்டவட்டமாக வாகனம் செலுத்திக்கொண்டு உண்பதில்லை.

> “ நீங்கள்
> வேறு வாகனங்களை அனுகும் வேளையில்
> ஒரு பயங்கரவாதியை நெருங்குவது போல்
> போதிய இடம்விட்டு செலுத்துங்கள்.
> விபத்துக்களை நீங்கள் தவிர்ப்பதோடு
> மற்றையேரையும்
> விபத்திலிருந்து காப்பாற்றுவீர்கள். ”

அல்லது Tim hartons குடிப்பதில்லை என்று தீர்மானித்துவிட்டால் அதுவே வழக்கமாகி விடும். சுற்றாடலைப்பற்றி ஒரு தெளிவான நினைவு இருப்பதவசியம். எனவே முதலாவது கட்டளையாக அவதானமாக இருக்கத்தீர்மானியுங்கள்.

## கட்டளை 2: ஒருவரையும் நம்பாதீர்கள்

‘நம்பினார் கெடுவதில்லை’ என்பது நான்கு மறைகளுக்கு பொருந்தும் வாகனச் சாரதிக்குப் பொருந்தாது. நாங்கள் எங்கள் எதிரியை ஏற்கனவே சந்தித்துவிட்டோம். அது நாங்கள் தான். மற்றவர்கள் என்ன செய்வார்கள் என்பது உங்கள் கையில் இல்லை. ஆனால், அவர்களை அளக்கும் ஒரு அளவுகோலை இங்கு கவனிப்போம். நீங்கள் இதற்கு முன் செய்த தவறுகள் (வாகனம் ஒட்டுவதில்) எத்தனை என்று மனதில் சிந்தித்துப்பாருங்கள். எதிர் காலத்தில் என்ன என்ன தவறுகள் செய்வீர்கள் என நினைத்துப்பாருங்கள். மற்றவர்களும் உங்களைப் போலத்தான் இருப்பார்கள். அவர்களை நம்பவேண்டாம். உங்களைப்போல் அவர்கள் செய்திருப்பார்கள். எதிர்காலத்தில் செய்வார்கள். அவர்களை எப்படி நம்புவது. எனவே அவர்களிடம் கவனமாக இருப்பதற்கு அவர்களுக்கும் உங்களுக்கும் இடையில் போதிய இடம்விட்டு வாகனத்தைச் செலுத்துங்கள். அவர்கள் செய்யக் கூடிய தவறுகளை எதிர்பார்த்து அதற்கு ஏற்ற விதத்தில் வாகனத்தைச் செலுத்துங்கள். அவர்கள் தவறுகளை எதிர்கொள்ள தயாரா யிருங்கள். என்றோ ஒருநாள் அவர் தவறு செய்யத்தான் போகிறார். ஏன்னென்றால் அவரும் உங்களைப்போல் ஒருவரே. உங்கள் வாகனத்தை ‘Automatic’இல் செலுத்துகையில் வாகனத்தைச் செலுத்தும் பொறுப்பை நீங்கள் மற்றவர்களிடம் கொடுத்துவிட்டீர்கள். அவர்களின் கருணையிலும் வல்லமையிலும் உங்கள் உயிர் ஊஞ்சலாடுகிறது. அவர்கள் தலைவிதி உங்கள் தலைவிதியை நிர்ணயிக்கும்

மற்றவர்களை நீங்கள் நம்புபவரானால் உங்கள் பாதுகாப்புக்கு மற்ற சாரதியை நம்பி இருக்கிறீர்களாவீர்கள். இப்படி நீங்கள் மற்றவர்களை நம்பிச் சீவிப்பது சரியா? ஒவ்வொரு வினாடியும் கனடாவில் ஏதோ ஒரு சாரதி இது மடத்தனமான முடிவு என்பதை விபத்துக்குள்ளாகியபின் அறிகிறார். மற்றச் சாரதி வீட்டில் ‘Party’ முடித்துக்கொண்டு வெறியில் வரலாம். அல்லது பாவம் அப்போ தான் வேலையில் Pink Slip’ பெற்றுவரலாம். அல்லது காதலா் அவரை காலேஜில் போட்டிருக்கலாம். வேறு சந்தர்ப்பத்தில் மற்ற வாகனத்தை செலுத்து 12 வயது சுட்டிப்பயல் தகப்பனுடைய கார் சாவியை எடுத்து களவாக வாகனம் செலுத்திவரலாம். எனவே நீங்கள் வேறு வாகனங்களை அனுகும் வேளையில் ஒரு பயங்கரவாதியை நெருங்குவது போல் போதிய இடம்விட்டு செலுத்துங்கள். உங்கள் வாகனத்தை அனேகமான விபத்துக்கள் மற்ற வாகனத்தில் உள்ள சாரதி எதிர்பாராதவிதத்தில் ஏதோ செய்ததால் ஏற்பட்டது என வாக்குமூலம் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே மற்றவர் ஏதொ ஏதிர்பாராதது செய்யப் போகிறார் என்று எதிர்பார்த்து வாகனத்தை செலுத்துங்கள்.

யாருமே தவறு செய்யலாம் என்பதை உணர்ந்து காரை செலுத்துவீர்களானால் நீங்கள் மிக அவதானமாக வாகனத்தை செலுத்துவீர்கள். முன்னால் வரும் சிவப்பு விளக்கு பற்றி கவனமாயிருங்கள். சிகப்பு விளக்கு தாமாக ஒருவரையும் நிறுத்துவதில்லை. அருகில் உள்ள வாகனத்தரிப்பு நிலையத்திலிருந்து திடீரென யாரும் வரலாம் என்று எதிர்பார்த்து வாகனத்தைச் செலுத்துங்கள். ஒருவர் தனக்கு முன்னால் சற்று பெரிய இடைவெளியை விட்டால் அது வேறு ஒரு வாகனத்திற்காக இருக்கலாம். பல விபத்துக்கள் இப்படி இடைச்செருக்கல்களால் நடைபெறுவதுண்டு. இதைவிட மற்றவர் சிக்னல் செய்யாமல் ஓடு பாதையை மாற்றலாம். அல்லது வாகனத்தை அறிவித்தலின்றி திடீரென நிறுத்தலாம். அல்லது திடீரென தான் செல்ல வேண்டிய இடம் வந்துவிட்டதை உணர்ந்து வாகனத்தை திருப்பலாம். இப்படி பல தவறுகளை மற்ற சாரதிகள் செய்யலாம். அவர்களை நம்பி நீர்கள் விபத்துக்குள்ளாகாதீர்கள். எனவே இரண்டாவது கட்டளை ஒருவரையும் நம்பவேண்டாம்.

வளரும்.

senthuran@thaiveedu.com

...

**Driving School**

ஒட்டனர் பயிற்சியில் நட்பான அணுகுமுறை,
நவீனத்துவமான பயிற்சி முறையுடன் நம்பிகையான வெற்றி
G1, G2 தேர்வுப் பயிற்சிகள்,
போக்குவரத்து வசதிகள், தெளிவான விளக்க வகுப்புகள்,
வீதித் தேர்வுக்கான வாகன ஒழுங்குகள்,
வசதிக்கேற்ற தேர்வு நாட்கள்.

நீண்டகால அனுபவத்தின் தனித்துவமான பயிற்சி

General Driving School
Ministry of Transportation Approved Instructor
பேரின்பநாதன் வேந்தன்
416-731-2829

**www.inayam.net**

- கலை விழாக்கள்
- எழுச்சி நிகழ்வுகள்
- ஊர்ச்சங்க ஒன்றுகூடல்கள்
- திருவிழாக்கள்
- கொண்டாட்டங்கள்
- நடன, நாடக, இசை விழாக்கள்
- குடும்ப நிகழ்வுகள்
- மரணச் சடங்கு நிகழ்வுகள்

எதுவானாலும்,

இணையம் .net மூலமாகத் தெரியப்படுத்துங்கள்.

உங்களுக்கு அனுகூலமான இடம், காலம், நேரங்களில் ஏனைய நிகழ்வுகள் திட்டமிடப்பட்டுள்ளனவா என்பதை முன்கூட்டியே அறிந்துகொண்டு உங்கள் நிகழ்வுகளை நிர்ணயித்துக் கொள்ளுங்கள்.

முன்கூட்டியே inayam.net இல் பதிவு செய்துகொள்வதன் மூலம் ஏனைய நிகழ்வுகளோடு போட்டிகள் உருவாகுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

உங்கள் நிகழ்வுகள் திருப்திகரமாக நடந்தேறுவதற்கு பங்குபெறும் மக்களின் அனுகூலம் முக்கியமானது.

இதைக் கருத்திற் கொண்டு உருவாக்கப்பட்ட ஒருங்கிணைப்புத் தளமே inayam.net

முயற்சி செய்யுங்கள்!


**முற்றிலும் இலவசம்**

inayam
416-400-6406

digi

# BUY AND SELL HOMES AND BUSINESS

அனுபவம்! திறமை! நேர்மை!





rpushpakanthan@trebnet.com

*Hall of fame award*
CENTURION AWARDS
for 5 YEARS

தனிநபர், வீடுகள், அலுவலகம், வியாபாரம் முதலியவற்றிற்கு
அடமான வசதிகள்
ஒழுங்கு செய்யப்படும்.

Pat 416 490 7653 (SOLD)

## PAT Pushpakanthan

*Real Estate BROKER*

Cell 416-894 1187

EXPERIENCE! COMMITMENT! RESULTS!




$249 000

Industrial Unit ...many use (16Ft Height) Close To Ttc, Bus Stop. Approx 200Sq/Ft Of MezzanineTotal Sq/Ft Of 1997 Sq.Ft

**Warden/St.clair**

Brand new home 10 min. to d'town


**Brand New Home**
Solid Brick W/Built-In Garage.Monarch Built 1915 Sqft+Bsmt;Porclean Tiles In Foyer;Natural Oak Stairs & Hardwood Floor Marble Countertop Pot Lights In Great Rm, Family Rm &, Great Rm & Liv/Dinin
Close to subway & great high .school

**Markham / steeles**




**Investment**
6 unit auto Garages
Automobile mechanical Zoning, excellent locn, multi-unit(6),lots of parkg,behind wallmart, best investment

**Markham**



**Brand New Home**
Front Balcony, Strip Hardwood Floors In Living/Dining And Main Floor Hallway, Extended Kitchen Uppers, Gas Fireplace In Family Room, Granite Kitchen Counter Top. Extras: Elf's, Casement Windows, Granite Counter Top In Kitchen With Undermount Sink, Main Floor Laundry Room, 9'Main Floor Ceilings, Ceramic Tiles In Foyer, Kitchen, And Much More...

**SCARBOROUGH**



**Basement Apartment RENT AND LIVE**
Charming 3 Bedroom Bungalow In Wexford Heights. Well Maintained & Updated And In Excellent Condition. Finished Basement/Separate Entrance W/Income

**Condo Apt From $69000**

**Homes from 190000/-**

**New homes from 280000/-**

**Call 416- 894 1187**


**1.5%**
Also available*

MARKHAM/14 th ave




Minutes To, Walmart, Restaurants, 24 Hrs Ttc U Of T And Centennial College, Close To 401, Professionally Finished Basement

Scarborough




2 bm condo apartment live and pay you mortgage as rent

Markham



Brand New Home Move In 30 Days,"""Strip Hardwood Floors In Living/Dining And Main Floor

Scarborough



Quality Built Mattamy Home On Rouge Park

Scarborough




In Demand Sqft. Well-Kept, Well-Maintained, Move-In Condition. $$$ Upgrades: Hardwood Floors, Pot Lights Everywhere

scarborough

Homes from 175 000
Buy .... power of sale properties

Condo apartment From 74 000

Or Dir: 416-894-1187

Ellesmere/Birchmount




Luxury Tridel Building, 2bm Extremely CleanTtc. Great Amenities Include Hot Tub, Tv Media Room, Guest Suites, Fitness Centre, Party Rm, Sauna, 24 Hr. Concierge

Mcleven/Nielson




Best Value In Complex! Great 2Br Floorplan. Large Eat-In Kitchen With Granite Counters. Indoor Pool, Whirlpool, Sauna, 2 bm2wm

Scarborough




3 bm Home.
New. Must See near school., TTC

MARKHAM/STEELES



Absolutely Gorgeous Executive Homes On A Premium Ravine Lot. Quiet Street. Quality Upgrades

Mcleven/Nielson




Indoor Pool, Whirlpool, Sauna, Squash Crt, Tennis Crt, Exercise & Gym, Party Room, 24 Hour Gatehouse Security1 bm

Yonge street




Prime Location On Yonge St In The Heart Of Northyork. Surrounded By Office Buildings And Condos. Walking Distance To Subway

Century 21 Affiliate Realty Inc.
Tel: 416-290-1200
rpushpakanthan@trebnet.com
VISIT....WWW.PATPUSH.COM
Each office individually owned & operated
*individual performance Not intended to solicit existing listing

## Selling your home !

...call free market evaluation 416-490-7653 (Sold)

*some condition applies ,call agent for detail ,color &shape may be different. Not intended to solicit buyers and sellers who are under contract
**Market value as per info one decided by listing agent

**VAUGHAN**




Absolutely Gorgeous! Stunning Freehold Townhome in High Demand Area with 3 Bedrooms and Finished Basement with Kitchen, Family Room and 4 pc Bathroom. Strip Hardwood Floors and Laminated floors Through-out. No broadloom in this house. Oak Stairwell, Direct Access To Garage, Close to All Amenities, Walking Distance to Canada's Wonderland, This is A Must See!! Nicely Landscaped!! 2 Fridges, 2 Stoves, Washer, Dryer, , Pot Lights, All electrical Light Fixtures, Central A/C, All Window Coverings. R/I Central Vac, etc. Walking Distance to Schools. Easy Access To Hwy 400, Malls/Strip Plazas/Theatres/Go Transportation And Buses. Asking Only $339,900

**MARKHAM**




Monarch Built 5 Yrs old Detached home in a very demanding neighbourhood. 4 Large BR and 4WR. Office on Main Floor. Approx 2900 Sq.ft. Upgraded Maple Hardwood Floor & Oak Stairease. Coffered Ceiling in LR and DR. 9' Ceiling. Family Room w/Gas Fireplace. Hugh Master BR with sitting area. Direct Access to Garage. Very Big Foyer with Double Door Entry. Main Flr Laundry. Close to all amenities.Stainless Steel Fridge & Stove, Washer & Dryer, Gas Fireplace, Central Air Conditioning, All Window Covering, Garage Door Opener with Remote. All Elect-rical light Fixtures. Asking Only $574,900


**SCARBOROUGH**




Mattamy Built Beautiful 3 Bedroom Semi-detached home with 3 washrooms. Less than 5 years old. Beautifully decorated with accent walls. Quiet Sought After Neighbourhood. Large Bright Principal Rooms. Private Fenced Backyard. Separate Entrance to Large Basement (Unfinished). 4 pc ensuite in Master Bedroom, and 3 parking. Includes Fridge, Stove, B/I Dish washer, Washer, Dryer, Air conditioner, All Electrical Light Fixtures and All Window Coverings. Lucky Number 7.
Asking Only $339,900

**BRAMPTON**

**Sandlewood / Edenbrook**



Immaculate 4 Bedrooms Detached home in a Desirable area of Brampton. Gleaming New Hardwood on main floor. Very Bright & Clean Charming Family Home on a Quiet Street. Gorgeous Lakeview Built Home is one of the most open and bright home in the area with tons of natural light. Open Concept Living & Sitting Room, Formal Dining Room & Separate Family Room With 13' High Ceiling & W/O to the Balcony. Close to Transit, GO Train, Schools, Shopping, New Recreation Centre, Highway Etc. Premium Lot Backing on to the Park. Central A/C, Air Cleaner. Master With W/I Closet & 5 Piece Ensuite. High End Stainless Steel Appliances Including Gas Stove. Parking For 4 On Driveway. Lots Of Sunlight.

Asking Only ~~$399,900~~ **$379.900**

**KenKirupa**
Sales Representative

INSPIRED BY YOU







Direct 416 294 9322
Office 416 491 4002

RE/MAX®
Re/Max Crossroads Realty Inc., Brokerage

905areahomes.ca 416homes.ca

# Arajen Dress Making

சாறி, பிளவுஸ், சட்டை,
சுடிதார், ஸ்கேட் மற்றும்
உடை வகைகள் உங்கள்
மனதுக்குப் பிடித்த
வண்ணத்தில்
தைத்துக்கொடுக்கப்படும்

**திருத்தவேலைகள்**
சிறிய திருத்த வேலைகளைச்
செய்து கொள்ள
அழையுங்கள்

**பயிற்சி வகுப்புக்கள்**
2நாள் பயிற்சி வகுப்பில்
சாறி, பிளவுஸ் தைக்கலாம்

**அரஜன் அழகு நிலையம்**
2605-A Eglinton Ave. E.,Scarborough, ON M1K 2S2
(இரா சுப்பர் மார்க்கட் மேல் மாடியில்)
**Tel: 416.509.7978**
Web: www.arajenbeauty.ca, E-mail: sasi@arajenbeauty.ca

www.arajenbeauty.ca

# ARAJEN CAKE HOUSE

**Wilton Cake decorating classes**






**Wilton Cake decorating classes**
Basic/Advance courses
Gun paste flowers
Candy Making
Cookie blossoms
Ginger bread houses
And More...

**Wedding Cake**
**Engagement Cake**
**Birthday Cake**
**Rich Cake**
**Cheese Cake**
**Marble Cake**
**Eggless Cake and More...**

**by a Wilton Certified instructor**

கேக் அலங்காரப் பொருட்கள் அனைத்தையும் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
உங்கள் அனைத்து கேக் தேவைகளுக்கும் அழையுங்கள்

**Sasi Naren**
Diploma in Cake Making
Twenty years experience in cake making

Tel: **416-509-7978**
2605-A Eglinton Ave. E.,Scarborough, ON M1K 2S2, (இரா சுப்பர் மார்க்கட் மேல் மாடியில்)

# H1N1 Flu Virus (Human Swine Flu)

# ஒரு புது எதிரி

அமெரிக்கா, மெக்சிகோ, கனடா ஆகிய நாடுகள் உட்பட இது வரையில் இருபத்திமூன்று நாடுகளில் ஏராளமானோர் புதுவகை வைரஸ் நோயால் பாதிக்கப்பட்டு உள்ளனர்.

இது தாக்கியவர்களில் சிலர் உயிர் இழந்துள்ளனர். இதுவரை 1490பேரை இந்த வைரஸ் தாக்கி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதில் சிலர் பேர் உயிர் இழந்துள்ளனர். இறந்தவர்களில் 29 பேர் மெக்சிகோ நாட்டைச் சேர்ந்தவர்கள். அங்குதான் பாதிப்பு அதிகமாக உள்ளது.

இந்த புதுவகை தொற்று நோய்க்கு "சுவைன் ப்ளூ வைரஸ்" என்று பெயரிட்டு உள்ளனர். பன்றிக் காச்சல் என்றும், H1N1 Flu Virus (Human Swine Flu)என்றும் கூட இது அழைக்கப்படுகின்றது.

பன்றிக் காய்ச்சல் எனப்படும் இந்த 'சுவைன் ப்ளூ' வைரஸ் காய்ச்சல் பன்றிகள் மூலமாக மனிதர்களுக்கு பரவி வருகிறது. பன்றிகளைத் தாக்கும் இந்த வைரசு மனிதர்களையும் தாக்குகின்றது.

இந்த நோய் அபாயம் காரணமாக அமெரிக்காவில் பதினேழு மாநிலங்களில் உள்ள 430க்கும் அதிகமான பாடசாலைகள் 14 நாட்களுக்கு மூடப்பட்டுள்ளன. கனடாவில் பிரிட்டிஸ் கொலம்பியாவில் ஒரு பாடசாலை மூடப்பட்டுள்ளது. கனடாவில் 'அல்பட்டாவில்' உள்ள பண்ணைகளில் உள்ள பன்றிகளுக்கு இந்த நோய் உள்ளது என்றும் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தொற்று ஏற்பட்டால் காச்சல் மற்றும் தொண்டை வலி, என சாதாரண சளித் தொல்லை போல் தோன்றும். (The symptoms include fever, fatigue, lack of appetite, coughing and sore throat. Some people with H1N1 Flu Virus (Human Swine Flu) have also reported vomiting and diarrhea)

இந்த நோய்க்கு தடுப்பு மருந்து கிடையாது. ஆனால் சரியான நேரத்தில் சிகிச்சை அளித்தால் உயிரை காப்பாற்றி விடலாம். ஆனால் சாதாரண சளிக்காய்ச்சல் போல் ஆரம்பத்தில் இருப்பதால் நோயாளிகள் அலட்சியமாக இருந்துவிட வாய்ப்பிருக்கிறது. இதுவே அவர்களுக்கு எமனாகவும் அமைந்து விடுகிறது. இந்து நோய் மெக்சிகோ நாட்டில் கடந்த 2ம் தேதி முதன் முதலாக வெராகுருஸ் நகரில் தலைகாட்டியது. கடந்த 25 நாட்களில் மளமளவென்று 32 மாவட்டங்களில் பரவியுள்ளது.

மெக்சிகோ நாட்டில் தோன்றிய இந்த ஆட்கொல்லி நோய் அண்டை நாடான அமெரிக்காவுக்கும் அங்கிருந்து கனடா, பிரான்ஸ் மற்றும் சீனா, கொரியா வரை பரவியுள்ளது. இலங்கை, இந்தியாவில் இது வரை இந்த தொற்று கண்டறியப்படவில்லை. ஆனால் தினமும் ஆயிரக்கணக்கானவர்கள் இந்தியா, இலங்கை வருகிறார்கள் என்பதால் இவர்கள் வழியாக பன்றிக்காய்ச்சல் இங்கு பரவும் அபாயம் உள்ளது.

இதனால் இந்த H1N1 Flu Virus (Human Swine Flu) தொற்று ஏற்பட்ட நாடுகளிலிருந்து இந்தியாவுக்கு வரும் பயணிகளை விமானநிலையத்தில் வைத்து பரிசோதனை செய்ய மத்திய சுகாதார அமைச்சகம் உத்தரவிடப்பட்டுள்ளது. டெல்லி மற்றும் மும்பை விமான நிலையங்களில் இதற்காக மருத்துவர்கள் குழு அமைக்கப்பட்டுள்ளது. நேற்று முதல் இந்தக்குழு தனது பணியை தொடங்கியது. இதற்கிடையில் பன்றிக்காய்ச்சல் பரவி வரும் நாடுகளுக்கு தேவையில்லாமல் செல்ல வேண்டாம் என்ற எச்சரிக்கையையும் மத்திய அரசு விடுத்துள்ளது.

இது வரை இருபத்திமூன்று நாடுகளில் இந்த H1N1 Flu Virus (Human Swine Flu) தொற்று ஏற்பட்டுள்ளது. அதனால் மே மூன்றாம் திகதி வரை இந்த 17 நாடுகளிலும் 787 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று உலக சுகாதார நிறுவனம் (WHO) அறிவித்துள்ளது.

மெக்சிக்கோவில் மிக அதிகளவில் 822 பேருக்கு தொற்று ஏற்பட்டு 29 பேர் உயிர் இறந்துள்ளனர். அமெரிக்காவில் 403 பேருக்கு இந்த தொற்று ஏற்பட்டு ஒருவர் உயிர் இழந்துள்ளார். கனடாவில் 140, அவுஸ்ரியா 1, சீனா 1, கொங்கொங் 1, கோஸ்ரிக்கா 1, டென்மார்க் 1, பிரான்ஸ் 4, ஜேர்மனி 9, அயர்லாந்து 3, நெதர்லாந்து 1, நியூசிலாந்து 6, கொரியா 2, ஸ்பெயின் 57, பிரிட்டிஸ் 27, சுவீஸ் 1 என இந்த வைரசு தொற்று ஏற்பட்டுள்ளது என்றும் உலக சுகாதார நிறுவனம் கூறியுள்ளது.

ஆனால் கனடா சுகாதார மையம், கனடாவில் மே ஐந்தாம் திகதி பிற்பகல் ஒரு மணிவரைக்குமான காலப் பகுதியில் 140 பேருக்கு இந்த தொற்று ஏற்பட்டுள்ளது என்று அறிவித்துள்ளது. ஒன்டோரியா மாகாணத்தில் இது வரை 14 பேருக்குமேல் இந்த H1N1 Flu Virus (Human Swine Flu) தொற்று ஏற்பட்டுள்ளது.

இந்த வைரஸ்சை கொல்ல உரிய மருந்து இல்லை. முன் கூட்டியே இந்த நோய் வருவதைப் பாதுகாக்க தடுப்பு மருந்தும் இல்லை. அதனால் நோய் எதிர்ப்பு சக்தி மருந்தையே கொடுக்கின்றனர்.

இது எப்படி பரவுகிறது. இதை எப்படி கட்டுப்படுத்துவது என்று மருத்துவ விஞ்ஞானிகள் ஆராய்ச்சி நடத்தி வருகின்றனர். தடுப்பு மருந்து கண்டுபிடிப்பது சாத்தியமான விடயம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் அதற்கு ஐந்து முதல் ஆறுமாத காலம் காத்திருக்க வேண்டும்.

பன்றிகளை தாக்கும் வைரசே மனிதர்களையும் தாக்குகின்றது என்றாலும், பன்றி இறைச்சி சாப்பிடுவதால் இந்நோய் மனிதருக்கு ஏற்படாது. பன்றிகளுடன் நேரடியான தொடர்பு கொள்ளும் போதே மனிதர்களுக்கு இந்த தொற்று ஏற்படுகின்றது. பின்னர் இந்த தொற்று ஏற்பட்ட மனிதர்களால் ஏனைய மனிதர்களுக்கு பரப்பப்படுகின்றது. தொற்று ஏற்பட்ட மனிதர்கள் தும்முவதால் இந்த வைரசு காற்றில் பரவுகின்றது. இந்தக் காற்றை சுவாசிப்பதால் ஏனையவர்களை இந்த வைரசு தொற்றிக் கொள்ளுகின்றது. இதை விட முத்தம் இடுதல், சளி, வாயை, மூக்கை தொடுதல் போன்ற காரியங்களாலும் தொற்று ஏற்படுகின்றது.

இந்த தொற்றில் இருந்து பாதுகாத்துக் கொள்ள சில வழிமுறைகளை கையாளும் படி சுகாதார மையம் அறிவித்துள்ளது.

அடிக்கடி கைகளை தொற்று நீக்கும் சோப் பாவித்து கழுவவும். நீங்கள் தும்மும் போதும், சளியை சீறும் போதும் பகிரங்கமாக செய்யாமல் பாதுகாப்பாக ஒரு துணியில், அல்லது ஒரு பேப்பர் டவலில் (tissue) செய்யவும், தற்சமயம் இந்த சந்தர்ப்பங்களில் இவை கிடைக்காவிட்டால் நீங்கள் உங்கள் Sleeve அல்லது armஇல் தும்மவும். உங்களுக்கு சுகவீனம் என்று தெரிந்தால் வீட்டில் தனியாக இருக்கவும். நீங்கள் அண்மையில் மெக்சிக்கோவுக்கு சென்று வந்த பின்னர் (அல்லது சென்று வந்தவர்களுடன் தொடர்பு பட்டதின் பின்னர்) உங்களுக்கு flu symptoms இருந்தால் உடனடியாக வைத்தியசாலைக்குச் செல்லவும்.

- சிவா சுப்ரா -

siva@thaiveedu.com

■ ■ ■


N.K.S

Drapery & Blinds Fabric LTD



திறமையான சேவையால் பல விருதுகளை பெற்ற நிறுவனம்

உங்கள் வீட்டுக்குனுத் தேவையான சகலவித யன்னல் திரை வகைகளையும், கேட்டின் துணி வகைகளையும் மிகவும் மலிவான விலையில் பெற்றுக் கொள்ள அழையுங்கள்.

கேதா நடராஜா

416.321.6420

Ketha Nadarajah
(President)
Tel: 416.321.6420, 905.944.0218
Fax: 416.321.2217
www.nksdrapery.ca

Drapery & Blinds Fabric Ltd., 210 Silver Star Blvd., Unit #825, Scarborough, ON M1V 5J9



சொர்க்கமே என்றாலும் அது சொந்த வீடு போல வருமா...

Uthayan Alex Sivasambu B.Sc. (Hons), M.B.A
Broker

Ottawa: 613.276.SALE (7253)
Toronto: 416.659.SELL (7355)
alex-sivasambu@coldwellbanker.ca, www.sivasamburealty.com

COLDWELL BANKER



# ஆயுட் காப்புறுதியும் தவணைக் காப்புறுதியும்

20 வருடத்தில் கட்டி முடிக்கும் ஆயுட் காப்புறுதியும் 20 வருடத்துக்கான தவணைக் காப்புறுதியும்.

இந்த இரண்டு திட்டங்களும் எங்களில் பலர் சரியான விளக்கம் இல்லாமல் பெற்றுக்கொண்டிருப்பதை காணக்கூடியதாக இருந்தது.

20 வருடகாலத்தில் கட்டிமுடிக்கும் ஆயுட் காலம் வரையிலான ஆயுட் காப்புறுதி Whole Life insurance with 20 Year paid up option அல்லது Universal Life with 20 Year Guaranteed paid up option என அழைக்கப்படுகின்ற திட்டங்கள்.

இப்படியான திட்டங்கள் Term Insruance என அழைக்கப்படுவதில்லை. இந்த ஆயுட்காப்புறுதித் திட்டம் ஆயுட்காலம் முழுவதற்குமான பாதுகாப்பு வழங்கும் ஆனால் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே பணம் செலுத்த வேண்டும்.

தவணைக் காப்புறுதித் (Term Insurance) திட்டம் குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும் வழங்கப்படும் திட்டம். அந்தக் காலம் முடிவடைந்ததும் ஆயுட் காப்புறுதியும் முடிவடையும். பின்பு தொடர்வதானால் ஆயுட்காப்புறுதிக்கான மாதாந்தக் கட்டணம் அதிகரிக்கும்.

Universal Life 20 pay அல்லது Guaranteed paid up otion எனவும் அழைப்பார்கள். இப்படியான திட்டங்களைப் பெற்றுக்கொள்பவர்கள் 10 வருடம் அல்லது 15 வருடம் அல்லது 20 வருடகால எல்லைக்கு மட்டுமே பணம் செலுத்த வேண்டும். ஆனால், திட்டம் ஆயுட் காலம் வரை நீடிக்கும். குறிப்பிட்ட காலத்திற்கு பணம் கட்டியபின்பு கட்டிய பணத்தை மீளப் பெறும் வாய்ப்புக்களும் உண்டு.

கட்டியப் பணம் முழுவதையும் மீளப் பெற்றுக்கொண்டால் அதன் பின்பு ஆயுட்காப்புறுதி இல்லாமல் போய்விடும். அல்லது பின்பு தொடர்ந்து மாதாந்தக் கட்டணத்தை செலுத்துவதன் மூலம் காப்புறுதித்திட்டத்தை தொடர்ந்து வைத்திருக்க முடியும்.

குறிப்பிட்ட காலத்தில் கட்டிமுடிக்கும் இப்படியான காப்புறுதித் திட்டங்களின் மாதாந்தக் கட்டணம் ஆயுட்காலம் வரை பணம் செலுத்தும் திட்டத்திலும் பார்க்க அதிகமாகஇருக்கும். அத்துடன் கட்டிய பணத்தை மீளப்பெறுவது ஆயுட்காப்புறுதி பெற்றுக்கொண்டவரிலும் பார்க்க ஆயுட்காப்புறுதி நிறுவனத்திற்குத்தான் இலாபகரமானது. காரணம் ஒருவர் மாதம் $100 டொலர்கள் ஆயுட்காப்புறுதிக்காக செலுத்தினால் வருடம் 1,200 டொலர்கள் 20 வருடத்தில் 24,000 டொலர்கள் செலுத்தி விடுவார். இவருக்கான ஆயுட்காப்புறுதியின் தொகை $200,000 டொலர்களாக இருந்தால் இவர் எப்போது இறந்தாலும் ஆயுட் காப்புறுதி நிறுவனம் $200,000 டொலர்கள் வழங்க வேண்டும்.

20 வருடத்தின் பின் கட்டிய பணத்தை மீளப் பெற முடியும் (Cash Back) என்ற ரீதியில். ஆயுட்காப்புறுதிக்காரர் கட்டிய பணத்தை திரும்பப் பெற்றால் அவருக்கு கிடைப்பது 24,000 டொலர்கள் மட்டுமே. அத்துடன் காப்புறுதியும் இல்லாமல் போய்விடும். எனவே ஆயுட்காப்புறுதி நிறுவனம் $200,000 டொலர் கொடுக்க வேண்டிய இடத்தில் 24,000 டொலர் மட்டுமே கொடுக்கின்றது. எனவே Cash Back உடன் கூடிய காப்புறுதித் திட்டங்கள் எல்லோருக்கும் உகந்ததல்ல.

ஆயுட்காலம் வரை நீடிக்கும் திட்டங்களில் மாதாந்தக் கட்டணம் செலுத்தும் முறைகள் பலவிதமாகத் தெரிவுசெய்ய முடியும். அவையாவன:

முடிந்ததும் மாதாந்தக் கட்டணம் அதிகரிக்கும். அதாவது 20 வருடங்களுக்கான 20 year Term Insurance பெற்றுக்கொண்டால் ஒவ்வொரு 20 வருடத்திற்கு பின்பும் மாதாந்தக் கட்டணம் அதிகரிக்கும். அத்துடன் 85 வயதானதும் பின்பு காப்புறுதி இல்லாமல் போய்விடும்.

உதாரணமாக 10 வருடத்திற்கான தவணைக் காப்புறுதி பெற்றுக்கொண்டால் ஒவ்வொரு 10 வருடமும் காப்புறுதிக்கான மாதாந்தக் கட்டணம் அதிகரிக்கும். ஆரம்பிக்கும் போது மிகவும் குறைந்த கட்டணமாக இருந்து வயதான நேரத்தில் மிகப்பெரிய தொகையை மாதாந்தம் கட்ட நேரிடும். அல்லது காப்புறுதியை கைவிட வேண்டிய நிலை ஏற்படும்.

> “ எதிர்பாராத விதமாக சிறிய வயதில் பலர் மரணமடைவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இப்படியான மரணங்களின் போது எல்லோரும் காப்புறுதி செய்வது பற்றி சிந்திக்கின்றார்கள். ஒருவன் இறந்தவுடன் இவரிடம் காப்புறுதி இருந்ததா என்று எல்லோரும் ஏங்குகின்றார்கள். ஆனால் அப்படி விசாரிப்பவர்களிடம் கூட காப்புறுதி இருப்பதில்லை. ”

- Life Time Pay (Level Cost) ஆயுட்காலம் வரை ஒரே மாதாந்தக் கட்டுப்பணம்.
- Life Time pay with YRT Cost. ஆயுட்காலம் வரை பணம் செலுத்தும் திட்டம். ஆனால் வருடாந்தம் கட்டுப்பணம் அதிகரிக்கும்.
- Life Insurance with limited pay option
- ஆயுட்காலம்வரை காப்புறுதி ஆனால், குறிப்பிட்ட காலம் மட்டுமே பணம் செலுத்த வேண்டும்.

## தவணைக் காப்புறுதி (Term life insurance)

குறிப்பிட்டகாலப்பகுதிக்கான காப்புறுதித் திட்டம் எல்லாத்திட்டங்களிலும் பார்க்க மிகவும் குறைந்த கட்டணத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

10 வருடங்கள் தொடக்கம் 40 வருடங்கள் வரை விரும்பிய காலப்பகுதிக்கு பெற்றுக் கொள்ள முடியும். குறிப்பிட்ட காலப்பகுதி

அதாவது ஆரம்பத்தில் மாதாந்தம் 10 அல்லது 15 டொலர்களுடன் ஆரம்பித்தவர் 70 வயதில் மாதாந்தம் 400க்கு மேல் கட்டவேண்டிய நிலை ஏற்படும். இப்படியான திட்டங்கள் ஒரு தற்காலிகமான தேவைகளை பூர்த்திசெய்யும் காப்புறுதித் திட்டங்களாக உபயோகிக்கப்பட வேண்டும். அதாவது வீட்டுக்கடன் Mortgage Insurance போன்ற தேவைகளுக்கு சிறந்தது.

எனவே தற்காலிகமாக காப்புறுதி அல்லது தவணைக் காப்புறுதி என்பது Term Insurance திட்டம் வைத்திருப்பது கிட்டத்தட்ட ஒரு வாடகை வீட்டில் இருப்பதற்கு சமனானது.

ஆயுட்காலம்வரை நீடிக்கும் ஆயுட்காப்புறுதி ஒரு சொந்த வீட்டில் இருப்பதற்கு சமனாகக் கருதலாம். அத்துடன் ஒரு குறிப்பிட்ட காலத்தில் கட்டி முடித்த ஆயுட்காப்புறுதித் திட்டம் கடன் எல்லாம் கட்டி முடித்த சொந்த வீடு போன்றதாகும்.



**சிறீதரன் துரைராஜா**
- ஆயுட் காப்புறுதி முகவர் -

எனவே ஒவ்வொருவரும் தங்கள் வசதிக்கேற்ப சரியான காப்புறுதித் திட்டத்தை தெரிவு செய்ய வேண்டும். ஆனால் ஒரு ஆயுட்காப்புறுதியும் இல்லாதவர்கள் ஏதாவது ஒரு காப்புறுதி வைத்திருப்பது அவசியம்.

அண்மையில் கனடாவில் பலர் எதிர்பாராத விதமாக சிறிய வயதில் மரணமடைவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இப்படியான எதிர்பாராத மரணங்களின் போது எல்லோரும் காப்புறுதி செய்வது பற்றி சிந்திக்கின்றார்கள். ஒருவன் இறந்தவுடன் இவரிடம் காப்புறுதி இருந்ததா என்று எல்லோரும் ஏங்குகின்றார்கள். ஆனால் அப்படி விசாரிப்பவர்களிடம் கூட காப்புறுதி இருப்பதில்லை. எல்லோரும் பின்பு எடுக்கலாம் என்று பிற்போடும் வழக்கம் எல்லோரிடமும் உள்ளது. காப்புறுதி விற்பனை செய்யும் முகவர்கள் கூட தங்களுக்குக் காப்புறுதி செய்வதை பிற்போடுவதை காணக்கூடியதாக இருக்கும். நீங்கள் உங்களுக்கு காப்புறுதி செய்ய வருபவர்களை உங்களுக்கு எவ்வளவு காப்புறுதி இருக்கின்றது என்று கேட்டுப்பார்த்தால் உண்மை தெரியும். எனவே ஆயுட்காப்புறுதி செய்வதை பிற்போடாமல் குறைந்த கட்டணத்தில் இருந்து இயலக்கூடிய தொகைக்கு நோய்கள் வருமுன் ஆயுட்காப்புறுதி செய்வது சாலச்சிறந்தது.

எல்லோரும் காப்புறுதி பெற்றுக்கொள்ள வேண்டும் என்பது காப்புறுதி முகவருக்கு வியாபாரம் என்பதற்காக கூறவில்லை. அண்மைக்காலங்களில் எனக்கு ஏற்பட்ட பல அனுபவங்களின் உண்மைகளை பார்த்தபின்புதான் இப்படி எழுதவேண்டும் என்று தோன்றியது. எனது நெருங்கிய நண்பர் ஒருவர் தனது தந்தையாருக்கு காப்புறுதி செய்ய வேண்டுமென்று கூறினார். ஆனால் காப்புறுதி செய்வதற்கு முன்னர் அவர் இறந்துவிட்டார். இப்படி என்று பல உண்மைச்சம்பவங்கள் உண்டு ஆனால், எல்லா உண்மைக் கதைகளையும் கூறினால் அது வியாபாரத்துக்காகக் கூறும் பொய்களாகத்தான் தெரியும். ஆயுட்காப்புறுதி முகவர்கள் வெறும் வியாபாரம் செய்பவர்களாக இல்லாமல் ஒரு சேவை செய்பவராகத் தொழில்பட வேண்டும். அதாவது ஒரு Fire Fighter தீ அணைக்கும்படையில் தொழில் புரிபவர் சம்பளத்துக்காகத்தான் தொழில் புரிந்தாலும் ஒருவர் நெருப்பில் எரியும் போது அவரைக் காப்பாற்றுவது தன் கடமை. அதேபோல் ஒரு ஆயுட்காப்புறுதி முகவர் ஒருவருக்கு ஆயுட்காப்புறுதி தேவைப்படும் போது அதைக் கடமையாகக் கருதி அந்தக் காப்புறுதியை பெற்றுக் கொடுக்கவேண்டும்.

sritharan@thaiveedu.com

■ ■ ■

இறக்கமான சூழலில் இ ல கு வ ா ன தீர்வு

• நிரந்தர ஆயுட் காப்புறுதி
• கொடிய நோய்களுக்கான காப்புறுதி
• ஈட்டுக்கடன் காப்புறுதி
• வைத்திய பரிசோதனை இல்லாத காப்புறுதி
• RRSP • RESP

சிறீதரன் துரைராஜா
காப்புறுதி முகவர்
Member of Million Dollar Round Table | MDRT The Premier Association of Financial Professionals®
416.918.9771
759 Warden Ave. Toronto, ON M1L 4B5, Bus: 416-759-5453 x: 407
info@life100.ca



RBC Insurance · INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC. · Unity Life of Canada · Canada Life™

# மில்லியன் டொலருக்கான ஆயுட்காப்புறுதி

# மிகக் குறைந்த கட்டணத்தில்

- வயோதிபர்களுக்கான காப்புறுதி - **Non Medical Insurance**
  85 வயதுக்குட்பட்ட அனைவருக்கும் மருத்துவ பரிசோதனை வேண்டியதில்லை
- கொடிய நோய்களுக்கான காப்புறுதி - **Critical Illness Insurance**
  கொடிய நோய்கள் ஏற்பட்டால் 2 மில்லியன் வரை காப்புறுதி
- ஆயுட்காப்புறுதி - **Life Insurance**
  மாதாந்தக் கட்டணம் மாறாது.. கட்டிய பணத்தை மீளப்பெறமுடியும்
- குழந்தைகளின் உயர்கல்விக்கான சேமிப்புத்திட்டம் - **RESP**
  20% - 40% அரச மானியத்துடன் 15% அதிக போனஸ்

## ஒரு மில்லியன் டொலருக்கு

# $28.80

## மாதாந்தம் *

Rate based on 30 year female elite - non smoker (10 year term insurance)

Rate for 30 year male elite - non smoker (10 year term insurance)
**$42.30** per month

Sun Life Financial
Canada Life
Industrial Alliance Insurance and Financial Services Inc.
RBC Financial Group
Assumption Life
Unity Life of Canada

## சிறீதரன் துரைராஜா

MDRT Member of Million Dollar Round Table

**416.918.9771**

LiLand Insurance Inc. 759 Warden Ave. Toronto, ON M1L 4B5, Bus: 416-759-5453 x: 407



இறுக்கமான சூழலில் ஓர் இலகுவான தீர்வு

NEW CREDIT - BAD CREDIT - NO CREDIT
BANKRUPT - NO PROBLEM
On Line - Credit Approvel, All kind of Credit Repairs
உங்கள் வியாபார முதலீடு வீட்டு முதலீடு ஆகியவற்றுக்கான
பணத்தேவைகள் உடன் ஒழுங்கு செய்து தரப்படும்
Shan Kanapathipillai
416.890.2300
e-mail: shankana@juno.com
LIC: M08002487
CENTUM
Looking out for your best interest

• Real Estate Law
• Business Law
YASO SINNADURAI
BARRISTER & SOLICITOR, NOTARY PUBLIC
THE LAW OFFICES OF YASO SINNADURAI
2100 Ellesmere Rd., Suite 202
Scarborough, Ont. M1H3b7
Tel: 416•265•3456
Fax: 416•265•2770

ACCESS LEGAL SERVICES
PROFESSIONAL CORPORATION
INJURED?
Car Accident (MVA) Claims
Work Accident (WSIB) Claims
Bankruptcy
416-733-8880

APEX CREATIONS
416.297.0707
PRINTING - SIGN - BANNERS
103-50 Nashdene Rd. Scarborough, ON. M1V 5J2







இம்மாதப் புகைப்படக் கலைஞர்
**குமார் புனிதவேல்**
கனடா Torontoவில் வசித்துவரும் எழுத்தாளரும், காப்புறுதி முகவருமான இவர், தனது ஓய்வுநேரங்களில் புகைப்படத்துறையிலும் ஆர்வம்காட்டி வருகின்றார்.

**உங்களிடம் (நீங்கள் எடுத்த) அழகான புகைப்படங்கள் இருக்கின்றனவா? அவற்றை நாங்கள் பிரசுரிக்க விரும்புகிறோம்.**
புகைப்படம் எடுத்தவரின் பெயர், விலாசம், தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல், புகைப்படம், எடுக்கப்பட்ட காட்சி அல்லது எடுக்கப்பட்டவருடைய விபரங்கள் என்பவற்றுடன் நீங்கள் எடுத்த புகைப்படத்தையும் அனுப்பிவையுங்கள். அவை இந்தப் பகுதியில் பிரசுரமாகும்.

• சுமார் 10 வருடங்கள் Scotia வங்கியில் மோட்கேஜ் அனுபவம்
• 7 நாட்களும்... 24 மணி நேரமும் நட்பான சேவை
• குறைந்த வட்டி வீதம் • 0% Down Payment
Scotiabank
Ragavan Ramanathan
Mortgage Development Manager
• New • Switch • Refinance
Tel: 416•579•7533
Fax: 416•579•9433
ragavan.ramanathan@scotiabank.com

PROTECT YOURSELF AND YOUR LOVED ONES!
Insurance Ocean
Product we serve:
• Accident Death Insurance • Affordable Life Insurance • Critical Illness Insurance
• Disability Income Insurance • Mortgage Insurance • Permanent Life Insurance
• Pet Insurance • Term Life Insurance • Travel Insurance • No Medical Exam Insurance
We provide free training and prepare you for the certification
Now hiring at Ocean Mortgage Include: Marketing Specialist, Sales Reps.
Call today 416-321-2300
Get the best rate online @ www.insuranceocean.com
digi